வெளியீடு 11-1-2004 Issued 11-1-2004

19 ஏப் 2004
எழும்பூர்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 22, 2003 – தொகுதி 43 – எண் 2

**Tuesday the 22nd April, 2003 – Volume 43 – No. 2**

[illegible] பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...ssembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

V2 11, 1 P03
P03 . 43 . 2
4

[Price Rs. 3.00

## 22–4–2003

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 14 மற்றும் 15) | 167-230 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 230 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 15—தமிழ் வளர்ச்சி— பண்பாடு மற்றும் அறநிலையத் துறை இந்து சமய அறநிலையத் துறை— தொடர்ச்சி | 231-263 |
| மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி | 231-260 |
| (ஆ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 264-389 |
| (இ) கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | |
| மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம் | 264, 285, 359, 371-381 |
| மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி | 273-274, 285 286, 289, 295 296, 312, 313, 317, 322, 323, 330, 341, 363-371 |

பக்கங்கள்

**3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை—தொடர்ச்சி

*திரு. கு. ஜெயக்குமார் 286-296, 297

திரு. ந. இராமு 298, 303-310

*திரு. க. முருகவேல் ராஜன் 310-323, 371

*திரு. ஜி. கோதண்டராமன் 324-328

செல்வி க. பாலபாரதி 329-333, 336

*திரு. ஏ.எஸ். கண்ணன் 337, 338, 339, 340-344, 346, 347

திரு. செ.கு. தமிழரசன் 347-356

திரு. லா. சந்தானம் 356-359, 361-363

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2003 389-396

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 390, 394-395, 396

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 390-392

திரு. வை. சிவபுண்ணியம் 392-393

*திரு. க. முருகவேல் ராஜன் 393-394, 395

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 394





பக்கங்கள்

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 397-400

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 397, 398, 399, 400

திரு. கே.சி. கருணாகரன் 397-398

திரு. வை. சிவபுண்ணியம் 398

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 401

V211,31' P03
P03-L3.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
184896

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 9, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 22, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் **கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும் விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால் அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

**(பதினான்காவது பட்டியல்)**@

1—

### சாலை செப்பனிடல்

**வினா எண் 8564—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி முதல் நெடுங்குளம் வரை செல்லும் சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 ஏப்ரல் 22

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, நெடுஞ்சாலைத் துறையின் இதர மாவட்டச் சாலையான கண்டமங்கலம்—பூலாம்பட்டி சாலை கி.மீ.0/0-12/8 என்பதாகும். இச்சாலையில் கி.மீ. 3/0-12/8 வரை 1999-2000 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.60 இலட்சம் மதிப்பில் மேம்பாடு செய்யப்பட்டு, பணி 2-7-2001-ல் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கி.மீ.0/0-3/0 வரையான பகுதியைப் புதுப்பிக்க ரூ.11.50 இலட்சம் தேவைப்படும். வரும் நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப இச்சாலையை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

2—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 17882—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், பசுக்காரன்பட்டி, காக்குவரான்பட்டி சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள இதர மாவட்டச் சாலையான பசுக்காரன்பட்டி-காக்குவரான்பட்டி சாலை கி.மீ.0/0-4/2 ஆகும். இச்சாலையில் கி.மீ.0/0-2/0 வரை இதர மாவட்டச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (பகுதி-2) மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. கி.மீ. 2/0-4/2 வரை மேம்பாடு செய்ய ரூ.11.50 இலட்சத்திற்கு இதர மாவட்டச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 3-ல் சேர்த்திட கருத்துருக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 22]

3—

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 17903—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், உத்தப்பநாயக்கனூர் பேரவைச் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் மொத்த நீளம் 8.8 கி.மீ. ஆகும். இச்சாலையில் கி.மீ. 5/0-7/0 நீங்கலான ஏனைய பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. கி.மீ. 5/0-7/0 வரை மாவட்ட இதர சாலைகளின் பழுதுள்ள பகுதிகள் சீரமைத்தல் திட்டம், கட்டம்-3ல் ரூ.9.00 இலட்சத்திற்குச் சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

**கோயில் புதுப்பித்தல்**

**வினா எண் 10826—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறைத் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயிலின் கட்டடத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, அருள்மிகு நரசிம்மசுவாமி திருக்கோயில் திருப்பணிகளில், தற்போது கருங்கல் தரைத்தளம் அமைப்பது, திருமதில் பழுதுபார்ப்பது ஆகிய பணிகள் உபயதாரர் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மூலஸ்தான மண்டபத்தைப் பழுதுபார்க்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உபயதாரர் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

## கோயில்கள்

**வினா எண் 27223—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் ஒரு கால பூஜைத் திட்டத்தின் மூலம் எத்தனை கோயில்கள் பயனடைந்துள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகரில் உள்ள திருக்கோயில்களில் கீழ்க்காணும் 10 திருக்கோயில்கள் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளன:—

1. அ/மி. பஞ்சாட்சர கணபதி திருக்கோயில், காந்தி பாலம், சேலம்-1.

2. அ/மி. கீரைப்பட்டி மாரியம்மன் திருக்கோயில், கவரைத் தெரு, சேலம்-1.

3. அ/மி. பிசுலுமாரியம்மன் திருக்கோயில், பிரட்ஸ் ரோடு, சேலம்-1.

4. அ/மி. குண்டுப்பிள்ளையார் திருக்கோயில், அம்மாப்பேட்டை, சேலம்-1.

5. அ/மி. பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சீல்நாயக்கன்பட்டி, சேலம் வட்டம்.

6. அ/மி. சித்தி விநாயகர் திருக்கோயில், டவுன் ரயில் நிலையம், சேலம்-1.



7. அ/மி. சித்தி விநாயகர் திருக்கோயில், பாரதி நகர், அஸ்தம்பட்டி, சேலம்.

8. அ/மி. லட்சுமி நாராயணபெருமாள் திருக்கோயில், இரண்டாவது அக்ரஹாரம், சேலம்-1.

9. அ/மி. சித்திரக்கல் மாரியம்மன் திருக்கோயில், மேட்டுத் தெரு, சேலம்.

10. அ/மி. மாரியம்மன் திருக்கோயில், அல்லிக்குட்டை, சேலம் வட்டம்.

6—

## பணி நியமனம்

**வினா எண் 20078—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு பயிற்சி முடித்து வேலைக்கு அழைப்பு இல்லாமல் வயது வரம்பைக் கடக்க உள்ள செவிலியர்களை அரசு மருத்துவமனையிலுள்ள காலிப் பணியிடங்களில் போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

அரசு பயிற்சி பெற்ற செவிலியர்கள், காலிப் பணியிடங்களில் இனச்சுழற்சி முறையில் மதிப்பெண் மற்றும் தகுதி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். நியமனத்திற்கு வயது வரம்பு ஏதும் இல்லை.

7—

## விளையாட்டு மையம்

**வினா எண் 21083—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 22

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஏரியூரில் விளையாட்டுச் சாதனங்களுடன் விளையாட்டு மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, ஏரியூரில் விளையாட்டுச் சாதனங்களுடன் விளையாட்டு மையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**8—**

## விளையாட்டரங்கங்கள்

**வினா எண் 21278—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழகக் கல்லூரி மாணவர்களுக்கான சிறப்பு விளையாட்டரங்கில் எத்தனை மாணவர்கள் பயின்று வருகின்றனர்?

(ஆ) எத்தனை விளையாட்டரங்கங்கள் உள்ளன? எத்தனை விளையாட்டு விடுதிகள் உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு என சிறப்பு விளையாட்டு விடுதி, சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் செயல்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் இவ்விளையாட்டு விடுதியில்



2003 ஏப்ரல் 22]

கல்லூரி மாணவர்கள் 45 பேர்களும், +2 தேர்ச்சி பெறாமல் மீண்டும் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 5 பேர்களும் ஆக மொத்தம் 50 விளையாட்டு வீரர்கள் பயன்பெற்றனர்.

(ஆ) தமிழகத்தில் 22 விளையாட்டரங்கங்கள் உள்ளன. பள்ளி மாணவ/மாணவியர்களில் விளையாட்டு வீரர்களுக்கு 4 விளையாட்டு விடுதிகள் உள்ளன. அவை:—

1. ஜவஹர்லால் நேரு விளையாட்டு விடுதி, சென்னை.
2. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, சென்னை.
3. என்.எல்.சி. விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி.
4. சுவாமி சிவானந்தா மேல்நிலை விளையாட்டுப் பள்ளி, கோவை.

**9—**

## விளையாட்டுப் பள்ளி

**வினா எண் 21279—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் விளையாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சேலத்தில் விளையாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

10—

துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 23754—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற மாவட்டம், சின்னார் ஆகிய இடங்களில் அரசு துணை சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மாவடப்பு கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், அவ்வூராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சின்னார் கிராமத்தின் மக்கள் தொகை 100 ஆகும். மலைப் பகுதியில் 3000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் எனும் அரசின் இலக்கின்படி சின்னார் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

11—

விளையாட்டுப் பயிற்சி மையம்

**வினா எண் 26760—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளையாட்டுத் துறையில் சிறப்புப் பெற ஏதுவாக, மாவட்டந்தோறும் பெண்களுக்கென விளையாட்டுப் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மாவட்டந்தோறும் பெண்களுக்கென விளையாட்டுப் பயிற்சி மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

12—

சுற்றுச் சுவர்

**வினா எண் 31243—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், சிறுகாம்பூரில் அமைந்துள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனவே, சிறுகாம்பூரில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

13—

வீட்டுமனைகள்

**வினா எண் 25693—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் மூக்குடி கிராமத்தில் 112 பிற்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கும், கனக்குடி கிராமத்தில் 20 பிற்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**14—**

**மகளிர் திட்டம்**

**வினா எண் 12518—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு தமிழக அரசு அறிவித்த 'மகளிர் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோர், கணவரால் கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர் எவ்வளவு பெண்கள் பயன்பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டு தமிழக அரசு அறிவித்த 'மகளிர் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் மொத்தம் 25,083 பெண்கள் பயன் பெற்றனர்.

| | | | |
|---|---|---|---|
| **விவரம்:** | தாழ்த்தப்பட்டோர் | - | 9994 |
| | கணவரால் கைவிடப்பட்டோர் | - | 198 |
| | ஊனமுற்றோர் | - | 42 |
| | மற்றவர்கள் | - | 14849 |
| | **மொத்தம்** | .. | **25083** |





**15—**

**சத்துணவுப் பணியாளர்கள்**

**வினா எண் 18454—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள பள்ளிக்கூடங்களில் காலியாக உள்ள இடத்திற்குப் புதிதாக சத்துணவு ஆயாக்கள் அல்லது உதவியாளர்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள காலிப் பணியிடங்கள் ஜூலை 2002-க்குள் நிரப்பப்பட்டு விட்டன. 2002 அக்டோபர் மாதத்தில் 2 பணியாளர்கள் இறந்ததால் ஏற்பட்ட காலிப் பணியிடங்கள் ஊட்டச்சத்து உபரிப் பணியாளர்களைக் கொண்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**16—**

**சத்துணவுப் பணியாளர்கள்**

**வினா எண் 20948—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், ஆரம்பப் பள்ளி சத்துணவுப் பணியாளரை அரசு நியமனம் செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், புள்ளநேரி ஆரம்பப் பள்ளியில் 41 மாணவர்களைக் கொண்டு சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் 22-2-2002-ல் துவக்கப்பட்ட சத்துணவு

மையத்திற்கு அருகிலுள்ள மீனாட்சிபுரம் அரசு கள்ளர் துவக்கப் பள்ளி சத்துணவு மையப் பொறுப்பாளரை கூடுதல் பொறுப்பு வகிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

புள்ளநேரி மையத்திற்கு மாறுதல் கோரும் ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள உபரிப் பணியாளர்களைக் கொண்டு அமைப்பாளர் பணியிடத்தைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சத்துணவு மையத்திற்கு சமையலர் மற்றும் உதவியாளர் நியமனம் செய்யப்பட்டு மையம் செயல்பட்டு வருகின்றது.

**17—**

### புதிய உயர்நிலைப் பள்ளிகள்

**வினா எண் 12187—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 2000-2001-ல் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**18—**

### பேருந்துகள்

**வினா எண் 10992—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சியில் இயங்கும் தடம் எண்கள் 46 மற்றும் 58 ஆகிய பேருந்துகள் சரியாக இயங்குவதற்கு அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அன்னியூர் ஊராட்சியில், இயங்கும் கும்பகோணம் போக்குவரத்துக் கழக நகரத் தடம் எண் 46, தினசரி கும்பகோணம்-தென்கரை (வழி) ஆடுதுறை தடத்தில் 4 நடைகளும், கும்பகோணம்- விளாகம் (வழி) ஆடுதுறை தடத்தில் 4 நடைகளும், கும்பகோணம்-துக்காட்சி (வழி) நாச்சியார் கோவில் தடத்தில் 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றது. கும்பகோணம் நகரத் தடம் எண் 58, கும்பகோணம்-வடமட்டம் (வழி) முருக்கங்குடி தடத்தில் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. மேற்கூறிய நடைகள் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்தில் சரியாக இயக்கப்படுகின்றன.

**19—**

### பேருந்துகள் செல்லுதல்

**வினா எண் 11004—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, காஷ்மீர்-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை 7-ல் அமைந்துள்ள புன்னியவாளன்புரம், புனித வேளாங்கண்ணி மாதா கோயில் முன்பு பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புன்னியவாளன்புரம் என்ற குடியிருப்புப் பகுதி சுமார் 56 வீடுகளை மட்டுமே கொண்டது. மேற்படி குடியிருப்புப் பகுதியானது திருநெல்வேலி-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் பணகுடிக்கும், காவல்கிணறு விலக்கிற்கும் இடையே அமைந்துள்ளது. புன்னியவாளன்புரத்தில், அதன் வழியாக இயக்கப்படும் நகரப் பேருந்துகளான தடம் எண் 13 தடம் எண் 18 ஆகியவையும் மற்றும் புறநகர்ப் பேருந்தான தடம் எண் 59ஏ-யும் நின்று சென்று வருகின்றன.

மேலும், மேற்படி குடியிருப்புப் பகுதியிலிருந்து சுமார் 0.5 கி.மீ. தூரத்திலேயே உள்ள லெப்பை குடியிருப்பு விலக்கில், லெப்பை குடியிருப்பு வழியாகச் செல்லும் பேருந்துகளுக்கு ஏற்கெனவே பேருந்து நிறுத்தம் செயல்படுத்தபபட்டு வருகிறது. இப்பேருந்து நிறுத்தத்தையும் பயன்படுத்தி வரும் சூழ்நிலையில் மிகக் குறைந்த பொது மக்களைக் கொண்ட புன்னியவாளன்புரத்தில் மேற்கொண்டு பேருந்துகள் நின்று செல்லும்படி இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**20—**

**கூடுதல் பேருந்து வசதி**

**வினா எண் 11067—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர்—அஞ்சு கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வள்ளியூரிலிருந்து அஞ்சு கிராமம் செல்வதற்கு ஏற்கெனவே திருநெல்வேலி அரசுப் போக்குவாத்துக் கழகம் மூலம் 2 நகர மற்றும் 5 புறநகர்ப் பேருந்துகளைக் கொண்டு 30 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. ஏப்ரல் 2002 முதல் வள்ளியூர்-கன்னியாகுமரி (வழி) அஞ்சு கிராமம் என புறநகர்ப் பேருந்து ஒன்று கூடுதலாக 12 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் நாகர்கோவில் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 50-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடப் பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 50 சதவீதம் ஆகும். மேலும், நாகர்கோவில்/கன்னியாகுமரியிலிருந்து அஞ்சு கிராமம் வழியாக மதுரை (கோட்டம்-3) நாகர்கோவில் பேருந்து மூலம் 50-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இப்பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. மேற்கொண்டு கூடுதலாகப் பேருந்து வசதி செய்யப்படின், ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் பேருந்துகளின் வசூல் பாதிக்க வழி வகுக்கும். அதுமட்டுமின்றி, கூடுதல் பேருந்தின் வசூலும் இலாபகரமாக இருக்காது. எனவே, தற்போதுள்ள நிலையில் வள்ளியூர்—அஞ்சு கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**21—**

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 15330—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி-உவரி நெடுஞ்சாலையில் பெருமனல் விலக்கிலிருந்து மக்களுக்குப் பயனின்றிச் செல்லும் பேருந்துகளை திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், இருக்கன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட இருக்கன்துறை, வண்ணார்குளம், புத்தேரி, சேனார்குளம், பொன்னார்குளம் கிராமங்களின் வழியாக இயக்கிட, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி—உவரி பிரதான சாலையில் இயக்கப்படும் பேருந்துகளை உட்புறமாக அமைந்துள்ள புத்தேரி, இருக்கன்துறை, வண்ணார்குளம், சேனார்குளம், பொன்னார்குளம் வழியாகத் தட மாறுதல் செய்து இயக்கினால், தடத்தின் தூரம் அதிகரிப்பதால் ஏற்படும் கூடுதல் பயணக் கட்டணம், கூடுதல் பயண நேரம் ஆகியவற்றால் தற்போது இப்பேருந்துகளைப் பயன்படுத்தி வரும் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு, புதிய பிரச்சினைகளை உருவாக்க வழி வகுக்கும். தவிரவும், தட மாற்றம் கேட்டுள்ள பகுதியில் இருப்பவர்கள் கன்னியாகுமரிக்குச் செல்ல தற்போது கீழ்க்கண்டவாறு போதிய பேருந்து வசதிகள் உள்ளன.

(1) பொன்னார்குளம் மற்றும் சேனார்குளம் ஆகிய கிராம மக்கள் கன்னியாகுமரி செல்ல--1 நகரப் பேருந்து மூலமாக 4 சுற்றுக்கள்

(2) வண்ணார்குளம், இருக்கன்துறை, புத்தேரி ஆகிய கிராம மக்கள் கன்னியாகுமரி செல்ல--2 புறநகர்ப் பேருந்துகள் மூலம் 6 சுற்றுக்களும், 1 நகரப் பேருந்து மூலம் 8 சுற்றுக்களும், ஆக மொத்தம் 14 சுற்றுக்கள்

மேற்கூறிய சூழ்நிலையில் கன்னியாகுமரி—உவரி நெடுஞ்சாலையில் இயக்கப்படும் பேருந்துகளையும் ஏற்கெனவே போதிய பேருந்து வசதிகள்

[2003 ஏப்ரல் 22

பெற்றுள்ள உட்புறக் கிராமங்களான இருக்கன்துறை, வண்ணார்குளம், புத்தேரி, பொன்னார்குளம் கிராமங்களின் வழியாகத் திருப்பி இயக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை.

**22—**

**பேருந்து**

**வினா எண்15374—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்திற்குட்பட்ட ராதாபுரத்தில் இருந்து புத்தேரி, பொன்னார்குளம், வண்ணார்குளம், சேனார்குளம், இருக்கன்துறை கிராமங்களின் வழியாக கன்னியாகுமரிக்குப் பேருந்து இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ராதாபுரம்—கன்னியாகுமரி வழித்தடத்தில் வண்ணார்குளம், இருக்கன்துறை, புத்தேரி ஆகிய கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களுக்கு மதுரை (கோட்டம்-2) திருநெல்வேலி போக்குவரத்துக் கழகத்தின் ஒரு புறநகர்ப் பேருந்து மூலமாக 4 சுற்றுக்களும் மற்றும் மதுரை (கோட்டம்-3)-லிருந்து ஒரு நகரப் பேருந்து மூலம் 4 சுற்றுக்களும், ஒரு புறநகர்ப் பேருந்து மூலம் 2 சுற்றுக்களும், ஆக பத்து சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளன. மற்ற கிராமங்களான சேனார்குளம், பொன்னார்குளம் ஆகியவை ராதாபுரம்—கன்னியாகுமரி சாலையிலிருந்து பிரிந்து கடற்புறச் சாலையை இணைக்கும் சாலையில் அமைந்துள்ளன. ஏற்கெனவே, சேனார்குளம் பொன்னார்குளம் கிராம மக்கள் கன்னியாகுமரி செல்ல 4 சுற்றுக்களும், ராதாபுரம்—கன்னியாகுமரி பிரதான சாலையை அடைய வசதியாக 2 சுற்றுக்களும் பேருந்து வசதி உள்ளன. ராதாபுரம், கன்னியாகுமரி தடச் சாலையானது, சேனார்குளத்திலிருந்து 0.4 கி.மீ. தொலைவிலும், கடற்புறச் சாலையானது, பொன்னார்குளத்திலிருந்து சுமார் 0.5 கி.மீ. தொலைவிலும் மட்டுமே உள்ளது. எனவே, இக்கிராம மக்கள் பிரதான சாலைக்கு வந்தும் பிற பேருந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, வினாவில் சொல்லப்பட்டுள்ள அனைத்து கிராமங்களிலிருந்தும் கன்னியாகுமரிக்குச் செல்லப் போதுமான பேருந்து வசதிகள் இருப்பதால் கூடுதலாகப் பேருந்து ஏதும் இயக்கத் தேவை எழவில்லை.



2003 ஏப்ரல் 22]

**23—**

**பேருந்து வசதி**

**வினா எண் 15697—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, கொண்டாபுரம் கிராமத்திலிருந்து சிவ்வாடா சென்று வர பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) மேலும், புதிய பேருந்து இயக்கப்படும் வரையில் தடம் எண் 7 பேருந்தை சிவ்வாடாவிலிருந்து கொண்டாபுரம் வரை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) திருத்தணி—கொண்டாபுரம், (வழி) சிவ்வாடா தடத்தின் நீளம் 18.0 கி.மீ. ஆகும். கொண்டாபுரம், சிவ்வாடாவிலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. கொண்டாபுரம் கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 300 ஆகும். சிவ்வாடாவிலிருந்து கொண்டாபுரம் வரையிலான 1.5 கி.மீ. சாலை 8 அடி அகலம் கொண்டதாக உள்ளது. சாலையை ஒட்டி மணல் சாலை இல்லை. மேலும் சிவ்வாடா காலனியில் 4 குறுகிய வளைவுகள் உள்ளன. சாலையை ஒட்டி மதில் சுவர்கள் இல்லை. பெரிய கிணறுகள் உள்ளன. எனவே, கொண்டாபுரம் கிராமத்திலிருந்து சிவ்வாடா சென்று வரவோ, அல்லது தடம் எண் 7 பேருந்தை சிவ்வாடாவிலிருந்து கொண்டாபுரம் வரை நீட்டித்து இயக்கிடவோ இயலாத நிலை உள்ளது.

[2003 ஏப்ரல் 22

24—

### தொகுப்பு வீடுகள் வழங்குதல்

**வினா எண் 19825—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், புலிமாங்காடு காலனியில் 1991-92ஆம் ஆண்டில் கட்டப்பட்ட 30 தொகுப்பு வீடுகளுக்கு இதுவரையில் மின் இணைப்பு வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்பு வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம், தெரியும்.

(ஆ) ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் எவ்வித விண்ணப்பமும், மேற்கண்ட தொகுப்பு வீடுகளுக்குப் பெறப்படவில்லை. விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

### நீரேற்று மின் மோட்டார்களுக்கு முன்னுரிமை வழங்குதல்

**வினா எண் 19844—திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு அறிவித்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் நீர் ஆதாரம் உள்ள இடங்களில் நீரேற்று மின் மோட்டார்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?



2003 ஏப்ரல் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

அரசு அறிவித்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் நீர் ஆதாரம் உள்ள இடங்களில் அமைக்கும் நீரேற்று மின் மோட்டார்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு ஆணை ஏதுமில்லை. ஆயினும், அரசு அறிவித்துள்ள சுய நிதித் திட்டத்தின்கீழ் ரூ.25,000/- செலுத்தியோ அல்லது மின் இணைப்புக்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை முழுவதும் செலுத்தியோ விவசாய இணைப்பினை அந்த மாவட்டத்தின் ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமையில் பெறலாம்.

26—

### குடியிருப்பு கட்டும் திட்டம்.

**வினா எண் 20396—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயிலில் மின் துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தற்போதைய நிதிநிலையின் காரணமாக புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயிலில் மின்துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தரும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

27—

### தெரு விளக்குகள்

**வினா எண் 20769—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள சோலையார் அணைப் பகுதியில் தெரு விளக்குகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

[2003 ஏப்ரல் 22

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சோலையார் பகுதியில் உள்ள மொத்த மின் விநியோகமும் பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதார அமைப்புத் துறை) உயர் மின் அழுத்த மின் இணைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. சோலையார் நகர்ப் பகுதியில் ஏற்கெனவே நான்கு 1X40 வாட்ஸ் குழல் தெரு விளக்குகள் வால்பாறை நகரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் கூடுதலாக ஐந்து 1X40 வாட்ஸ் குழல் விளக்குகளுக்கு வால்பாறை பேரூராட்சியால் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு, மின்சார வாரியத்தால் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்த தாக்கீதும் கொடுக்கப்பட்டது. ஆனால், இந்நாள் வரை மதிப்பீட்டுத் தொகை சிறப்பு நிலை செயல் அலுவலர், வால்பாறை பேரூராட்சி, வால்பாறை அவர்களால் செலுத்தப்படவில்லை. (ரூ. 59,550/- மேற்படி ஐந்து தெரு விளக்குகளும், மற்ற பகுதியில் பத்து தெரு விளக்குகளும், ஆக மொத்தம் 15 தெரு விளக்குகள் அமைக்க)

(ஆ) மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டவுடன் கூடுதல் ஐந்து தெரு விளக்குகள் புதியதாக மேற்படி பகுதியில் அமைக்கப்பட்டு எரிய விடப்படும்.

**28—**

### மின் உற்பத்தித் திட்டம்

**வினா எண் 21575—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொல்லிமலை மின் உற்பத்தித் திட்டம் மீண்டும் தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

ஆம். கொல்லிமலை மின் உற்பத்தித் திட்டத்தை (120 மெகாவாட்) மீண்டும் எடுத்துக்கொள்ளும் திட்டம் உள்ளது. இத்திட்டத்தின்



2003 ஏப்ரல் 22]

மொத்த மதிப்பீடு ரூபாய் 71.10 கோடி ஆகும். (1999-2000 விலை மதிப்பின்படி) ஆண்டின் சராசரி மின் உற்பத்தி 57.65 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். இத்திட்டமானது நாமக்கல் மாவட்டத்திலுள்ள அய்யாறு மற்றும் கொல்லிமலையில் உயர்மட்டப் பகுதிகளிலிருந்து வரும் நீரையும், 716 மீட்டர் உயரத்தையும் உபயோகித்து மின் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் அமையப்பட உள்ளது. திட்டத்துக்குத் தேவையான 5.5 ஹெக்டேர் வன நிலத்தை மின் வாரியத்திற்குக் கொடுக்க சம்பந்தப்பட்ட மாநில அறிவுரைக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்கு புது தில்லியிலுள்ள மத்திய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்ற பின்னர் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

**29—**

### புனல் மின் திட்டங்கள்

**வினா எண் 21578—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை புனல் மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன?

(ஆ) அவைகளில் நிறைவேற்றப்பட்ட/நிலுவையிலுள்ள திட்டங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மின் வாரியம் மூலமாக கடந்த 5 ஆண்டுகளில் கீழ்க்கண்ட 6 புனல் மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன:—

(1) கீழ்பவானி வலது கால்வாய் மின் திட்டம் (8 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம்.

(2) சாத்தனூர் அணை புனல் மின் திட்டம் (7 மெகாவாட்), திருவண்ணாமலை மாவட்டம்.

[2003 ஏப்ரல் 22

(3) பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் (30 மெகாவாட்), நீலகிரி மாவட்டம்.

(4) திருமூர்த்தி அணை புனல் மின்திட்டம் (1.95 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம்.

(5) முக்குருத்தி அணை புனல் மின்திட்டம் (0.70 மெகாவாட்), நீலகிரி மாவட்டம்.

(6) ஆழியார் அணை புனல் மின்திட்டம் (2.5 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம்.

(ஆ) கீழ்க்கண்ட 8 புனல் மின் திட்டங்களின் கட்டுமான/ ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன:

(1) பைகாரா இறுதி நிலை புனல் மின் திட்டம் (150 மெகாவாட்), நீலகிரி மாவட்டம்.

(2) பவானி கட்டளை தடுப்பணை: புனல் மின் திட்டம் (30 மெகாவாட்), ஈரோடு மாவட்டம்.

(3) பெருஞ்சாணி அணை புனல் மின் திட்டம் (1.3 மெகாவாட்), கன்னியாகுமரி மாவட்டம்.

(4) அமராவதி அணை புனல் மின் திட்டம் (4 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம்.

(5) பவானி கட்டளை தடுப்பணை-2 புனல் மின் திட்டம் (30 மெகாவாட்), ஈரோடு மாவட்டம்.

(6) பவானி தடுப்பணை-1 புனல் மின் திட்டம் (6 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம்.

(7) திருமூர்த்தி சம மட்டக் கால்வாய் புனல் மின் திட்டம் (1.25 மெகாவாட்), கோயம்புத்தூர் மாவட்டம்.

(8) முக்குறிச்சிலுறல்லா மின் உற்பத்தி அதிகமாக்கும் திட்டம், நீலகிரி மாவட்டம்.



2003 ஏப்ரல் 22]

30—

**கால நிர்ணயம்**

**வினா எண் 21579—திரு.ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி கட்டளை குறுக்கு அணை-1 நீர் மின் திட்டத்தின் இறுதி மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(ஆ) அந்தத் திட்டம் எப்பொழுது செயல்பட கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பவானி கட்டளை குறுக்கு அணை-1 நீர் மின் திட்டத்தின் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.145.25 கோடி.

(ஆ) இந்தத் திட்டத்தை 31-12-2003-ல் செயல்படுத்த கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

31—

**நிதியுதவி**

**வினா எண் 21581—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு, 'ஓய்வூதியர்கள் உடல் நலத் திட்டத்திலிருந்து இதய அறுவை சிகிச்சைக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறதா?

(ஆ) எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

[2003 ஏப்ரல் 22

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், அவர்கள் மேற்கொள்ளும் இதய அறுவை சிகிச்சைகளுக்கு ரூ.50,000/- அல்லது அவர்கள் செய்து கொண்ட மருத்துவ சிகிச்சையின் மொத்தச் செலவில் 75 விழுக்காடு ஆகியவற்றில் எது குறைவோ, அந்தத் தொகை வழங்கப்படுகிறது.

32—

**பதவி உயர்வு**

**வினா எண் 25484—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு மின் வாரியத்தில் கல்வித் தகுதியுடன் நியமனம் பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கல்வித் தகுதியுடன் நியமனம் பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும், இளநிலைப் பொறியாளர்களுக்கும் முதன்மைப் பட்டியல் வரிசையில் அதற்குரிய தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.

33—

**கடன் வசதி**

**வினா எண் 17067—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 22]

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை எவ்வளவு நபர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடன் வழங்கிய தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 2001 ஆம் ஆண்டு அக்டோபர் வரை 114 நபர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடன் வழங்கிய தொகை ரூ.240.25 இலட்சம் ஆகும்.

34—

**சிறு தொழில்**

**வினா எண் 21263—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் நிதியாண்டில் சிறு தொழில் செய்ய எவ்வளவு நபர்களுக்கு கடன் வழங்கியது?

(ஆ) கடன் அளித்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, 2001-2002 ஆம் நிதியாண்டில் சிறு தொழில் செய்ய 15 நபர்களுக்கு கடன் வழங்கியுள்ளது.

(ஆ) வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 37.95 லட்சம்.

**35—**

**கடனுதவி**

**வினா எண் 21264—திரு. ஐ கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, மருத்துவமனை கட்ட 2001-2002 ஆம் ஆண்டில் எவ்வளவு பேர் கடன் கேட்டு விண்ணப்பித்தனர்?

(ஆ) அதில் எத்தனை மருத்துவர்களுக்கு மருத்துவமனை கட்ட வங்கி கடனுதவி அளித்தது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருத்துவமனை கட்டக் கடன் கோரி 2001-2002 ஆம் ஆண்டில் எவரும் விண்ணப்பிக்கவில்லை.

**36—**

**சிறு வணிகம்**

**வினா எண் 21266—திரு. ஐ கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் ஆண்டில் மகளிர் சிறு வணிகம் செய்வதற்கு எவ்வளவு நபர்களுக்கு கடன் வழங்கியது?

(ஆ) கடன் வழங்கிய மொத்தத் தொகை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் ஆண்டில் மகளிர் சிறு வணிகம் செய்வதற்கு 6692 மகளிர்க்கு கடன் வழங்கப்பட்டது.

(ஆ) கடன் வழங்கிய மொத்தத் தொகை ரூ.311.30 இலட்சம் ஆகும்.

**37—**

**கடன் வசதி**

**வினா எண் 21267—திரு. ஐ கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் ஆண்டில் பொது மக்கள் நுகர்பொருள் வாங்க எவ்வளவு பேருக்கு கடன் வழங்கியது?

(ஆ) கடன் வழங்கிய மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் ஆண்டில் பொது மக்கள் நுகர் பொருள் வாங்க 1120 நபர்களுக்கு கடன் வழங்கியுள்ளது.

(ஆ) கடன் வழங்கிய மொத்தத் தொகை ரூ.61.43 இலட்சம் ஆகும்.

**38—**

**எரிவாயு இணைப்பு**

**வினா எண் 21503—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 22

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் எவ்வளவு கிளை வங்கிகள் உள்ளன?

(ஆ) சின்ன வங்கிகள் மூலம் சமையல் எரிவாயு இணைப்புப் பெற கடன் வழங்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 62 கிளைகள் உள்ளன.

(ஆ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளின் மூலம் சமையல் எரிவாயு இணைப்புப் பெற கடன் வழங்கப்பட்டுள்ளது.

**39—**

## கடன் வசதி

**வினா எண் 22972—திரு. ஐ கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, எடப்பாடி கிளையில் 2001-2002 ஆம் ஆண்டு அரசு ஊழியர்கள் எவ்வளவு பேருக்கு கடன் வழங்கி உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் எடப்பாடி கிளையில் 2001-2002 ஆம் ஆண்டில் எந்தவொரு அரசு ஊழியரும் கடன் வேண்டி விண்ணப்பிக்கவில்லை. எனவே, எந்த அரசு ஊழியருக்கும் கடன் வழங்கப்படவில்லை.



2003 ஏப்ரல் 22]

**40—**

## கடன் தொகை

**வினா எண் 22923—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சூரமங்கலம் நகர கூட்டுறவு வங்கியில் 1996 முதல் 2001 வரை எவ்வளவு நபர்களுக்கு அடமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது? அதன் தொகை எவ்வளவு?

(ஆ) அடமானக் கடன் தொகை—வசூலிக்க முடியாத நிலையில் உள்ள கடன் தொகை எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சூரமங்கலம் சுப்ரமணிய நகர் நகர வங்கியில் 1-4-1996 முதல் 31-3-2001 வரை 1324 நபர்களுக்கு ரூ.1482.70 இலட்சம் அடமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அடமானக் கடன் தொகை வசூலிக்க முடியாத நிலையில் ஏதுமில்லை.

**41—**

## எரிவாயு இணைப்பு

**வினா எண் 22927—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் சேலம் மாவட்டத்தில் சமையல் எரிவாயு இணைப்புப் பெற கடன் வழங்கப்பட்டுள்ளதா?

[2003 ஏப்ரல் 22

(ஆ) ஆம் எனில் 2000-2001, 2001-2002 ஆண்டுகளில் எவ்வளவு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சமையல் எரிவாயு இணைப்புப் பெற சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியால் 2000-2001 ஆம் ஆண்டில் 19,167 நபர்களுக்கும், 2001-2002 ஆம் ஆண்டில் 14,809 நபர்களுக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**42—**

**கடன் சலுகை**

**வினா எண் 23282—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் சலுகை அறிவிப்பினால் பயன் பெற்ற சிறு, குறு, பெரு விவசாயிகள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் (2001-ன் திட்டம்) பயன் பெற்ற சிறு, குறு, பெரு விவசாயிகளின் விவரம் கீழ்வருமாறு:-

| விவரம் | சிறு விவசாயி | குறு விவசாயி | பெரிய விவசாயி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பயன் பெற்றோர் எண்ணிக்கை | 10643 | 8642 | 12858 | 32143 |

**43—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 26492—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர்



2003 ஏப்ரல் 22]

பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெங்கோடு - பொன்னங்குளம் கிராமத்திற்கு நியாயவிலைக் கடை ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், ஆலந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் வெங்கோடு கூட்டுறவு நியாயவிலைக் கடை 349 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பொன்னங்குளம் பகுதியில் 66 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன, பகுதிநேரக் கடை அமைத்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், பகுதிநேரக் கடையில் 200க்குக் குறையாத குடும்ப அட்டைகளும் இருக்கவேண்டுமென்ற வரையறைகள் பொருந்தாததால், பொன்னங்குளம் பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**44—**

**கூட்டுறவுக் கடை**

**வினா எண் 26574—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் உள்ள அதியனூர் கிராமத்தில் கூட்டுறவுக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியைச் சேர்ந்த அதியனூரில் ஏற்கெனவே ஒரு கூட்டுறவு நியாய விலைக் கடை இயங்கி வருகிறது.

[2003 ஏப்ரல் 22

45—

**கட்டட வசதி**

**வினா எண் 29441—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி தனி வட்டமாகச் செயல்படுவதால், அங்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் கிட்டங்கி (Godown) கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்கெனவே தமிழகம் முழுவதுமாக 136 வட்டங்களில் 6.23 இலட்சம் டன்கள் கொள்ளளவு உள்ள சொந்த விநியோகக் கிடங்குகள் மூலமாக அத்தியாவசியப் பொருள்களை சேமித்து விநியோகம் செய்து வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 7 வட்டங்களில் ஏற்கெனவே உள்ள 23000 டன் கொள்ளளவுள்ள சொந்தக் கிடங்குகள் மாவட்ட விநியோகத் தேவைக்குப் போதுமானதாக உள்ளன. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மணமேல்குடி வட்டத்துக்கு அருகில் உள்ள ஆவுடையார் கோயில் வட்ட விநியோகக் கிடங்கிலிருந்து பொருள்கள் அனைத்தும் சிரமமின்றி விநியோகம் செய்யப்படுவதால் புதிதாக சொந்தக் கிடங்கு கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

46—

**புதிய கட்டடம்**

**வினா எண் 20443—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைக்குப் புதிய கட்டடம் கட்டித் தரும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2003 ஏப்ரல் 22]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

மணமேல்குடி மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைக்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தரும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

47—

**தெரு விளக்கு**

**வினா எண் 15657—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பூணிமாங்காடு கிராமம், திடீர் நகர் பகுதியில் தெருவிளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், திருவலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் பூணிமாங்காடு ஊராட்சி, திடீர் நகர் பகுதியில் தற்போது தெருவிளக்குகள் போதுமானதாக உள்ளன.

48—

**கழிவு நீர் வாய்க்கால்**

**வினா எண் 19684—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, நல்லம்மாபட்டி ஆதிதிராவிடர் தெருவிற்கு கழிவு நீர் வாய்க்கால் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

[2003 ஏப்ரல் 22

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஒன்றியம், நக்கலப்பட்டி பஞ்சாயத்து, நல்லம்மாபட்டி ஆதிதிராவிடர் தெருவிற்கு கழிவு நீர் வாய்க்கால் கட்ட ரூ.90,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஊராட்சியில் தற்போது உபரி நிதி இல்லாததால் இவ்வேலை தற்போது செய்ய வாய்ப்பில்லை.

**49—**

**அலுவலகம்**

**வினா எண் 20484—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகரில் குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம் மீண்டும் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2002-2003 நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வேலைப்பளுவின் அடிப்படையில் பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உபகோட்ட அலுவலகம் அமைக்கத் தேவையில்லை.

**50—**

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 21249—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் பாலிதீன் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் 2001-2002 ஆம் ஆண்டில் எவ்வளவு இலாபத்தில் இயங்கியது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர் வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

ஓமலூர் பாலிதீன் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.84,020/- இலாபம் ஈட்டியுள்ளது.



2003 ஏப்ரல் 22]

**(பதினைந்தாவது பட்டியல்)@**

**1—**

**சாலை செப்பனிடல்**

**வினா எண் 8557—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டியிலிருந்து சின்னப்பம்பட்டி வரை செல்லும் இரும்பாலைச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக செப்பனிட்டு சரி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது சேலம் இரும்பாலைக்குச் சொந்தமானதால் மேற்படி சாலையை நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக சீர் செய்து மேம்பாடு செய்ய இயலாது.

**2—**

**ஈமக்கடன்**

**வினா எண் 20529—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு பணியாளர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமக்கடன் செய்ய ரூ.5,000/- வழங்குவதுபோல் ஓய்வூதியம் பெறுபவர் இறந்தால் அவர் குடும்பத்திற்கும் ரூ.5,000/- வழங்க அரசு முன்வருமா?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு இறுதிச் சடங்கிற்காக வழங்கப்பட்டு வரும் ரூ.5,000/- அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்ப நல நிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. அரசுத் துறையில் ஓர் அரசு அலுவலர் இறக்க நேரிட்டால் அவரது குடும்ப விவரங்கள் அலுவலகத் தலைமைக்குத் தெரிய வாய்ப்பு இருக்கிறது. அதனால் அவர்களை இனங்கண்டு உரிய நேரத்தில் இறுதிச் சடங்கு செய்வதற்கு முன்பணம் ரூ.5,000/- அவர்கள் குடும்பத்தினருக்கு உடனடியாக வழங்கப்படுகிறது. ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் வாரிசுதாரர்களின் பெயர்கள் பற்றி விவரங்கள் தெரியாது. மேலும், ஓய்வூதியதாரர்கள் பல்வேறு மாநிலங்களில் தங்கி அங்கு உள்ள கருவூலங்கள் மற்றும் வங்கிகள் மூலம் ஓய்வூதியத்தைப் பெறுவதாலும், அவர்களின் வாரிசுதாரர்களும் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலும்/வெளிநாடுகளிலும் வசித்து வருவதாலும் ஓய்வூதியதாரர் காலமாகும் பட்சத்தில் தகுந்த வாரிசுதாரர்களை உடனடியாக இனங்காண வாய்ப்பு இல்லை. எனவே, அரசுப் பணியாளர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய அரசு ரூ.5,000/- வழங்குவது போன்று அரசு ஓய்வூதியதாரர்கள் இறந்தால் அவர்களுக்கு ஈமச்சடங்கு செய்ய உதவித் தொகை வழங்க இயலாததாகக் கருதப்படுகிறது.

3—

### மழை நீர் சேமித்தல்

**வினா எண் 20496—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியிலுள்ள முருகாளி எஸ்டேட் நடுநிலைப் பள்ளி (உதவி பெறும் பள்ளி)யில் வகுப்பறைகளில் மேலிருந்து விழும் மழை நீரைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

உதவி பெறும் பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் பராமரிப்பு மானியம் அனுமதிக்கப்படுகிறது. இம்மானியத் தொகையிலிருந்து வகுப்பறைகளில் மேலிருந்து விழும் மழை நீரைத் தடுக்கும் பணிக்காக சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகமே செலவு செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4—

### சுற்றுச் சுவர்

**வினா எண் 20707—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் இயங்கும் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு சுற்றுச்சுவர் மற்றும் உணவுக்கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு சுற்றுச்சுவர் கட்ட 2002-2003 ஆம் ஆண்டிற்கான சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து உரிய நிதி ஒதுக்கீடும், நிர்வாக ஒப்புதலும், கல்லூரிக் கல்வி இயக்குநரால் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. உணவுக்கூடம் அமைக்கும் பணியை திருப்பூர் (வடக்கு) ரோட்டரி சங்கம் ஏற்க முன் வந்துள்ளது.

5—

### காவலர் பணியிடம்

**வினா எண் 20737—திரு. சோ. இராசேந்திரன்:**—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் வட்டம், பிள்ளையார் நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு காவலர் பணியிடம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு நியமனங்கள் மேற்கொள்ள தடையாணை அமலில் உள்ளதால், சங்கரன்கோவில் வட்டம், பிள்ளையார் நத்தம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு காவலர் பணியிடம் ஏற்படுத்த இயலாது.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

6—

**நீச்சல் குளம் அமைத்தல்**

**வினா எண் 21529—திரு. ஐ.கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்திலுள்ள விளையாட்டு அரங்கில் நீச்சல் குளம் இல்லை என்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அங்கு நீச்சல் குளம் புதியதாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சேலம் திறந்தவெளி விளையாட்டரங்க வளாகத்தில் ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளம் கட்டும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது.

7—

**தடகளப் போட்டிகள்**

**வினா எண் 25617—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* தடகளப் போட்டிகளை வட்டார அளவில் நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை மாதத்திற்கு ஒரு முறை நடைபெறும், எந்தெந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன என அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* தடகளப் போட்டிகளை வட்டார அளவில் நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

8—

**கழிப்பிட வசதி**

**வினா எண் 27000—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் கழிப்பிட வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 2001-2002 ஆம் நிதியாண்டில் சிறு பழுதுபார்ப்புகளுக்கான கணக்குத் தலைப்பில் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மகளிருக்கான கழிப்பிட வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதால், தற்போது இக்கல்லூரிக்குப் போதுமான அளவில் கழிப்பிட வசதிகள் உள்ளன.

[2003 ஏப்ரல் 22

9—

**உடற்பயிற்சி மையம் அமைத்தல்**

**வினா எண் 27012— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:—** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நரிமேடு, அண்டகுளம், கந்தர்வகோட்டை, இராசகோபாலபுரம் பகுதிகளில் உள்ள இளைஞர்கள் பயன் பெறும் வகையில் உடற்பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நரிமேடு, அண்டகுளம், கந்தர்வகோட்டை, இராசகோபாலபுரம் ஆகிய பகுதிகளில் உடற்பயிற்சி மையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

**விளையாட்டு அரங்கம் அமைத்தல்**

**வினா எண் 32147—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், காந்தி மைதானத்தில் விளையாட்டு அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், காந்தி மைதானத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2003 ஏப்ரல் 22]

11—

**தொழிலாளர்**

**வினா எண் 27927—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சென்ற (2000) ஆண்டு ஏற்பட்ட தொழிலாளர் தகராறுகள் எத்தனை?

(ஆ) அதில் தீர்வு காணப்பட்டவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த தொழிற்தாவாக்களின் எண்ணிக்கை | 3306 |
| 2001ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட தொழிற்தாவாக்களின் எண்ணிக்கை | 9375 |
| (ஆ) 2001ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்ட தொழிற்தாவாக்களின் எண்ணிக்கை | 10290 |
| 2001ஆம் ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்தவை | 2391 |

12—

**சத்துணவுக் கூடம் அமைத்தல்**

**வினா எண் 10836—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க.புதூர் ஊராட்சி, சொக்கலிங்கபுரம் கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க.புதூர் ஊராட்சி, சொக்கலிங்கபுரம் கிராமத்தில், சத்துணவுக் கூடம் அமைப்பதற்கு இதுபோன்று விடுபட்ட கிராமங்களின் பட்டியலில் சேர்த்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், இக்கிராமத்தில் உள்ள 30 குழந்தைகளுக்கு, அருகில் 2 கி.மீட்டர் தூரத்தில் உள்ள கரை சுத்து புதூர் குழந்தைகள் நல மையத்திலிருந்து தினமும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

13—

## சத்துணவு மையம்

**வினா எண் 20969—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், கள்ளிமேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு மையம் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், கள்ளிமேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 12-9-2001 முதல் 34 பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

14—

## விவசாயிகளுக்குக் கடன்

**வினா எண் 11450—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டாரப் பகுதிகளில் புன்செய் நிலம் மட்டும் வைத்துள்ள சிறு விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2000-2001ஆம் ஆண்டு கடன் வழங்கப்பட்டுள்ளதா?





விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டாரப் பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 2000-2001ஆம் ஆண்டில் புன்செய் நிலம் மட்டும் வைத்துள்ள சிறு விவசாயிகள் 64 பேருக்கு ஆடு வளர்க்கும் திட்டத்தின்கீழ் ரூ.14,40,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது.

15—

## விவசாயக் கடன் அட்டைகள்

**வினா எண் 14399—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயக் கடன் அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் ஏற்கெனவே 448 உறுப்பினர்களுக்கு விவசாயக் கடன் அட்டைகள் வழங்கியுள்ளது.

(ஆ) இந்த விவசாயக் கடன் அட்டையானது 2-6-2001 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 22

16—

## கூட்டுறவு வங்கிகள்

**வினா எண் 19872—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் வைப்பீட்டுத் தொகை பெற்றுள்ளன?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 2000-2001ஆம் ஆண்டில் 806 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் வைப்புத் தொகை வைத்துள்ளன.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 106 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ரூபாய் ஒரு கோடிக்கு மேல் வைப்புத் தொகை உள்ளது.

17—

## கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்

**வினா எண் 30604—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பகுதியில் உள்ள வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 ஏப்ரல் 22]

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பகுதியில் 18 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 15 வங்கிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன, மீதமுள்ள தொரவலூர்வள்ளிபுரம் மற்றும் அப்பியாபாளையம் ஆகிய 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நலிந்த வங்கிகளாக உள்ளதால் சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

18—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 13862—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கோணங்கின அள்ளி ஊராட்சி, ஏலுபள்ளியில் இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) கோணங்கினஅள்ளி ஊராட்சி, ஏலுபள்ளியில் 2001-2002 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

19—

## கைப் பம்பு

**வினா எண் 15223—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, கல்லடிப்பட்டியில் குடிநீர் கைப்பம்பு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

[2003 ஏப்ரல் 22

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரூர் தொகுதி, கல்லடிப்பட்டியில் சுமார் 40 குடும்பங்கள் உள்ளன. இங்கு ஏற்கெனவே இரண்டு கைப்பம்புகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, கூடுதலாகக் குடிநீர் வசதி செய்ய ஊராட்சியில் நிதி வசதியில்லை.

20—

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 17098—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சான்புரம் ஊராட்சி, வள்ளுவர் தெரு மற்றும் ஆதிதிராவிடர் தெரு மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆச்சாள்புரம் ஊராட்சியைச் சேர்ந்த வள்ளுவர் தெரு மற்றும் ஆதிதிராவிடர் தெருவிற்கு 1995-96 ஆம் ஆண்டில் 40 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

21—

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 19142—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன் அள்ளி, கருமாரியம்மன் கோயில் அருகில் கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2003 ஏப்ரல் 22]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், மஞ்சநாயக்கன்அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த கருமாரியம்மன் கோயில் ஒரு குக்கிராமம் ஆகும். இக்கிராமத்தில் சுமார் 20 வீடுகள் உள்ளன. இங்கு 120 மக்கள் மட்டுமே வசித்து வருகிறார்கள். மேற்காணும் இடத்தில் ஒரு கைப்பம்பு நல்ல நிலையில் பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதில் பொது மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் கிடைக்கிறது. மேற்காணும் குடிநீர் ஆதாரமே போதுமானதாகும்.

22—

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 19143—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகு, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி சாமியார்கொட்டாய் கிராமத்தில் கைப்பம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சாமியார்கொட்டாயில் 15 குடியிருப்புகள் உள்ளன. இந்தக் குடியிருப்பில் கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு எதுவும் இல்லை. விவசாயக் கிணறுகளில் தண்ணீர் எடுத்து உபயோகித்து வருகின்றனர். இக்குடியிருப்புக்கு 2002-2003 ஆம் நிதி ஆண்டில் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று, கைப்பம்பு அமைத்துத் தர உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 22

23—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 21118—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், துரைசாமியாபுரம், குலையனேரி ஊராட்சியில் எரியாத தெரு விளக்கினைச் சீர் செய்ய அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெலவேலி மாவட்டம், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், குலையனேரி ஊராட்சி, துரைசாமியாபுரம் கிராமத்தில் மொத்தம் தெரு விளக்குகள் 12 உள்ளன. தற்போது அவை அனைத்தும் எரிகின்றன.

24—

## குடிநீர் வசதி

**வினா எண் 21120—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், பொய்கை ஊராட்சியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கிராமத்தில் அடிபம்பு அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், பொய்கை ஊராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் மெயின் ரோட்டில் ஒரு ஆழ்குழாயும், திரிபுரசுந்தரபுரம் மறவர் தெருவில் சிறு மின் விசைப் பம்பும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பொய்கையில் கல்யாண மண்டபம் அருகிலுள்ள கிணற்றை ரூ.50,000/- மதிப்பீட்டில் ஆழப்படுத்தியும், இப்பகுதியில் குடிநீர்ப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.





25—

## புதிய அடி குழாய்கள்

**வினா எண் 21121—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், கள்ளம்புளி, சின்னத்தம்பி நாடானூர் ஆகிய ஊர்களில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய புதிய அடி குழாய்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், கள்ளம்புளி மற்றும் சின்னத்தம்பி நாடானூர் ஆகிய இடங்களில் ரூ.20,000/- மதிப்பீட்டில் பைப்லைன் அமைத்து, பொது குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டு, குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

26—

## வீடுகள் கட்டுதல்

**வினா எண். 21490—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி, ஒன்றியம், குன்னமலை ஊராட்சியில் 35 நபர்களுக்கு தொகுப்பு வீடுகள் வேண்டி 2000-2001 ஆம் ஆண்டு விண்ணப்பம் அனுப்பப்பட்டு, இதுநாள் வரை வீடுகள் ஒதுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வீடுகள் எப்போது, கட்டித் தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பரமத்தி ஒன்றியம், குன்னமலை ஊராட்சிக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் 10 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.*

**27—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 10294—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு கால்நடை பாராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருத்தாசலம் நகரிலுள்ள கால்நடை மருத்துவமனையில் பழுதடைந்த கட்டடங்களைப் பழுதுபார்க்கவும், கால்நடைகளுக்கு அவசர நேரங்களில் சத்திர சிகிச்சை செய்ய கூடமும் அமைக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*கடலூர் மண்டலம், விருத்தாசலம், கால்நடை மருந்தகக் கட்டடம் பழுது மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**28—**

## மருந்துகள் அளவு

**வினா எண் 16569—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி கால்நடை மருத்துவமனைக்குத் தேவையான டானிக் மற்றும் சத்துக் கொண்ட மருந்துகள் போதுமான அளவு வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், போதுமான அளவு மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*



விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி கால்நடை மருத்துவமனைக்கு 1997-98 முதல் 2001-2002 வரை வழங்கப்பட்ட டானிக் மற்றும் சத்துக் கொண்ட மருந்துகளின் செலவின விவரம்:-*

| வருடம் | செலவினத் தொகை, டானிக் (ம) சத்துக் கொண்ட மருந்துகள் (ரூ) | பயனடைந்த கால்நடைகள் |
|---|---|---|
| 1997-98 | 8,600/- | 1,563 |
| 1998-1999 | 14,000/- | 2,334 |
| 1999-2000 | 3,500/- | 1,92 |
| 2000-2001 | 19,100/- | 1,899 |
| 2001-2002 | 18,500/- | 1,804 |

*(ஆ) எழவில்லை.*

**29—**

## சுற்றுச்சுவர் மற்றும் வாய்க்கால் அமைத்தல்

**வினா எண் 16597—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் புதிதாகக் கட்டியுள்ள கால்நடை மருத்துவனையில் மழைக் காலங்களில் நீர் தேங்குவது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், சுற்றுச்சுவர் மற்றும் வாய்க்கால் அமைத்து, மழை நீர் தேங்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

[2003 ஏப்ரல் 22

(ஆ) சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு உள்ளது. வாய்க்கால் அமைக்க நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 20912—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், அல்லிக்குண்டத்தில் கால்நடை மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் செயல்படுவதால் அரசுக் கட்டடம் கட்டித்தர முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த அல்லிக்குண்டம் கால்நடை மருந்தகக் கிளை நிலையம் 16-7-2001 முதல் உசிலம்பட்டி ஊராட்சி மன்றக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. புதிய கட்டடம் கட்டித் தர ஊராட்சி ஒன்றிய ஆணையர் (ம) ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்கத் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

31—

## கம்பி வேலி அமைத்தல்

**வினா எண் 26896—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வால்பாறையில் கால்நடை மருந்தக நிலத்தினைச் சுற்றிலும் கம்பி வேலி போட்டு தனியார்கள் ஆக்கிரமிப்பு செய்யாதவாறு தடுக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 22]

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் 2003-2004 ஆம் நிதியாண்டில் பணி முடிக்கப்படும்.

32—

## தடுப்பூசி மருந்துகள்

**வினா எண் 27361—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

நாமக்கல் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலத்தில் கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோயைத் தடுக்க இலவசமாகத் தடுப்பூசி மருந்துகளை விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 50% மானியத்துடனும், மற்றும் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இலவசமாகவும், கோமாரி நோய்த் தடுப்பூசி நாமக்கல் மாவட்டம் மட்டுமின்றி, அனைத்து, மாவட்டங்களிலும் போடப்பட்டு வருகிறது.

33—

## சிட்கோ நிறுவனம்

**வினா எண் 11722-திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாட்டில் சிட்கோ நிறுவனம் 2000-2001 ஆம் ஆண்டில் எவ்வளவு லாபத்தில் இயங்கியது?

[2003 ஏப்ரல் 22

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சிட்கோ நிறுவனத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 63.15 இலட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது.

**34—**

**பட்டுச் சேலை நெசவு மையம்**

**வினா எண் 12497—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு மாவட்டங்களில் கதர் வாரியம் மூலம் பட்டுச் சேலை நெசவு மையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் விவரம் அரசு அறிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 7 கதர் பட்டு உப கிளைகள் இயங்கி வருகின்றன. நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பட்டு உப கிளைகள் இல்லை.

(ஆ) சேலம் மாவட்டத்தில் சேலம், இராசிபுரம், குஞ்சாண்டியூர், சாட்டம்பட்டி ஆகிய நான்கு இடங்களிலும், ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், வெள்ளக்கோயில், சத்தியமங்கலம் ஆகிய மூன்று இடங்களிலும், ஆக 7 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**35—**

**தொழில் தொடங்குதல்**

**வினா எண் 13263—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—



2003 ஏப்ரல் 22]

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி பகுதியில் கதர் நூற்பு மற்றும் நெசவுத் திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தற்போது வாரியத்தில் புதியதாக கதர் கிராமத் தொழில் அலகுகள் ஆரம்பிக்கும் நோக்கம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**36—**

**கடன் உதவி**

**வினா எண் 22345—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:-

2001 ஆம் ஆண்டில் சேலத்தில் பட்டு வளர்ச்சி தொழில் முனைவோருக்கு மானியத்துடன்கூடிய கடன் எத்தனை நபர்களுக்கு அரசு வழங்கியது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழில் முனைவோர் எவருக்கும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் எதுவும் வழங்கப்படவில்லை.

**37—**

**கடனுதவி**

**வினா எண் 25538—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் கதர் கிராமத் தொழில்கள் தொடங்க முன்வரும் படித்த இளைஞர்களுக்கு, தொழில் தொடங்க கடனுதவி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கதர் கிராமத் தொழில்கள் தொடங்க முன்வரும் படித்த இளைஞர்களுக்கு, தொழில் தொடங்க கடனுதவி வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**38—**

**பட்டுச் சேலை நெசவு மையம்**

**வினா எண் 26791—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கதர் வாரியத்தின்மூலம் பட்டுச் சேலை நெசவு மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் கதர் வாரியத்தின் மூலம் ஒரு பட்டுச் சேலை நெசவு மையம் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**39—**

**வைரம் பட்டை தீட்டுதல்**

**வினா எண் 29854—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயற்கை வைரத்திற்குப் பட்டை தீட்டும் தொழில் புரிவோர் நலன் கருதி வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயற்கை வைரத்திற்குப் பட்டை தீட்டும் தொழில் புரிவோர்க்கு தகுதியினடிப்படையில் பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் கடன் வழங்க புதுக்கோட்டை மாவட்டத் தொழில் மையத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**40—**

**நிவாரணம்**

**வினா எண் 5846—திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறை பகுதியில் மலையடிவாரத்தில் உள்ள விவசாயிகள் செய்த சாகுபடிகள் வன விலங்குகளால் சேதப்படுத்தப்பட்ட விவரங்கள் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் வன விலங்குகளால் பயிர்ச்சேதம் அடைந்ததாக 13 நபர்கள் மனு செய்துள்ளனர். அவற்றில் 4 நபர்கள் காட்டு யானையினாலும், 9 நபர்கள் காட்டுப் பன்றிகளாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு ஆணை எண் 205, சுற்றுச்சூழல்-வனத் (வனம்-5) துறை, நாள் 12-9-2000-ன்படி யானைகளால் ஏற்படும் இழப்பிற்கு யானைகள் திட்டத்தின்கீழும், புலி, சிறுத்தை போன்ற மாமிசம் உண்ணும் விலங்குகளால் ஏற்படும் இழப்பிற்கு புலிகள் திட்டத்தின் கீழும் நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் நிவாரணம் வழங்கப்படும். காட்டுப் பன்றிகளால் ஏற்படும் சேதத்திற்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாணையில் வழிவகை ஏதும் இல்லை.

41—

**வாடகை**

**வினா எண் 10190—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, முழுக்குத்துறை கிராமத்தில் வன இலாக்காவுக்குச் சொந்தமான இடத்தில் வசித்துவரும் ஏழை மீனவர்களிடம் எவ்வளவு தொகை தரை வாடகையாக வசூல் செய்யப்படுகிறது?

(ஆ) கூடுதலாக வசூல் செய்தால் அதனைக் குறைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர் வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) விழுப்புரம் வனக் கோட்டம், பிச்சாவரம் சரக எல்லைக்குட்பட்ட கிள்ளை காப்புக் காட்டில் அமைந்துள்ள 120 குடிசைகள் மற்றும் 6 வீடுகளுக்கு 15-4-91 ஆம் தேதிய சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் அரசாணை நிலை எண் 272-ன் படி 3 சதவீதம் அடிப்படையில் வருடத்திற்கு ரூ. 136/- வீதம் தரை வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அரசாணையின்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்கு அதிகமாகவோ அல்லது குறைந்ததோ வசூலிக்க இயலாது.

42—

**மான் வேட்டை**

**வினா எண் 18584—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு அக்டோபர் வரை தமிழகத்தில் மான் வேட்டையில் ஈடுபட்டதாக எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?



(ஆ) அவர்கள்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) 2001 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் வரை மான் வேட்டையில் ஈடுபட்டதாகப் பதிவு செய்யப்பட்ட 23 வழக்குகளில் மொத்தம் 60 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்குகள் தொடரப்பட்டன.

(ஆ) மேற்குறிப்பிட்டுள்ள வழக்குகளில் 6 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 14 குற்றவாளிகளின்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. மீதமுள்ள 17 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 46 குற்றவாளிகளிடமிருந்து இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வழக்குகள் முடிக்கப்பெற்றன.

43—

**மணல் கடத்துதலைத் தடுத்தல்**

**வினா எண் 20772—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மேல் பகுதியில் உள்ள வனத் துறை இடத்திலிருந்து மணல் கடத்துவது இரவு நேரங்களில் தொடர்ந்து நடைபெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர் வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை மேல் பகுதியிலுள்ள வனத் துறை இடத்திலிருந்து இரவு நேரங்களில் மணல் கடத்தும் சம்பவங்கள் ஏதும் நிகழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2003 ஏப்ரல் 22

44—

### வனப் பகுதியைக் காத்தல்

**வினா எண் 22305-திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்கிரி வட்டம், சூரியக்காடு பகுதியில் மாக்கன்றுகளை நட்டு, அழிந்து வரும் வனப் பகுதியைக் காக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சூரிய மலை காப்புக் காட்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுக்கான திட்ட கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு முன்னோடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

45—

### பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 22876—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத் துறையில் வனக் காப்பாளர், பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், தட்டச்சர் போன்ற பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதை நியமிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 183, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 19-9-2002-ன்படி காலியாகவுள்ள வனக் காப்பாளர் பணியிடங்கள் வனக் காவலர் பதவி உயர்வு மூலம் நிரப்புவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 22]

அரசாணை (நிலை) எண் 212, பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001-ன்படி அத்தியாவசியப் பணியிடங்கள் தவிர, மற்ற காலிப் பணியிடங்களை நிரப்ப அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

46—

### வனங்களைக் காத்தல்

**வினா எண் 23511—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, மலைப்பட்டி வள்ளுவர் நகரிலுள்ள மக்கள், மலையிலுள்ள பிரம்புகளை எடுத்து கூடை செய்வதை அரசு அறியுமா?

(ஆ) வனத்துறையினர் துன்புறுத்துவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம். வேடசந்தூர் தொகுதியில் உள்ள மலைப்பட்டி மற்றும் வள்ளுவர் நகர் கிராமங்கள் திண்டுக்கல் வனக் கோட்டம் அய்யலூர் சரகம், மலைப்பட்டி மற்றும் ஆர். கோம்பை பீட்டுகளில் அமைந்துள்ளது. இக்கிராம மக்களில் ஒரு சிலர் அய்யலூர் சரகம், தொப்பசாமிமலை காப்புக் காடுகளை ஒட்டியுள்ள வனப் பகுதிக்குள் சென்று காப்புக் காட்டில் கிடைக்கும் வனப் பொருட்களைக் கொண்டு கூடை செய்யும் பழக்கம் உடையவர்கள்.

(ஆ) வனப் பகுதிக்குள் சென்று வனப் பொருட்களை எடுத்து வருவது வனச் சட்டப்படி குற்றமாகும். எனவே, வனங்களை அழிக்கும் மக்கள்மீது வனச் சட்டப்படி வனத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனினும், அவர்களை வனத் துறையினர் துன்புறுத்துவது இல்லை.

[2003 ஏப்ரல் 22

47—

**மரக்கன்றுகள் நடும் திட்டம்**

**வினா எண் 24319—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசுமைப் போர்வைத் திட்டத்தின்கீழ் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்தியலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் சேலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 35,444 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

48—

**சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்**

**வினா எண் 24975—திரு. ஐ.கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை மற்றும் இளம்பிள்ளை பகுதிகளில் சாயப் பட்டறை, சலவைப் பட்டறை, கழிவு நீரைச் சுத்தம் செய்ய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

எடப்பாடி பகுதி, இடங்கணசாலை மற்றும் இளம்பிள்ளை பகுதிகளில் சாயப்பட்டறை, சலவைப் பட்டறைக் கழிவு நீரைச் சுத்தம் செய்ய பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தற்போது எந்தத் திட்டமும் இல்லை. மேற்கூறிய இடங்களில் உள்ள சாயப்பட்டறை மற்றும் சலவைப் பட்டறைத் தொழிற்சாலைகள் இணைந்து பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முன்வந்தால் அரசு வழங்கும் மானியம் பெற தகுதி பெறும்.



2003 ஏப்ரல் 22]

49—

**பணியிடங்கள் பூர்த்தி செய்தல்**

**வினா எண் 25564—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையில் காலியாகவுள்ள வனக் காப்பாளர்கள் பணியிடங்களை அரசு பூர்த்தி செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 183, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை, நாள்: 19-9-2002-ன்படி காலியாகவுள்ள வனக் காப்பாளர் பணியிடங்கள் வனக் காவலர் பதவி உயர்வு மூலம் நிரப்புதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட ஆணையின்படி ஒருங்கிணைந்த மாநில முதுநிலைப் பட்டியல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலரால் தயார் செய்யப்பட்டு முடித்தவுடன் காலியிடங்கள் நிரப்பப்படும்.

50—

**மிருகக்காட்சி சாலை**

**வினா எண் 26571—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 22

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதுக்குளக்கரையில் மிருகக்காட்சி சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(2) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட புதுக்குளக்கரையில் மிருகக்காட்சி சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. இப்பகுதியில் மிருகக்காட்சி சாலை அமைப்பதற்குத் தற்போது சாத்தியக்கூறு இல்லை.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, கழிஞ்சூர் ஏரியாவிலே நேற்றுக்கூட இரண்டு கொலைகள், கொள்ளைகள் நடந்திருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு) பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.



2003 ஏப்ரல் 22]

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத்துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 45-தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறை-இந்து சமய அறநிலையத் துறை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சருடைய பதிலுரை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த பிப்ரவரித் திங்கள் 12ஆம் நாள் கொங்கு மண்டலத்தின் தலைநகரம் ஈரோடு மாநகருக்கு வருகை தந்து தீரன் சின்னமலை வரலாற்றுப் புகழை மக்களுக்கு எடுத்துக் கூறினார்கள். செந்தமிழில், நெல்லைத் தமிழ் செட்டிநாட்டுத் தமிழ், மதுரைத் தமிழ், தஞ்சைத் தமிழ், இவை எல்லாம் தனித்தன்மையோடு விளங்குவதைப்போல, கொங்குத் தமிழும் தனித்தன்மையோடு விளங்குகிறது என்பதை, மாண்புமிகு அம்மா அவர்களுக்கே உரிய ஆற்றலோடு அங்கிருந்த இலட்சக்கணக்கான மக்கள் பாராட்டும் அளவிற்கு கொங்குத் தமிழில் பேசி, கொங்கு நாட்டு மக்களை மகிழ்வித்தார்கள். ரூ.425 கோடி செலவில் பல்வேறு நலத் திட்டப் பணிகளைத் துவக்கி வழங்கினார்கள். கீழ்பவானி பாசனப் பகுதியில் பாசனத்திற்குச் சேர்க்கப்படாமல் இருந்த 23 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு ரூ. 55 கோடி செலவில் பாசன வசதி தர ஆணையிட்டு, கொங்கு மண்டல விவசாயிகளின் நலனைக் காத்துள்ளார்கள். இத்தகைய உன்னத திட்டங்களை, கொங்கு நாட்டு மக்களுக்கு ஈந்திட்ட எங்களது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கொங்கு மண்டல மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் முதலில் நன்றியைத் தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

ஒரு கால பூசை அறியாத திருக்கோயில்கள், ஆறு கால பூசை காண்பது அம்மாவின் ஆட்சியில்தான். வந்தவர்கள் முகம் மலர பசியாற அன்னதான அமுதூட்டிய அன்னை இதயதெய்வம் அம்மா அவர்கள்தான். அருளாய், திருவாய் வாழ்கின்ற எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் பக்தி மணம் கமழக் கமழ எனது பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

**அன்னதானத் திட்டம்**—திருக்கோயிலும், அன்னதானமும் ஒன்றாய்க் கலந்து நிற்கின்றன. பெய்யும் மழை போலப் பெருகிறது பக்தர்கள் வெள்ளம். திருக்கோயில்களில் திகட்டத் திகட்ட அன்னதானம் இதய தெய்வம் அம்மாவின் அருளால் செம்மாந்து செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள 63 திருக்கோயில்களில் 23-03-2002 முதல் தொடங்கப்பட்ட இத்திட்டம், தற்போது 162 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. "தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்", 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே', என்ற பொன்மொழிகட்கு ஏற்ப, தற்போது இத்திட்டம் 162 திருக்கோயில்களில், திருக்கோயில் நிதி மற்றும் நன்கொடையாளர்கள் உதவியுடன் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்; தங்கள் பகுதியில் இருக்கும் திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் மேலும் சிறப்புடன் நடைபெற நன்கொடையாளர்கள் நிதியுதவி மூலம் கட்டளைகளை ஏற்படுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் இந்தப் புனிதத் திட்டம் மேன்மேலும் சிறந்து விளங்கத் தங்களது மேலான ஒத்துழைப்பை இச்சமயத்தில் வேண்டுகிறேன்.

இத்திட்டத்தின் மூலம் 13-04-2003 வரை சுமார் 56 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளார்கள். அன்னதான உண்டியல் மூலம் சுமார் 3 கோடி ரூபாய் கிடைத்துள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் மூலமாகவும், திருக்கோயில்களுக்கு நேரடியாக நன்கொடையாளர்கள் மூலமாகவும் இதுவரை வழங்கப்பட்டுள்ள நன்கொடைத் தொகை சுமார் 7 கோடி ரூபாய் ஆகும். ஆக மொத்தம் சுமார் 10 கோடி ரூபாய் வசூலாகியுள்ளது.



இது தவிர, அன்னதானத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்த நிதி வசதியுள்ள திருக்கோயில் நிதியிலிருந்து 20 கோடி ரூபாய் நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்து வரும் வட்டி நிதிப் பற்றாக்குறையுள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திருக்கோயில்களிலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிகளைப் போதிப்பதற்காக ஞாயிறுதோறும் மாலை குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சயமப் புலமை வாயந்த தமிழ்ப் புலவர்களையும், திருக்கோயில் ஓதுவார் பெருமக்களையும், தேவாரப் பாடசாலை ஆசிரியர்களையும், புலமை வாய்ந்த தமிழ்ச் சான்றோர்களையும் கொண்டு இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதற்கென 'மாணவர்களுக்கு நீதி போதனை', என்ற கையேடு அறநிலையத் துறையின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகுப்புகளில் பயிலும் சிறுவர், சிறுமியர்களுக்குப் பிரசாதம் மற்றும் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1,79,010 சிறுவர், சிறுமியர்கள் இதுவரை பயன் அடைந்துள்ளனர்.

முற்பகல் 10-05

**இலவசத் திருமணம்**—திருமணச் செலவுகளைக்கூடச் செய்ய முடியாமல் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் நலிவடைந்த ஏழையெளிய மக்களுக்கு உதவிடும் வகையில், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலமாக இலவசத் திருமணத் திட்டத்தினைச் செயல்படுத்த ஆணையிட்டார்கள். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால், ஏழையெளிய மக்களுக்கு அம்மாவின் அரசுதான் திருமணங்களை நடத்தி வைக்கின்றது. எனவே, இதய தெய்வம் அம்மா அவர்களை ஏழையெளிய மக்கள் போற்றிப் புகழ்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். திருக்கோயில்களில் நடத்தப்படும் இலவசத் திருமணத்திற்கு இணை ஒன்றுக்கு அறிவிக்கப்பட்ட செலவுத் தொகையை ஏழையெளிய மக்கள் பயன்பெறும் பொருட்டு ரூ.3,000/-லிருந்து ரூ.4,500/- ஆக 2002-இல் உயர்த்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

இவ்வாண்டு 1,427 இணைகட்கு இலவசத் திருமணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டப்படி நடத்தி வைத்து, முடிக்கப்பட்டிருக்கிறது. தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்—இனி நடைபெறவுள்ள இலவசத் திருமணத்திற்கான திருமாங்கல்யத்தை 2 கிராமிலிருந்து 4 கிராமாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒரு கால பூசைத் திட்டம்**—நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு, ஒரு கால பூசை முறைப்படி நடத்திட பொது மக்களை ஈடுபடுத்தும் நோக்கில், மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டமான ஒரு கால பூசைத் திட்டத்தின்கீழ் 17-4-2003 வரை 9,702 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. விரைவில் ஒரு காலபூசை இல்லாத திருக்கோயில்களே இல்லை என்ற நிலையினை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திருக்கோயில்களில் செயல் அலுவலர்களாக மகளிர் நியமனம்**—

"மங்கையராய்ப் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வாக்கிற்கு ஏற்ப பெண்ணினத்திற்கே பெருமே சேர்க்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி திருக்கோயில் பணிகளில் பெண்கள் செயல் அலுவலர்களாகப் பணிபுரிய, அதற்கான சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொண்டு, நான்கு பெண் அலுவலர்கள் தற்போது செயல் அலுவலர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தேர்கள் பராமரிப்பு**— 440 திருக்கோயில்களில் 515 தேர்கள் உள்ளன. அவற்றில் இன்றைய நிலவரப்படி 91 தேர்கள் செப்பனிடப்பட



வேண்டும். 2002-2003-இல் 44 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. நடப்பு நிதியாண்டில் ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சம் செலவில் பத்து தேர்களைச் செப்பனிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓடாத கண்டதேவி தேரை ஓட்டிய பெருமை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். சிவகங்கை மாவட்டம், கண்டதேவி அருள்மிகு சொர்ணமுக்தீஸ்வரர் என்கிற சிறகிலிநாத சுவாமி திருக்கோயில் தேரோட்டம் 1998 முதல் 2001ஆம் ஆண்டு வரை நடைபெறவில்லை என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை எனச் செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அவர்களின் சீரிய ஆலோசனையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, எவ்விதப் பிரச்சினைகளும் இல்லாமல் கடந்த தி.மு.க. ஆட்சியில் ஓடாத தேர் 24-5-2002 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஓட்டப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கோயில்களில் குடமுழுக்கு மற்றும் திருப்பணிகள்—இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் 38,396 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில் 34,421 திருக்கோயில்களின் வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ.10,000/-க்குள் உள்ளது. சென்ற நிதியாண்டின் இறுதி வரை 967 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. குறிப்பாக, சென்ற நிதியாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி 26 ஆண்டுகளுக்குப் பிறகு திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு 27-6-2002 அன்று சீரும், சிறப்புமாக நடந்தேறியது. ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 100 திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. கிராமப்புறங்களில் உள்ள 100 திருக்கோயில்களின் திருப்பணிக்கு பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் நிதியிலிருந்து நிதி வழங்க ஆணை வழங்கப்பட்டது.

முற்பகல் 10-10

2002-2003ஆம் ஆண்டிற்கான சட்டப் பேரவை அறிவிப்பில், பழனி, சமயபுரம், திருத்தணி, மருதமலை, திருச்செங்கோடு, திருநெல்வேலி, திருப்பூர், கொடுமுடி, குணசீலம், கரூர், பட்டுக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள திருத்தலங்களில் உள்ள 26 முக்கியத் திருக்கோயில்களில், இராஜகோபுரம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம், மதிற்சுவர் போன்ற முக்கியத் திருப்பணிகளுக்கு 13.33 கோடி ரூபாய் மதிப்பில் தற்சமயம் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**31 திருக்கோயில்களில் நடைபெறும் முக்கியக் கட்டுமானப் பணிகள்**—2002-2003ஆம் ஆண்டிற்கான சட்டப் பேரவை அறிவிப்பில், பழனி, திருவேற்காடு, மதுரை, திருச்செந்தூர், சமயபுரம், ஸ்ரீரங்கம், பண்ணாரி, வடபழனி, சுவாமிமலை, ஒப்பிலியப்பன் கோயில் போன்ற திருக்கோயில்கள் உள்ளிட்ட 31 திருக்கோயில்களில், கலையரங்கம், பேருந்து நிலையம், தங்கும் விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள், சேவார்த்திகளுக்குக் கழிப்பறை மற்றும் குளியலறைகள், திருக்குளம் பராமரிப்பு, வணிக வளாகம், திருமண மண்டபம், மலைப்பாதை அமைத்தல், மாணவர்கள் தங்கும் விடுதி, மேல்நிலைப் பள்ளிக் கட்டடம், பரிசோதனைக் கூடம், கருணை இல்லம் ஆகிய முக்கியக் கட்டுமானப் பணிகள் 26.12 கோடி ரூபாய் மதிப்பில் தற்சமயம் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மகாமகம்**—12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகப் பெருவிழா கும்பகோணம் நகரில் 2004ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெற உள்ளது. இதற்கு சுமார் 1 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெறவுள்ளன. மகாமகப் பெருவிழா ஏற்பாடுகளுக்காக தஞ்சை மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும் மற்றும் 25 பேரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அரசால் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மழை நீர் சேகரிப்பு மற்றும் திருக்குளங்கள் செப்பனிடுதல்**—திருக்கோயில்களுக்குச் சொந்தமான பழுது பார்க்கப்பட வேண்டிய. 534 திருக்குளங்கள் உள்ளன. மேற்படி திருக்குளங்களில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கு, இவற்றைப் புதுப்பிக்க, மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**சேவார்த்திகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளைச் செய்தல்**—மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழகத்திலுள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் அடிப்படை வசதிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் தூய்மை பேணுதல் ஆகியவற்றை முக்கியப் பணியாகக் கருதி, அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சேவார்த்திகள் தங்கும் குடில்களையும், அறைகளையும் நவீனமயமாக்கி, புதுப்பித்துப் பராமரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**இலவச மின்சாரம்**—தமிழ்நாட்டில் ஒரு மின் விளக்குக் கூட இல்லாத நலிவடைந்த திருக்கோயில்களின் இருளை அகற்ற இலவச மின் இணைப்பு என்ற சீரிய திட்டத்தால் மின் வாரிய உதவியுடன், இதுவரை 1,560 திருக்கோயில்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தி.மு.க. ஆட்சியில் வெறும் 182 திருக்கோயில்களுக்கு மட்டுமே இலவச மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, மேலும் 795 திருக்கோயில்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சிலைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு**—திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காகக் காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களைக் கொண்ட திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியினைக் கவனித்து வருகின்றனர். மேலும், சிலைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்டு, கள்வர் எச்சரிக்கை மணி, பாதுகாப்புப் பெட்டக வசதி, விலை உயர்ந்த ஆபரணங்களைக் காப்பீடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிலைகள் ஏதும் திருட்டுப் போகாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் பணியாளர்கள் நலம்**—முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1998ஆம் ஆண்டு திருக்கோயில்களின் வருவாய்க்கேற்ப 48 திருக்கோயில்களின் நிலை உயர்த்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனினும், அந்த ஆண்ண செயல்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக, அறநிலையத் துறை அலுவலர்களும், திருக்கோயில் பணியாளர்களும் பதவி உயர்வு மற்றும் கூடுதல் ஊதியம் கிடைக்கும் வாய்ப்பை இழந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, திருக்கோயில் பணியாளர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்து, 48 திருக்கோயில்களின் நிலை உயர்வு குறித்த 1998ஆம் ஆண்டின் அரசாணையை 9-4-2003 முதல் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் காரணமாக, 7 உதவி ஆணையர்கள் துணை ஆணையர்களாகப் பதவி உயர்வும், 41 செயல் அலுவலர்கள் பதவி உயர்வும் பெறுவார்கள். இதைத் தவிர, முதுநிலை அல்லாத திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்கள், முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களாகக் கருதப்பட்டு ஊதிய உயர்வுடன்கூடிய பல சலுகைகளைப் பெறுவார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகள்**—இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக சுமார் 4.79 இலட்சம் ஏக்கர் நிலங்கள் இருந்தபோதும், அவற்றிலிருந்து போதுமான வருவாய் பெறப்படுவதில்லை. இதற்கு முக்கியக் காரணம், ஆக்கிரமிப்பு மாண்புகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு பதவியேற்றவுடன் பல ஆக்கிரமிப்புகள் அந்தந்தத் திருக்கோயில் மூலம் அகற்றப்பட்டுள்ளன. இவற்றில் ஒருசிலவற்றை மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

சென்னை, நுங்கம்பாக்கம் அருள்மிகு அகத்தீஸ்வரர் மற்றும பிரசன்ன வெஙகடேசப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ளது. அந்தப் பகுதியில் சொக்கட்டான் சாலையில் வாழும் சுமார் 500 குடும்பங்கள் வள்ளுவர் கோட்ட நெடுஞ்சாலைக்கு வருவதற்குப் பயன்படுத்தக்கூடிய



திருக்கோயில் நிலத்தில் போலியான பத்திரமும், பட்டாவும் பெற்று இரு தனி நபர்கள் கட்டடம் கட்டி, வள்ளுவர் கோட்ட நெடுஞ்சாலைக்குச் செல்வதற்கான வழியை அடைத்து வைத்திருந்தினர். அப்பகுதி மக்கள், ஆயிரம் விளக்கு தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும், 5 ஆண்டு காலம் மாநகராட்சியினுடைய மேயராகவும் இருந்த திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடத்திலே பல்வேறு நேரங்களிலே பெட்டிஷனாக--விண்ணப்பமாகக்-- கொடுத்திருக்கிறார்கள். அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ** போலி பட்டாதாரர்களுக்கு உதவிகரமாகச் செயல்பட்டார். ஆதாயம் கருதி, ஆலய நில ஆக்கிரமிப்பாளர்களுக்குச் சாதகமாக ** செயல்பட்டபோதிலும், இது தொடர்பான புகார் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவின் கவனத்திற்கு வந்தவுடன், துரித நடவடிக்கை எடுத்து, திருக்கோயில் இடத்தைப் போலி பட்டாதாரர்களிடமிருந்து கையகப்படுத்தி அப்பகுதி மக்கள் சுதந்திரமாகச் செல்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது அம்மாவினுடைய அரசு. இவ்வாறு ** போலி பட்டா மூலம் ஆலய நிலத்தை அபகரித்த முறைகேட்டைச் சரி செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கட்சிப் பாகுபாடியின்றி பொது மக்களின் நன்மைக்காக எடுத்த நடவடிக்கைகளை அப்பகுதி மக்கள் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை, மயிலை, அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்க்கண்ட இடங்கள் இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏற்பட்டதற்குப் பிறகு மீட்கப்பட்டிருக்கின்றன:

அடையாரில் அருணாசலபுரத்திலுள்ள ரூ.6,00 கோடி மதிப்பிலுள்ள 15 கிரவுண்ட் நிலம் 35 ஆண்டுகளுக்குப் பிறகு மீட்கப்பட்டுள்ளது.

கிரீன்வேஸ் சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 15 கிரவுண்ட் நிலம் 1-10-2002 அன்று கையகப்படுத்தப்பட்டுள்ளது.

** கிரீன்வேஸ் சாலை (சேமியர்ஸ் சாலை) லோகநாயகி கன்ஸ்ட்ரக்சன்ஸ் முறைகேடாக ஆக்கிரமிப்புப் செய்திருந்த 625 சதுர அடி நிலமும், அதற்கு அருகில் உள்ள திரு. ஆர். ஆறுமுகம் என்பவர் ஆக்கிரமிப்புச் செய்திருந்த சுமார் 300 சதுர அடி நிலமும் 27-2-2002 அன்று கையகப்படுத்தப்பட்டு வேலி அமைத்துப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

சென்னை, பரங்கிமலை அருகில், அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான மவுன்ட்—பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள 39 ஆயிரத்து 531 சதுர அடி மனை, மற்றும் அதிலுள்ள 2179 சதுர அடி கட்டடம் டி. சுமந்தகமலி என்பவருக்கு மாத வாடகை ரூ.400/-க்கு விடப்பட்டது. ஆனால், அந்த இடத்தை யார் இன்று அனுபவிக்கிறார்கள் என்ற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். யார் என்றால், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தயவால் பதவிகளைப் பெற்று அனுபவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ** ஆகும். பல ஆண்டு காலமாக வாடகையும் கொடுக்காமல், இடத்தையும் காலி செய்யாமல் கோயில் நிலத்தை அனுபவித்து வரும் ** கட்சியைச் சேர்ந்த இவர்கள் அம்மா அவர்களின் அரசைப் பற்றிப் பேசுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதைக் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரமில்லாமல். அவதூறான ஒரு குற்றச்சாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடாது. ஆதாரத்தோடு சொல்லவேண்டும். அதிலும் அபாண்டமான குற்றச்சாட்டு. பதவியை அனுபவிப்பதை எல்லாம் இங்கே பேச வேண்டிய அவசியம் இல்லை. அப்புறம் விவாதம் பெரியதாகப் போக ஆரம்பிக்கும். கூட்டணியிலே தேர்தலைச் சந்தித்தோம். உங்களால் நாங்கள் வெற்றி பெற்றோம்; எங்களால், மற்ற கூட்டணிக் கட்சிகளால் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். அதைத் தொடர்ந்து விவாதிக்க வேண்டிய அவசியம் இந்த மன்றத்திலே தேவையில்லை என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செயல் அலுவலர் அலுவலகத்திலேயிருந்து ஆதாரத்தைப் பெற்று வந்துதான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறேனே தவிர. ஆதாரமில்லாமல் பேசவில்லை. வேண்டுமென்றால், விசாரணைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த இடம் குறித்து ஆதாரத்தோடு பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். வேண்டுமென்று உங்கள்மீது குற்றச்சாட்டுச் சுமத்துவதற்காக அல்ல. அதற்காக இந்தக் குற்றச்சாட்டை நான் சுமத்தவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வு செய்யச் சொன்ன நேரத்திலே, எங்கெங்கு, யார், யாரிடத்தில் எந்தெந்தச் சொத்துகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



இருக்கின்றன என்று சொல்லிய நேரத்தில், கண்டறியப்பட்ட புகார்களைத்தான் சொல்கிறேனே தவிர, வேண்டுமென்று உங்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தவில்லை.

முற்பகல் 10-20

சேலம் மாவட்டம், ஆத்தூர் அருள்மிகு வெள்ளப்பிள்ளையார் திருக்கோயில் நிலத்தை ** முறைகேடாகக் குறைந்த வாடகைக்குப் பெற்று அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் செலுத்தும் ஆண்டு வாடகை முறையே, ரூ.500/- மற்றும் ரூ.420/- மட்டுமே. தற்போது நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு ரூ.93,964 செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருள்மிகு வெள்ளப்பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆத்தூர் நகரில் உள்ள மற்றொரு அரை ஏக்கர் நிலத்தை ** என்பவர் முறைகேடாக அனுபவித்து வருகிறார். மரம் அறுக்கும் மில் நடத்தும் இவர், திருக்கோயிலுக்கு ரூ.200/- மட்டுமே வாடகையாகச் செலுத்தி வருகிறார். நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு ரூ.1,16,900/- செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது.

**நாகப்பட்டினம், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில்**—வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் நிலங்களை அத்தொகுதியின் ** குத்தகைதாரராக முறைகேடாகப் பெற்று, மிகக் குறைந்த வாடகைக்கு 15.6 ஏக்கர் கோயில் நிலத்தை முறைகேடாக அனுபவித்து வருகிறார்கள். புஞ்சை நிலத்திற்கு அவர்கள் தரும் வாடகை ஆண்டுக்கு சுமார் ரூ.6000/- மட்டுமே.

இதே திருக்கோயிலுக்குச் சொந்தமான மற்றும் ஒரு நிலமான 90.07 ஏக்கர் நிலம் ** என்பவரால் முறைகேடாக எடுக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு ரூ.750/- மட்டுமே குத்தகையாகச் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், இறால் பண்ணை வைக்க 10-3-2003 அன்று அனுமதி கேட்டுள்ளார். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பதனையும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே திருக்கோயிலின் இன்னும் ஒரு நிலமான 5.19 ஏக்கர் நிலத்தை ** என்பவர் முறைகேடாக எடுத்துப் பயன்படுத்தி வருகிறார். ஆண்டுக் குத்தகையாக ரூ.519/- மட்டுமே செலுத்தி வருகிறார். இதுவும் கடந்த 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. ஆக்கிரமிப்புகளைப் பற்றிப் பேசும்போது அன்பிற்குரிய நண்பர்களுக்கு, பொதுவுடைமைக் கட்சியினுடைய நண்பர்களுக்குக் கோபம் வரும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திருத்துறைப்பூண்டி அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் திருக்கோயில் நிலம் 1,446 சதுர அடியில் ** அலுவலகம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் திருக்கோயில் நிர்வாகத்தின் அனுமதியின்றி முறைகேடாகக் கட்டப்பட்டுள்ளதாக எங்களுக்கு அதிகாரபூர்வமான தகவல் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாத ஒருவர்மீது இங்கே குற்றம் சுமத்தக் கூடாது. குற்றமே சுமத்தினாலும்கூட, பெயர் சொல்லிக் குற்றம் சுமத்தக் கூடாது. பலருடைய பெயர்களை—அவையில் இல்லாதவர்கள் பெயர்களை—இங்கே அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். இது முறையல்ல, இது பதிலுரையாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாம். பெயர்களையோ, அந்தக் குறிப்பிட்ட கட்சிகளையோ குறிப்பிட வேண்டாம். (குறுக்கீடுகள்) அப்படிக் குறிப்பிட்ட பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்ன அந்தப் பகுதி நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. மணி உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** முழுப் பட்டியல் கொடுங்கள், முழுப் பட்டியல் கொடுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே (குறுக்கீடு) கணேசன் உட்காருங்கள். சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய ஆதாரங்களை ஏற்கெனவே என்னிடத்திலே கொடுத்தார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



கணேசன், சொல்லிவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) கணேசன் உட்காருங்கள். உட்காருங்கள் சொல்கிறேன். திரு. கணேசன், அமருங்கள், பேரவைத் தலைவர் நிற்கிறபோது நீங்கள் உட்கார வேண்டும். உட்காருங்கள், சொல்கிறேன். கணேசன், உட்காருங்கள், (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் உட்காருங்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குரிய ஆதாரங்கள் அனைத்தையும் என்னிடத்திலே காட்டினார்கள். அந்த ஆதாரங்களை நானும் பரிசீலனை செய்து பார்த்தேன். அவை உண்மை, ஆனால் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், மணி போன்றவர்கள், பழனிசாமி போன்றவர்கள் சொல்வதற்கிணங்க, இந்த அவையிலே இல்லாத உறுப்பினர்களைக் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டுவது அவை விதிக்கு மாறுப்பட்டது; முரண்பட்டது. ஆகவே, அந்தப் பெயர்கள் நீக்கப்படுகின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாம் என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாகக் குற்றச்சாட்டுச் சொல்லலாம். அதற்குரிய ஆதாரங்கள் அமைச்சரிடத்திலே இருக்கின்றன. அந்த ஆதாரங்களை என்னிடத்திலே காட்டினார்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே இருக்கிற ஆதாரத்தை நான் தவறு என்று சொல்லவில்லை. அமைச்சரிடத்திலே இருக்கிற ஆதாரம் உண்மையாக இருக்கலாம். அதிகாரிகள் அனுப்பியிருக்கலாம். அதை நான் இப்போது பரிசீலிக்கவில்லை. இருந்தாலும், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். ரொம்ப ஆத்திரப்படாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பழனிசாமி, நான் விளக்கம் சொல்லிவிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பழனிசாமி, உட்காருங்கள், நான் விவரம் சொல்லிவிடுகிறேன். அதன் பின்பு பேசுங்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஏற்கெனவே

தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொஞ்சம் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் ஆதாரங்களை ஏற்கெனவே என்னிடத்திலே காட்டினார்கள். அவை அத்தனையும் உண்மை. பரிசீலனை செய்து பார்த்ததிலே அத்தனையும் உண்மை. ஆனால், பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக அந்தக் குற்றச்சாட்டுகளைச் சொல்லலாம். பழனிசாமி அவர்கள், தாங்கள் அதை மறுப்பதற்கு உரிமையுண்டு; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டைத் தாங்கள் மறுப்பதற்கும் உரிமை உண்டு. அமைச்சர் சொல்லக்கூடிய குற்றச்சாட்டும் அவைக் குறிப்பிலே ஏறும். பழனிசாமி சொல்லக்கூடிய மறுப்புரையும் குறிப்பிலே ஏறும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், பேசி முடித்து விடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** அமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்கு விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் ** கோயிலுக்குச் சொந்தமான ஒரு சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது முழுக்க, முழுக்கத் தவறான செய்தி. எந்த வகையிலே என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி, பெயரை நீக்கியாச்சு. அதன் பின்பு நீங்கள் மறுபடியும் அதையே சொன்னால் அது அவைக் குறிப்பிலே ஏறும். பெயர்களை நீக்கியதற்குப் பிறகு நீங்கள் மறுபடியும் அதையே குறிப்பிட்டுச் சொன்னால், அது அவைக் குறிப்பிலே ஏறும். நீங்கள் பேசியதாகத்தான் அவைக் குறிப்பிலே வரும். உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை வேண்டுமென்று, சட்டமன்ற உறுப்பினர்கள்மீது குற்றச்சாட்டைச் சொல்வதற்காகச் சொல்லவில்லை. சீராய்வு செய்யப்பட்ட நேரத்தில், நேற்றைக்குக்கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள்...(குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** எங்களுக்கும் சத்தம் போட்டுப் பேசத் தெரியும். உங்களைவிட (குறுக்கீடுகள்) உங்களைவிடப் பேசத் தெரியும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பயப்படக்கூடியவர்கள் அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பட்டியல் கொடுக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் பல மாவட்டங்களில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருந்த கோடிக்கணக்கான ரூபாய்க்கு மேற்பட்ட, திருக்கோயிலுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகள், அம்மா அவர்களின் ஆணைப்படி மீட்கப்பட்டுள்ளன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு இருக்காதீர்கள், (குறுக்கீடுகள்) மணி, நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) ஏற்கெனவே சொன்னவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. உட்காருங்கள். அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில்...(குறுக்கீடுகள்) உண்மையைச் சொல்லக் கூடாது என்றால் எப்படிப் பேசுவது? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், பல்வேறு தீர்மானங்களைக் கொண்டு வருகிற நேரத்தில், அவர்களுடைய கட்சி எதிர்க்கிறது என்று சொல்கிறார்கள். உண்மையை எடுத்துச் சொல்வதற்குக்கூட எங்களுக்கு இந்த அவையில் இடம் இல்லையா நியாயம் இல்லையா, என்பதை உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மணி, கணேசன் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** அவர்கள் எதையெடுத்தாலும் 'நீங்கள் செய்வது தவறு, எங்கள் கட்சி வெளிநடப்புச் செய்கிறது' என்று

சொல்கிறார்கள். உண்மையை எடுத்துச் சொல்வதற்குக்கூட, அமைச்சர் என்ற முறையில் எங்களுக்குத் தகுதி இல்லையா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றக் குறிப்புகள்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) திரு எஸ்.ஆர்.பி. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் பல மாவட்டங்களில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருந்த கோடிக்கணக்கான ரூபாய்க்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி...(குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைப் பலரும் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள். அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் கட்சிகளைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது தவறு. அது மட்டும் அல்ல. கோயில் நிலங்களை யார் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும், அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அது கண்டிக்கத்தக்கது. அதுவே, ஒரு கட்சிதான், இரண்டு கட்சிகள்தான் செய்வது போலவும், மற்றவர்கள் செய்யாதது போலவும், அமைச்சர் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கோயில் நிலத்தை யார் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும், தவறான முறையில் அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அமைச்சர் தயாராக இருக்கிறாரா? அப்படி அகற்ற வேண்டும். ஏனென்று சொன்னால், (குறுக்கீடு) இருங்கள், நான் முடிக்கவில்லை, உங்கள் ஊரிலேயே—நீங்கள் சுருக்கமாகச் சொல்லிவிட்டீர்கள்; 7 ஆயிரம் ஏக்கர் ஆகாரபூர்வமாக இருக்கிறது. சேர, சோழ, பாண்டியர் காலத்திலேயிருந்து கொடுக்கப்பட்ட நிலம், அந்த நிலம். ஏன் அதை அவ்வளவு சாதாரணமாகச் சொன்னீர்கள்? தைரியம் இருந்தால், நீங்கள் அதைக் கையகப்படுத்துவதற்குத் தயாரா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆதாரத்தோடு சொல்லவில்லை.



உங்களை விட எங்களுக்குத் தெரியும். நீங்கள் வேண்டுமென்று, அரசியல் ஆதாயத்திற்காக இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். 7,000 ஏக்கர்—

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, வேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. அவர்கள், இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அரசியல் பண்ணக்கூடாது, பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் திருக்கோயில் நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையினை விடுத்தார்கள். திருக்கோயில்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்...(குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அதற்குப் பதில் சொல்லவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், ஆக்கிரமிப்புகளை யார் செய்திருந்தாலும், எந்தக் கட்சி செய்திருந்தாலும், அகற்ற வேண்டுமென்ற கருத்தை நீங்கள் சொன்னீர்கள். அந்தக் கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் பேசுகிறபொழுது, பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது பற்றிய விளக்கங்கள் எனக்குக் கிடைத்தால், அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்றுதான் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே, அதிலே ஒன்றும் தவறு இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அந்தக் கோயில் நிலங்களைப் பொறுத்த வரையில், அது எல்லோருக்கும் தெரியும். பல ஆண்டு காலமாக, பல நூற்றாண்டுகளாக, இன்னும் சொல்லப் போனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்கள், உங்களிடத்திலே அதற்குரிய ஆதாரங்கள் இருந்தால் அந்த ஆதாரங்களை நீங்கள் கொடுங்கள்; (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்களிடத்தில் கொடுங்கள்; முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுங்கள். அது பற்றி ஒன்றும் பிரச்சினையில்லை. (குறுக்கீடுகள்) அமைச்சர், பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லிய, எங்கெங்கு, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அறநிலையத் துறையினுடைய இடத்தை வைத்திருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு, அந்த நிலங்களை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம், திருக்கோயில்களின் நிலங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையினை விடுத்தார்கள். திருக்கோயில் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காகவும், திருக்கோயில் நிலங்களை..

**திரு. ஐ. கணேசன்:** பட்டியலை வெளியிடுவாரா? பத்திரிகை ஆதாரத்தை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடித்தபிறகு சொல்வார்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** யார், யார், எந்த இடத்தில், அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அறநிலையத் துறையின் நிலத்தை வைத்திருப்பவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** பட்டியல் வேண்டும். பட்டியலை வெளியிடவேண்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** பட்டியல் வெளியிடப்படும். (குறுக்கீடுகள்) பட்டியல் வெளியிடப்படும்..



**திரு. ஜி. பழனிசாமி:** நீங்கள் யார் மீது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுங்கள். தவறே கிடையாது. நடவடிக்கை எடுப்பது பற்றி ஒன்றும் இல்லை. நடவடிக்கை எடுப்பதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். கோயில் நிலத்தை யார், யார் ஆக்கிரமித்து வைத்திருக்கிறார்களோ, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுங்கள். நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அபாண்டமான முறையில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, என்னிடத்தில் நீங்கள் அனுமதியே வாங்கவில்லை. நீங்களாகப் பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. ஏற்கெனவே எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னார்கள்; மணி அவர்கள் சொன்னார்கள்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்; ஆக்கிரமிப்புகளை யார் செய்திருந்தாலும் அதனை அகற்றுவதற்குத் தயார், அதற்குப் பட்டியல் தருவதற்கும் தயார் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு அதில் விவாதிப்பதற்கு இடமில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட..

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரேயொரு Point of order.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காகவும், திருக்கோயில் நிலங்களைப் பாதுகாப்பதற்காகவும் மிகவும் முக்கியத்துவம் அளித்து, I.A.S. நிலையில் அலுவலர் ஒருவரை சிறப்பு அலுவலராக நியமித்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 391.98 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள், ஆக்கிரமிப்புகளை அகற்றி, கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நிலங்கள் கண்டறியப்பட்டு, அவற்றை மீட்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*முற்பகல் 10-35*

மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குத் திருத்திய ஊதியம் வழங்கப்படவில்லை எனவும், மற்றும் திரு. சிவசங்கரன் என்பவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டது

குறித்தும் பேசினார்கள். இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் பணியாளர்களில், சில்லறைச் செலவின வகைப் பணியாளர்கள் 771 நபர்கள் உள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் 14-8-2001 நாளிட்ட உத்தரவுப்படி ஊதியம் திருத்தியமைக்கப்பட்டு, 638 பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 64 பணியாளர்களுக்கு அடிப்படை விவரங்கள் இல்லாததால், புதிய சம்பள விகிதம் நிர்ணயிக்க இயலவில்லை. அவர்களுக்கு முறையான பதிவேடுகள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது விரைவில் முடிக்கப்பட்டு, அவர்களுக்கும் ஊதிய நிர்ணயப் பயன் அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத் திருக்கோயில் பணியாளர் திரு. சிவசங்கரன் என்பவர் சில்லறைச் செலவின வகைப் பணியாளராகப் பணிபுரிந்தவர். அவர் கன்னியாகுமரி திருக்கோயில்களின் நலனுக்கு எதிராகத் தமது செயல்பாடுகளை மேற்கொண்டதால், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, அவர்மீது உரிய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசும்போது, திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளை விற்றுவிட்டு, அதன்மூலம் கிடைக்கக்கூடிய தொகையை மூலதனங்களாக மாற்றலாமா என ஒரு கருத்தைச் சொன்னார்கள். அசையாச் சொத்துகளின் மதிப்பு, நாளுக்குநாள் உயர்ந்துவரும் நிலையில் அவை பணமாக மாற்றப்பட்டால், பணத்தின் மதிப்பு நாளுக்குநாள் குறைந்து கொண்டே வரும் நிலை உள்ளதால் -- இது சாத்தியம் இல்லாத ஒன்று. குறைந்த குத்தகையையே தராத குத்தகைதாரர்கள், நிலத்தின் மதிப்பை, சந்தை விலையில் தருவதற்கு எங்கே முன்வருவார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள், திருவண்ணாமலை இளையனார் மற்றும் இடும்பர், ஈஸ்வரன் திருக்கோயில்களின் ஆக்கிரமிப்புகளைப் பற்றிப் பேசினார்கள். திருவண்ணாமலை நகரில், அருள்மிகு இளையனார் திருக்கோயில், அருள்மிகு இடும்பர்



திருக்கோயில், அருள்மிகு தொண்டர் ஈஸ்வரர் திருக்கோயில் ஆகியவை, திருவண்ணாமலை வட வீதி அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலுடன் இணைந்த தொகுப்புக் கோயில்களாகும். போளூர் ரோடில் அமைந்துள்ள அருள்மிகு இளையனார் திருக்கோயில், தற்போது செயல்பாட்டில் இல்லாத ஒரு கோயிலாகும். இந்தத் திருக்கோயிலுக்கு டவுன் சர்வே எண் 103-இல், 9,724 சதுர அடி பரப்பு மனை உள்ளது. அதனை 12 நபர்கள் ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறார்கள். மற்றொரு திருக்கோயிலான அருள்மிகு இடும்பர் திருக்கோயில் முற்றிலும் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது. தற்போது கோயிலோ, சுவாமி சிலையோ ஏதும் அங்கே இல்லை. இத்திருக்கோயிலைச் சுற்றிலும், கோயிலுக்குச் சொந்தமான 3,985 சதுர அடி இடம், 16 நபர்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது. இளையனார் மற்றும் இடும்பர் திருக்கோயில்களின் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ள நபர்களை வெளியேற்ற அறநிலையத் துறை சட்டப் பிரிவு 78-இன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசும்போது, சென்னை, வடபழனி அருள்மிகு வெங்கீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்திலும் மற்றும் சிதம்பரம் திருக்கோயிலுக்கு அருகில் கிழக்கு ரத வீதியிலும் மதுபானக் கடைகள் வைக்கப்பட்டு, விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படுவதாகத் தெரிவித்தார். அருள்மிகு வெங்கீஸ்வரர் திருக்கோயில், பரம்பரை அறங்காவலர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம், திருமதி மாலதி என்பவருக்குக் குத்தகை விடப்பட்டுள்ளது. அவர் குடியிருப்பதுடன், கடை கட்டி, வாடகைக்கு விட்டு வருகிறார். அதில் ஒன்று, மதுபானக் கடையாகும். துறையின் அறிவுரைகளுக்கு மாறாக, பரம்பரை அறங்காவலர், இந்த ஏற்பாட்டிற்கு அனுமதி வழங்கியுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, நேற்றே ஆணையிட்டதற்கிணங்க, மதுபானக் கடையின் உரிமம் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை—'சீல்' வைக்கப்பட்டிருக்கிறது என்பதை -- திரு. ராஜா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சட்டபூர்வமான மேல் நடவடிக்கை தொடரப்படவுள்ளது.

சிதம்பரத்தில், பிரதான கிழக்கு ரத வீதியில், ஒரு மதுபானக் கடை அமைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்தும் இங்கே அவர்கள்

பேசினார்கள். இம்மதுபானக் கடை, அருள்மிகு நடராஜர் திருக்கோயிலிலே இருந்து 222 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது எனவும், இதில் விதி மீறல் ஏதும் இல்லை எனவும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அவர்கள் அறிக்கை அளித்துள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் தெரிவித்ததற்கிணங்க, பௌர்ணமி நாட்களில், திருமுல்லைவாயில் அருள்மிகு கொடியிடை அம்மன் திருக்கோயில், திருவொற்றியூர் அருள்மிகு வடிவுடையம்மன் திருக்கோயில், மீஞ்சூர் அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயில்களை பக்தர்கள் தரிசிக்கும் வண்ணம் சுற்றுலாத் துறை மூலம் நடத்தப்படும் திருக்கோயில் சுற்றுலாவில் சேர்க்க...(குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடியட்டும், முடியட்டும். (குறுக்கீடு) பேசி முடித்துவிடட்டும்.

**திரு. டி. சுதர்சனம்:** அதை நான் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** சரி, இரண்டு பேரும் சொன்ன கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பெயரைச் சொல்லிவிடுங்கள்; சேர்த்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம் அவர்களும், திரு. ராஜா அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்பட்டுள்ள, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் அளிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த கையேட்டில்@ குறிப்பிடப்பட்டுள்ள எல்லா விவரங்களையும் நான் இந்த அவையில்

@ 403 முதல் 420 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



படித்ததாக ஏற்றுக்கொண்டு அவைக் குறிப்பில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு சேர்த்து அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சிலவற்றினை மட்டும் இங்கே விளக்கிக் குறிப்பிட விரும்புகிறேன். 2003-2004 ஆம் நடப்பாண்டில் (குறுக்கீடு) அறிவிப்புகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய அறிவிப்புகள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** புதிய அறிவிப்புகள். அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள்.

(1) 2003-2004 ஆம் நடப்பாண்டில் 1008 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்திட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்த 1008 இணைகளுக்கு நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் செலவில் திருமணம் நடத்தி வைக்கப்படும். இத்திருமணங்களில் ஒரு இணைக்கு 4 கிராம் தங்கத் திருமாங்கல்யம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களால் நடத்தப்பெறும் கல்விக்கூடங்களில் அடிப்படை வசதிகள் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி வசதியற்றதும், பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்றதுமான 90 திருக்கோயில்களின் அனைத்து கால பூசைகளைச் சீரமைக்கவும் மற்றும் 147 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) வழிபடுவோரின் வசதியினை முன்னிட்டு நிதி வசதி உள்ள திருக்கோயில்களில் வலைதளம் -- Website வழியாகப் பணம் செலுத்தி வேண்டுதலை நிறைவேற்றிடும் வகையில் வசதிகள் செய்து தரப்படும்.

(6) திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் நல்ல வருமானம் ஈட்டும் மரங்கள் நடப்படும்.

(7) திருக்கோயில்களில் தேவையான இடங்களில் எழில்மிகு நந்தவனங்கள் ஏற்படுத்தப்படும் மற்றும் ஏற்கெனவே உள்ள நந்தவனங்கள் சீரமைக்கப்படும்.

(8) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைப் பராமரிக்க, தூர் வாருதல், படிக்கட்டுகள் அமைத்தல், சுற்றுச்சுவர் அல்லது வேலியிட்டுப் பாதுகாத்தல் ஆகிய திருப்பணிகள் செய்யப்படும்.

(9) திருக்கோயில் மற்றும் திருக்குளங்களில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் நிறைவேற்றப்படும்.

(10) அனைத்துத் திருக்கோயில்களிலும் படிப்படியாக, பாதுக்காக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(11) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வராத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் இந்த ஆண்டு 250 திருக்கோயில்களுக்கு நிதயுதவி அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (125 திருக்கோயில்களுக்கு அரசு நிதி; 125 திருக்கோயில்களுக்கு திருப்பணி மற்றும் அறப்பணி நிதி.)

(12) கிராமப்புறத்தில் உள்ள திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் 100 திருக்கோயில்களுக்கு நிதியுதவி அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(13) நடப்பு நிதியாண்டில் 9 திருக்கோயில்களின் தேர்களைச் சீரமைத்து தேர்த் திருவிழாக்கள் நடத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(14) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் திருக்கோயில் பணியாளர்களின் இல்ல நிகழ்ச்சிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகையில் 50 சதவீதம் வாடகைச் சலுகை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(15) நடப்பு நிதியாண்டில் 48 திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் ரூபாய் 13 கோடியே 49 இலட்சத்து 17 ஆயிரம் செலவில்



செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 15 திருக்கோயில்களில் கட்டுமானப் பணிகள் ரூபாய் 4 கோடியே 49 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 9 திருக்கோயில்களின் திருத்தேர்கள்...(குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எங்கே படிக்கிறார் என்று தெரியவில்லை. 15 என்கிறார், 15 இல்லை. 14 என்கிறார், 14, இங்கு இல்லை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இதெல்லாம் இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எதற்கு இது? வேண்டாம் என்றால் வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். அவரே படித்துவிட்டுப் போகலாமே! 147 என்றால் 140 என்று சொல்கிறார். எந்த figure-ம் சரியாக இல்லை. இது எங்கிருந்து வந்தது?

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புகளில் கொடுத்திருப்பதை நான் படித்ததாகக் கருதி அவை ஏற்றுக்கொள்ள வேண்டும், அத்தோடு சேர்த்து மேலும் சில அறிவிப்புகளை நான் அறிவிக்கிறேன் என்று சொல்லிவிட்டுத்தான் அவர் படிக்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, பூசுகிறார், வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) நிதி அமைச்சர் பூசுகிறார், வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் அறிவிப்புப் புத்தகத்தில்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 147 என்றால் 140 என்று சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் என்னவென்று சொல்லி விடுகிறேன். அதாவது, அதிலே கோயில்களுடைய பட்டியல் நீண்ட பட்டியல். 108, 147 என்று நீண்ட பட்டியல். அவ்வளவையும் வாசிப்பதற்கு அவகாசம் இல்லை என்கிற காரணத்தால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய அறிவிப்புகளில் வந்திருப்பவைகளை நான் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுகிறேன் என்று ஏற்கெனவே சொல்லி

இருக்கிறார்கள். (குறுக்கீடு) அதுபோக, எஞ்சியவைகளைத்தான் அவர்கள் வாசிக்கிறார்கள்.

முற்பகல் 10-45

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டாம் என்றால் சொல்லிவிடுங்கள், போய்விடுகிறோம். ஒன்றுமே சொல்லக்கூடாது என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) ஏன்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், எஸ்.ஆர்.பி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** No, I am Sorry. இப்படித்தான் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நடந்துகொள்வார்கள் என்று சொன்னால், நான் பேசவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒன்றும் இல்லை. அமைச்சர் அவர்கள் அறிவிப்புகளைச் சொல்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அமைச்சர் சொல்வதுதான் இதில் இல்லையே! 14 என்கிறார்கள், அது இல்லை. 15 என்று சொல்கிறார்கள், அது இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்குத் தரப்பட்ட அறிவிப்புக் குறிப்பில் உள்ளதை அப்படியே முழுமையாக அவர் சொல்லவில்லை. அவருடைய அறிவிப்புப் பட்டியல் பற்றி அவர் ஏற்கெனவே சொல்லிவிட்டார். 'அறிவிப்பு அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. படித்ததாக அதை அவை ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு சேர்த்து அவற்றில் குறிப்பிட்டுள்ள சிலவற்றைப்பற்றி மட்டும் இங்கே விளக்கிக் குறிப்பிட விரும்புகிறேன்' என்று அவர் படிக்கின்ற அறிவிப்புப் பட்டியலிலுள்ள எண்ணிக்கையைச் சொல்லுகிறார். அதில் எந்தவிதத் தவறும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையும், இதையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதில் இருக்கிற எண்ணிக்கையையும் சொல்கிறார். 13 என்று இருந்தால் 13 என்று சொல்கிறார். 14 என்று இருந்தால் 14 என்று சொல்கிறார்.



**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு, நான் அறிவிப்புப் புத்தகத்திலே உள்ளவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும், அதிகமாக இருக்கக்கூடிய விளக்கங்களை அறிவிக்கிறேன் என்றும் சொல்லி இருக்கிறேன். அது அவர்களுக்குப் புரியாமல் சொல்கிறார் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள். சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 திருக்கோயில்களின் கட்டுமானப் பணிகள் ரூபாய் 4 கோடியே 49 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். 9 திருக்கோயில்களில் திருத்தேர்கள் ரூபாய் 1 கோடியே 42 இலட்சத்து 12 ஆயிரம் செலவில் செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(16) பகுதி-2 திட்டத்தில் சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகக் கட்டடத்தை ரூ.39.71 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்க்கவும், திருநெல்வேலியில் சிலைகள் பாதுகாப்பு மையத்தை ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டவும் மற்றும் திருநெல்வேலி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தை ரூ.8.79 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்ப்பதற்குமான மூன்று புதிய திட்டங்களுக்கு நடப்பு நிதியாண்டில் 2003-2004-ல் பகுதி-2 திட்டங்கள் அடிப்படையில் முறையே ரூ.15.88 இலட்சம், ரூ.9.20 இலட்சம் மற்றும் ரூ.3.52 இலட்சம் ஒதுக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அறிவிப்புகள் கையேட்டில் குறிப்பிடப்படாத -- அதில் சொல்லப்படாத, பின்வரும் கூடுதல் அறிவிப்புகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி இந்த அவைக்குத் தங்கள் அனுமதியுடன் அறிவிக்கிறேன். இந்த அறிவிப்புகளையும் அவைக் குறிப்புகளில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** அதுவும்தானுங்க, இதுவும் தானுங்க.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், உட்காருங்கள், பொறுமையாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி;** பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், கடம்பர்கோவில் அருள்மிகு கடம்பநாதீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி – ரூ. 12 இலட்சம்.

திருச்சி மாவட்டம், மணப்பாறை அருள்மிகு பாம்பழம்மன் கோயில், தொட்டிபட்டி, திருப்பணி – ரூ. 7 இலட்சம்.

ஈரோடு மாவட்டம், அருள்மிகு எழுநூற்றுமங்களம் மாரியம்மன் ஆலயத் திருப்பணி – ரூ. 7 இலட்சம்.

கோவை மாவட்டம், செஞ்சேரி மலை அருள்மிகு மந்தாகிரி வேலாயுதசாமி கோயில் திருப்பணி – ரூ. 7 இலட்சம்.

நீலகிரி மாவட்டம், மேல்கூடலூர் அருள்மிகு சந்தக்கடை மாரியம்மன் திருக்கோயில் திருப்பணி (பொது மக்கள் நன்கொடை மற்றும் அரசு மானியம்) – ரூ. 7 இலட்சம்.

நீலகிரி மாவட்டம், ஊட்டி, அருள்மிகு மாரியம்மன் ஆலய பொது நிதியிலிருந்து வாகனங்கள் நிறுத்தும் இட வசதி, சேவார்த்திகள் தங்குவதற்கும் மற்றும் அடிப்படை வசதிகள், கட்டடங்கள் கட்ட — ரூ. 20 இலட்சம்.

பொம்பலூர் மாவட்டம், வாகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், ஆடுதுறை அருள்மிகு சிவன் திருக்கோயில் திருப்பணிக்கு — ரூ.7 இலட்சம் (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை மாவட்டம், பல்லடம், விரளிக்காடு அருள்மிகு சென்னியாண்டவர் திருக்கோயில் புதிய தேர் செய்தல் (பொது மக்கள் நன்கொடை மற்றும் அரசு மானியமாக) -- ரூ.30 இலட்சம்; இத்திருக்கோயிலின் அலுவலகக் கட்டடம் கட்டுதல் (அரசு மானியம் மற்றும் பொது மக்கள் நன்கொடை) — ரூ.6 இலட்சம்.

கோவை, சூலூர், திருவேங்கடபெருமாள் திருக்கோயில் முன்மண்டபம் கட்டுவதற்கு — ரூ. 6 இலட்சம்.



உலோகத் திருமேனிகள் பாதுகாத்திட, கூடுதலாக 5 இடங்களில் -- காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம் மற்றும் கடலூர் -- பாதுகாப்பு மையம் புதியதாக ஏற்படுத்த ரூ. 81.70 இலட்சத்தில் நிர்வாக அனுமதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அளிக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 55.70 இலட்சத்தில் பணிகள் விரைவில் முடித்திட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பலர் இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது கல்வி நிறுவனங்கள், சொத்து பராமரித்தல், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல், திருமண மண்டபங்கள் கட்டுதல், திருப்பணி உட்பட பல்வேறு கோரிக்கைகளை, பேசியும், வெட்டுத் தீர்மானங்கள் மூலமும் வலியுறுத்தி உள்ளனர். அவர்களுடைய கோரிக்கைகளை நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதியுடன் பரிசீலித்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரை பதிலுரையில் கூறியுள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றி, நான் கோரிய தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45—இந்து சமய அறநிலையத் துறை (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வையற்றவர்கள், (குறுக்கீடுகள்) நான் அதற்கெல்லாம் போகவில்லை; எங்கள் ஊர் பெயர் பற்றித் தப்பாகச் சொன்னீர்கள். அப்படி ஒரு கோயிலே இல்லை; மந்தாகிரி சாமி என்றார்; மந்தாகிரி சாமி இல்லை; மந்திரகிரி வேலாயுதசாமி. அதை மந்தாகிரி சாமி என்றார்; (குறுக்கீடு) நான் அதற்கெல்லாம் போகவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள், அதிகாரி பெருமக்கள் கொடுத்து இருக்கின்ற கோப்பினை வைத்துத்தான் நாங்கள் பேசுகிறோமே தவிர, தமிழ்நாட்டில் பல்வேறு ஆலயங்களுக்குப் பல்வேறு பெயர்கள் இருக்கும்; அதையெல்லாம் பார்ப்பது கடினமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, நீங்கள் சொன்னதனால், நான் திருப்பிச் சொல்கிறேன். அந்த செஞ்சேரி மலைக் கோயிலுக்குப் பெயர் மந்திரகிரி வேலாயுதசாமி; மந்தாகிரி அல்ல; அது ஒன்று. கண்பார்வையற்ற பலர் நாதஸ்வரத்திலேயும், தவில் வாசிப்பதிலேயும் பயிற்சி பெற்று இருக்கிறார்கள்; சாதகம் செய்து சிறந்த கலைஞர்களுக்குச் சமமாகத் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை, கண்பார்வையற்றவர்களைப் பெரிய கோயில்களில் எல்லாம் இசைக் கலைஞர்களாக நியமிக்க வேண்டும்; நியமிப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்லிய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45—இந்து சமய அறநிலையத் துறை (குறுக்கீடுகள்)...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்கத்திலேயே சொன்னார்கள்; நான் கொங்குத் தமிழில் பேசப் போகிறேன் என்று. ஏனுங்க, அவர் பேசியதில் ஒரு கொங்குத் தமிழும் வரலீங்களே! ஏனுங்க, இப்படியே கடைசி வரையில் பேசி முடிச்சுட்டாருங்களே! (மணியடிக்கப்பெற்றது) ஒரு கொங்குத் தமிழாவது பேச வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; பழனிசாமி, பரவாயில்லை; தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள்! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஏதோ, என்மீது என்ன கோபத்தை வைத்து இருக்கிறாரோ? அவர்மீது தவறான கருத்துகளை நான் சொன்னதற்காக இப்படிப்பட்ட அவதூறான கருத்துகளைச் சொல்கிறார் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



மானியக் கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை -- இந்து சமய அறநிலையத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப் படுகிறது. திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப் படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. திரு. கோவை தங்கம். இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப் படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை.

திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி. க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை எண் 45-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,10,11,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.33,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.
*(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 9- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை.**

**(இ) கோரிக்கை எண் 4 - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று எடுத்துக்கொள்ளப்பட உள்ள இரண்டு மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை அந்தந்த மானியக் கோரிக்கைகள்மீது தெரிவிக்கலாம்.

**(ஆ) கோரிக்கை எண் 9 - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 9 - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 9-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,26,08,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 600, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5393, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6100, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 750, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4489, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5086, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5887, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7311, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7384, திரு. அ.இரா. மலையப்பசாமி.

முற்பகல் 10-55

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7404, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7798, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7896, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8401, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4245, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6057, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4955, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6706, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.



**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7085, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7479, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6308, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1982, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் எட்டயபுரம் மற்றும் கோவில்பட்டி தாலுகாக்களில் வாழும் வீரகோடி வெள்ளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டோர் என சான்றிதழ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5319, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நிலக்கோட்டை, புதுப்பட்டியில் உள்ள காட்டுநாயக்கர் மக்களுக்கு மலைவாழ் சான்றிதழ் தரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6317, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 186, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6166, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் அனைத்து அரசுத் துறைகளிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதுபோல் தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு முறை கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7579, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தனியார் தொழிற்சாலைகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர்களுக்கு இட ஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1403, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாவட்டந்தோறும் உயர் கல்வித் துறை மூலம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர் பதவிக்கான தேர்வில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் கலந்து வெற்றி பெறுவதற்கு BC, MBC துறை மூலம் இலவசப் பயிற்சி முகாம்களை அரசு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6868, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி தொகுதி, ஆலங்குளத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4345, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கும், சிறுபான்மையினருக்கும் தொழில் செய்ய கடன்களை அரசே, துறை சார்பாக மாவட்டத்திற்கு ஒரு வங்கி ஆரம்பித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 439, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6972, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை மக்களுக்கு அரசு அறிவித்துள்ள கடன் தொகைக்கு Collateral Security கேட்கப்படுவதால் கடன் பெற இயலாத நிலை இருப்பதால் ரூ.25,000/- வரை Collateral Security இல்லாமல் ஒரு அரசுப் பணியாளர் அல்லது வேறு தனி நபரின் Letter of Guarantee-ஐ ஏற்றுக்கொண்டு கடனுதவி வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து, விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,26,08,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4683, திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 4-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகளை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 588, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1379, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 757, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4139, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5051, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5463, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5535, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5623, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5877, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7022, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7252, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8001, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,0)0/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8251, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8435, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8866, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1310, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6066, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4909, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6827, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.



**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5995, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு, தரிசு நிலங்களை எடுத்து தலித் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7097, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 455, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 499, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6070, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற அரசு புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7852, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குப் பட்டாக்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1795, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவை மேற்கு தொகுதியில் 37-வது வார்டு சி.எம்.சி. காலனி, 41-வது வார்டு சி.எம்.சி. காலனி, பொன்னைய ராஜபுரம் பகுதி மற்றும் 43-வது வார்டு உப்புமண்டி பகுதியில் வாழும் துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீடுகள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7633, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, கருக்குப்பட்டியில் தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக, புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6246, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கோரி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ள ஆதிதிராவிட மக்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தி தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7699, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அதிக அளவில் தொகுப்பு வீடுகள் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6296, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்ப்பதற்கு தனியான சிறப்பு நிதி ஒதுக்குவது குறித்து, விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6863, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகளில் பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளைப் புதுப்பித்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4321, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாட்கோ நிறுவனத்தின் மூலம் மாவட்டத்திற்கு ஒரு வங்கி அமைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2008, திரு. கு. ஜெயக்குமார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத் துறை குறித்த வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். அது ஏன் இடம்பெறவில்லை என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பற்றித் தனியாக அனுப்பவும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாட்கோ நிறுவனத்திற்குத் தமிழக அரசின் பங்குத் தொகையினை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4679, திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4968, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2372, திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7491, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதி, பெருமாண்டி ஊராட்சியில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5322, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தலித் மக்களுக்குக் கல்வி, வேலை, இட ஒதுக்கீட்டைத் தனியார் துறையிலும் அமல்படுத்திட அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6329, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் மேலான கருத்துகளைத் தெரிவித்த பின்னர், இறுதியில் என்னுடைய பதிலையும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய அரசு எடுத்துள்ள புதிய திட்டங்களைப் பற்றியும் அறிவிக்கிறேன் என்பதைக் கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில்

---

@ 421 முதல் 442 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

கொடுக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்.

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களை, வணங்குகின்றேன். இந்தச் சபையிலே சமுதாயத்தின் அடித்தளத்திலே முடங்கிக் கிடக்கின்ற மக்களுக்காகவும், அவர்களுடைய உரிமைகளுக்காகவும் அவர்களின் பிரச்சினையை இந்த அவையிலே எடுத்து வைப்பதற்காகவும் நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழகச் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்த நிதிநிலை அறிக்கையின் தொடரிலே ஏற்கெனவே பேசாத காரணத்தாலும், இப்போது முதன்முறையாக இங்கே எழுந்து நிற்கின்ற காரணத்தாலும், மேல்வாரியாக ஒரு சில கருத்துகளை நிதிநிலை அறிக்கையின்மீது சொல்லி, பின்னால் மானியக் கோரிக்கையின்மீது பேசலாம் என்று கருதுகிறேன்.

அரசானது, மொத்தச் செலவாக, வருவாய்க் கணக்கிலே செலவாக ரூ.26,600 கோடியையும், திருப்பிக் கொடுக்க வேண்டிய கடனுக்காக ரூ.10,975 கோடியையும், மூலதனச் செலவுக்காக சுமார் மூவாயிரம் கோடியையும் கொடுத்து சுமார் ரூ.40,585 கோடி செலவாகவும், அதற்கு வாவுகளாக ரூ.38,191 கோடியாகவும் காண்பித்திருக்கிறது. இதில் ஏற்படுகின்ற பற்றாக்குறையானது வருவாய்க் கணக்கிலே ரூ.3,933 கோடியாகவும், தொகு நிதியிலே ரூ.2,392 கோடியாகவும் இருக்கிறது.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுகளை நாம் கடைப்பிடிக்கவேண்டும். நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு எனக்கு அப்போது வாய்ப்பு இல்லை, இப்போது வாய்ப்புத் தாருங்கள் என்று பேசுவது முறையல்ல. காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் நிதிநிலை அறிக்கையில்

@ 443 முதல் 467 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



ஏற்கெனவே தெளிவாகப் பேசப்பட்டு இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கைமீது பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொடக்கத்திலே அரசின் வருவாய் எவ்வளவு, அரசின் செலவு எவ்வளவு என்று சொன்னார். அதில் ஒன்றும் தவறு கிடையாது. அதுமட்டுமல்ல, இவ்வளவு பெரிய அளவுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை நீங்கள் செலவு செய்கிறீர்கள். ஆனால், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கும் குறைவாக ஏன் செலவு செய்கிறீர்கள் என்று கேட்க வருகிறார். அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? அவசரப்பட வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. கு. ஜெயக்குமார்:** எந்தவோர் உரைக்கும் ஒரு முன்னுரை இருக்க வேண்டும்.

*முற்பகல் 11-05*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் இந்த அவையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய மரபுகளைப் பற்றி எல்லோருக்கும் வகுப்பு நடத்தும் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள், மரபுகளைக் கடைப்பிடிக்குமாறு தனது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு நிதியமைச்சர் தெளிவாகத் தெரிவித்ததுபோல, ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையின்மீது பல நாட்கள் விவாதம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசவேண்டிய உறுப்பினர்கள் ஏற்கெனவே பேசி முடித்துவிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எதற்காக இந்தப் புள்ளிவிவரங்களைச் சொன்னேன் என்றால், எந்த ஒரு பின்னணியிலே நான் பேச இருக்கின்ற மானியங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், பின்னணி, முன்னணிக்கு எல்லாம் நேரம் இல்லை. இந்த மானியக் கோரிக்கையிலே பேசுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இந்த அரசானது ஒரு சில நல்ல கருத்துகளை இந்த மானியக் கோரிக்கையிலே அறிவித்திருக்கிறது. அதற்காக நான் இந்த அரசை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, S.C.P., மற்றும் T.S.P., திட்டங்களுக்குத் தனியாக ஒரு கணக்கினைத் துவக்கிக் காட்டியிருக்கிறீர்கள். நல்லதொரு முயற்சி. S.C. மற்றும் S.T மாணவர்களுக்கு loan உதவித் தொகையை, மானிய உதவித் தொகையாக மாற்றியிருக்கிறீர்கள். அதை நான் மெச்சுகின்றேன்; வரவேற்கின்றேன்.

மேல்நிலைக் கல்வியிலே-in Professional Colleges—அங்கே இட ஒதுக்கீடு அந்தந்தத் தனியார் நிறுவனங்கள், அவர்கள் விருப்பப்படி செய்துகொள்ளலாம் என்று இருக்க, அரசானது, அங்கேயும் இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து நல்லதைச் செய்து இருக்கிறீர்கள். இதற்காக இந்த அரசை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிதியமைச்சர் அவர்களிடம் சென்று நாங்கள் ஒரு ஐந்தாறு எம்.எல்.ஏ.க்கள் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்க ஒரு சில திட்டங்களைக் கொடுக்க, அவற்றையெல்லாம் அவர் சிறப்பாக ஏற்றுக்கொண்டார். அதற்காக அவரை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, எதற்காக நான் ஆரம்பத்திலே பட்ஜெட்டைப் பற்றிக் குறிப்பிட்டேன் என்றால், இப்படி ஒரு பற்றாக்குறை நிதிநிலை பட்ஜெட்டை நீங்கள் வைத்துக்கொண்ட காலத்திலும் 72 கோடி ரூபாய் இந்த முறை அதிகமாக ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கியிருக்கின்றீர்கள். கடந்த முறை 367 கோடியாக இருந்ததை இந்த முறை 439 கோடியாக உயர்த்தியிருக்கின்றீர்கள் என்பதைக் குறிப்பிடத் தான், மொட்டையாகச் சொன்னால் சரியாக இருக்காது என்று அதை முன்னுரையாகச் சொல்லலாம் என்று நினைத்தேன். அவசரப்பட்டு நீங்கள், நான் மரபுகளை மீறுகிறவன் என்று சொன்னீர்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போதும் மரபுகளை மீற மாட்டார்கள். அப்படி மீறுவதாக யாராவது நினைத்துக்கொண்டால், அதற்காக நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றவர்களாக இருப்போம் என்பதைத் திட்டவட்டமாக நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் உங்களைத் திரும்பிப் பார்த்துச் சொன்னதற்குப் பலன் கிடைத்து இருக்கின்றது என்று கருதுகிறேன். *(சிரிப்பு)*



**திரு. கு. ஜெயக்குமார்:** அவர் சொல்லாவிட்டாலும் இந்தக் கருத்துகளைச் சொல்லக்கூடிய திறன் எனக்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மொத்தத் திட்டத் தொகையாக ஏழாயிரம் கோடி ரூபாயை இந்த வருவாய்க் கணக்கிலே நாம் காண்பித்திருக்கிறோம். அதிலே 439 கோடி ரூபாய் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கியிருக்கின்றீர்கள். இந்த 439 கோடி ரூபாயிலே, திட்டத் தொகையாக ரூ.225 கோடியை ஒதுக்கியிருக்கின்றீர்கள். இந்த 225 கோடி ரூபாயிலே ஆதிதிராவிடர்களுக்கு என்று சொல்வது 102 கோடி ரூபாய்தான். பழங்குடி மக்களுக்கு ரூ.14 கோடியும், Nomads-க்கு ரூ.5 கோடியும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ரூ. 102 கோடியும்—இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, O.B.C.-க்கு ரூ.102 கோடியும், இப்படி ரூ.225 கோடிக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறீர்கள். ஆக, 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்கின்ற இந்த அரசிலே ஆதிதிராவிடர்களுக்கு என்று அந்தத் துறை மூலமாக நீங்கள் திட்டச் செலவு செய்வது ரூ.102 கோடிதான். அ ாவது, 100 ரூபாய் நீங்கள் செலவு செய்கிறீர்கள் என்றால், அதில் ஒரு ரூபாய் 45 பைசாதான் இந்த ஆதிதிராவிட மக்களுக்காகச் செலவு செய்கிறீர்கள். திட்டத் தொகையிலே என்பதைத் தெள்ளத் தெளிவா[illegible]டுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையில் மட்டுமல்ல, மற்றத் துறைகளின் மூலமாகவும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயன்பெறுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கு. ஜெயக்குமார்:** எனக்கு இவை நன்றாகத் தெரியும். இதைப் பற்றிப் பின்னால் பேச இருக்கின்றேன். எந்த அளவுக்கு மற்றத் துறைகள் பயன் அளித்து இருக்கின்றன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாக, அவைத் தலைவர் அவர்கள் அவகாசம் தந்தால் சொல்லத்தான் இருக்கின்றேன் என்பதைச் சொல்லி, 7 ஆயிரம் கோடி ரூபாயில் அதாவது இந்தத் துறை மூலமாக 100 ரூபாய் செலவு செய்கிறீர்கள் என்றால், அதில் ஒரு ரூபாய் 45 காசுதான் S.C.-க்கு செலவு செய்யப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்ட பிறகும், இந்தச் சமுதாயத்தின் அடித்தளத்திலே

முடங்கிக் கிடக்கின்ற இந்த ஏழை மக்கள் பயன்பெறவில்லை என்பதை உணர்ந்து. -- 20 ஆம் நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவராக, இந்தியத் துணைக் கண்டத்திலே இருந்து உலக அளவிலே உத்தமப் பெண்மணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட—நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட 'அன்னை இந்திரா காந்தி' என்று வாஞ்சையுடன், அவர்கள் சொல்வார்கள்--அந்த அம்மையார் உணர்ந்து, இந்த ஏழை மக்களுக்கு எத்தனை பட்ஜெட்டுகளைப் போட்டாலும் இந்தப் பணத்தைச் சரியாக ஒதுக்கிக் கொடுப்பது இல்லை என்பதை நன்றாக அறிந்து, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, Special Component Plan என்பதைக் கொண்டு வந்தார்கள். அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இங்கே குறிப்பிடுகிறார்கள். இதன்படி ஒவ்வொரு துறையும் இந்த Special Component Plan மூலமாக நிதி ஒதுக்க வேண்டும். இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சற்று விரிவாகப் பேச விருப்பப்படுகின்றேன்.

முற்பகல் 11-10

குறிப்பாக, ஒதுக்கப்பட்ட தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இதை எந்த அளவிற்குப் பின்தொடர வேண்டும் என்பதற்காகவும் நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த Special Component Plan மூலமாகவும், Tribal Sub-Plan மூலமாகவும் பட்ஜெட் தயாரிக்கப்படுகின்றபோது, திட்ட நிதியிலே ஒவ்வொரு துறையும்-- எந்த சதவிகித S.C./S.T மக்கள் வாழ்கிறார்களோ, அது மத்தியப் பிரதேசமாக இருந்தாலும் சரி, மகாராஷ்டிராவாக இருந்தாலும் சரி, தமிழ்நாடாக இருந்தாலும் சரி, அந்த-- S.C./S.T. ஜனத்தொகைக்கு ஒப்ப குறைந்த பட்சமாவது செலவு செய்ய வேண்டும். It is the minimum possible you should spend. Maximum can be, if the Hon. Government and the Hon. Chief Minister wants to take care of the Scheduled Caste and Scheduled Tribe people in the State and as the C.M. said that she wanted to make Tamil Nadu, the number one State, she can go beyond the S.C.P. percentage of 19 per cent for the Scheduled Caste and one per cent for the Scheduled Tribe people. This is the minimum. ஆனால், நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று, மாண்புமிகு நிதி அமைச்சர் நல்லதொரு துவக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த S.C.P.-ல் செலவு செய்கிற பணத்தைக் கணக்கு எண் 789-லே தவறாமல் ஆங்காங்கே



காட்டியிருக்கிறீர்கள். இங்கே நீங்கள் கொடுத்திருக்கிற பட்ஜெட் புள்ளிவிவரங்களின்படி, 2002-2003 ஆம் ஆண்டிலே நீங்கள் செலவு செய்திருக்கிற தொகை 177 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் S.C.P. formula-வின்படி நான் சொன்னேனே, எஸ்.சி.பி.-யில் சதவீத ஜனத்தொகைக்கு ஏற்றபடி செலவு செய்ய வேண்டும் என்று, அந்த முறையை நம்முடைய அரசு கடைப்பிடித்திருக்குமானால், இது செலவு செய்ய வேண்டிய தொகை எவ்வளவு தெரியுமா? 1150 கோடி ரூபாய். 1150 கோடி ரூபாய் செலவு செய்யப்பட வேண்டிய இடத்திலே, நம்முடைய அரசு 177 கோடி ரூபாயை மட்டும் செலவு செய்து இருக்கிறது. இதை வேறுவிதமாகச் சொல்ல வேண்டுமென்றால், 100 ரூபாய் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும் என்று சட்டமிருந்தும், 100 ரூபாய் இந்த மக்களுக்குச் செலவு செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தும், 16 ரூபாய் 20 காசுகள்தான் இந்த அரசு கொடுத்திருக்கிறது என்றால், இது நியாயம்தானா? இந்த மக்களை முன்னேற்றுகிற முறையா என்பதைத் தயவுசெய்து ஆளுங்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள், ஆளுங்கட்சியிலே இருக்கிற அமைச்சர்கள் எனக்கு எடுத்து விளக்க வேண்டும் என்று அவர்களை நான் வேண்டிக்கொள்கின்றேன். கடந்த ஆண்டு உங்களுடைய (குறுக்கீடு) At the end, please. It is unfair.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒன்றை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். I am not disturbing you. ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறையிலும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அந்த நிதி நடைமுறைக்கு வருகிறபோது, பொது மக்கள் பலனை அடைகிறார்கள். சிலவற்றை Scheduled Caste, Scheduled Tribe என்று பிரித்துப் பாகுபாடு செய்து ஒதுக்க முடியும். சிலவற்றைப் பொதுவாக ஒதுக்குகிறபோது, அந்தப் பலன் Scheduled Caste, Scheduled Tribe-க்கும் போகிறது. அந்தத் கணக்கை எடுத்துப் பார்த்தால் 16.3 சதவிகிதம் அல்ல, அதிகப்படியான சதவிகிதம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** Sir, the Hon. Finance Minister is trying to give distorted figures. இது ஆதிதிராவிட நலத் துறை தயாரித்துக் கொடுத்திருப்பது. இது அரசாங்கத்தினுடைய பதிவேடு. இது

மாண்புமிகு நிதித் துறை -- நீங்கள்-- கொடுத்திருப்பது. இந்த அவையிலே நாம் எல்லோரும் ஓட்டுப் போட்டுச் செலவு செய்வதற்காகக் கொடுத்திருப்பது. Document No.60—இது ஆதிதிராவிடர் நலத் துறை கொடுத்துள்ளது. இதைப் பெறுவதற்காக நான் பட்ட சிரமம் எனக்குத்தான் தெரியும். இதை எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டும். இதை ஒரு இரகசிய ஆவணமாக நாம் வைத்துக்கொள்ளத் தேவையில்லை என்பதை நான் இந்தச் சபைக்குச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகின்றேன். இதிலே என்ன கொடுத்து இருக்கிறார்கள் என்பது எனக்கு முக்கியம் அல்ல. இதற்கு யாரும் ஓட்டளித்து, வாக்களித்து இந்த அவையிலே இதைத்தான் செலவு செய்ய வேண்டும் என்று சொல்வது கிடையாது. இங்கே கொடுத்திருக்கிற Document No.60—திட்ட வரவு-செலவுத் திட்டம், இணைப்பு—இதில் அக்குவேறாக, ஆணிவேறாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறீர்கள். உதாரணத்திற்கு ஒன்றை எடுக்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்னுடைய உதாரணத்தைப் பார்த்துச் சொல்லட்டும், நான் சொல்வது தவறு என்று. உங்களுடைய தாள் தொட்டு நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

வனத் துறையிலே மொத்த ஒதுக்கீடு 147 இலட்சம் ரூபாய், ஒரு திட்டத்திற்கு; pulpwood திட்டத்திற்கு, மரக்கூழ்த் திட்டத்திற்கு. இதில் S.C.P.-யிலே 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதாக இதிலே சொல்லி இருக்கிறீர்கள், ஆதிதிராவிடர் நலத் துறை இதைச் சரிபார்த்ததா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்த 147 இலட்சம் ரூபாய்க்கு நான் செலவுகளைச் சொல்கிறேன். சம்பளம் 96 இலட்சம் ரூபாய், அகவிலைப்படி 39.8 இலட்சம் ரூபாய், பயணச் செலவு 6.7 இலட்சம் ரூபாய், அலுவலகச் செலவு 1.7 இலட்சம் ரூபாய், வாடகை 1 இலட்சம் ரூபாய், வாகனம் 0.08 இலட்சம் ரூபாய், பெட்ரோல் 0.05 இலட்சம் ரூபாய் மொத்தம் 147 இலட்சம் ரூபாய் இதிலே 29 இலட்சம் ரூபாய் எங்கே இந்த S.C. மக்களுக்குச் சென்று சேர்ந்தது என்ற சற்று விவரம் அறிந்த நான் கேட்க...

முற்பகல் 11-15

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தெளிவாக நீங்களே கூறுகிறீர்கள். S.C. மக்களுக்கல்ல, மற்ற மக்களுக்கும் இந்த 147 இலட்சம் ரூபாய் சென்று சேரவில்லை. உங்கள் கணக்குப் பிரகாரம் சம்பளம் போன்றவற்றிற்கே எல்லாம் சென்றுவிடுகிறது என்றால், அது பொதுக்



கணக்கிலே சென்றுவிடுகிறது. அந்த S.C. மக்களுக்கு 29 இலட்சம் ரூபாய் என்று சொல்கிறபோது, பொது மக்களுக்குச் செல்வதைவிட S.C. மக்களுக்கு அதிகம் சென்றதாக நீங்களே ஒத்துக்கொள்வதாக அமைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியல்ல. இப்போது உதாரணமாக ஒரு சாலை போடுகிறோம். அந்தச் சாலையை அனைவரும் பயன்படுத்துகிறார்கள். அந்தச் சாலைக்கு ஒதுக்குகின்ற நிதி 100 கோடி ரூபாய் என்றால், அதனுடைய பங்களிப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அங்குண்டு. அப்படித்தான் நாம் கணக்கை எடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனத் தனியாக ஒரு சாலை போட முடியுமா? கணக்கை நீங்கள் சரியாக, அந்த முறையில் அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மன்னிக்க வேண்டும். தங்களுடைய விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எனக்குத் தெரியும், இது என்ன என்று. (குறுக்கீடுகள்) Please, please. I am making an intellectual debate over here. There is no need to shout. 147 இலட்சம் ரூபாயில், இதில் எந்தப் பணம், எந்தப் பணம் S.C. மக்களுக்குச் சென்றது? Where is it in the account No.789? You have devised an account called '789'...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இப்போது நேரமில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 147 இலட்சம் ரூபாய் ஊதியம் போன்ற பலவற்றிற்குச் செல்கிறதென்றால், அங்குக்கூட 19 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட மக்கள் ஊழியர்களாக இருக்கின்றார்கள் என்றால், அவர்களுக்கும் அந்தப் பணம் சென்றுவிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதை வாதிட்டுப் பேசுவது என்பது வேறு.

**திரு. கு. ஜெயக்குமார்:** This is totally wrong. அங்கே வேலை செய்கின்ற மக்கள் S.C. மக்களாக இருக்கின்றார்கள், அவர்களுக்குச் செல்கின்றதென்றால், இது தவறான ஒரு போக்கு. மன்னிக்க வேண்டும். இந்தப் பணமானது, இந்த 29 இலட்சம் ரூபாயானது, S.C. மக்களுக்கு direct-ஆக plan fund-லே கொண்டு வருகிறீர்கள். இதை மற்ற account-லே காட்டவில்லை நீங்கள். plan தொகையிலே கொண்டு வருகின்றீர்கள், 29 இலட்சம் ரூபாய் S.C. மக்களுக்குச் செல்வதாக இதிலே சொல்லியிருக்கின்றீர்கள். எங்கே சென்றது என்று கேட்கின்றேன். எத்தனை பேர் இதனால் பயன்பெற்றார்கள் என்று கேட்கின்றேன். விவரம் கிடையாது. மாண்புமிகு அமைச்சர் சொல்வதை ஒரு வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும், சமூக நலத்

துறை பற்றி ஒரு உதாரணம் கொடுக்கின்றேன். சத்துணவுத் திட்டம்-3. இதில் 22 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கின்றீர்கள். இந்த மொத்தப் பணத்தையும் நீங்கள் S.C. மக்களுக்கு ஒதுக்கியதாக S.C.P.-யில் இந்த ஆவணத்திலே காட்டியிருக்கின்றீர்கள்; வாவேற்கின்றேன்; ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், வனத் துறையிலே அப்படியில்லையே, ஏன்? ஒரு இடத்திலே தொகையைக் காட்டுகின்ற நீங்கள் மற்றொரு இடத்தில் காட்டாதது ஏன்? கணக்கு எண் 789-லே காட்டியதை, வேறு இடத்திலே காட்ட வேண்டியது என்ன? மற்ற சில மாநிலங்களில், பீகார் அரசு போன்று 789 என்ற ஒரு கணக்கு இல்லாமல் இருந்திருக்குமேயானால், இங்கேயும் நான் ஒத்துக்கொண்டிருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எனவே, இந்த S.C.P. என்பது குறித்து நான் சொன்ன புள்ளிவிவரம்தான் சரி. நீங்கள் இதிலே கொடுத்திருக்கின்றீர்கள், 177 கோடி ரூபாய் என்று. 1,110 கோடி ரூபாய் கொடுக்க வேண்டிய இடத்திலே 177 கோடி ரூபாயையும், 1350 கோடி ரூபாய் இந்த வருடம் கொடுக்கப் போவதாகச் சொல்லியிருக்கின்ற இடத்திலே, இந்தப் புத்தகத்திலே 242 கோடி ரூபாய் மட்டுமே காட்டியிருக்கின்றீர்கள்; வருந்தத்தக்கது. இந்த அரசை நான் பாதம் தொட்டு வேண்டிக்கொள்வது எல்லாம், சரியாகச் செய்யுங்கள். இதை அந்த மக்களுக்குச் சென்றடையச் செய்யுங்கள். இடையிலே தவறுகள் ஏற்படுகின்றன. இவ்வளவு பெரிய திட்டத்தைத் தயாரித்து நாம் செயல்படுத்துகின்றபோது, அத்தனை திட்டங்களும் சென்று சேரத்தான் வேண்டும் என்பது நிச்சயம் கிடையாது. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இன்றைக்கு இளைஞர்கள் உள்ளத்திலே எல்லாம் குடிகொண்டிருக்கின்ற எங்களுடைய ராஜிவ் காந்தி ஐயா என்ன சொன்னார்கள்? நாம் 100 ரூபாய் செலவு செய்கின்றோம் இந்த மக்களுக்கு என்றால், 85 சதவீதம் வழியிலே சென்றுவிடுகின்றது, 15 சதவீதம்தான் சென்று சேருகின்றது என்றார்கள். அதற்கு உதாரணமாக வேண்டுமானால் இதைச் சொல்லிக்கொள்ளலாம். நீங்கள் நல்ல ஒரு முடிவை எடுத்திருக்கின்றீர்கள். 789 என்ற கணக்குத் தலைப்பைக் கொடுத்திருக்கின்றீர்கள். அதில் எல்லாவற்றையும் காட்டுங்கள். இதில் இருப்பதை ஒன்றைக்கூட ஆதிதிராவிடர் நலத் துறை சரியாகப் பார்க்கவில்லை என்பது என்னுடைய கருத்து. இதற்காக என்று தனியாக ஒரு கலந்தாய்வை



ஏற்படுத்தினால், என்னென்ன குறைகள் எல்லாம் இதில் இருக்கின்றன என்பதை ஆராயலாம். நம்முடைய சமூக நலத் துறையிலே சத்துணவுத் திட்டம் 3-ஐ ஒரு வழியாகவும், திட்டம் 2-ஐ ஒரு வழியாகவும் செயல்படுத்தியிருக்கின்றார்கள் என்று கூறி, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தாட்கோ என்ற நிறுவனம் ஒன்று இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த மக்களின் மேம்பாட்டிற்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமு.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 மணித்துளிகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஒன்பது பேர் பேச வேண்டும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒன்றே ஒன்று. மாண்புமிகு நிதி அமைச்சருக்குச் சொல்ல வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே, தாட்கோ என்ற நிறுவனம் இயங்கிக்கொண்டிருக்கிறது. இதற்குப் பணம் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. மிக வருந்தத்தக்க ஒன்று என்னவென்றால், இந்த ஆண்டின் மார்ச் மாதத்திலே 25, 26 தேதிகளில் நீங்கள் 60 கோடி ரூபாயை தாட்கோவுக்கு அனுப்பியிருக்கின்றீர்கள். உங்களுடைய நிதித் துறை அனுப்பியிருக்கின்றது. அதை P.D. அக்கௌன்டிலே வருடம் முழுவதும் வைத்துக்கொண்டு, வருடத்தின் கடைசியிலே அந்தப் பணத்தைக் கொடுத்து, நான்கு நாட்களிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று அந்த நிறுவனத் தலைவரைக் கேட்டுக்கொண்டால் எப்படி முடியும்?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்லி வருகிறார். ஆதிதிராவிடர் நலத் துறைக்கு, குறிப்பாக தாட்கோ மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், பெண்களுக்கு அதிகமான அளவு கடன்கள் வழங்க வேண்டுமென்று சுய உதவிக் குழுக்களை அமைத்து, அதன்மூலமாக, கடந்த ஆண்டு 1,22,250 பயனாளிகள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை. தாட்கோ

நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், மார்ச் மாதம் 25 ஆம் தேதி (குறுக்கீடு) தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். இந்தக் கருத்தை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். இந்தப் பணம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிய வேண்டும். தெரியாமல் இருக்கிற காரணத்தால். நீங்கள் சற்றுத் தலையிட்டால் இந்தத் துறைகள் எல்லாம் சரியாகச் செயல்படும் என்பதற்காகத்தான் நான் இங்கே பேசுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களே, இந்த 60 கோடி ரூபாய் எங்கே சென்றது? S.C.,S.T., மக்களுக்குச் சென்றதா? இல்லை. நீங்கள் கொடுத்த 60 கோடி ரூபாய், நிதித் துறை கொடுத்தது; அதை எடுத்துப் பொது மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்குக் கொடுத்து அவர்களுடைய மேம்பாட்டை நடத்த வேண்டிய இந்த அரசு, இந்தத் துறை, இந்த 60 கோடி ரூபாயை இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், அண்ணா நகரிலே போட்டு வைக்க வேண்டிய அவசியம் என்ன? எதற்காக? இந்த மக்கள் பணத்தில் Bank-னுடைய டெப்பாசிட்டை அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காகவா இந்த அரசு செயல்படுகிறது? வருடக் கடைசி நாளிலே Bank-லே அதிக டெப்பாசிட்டைக் காணவேண்டுமென்பதற்காக இந்த நிதியை ஐ.ஓ.பி., அண்ணா நகரிலே வைத்து விட்டு...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். இதுபோன்றவற்றை நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,............

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனம் இயங்குகிறது, பெயரளவில். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த நன்மையும் செய்வதில்லை. பேங்கிலே அக்கவுன்ட்ஸ் இருக்கிறது என்று சொல்கிறார். இப்போது, பேங்கிலே இருக்கிறதா, இல்லையா என்பதை அரசாங்கம் கண்டுபிடிக்க முடியும். எதற்கெடுத்தாலும் Welfare Minister, தவறான தகவல், தவறான தகவல் என்றால், எது உண்மையான தகவல்?

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனத்திற்கு அரசு நிதி ஒதுக்கியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால், தாட்கோ நிறுவனத்தைப் பொறுத்த வரைக்கும், தாட்கோ நிறுவனத்தின் மூலமாகத் தாழ்த்தப்பட்ட



மக்களுக்கு சுய தொழிலுக்கு நிதி ஒதுக்கப்படுகின்றபோது, அங்கு பல ஆண்டுகளாகத் தவறுகள் நடந்து வந்ததை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு தற்போது கண்டுபிடித்திருக்கிறது. There are brokers; ஒவ்வொரு மாவட்டத்திலும் (குறுக்கீடு) சொல்லிமுடித்து விடுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஒவ்வொரு மாவட்டத்திலும் – தாட்கோ மூலமாக நிதி ஒதுக்கப்படுகிறது என்றால், கறவை மாட்டுக்கு என வாங்குவார்கள். அல்லது வாகனம் வாங்குவதற்காக வாங்குவார்கள். பலவற்றிற்குத் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பணத்தை வாங்குகிறார்கள்; பணம் தரப்படுகிறது. ஆனால் சோதனையிட்டபோது, அந்தப் பயனாளிகளுக்கு அந்தப் பணம் சென்று சேரவில்லை. இடையிலே இடைத்தரகர்கள் இருக்கிறார்கள். இன்னும் வேதனையோடு சொல்ல வேண்டுமென்றால், அந்த இடைத்தரகர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சில சங்கங்கள் என்ற பெயரை வைத்துக் கொண்டு, அவர்களே இடைத்தரகர்களாக இருந்து அந்தப் பலன் உண்மையான பயனாளிகளுக்குச் சென்று சேராமல் முட்டுக்கட்டையாக இருந்து விடுகிறாகள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், இந்தக் குற்றச்சாட்டை அரசுக்குத் தந்து இருக்கிறார்கள். திரு. ஐ. கணேசன் அவர்களுக்குக்கூடத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இது எடுத்துச் செல்லப்பட்டபோது, தாட்கோ மூலமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு, படித்த வேலை இல்லாமல் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு அந்தப் பலன் சென்றடைய வேண்டும் என்பதற்காக, தற்போது புதிய அணுகுமுறையை, அதாவது மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக, அவருடைய கண்காணிப்பில் பலனாளிகள் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். பலன் அவர்களுக்குச் சென்று சேர வேண்டும். அவர்களுக்குப் பணமும் சென்று சேர வேண்டும். அந்தத் தொழில் நடக்க வேண்டும் என்ற ஆணையையிட்டு, இப்போதுதான் முதன்முறையாக அந்தப் பலன் மக்களுக்குச் சென்று சேரக்கூடிய ஓர் உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி தற்போது இட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள், நான் பூசணிக்காயைப் பற்றிப் பேசுகிறபோது, என்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார். I am talking about the major issues. (Interruption) Major issues. இதுமட்டுபல்ல, 9-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய அரசு கொடுத்திருக்கின்ற தொகை 178...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. இராமு.

**திரு. ந. இராமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவழும் நிலவாம் தங்க ரதம், தாரகை பதித்த மணிமகுடம், குயில்கள் பாடும் கலைக்கூடம், கொண்டது எனது அரசாங்கம். கருணாநிதி கஜானாவைக் காலி செய்தபோதும், இந்த அரசை சீரோடும், சிறப்போடும் நடத்தி வருகின்ற, எங்களை எல்லாம் வாழவைத்து, வழி நடத்திச் செல்கின்ற கழகத்தினுடைய காவல் தெய்வம், மனிதப் புனிதவதி, சமூக நீதி காத்த வீராங்கனை, இன்றைய 6 கோடி மக்களின் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிற, நாளைய 100 கோடி மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அடித்தட்டு மக்களுக்கு அதிகாரம். கடைசி மனிதனுக்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராமு, கொஞ்சம் இருங்கள்.

முற்பகல் 11-25

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஜெயக்குமார் அவர்கள் பேசும்போது அமைச்சர் குறுக்கிட்டு, தவறான தகவல் தருகிறார் என்று சொன்னார். ஜெயக்குமார் அவர்கள் சொன்னது, அந்தக் குறிப்பிட்ட தேதியில் I.O.B. வங்கியில் இருப்பாக இவ்வளவு தொகை இருந்தது என்று சொன்னார். அது தவறான தகவலா? இருப்பாக வைக்கப்படவில்லையா? இல்லை என்று சொன்னால், அது சரியான தகவல் என்றால், அது சரியான தகவல் என்று ஒத்துக்கொள்ள வேண்டும். தவறு என்று சொல்லி, எதை எடுத்தாலும், தவறான தகவல், தவறான தகவல் என்று சொல்லக்கூடாது. அவை முன்னவர் அவர்கள் சொன்னதன்படி பார்த்தால், அது சரியான தகவல் என்றேதான் எனக்குப் புலப்படுகிறது. தகவல் சரியான தகவல். அவர் தவறான தகவல் என்று சொன்னதுதான் தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தவறான தகவல் என்று எப்படிச் சொல்லலாம்?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறான தகவல் என்று அமைச்சர் சொன்னதற்குக் காரணம்; தாட்கோ நிதி சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற அந்தக் கருத்துக்குத்தான் அமைச்சர் சொன்னாரே தவிர, வேறு ஒன்றுமில்லை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். திரு. இராமு, பேசுங்கள்.

**திரு. ந. இராமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) குறிப்பிட்ட தேதியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமு, கொஞ்சம் இருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஏன் எனக்கு மைக்கே வராதுங்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் சொல்லிவிட்டீர்களே?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லையே? அதற்குப் பதில் வரவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில்தான் சொல்லி விட்டாரே!

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். ஏன் இன்றைக்கு இப்படி?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு சைடுக்குத்தான் மைக் வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு சைடுக்குத்தான் மைக் வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** No. I take strong objection to it. I am talking...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை, வேண்டுமென்றே பண்ணுகிறார்கள். I charge. @ இதிலே, உள்ளே வந்து இங்கே இருப்பவர்கள் வேலை செய்யவில்லை. I.S.-காரர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு வேலை செய்கிறார்கள். (குறுக்கீடு) No.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** No.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது முறையற்றது. யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பேசிக்கொண்டே இருக்கும்போது மைக் போனால், என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்ன? என்ன பேசுவது? அமைச்சர் தவறாகக் குற்றம் சுமத்துகிறார். அதற்கு பதில் சொல்லவில்லை. அவர் பதில் சொல்லிவிட்டார் என்றால், எப்படி? அவர் இன்னும் பதில் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இவர் சொன்னது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கருத்து?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இவர் சொன்னது, இப்படி நாங்கள்...

---

@ நீக்கப்பட்ட இப்பகுதிகள், 23-4-2003 ஆம் நாளன்று பேரவையில் பேரவைத் தலைவர் ஆணையிட்டதற்கிணங்க சேர்க்கப்பெற்றது.



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் நிதானம் இழந்து ஒரு அபாண்டமான குற்றச்சாட்டை இங்கே கூறியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே ஒலிபெருக்கி இயக்கப்படுகின்ற அறையில் @ I.S.-காரர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால், யாரைக் குறிப்பிடுகிறார்? @ Intelligence Security--ஐக் குறிப்பிடுகிறாரா? அப்படியானால் @ காவல் துறையைச் சேர்ந்த உளவுப் பிரிவினர் இங்கே அமர்ந்திருக்கிறார்கள், அவர்கள்தான் ஒலிபெருக்கிகளை இயக்குகிறார்கள் என்றால், இது அபாண்டமான குற்றச்சாட்டு. இப்படி வரம்பு மீறி, இத்தகைய வார்த்தைகளை அவையில் பயன்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வரம்பு மீறி நான் பேசவில்லை. மைக் வேண்டும் என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடு) நான் நின்றவுடனேயே மைக் போய்விடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி., உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சொல்கிறேன். (குறுக்கீடுகள்) எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு நான் விளக்கம் சொல்லிவிடுகிறேன். சட்டப் பேரவைத் தலைவர் ஒரு கருத்தைச் சொல்கிற நேரத்திலே, பேரவைத் தலைவருடைய ஒலிபெருக்கி மட்டும்தான் வேலை செய்யும். எதிரேயிருப்பவர்களுடைய ஒலிபெருக்கிகள் வேலை செய்யாது. நான் பேசிக்கொண்டிருக்கும்போது (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை, (குறுக்கீடுகள்) இல்லை. தாங்கள் இப்படி அபாண்டமாகப் பேசுவது முறையற்றது. சில நேரங்களிலே (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய ஆணையை மீறுகின்றபோது, மைக் தானாகவே அணைந்துவிடும். (குறுக்கீடு) அணைந்துவிடும். இதுதான் உண்மை. (குறுக்கீடு) இதுதான் நடைமுறை உண்மை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்கள் (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது (குறுக்கீடு) அப்படி அல்ல. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களுக்குத்

---

@ நீக்கப்பட்ட இப்பகுதிகள், 23-4-2003 ஆம் நா[illegible] பேரவைத் தலைவர் ஆணையிட்டதற்கி[illegible]

தரவேண்டிய உரிய மரியாதையைக் கட்டாயம் அவை தந்தாகவேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, அவரைப் பேச விடாமல், தான்தான் பேச வேண்டும் என்று நினைத்தால், மைக் தானாகவே off ஆகத்தானே செய்யும்? அதுதானே உண்மை? அதுதானே இயற்கை? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ந. இராமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவை முன்னவர் அவர்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை விவாதம் ஆக்கவேண்டாம். (குறுக்கீடுகள்) திரு. இராமு, பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முடிந்துவிட்டது. விவாதம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இதுபோன்று எதிர்க்கட்சிகள் மீது....

**திரு. ந. இராமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அடித்தட்டு மக்களுக்கு அதிகாரம்; கடைசி மனிதனுக்கு ஜனநாயகம் என்று சொல்லி, எத்தனையோ நபர்கள் வாய் கிழியப் பேசினாலும் (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஏற்கெனவே நீங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி., உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இனி நீங்கள் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்; நிதி அமைச்சர் அவர்களும் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒன்று மட்டும்; இதுபோன்றுதான் எதிர்க்கட்சிகளை நீங்கள் மதிப்பீர்கள்; பேச அனுமதிக்க மாட்டீர்கள். ஆனால், நீங்கள் பேசுவது முழுவதும் பதிவு ஆகும் என்று சொன்னால், நாங்கள் இந்த அவை நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளவில்லை; வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினுடைய உரிமையைப் பறிக்கக்கூடிய அளவிற்கு மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் சர்வாதிகாரமாக நடப்பதைப்போல் நடந்து, அவைத் தலைவரையும் மிரட்டுகிறார்; ஆளும் கட்சியையும் மிரட்டுகிறார். இந்த முறை தொடர்ந்து நடக்கக்கூடாது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்றைக்குக் காலையிலிருந்தே எஸ்.ஆர்.பி. அவர்கள் ஏதோ ஒரு முடிவோடு வந்திருக்கிறார்கள். காலையிலிருந்தே நிலைமை சரியில்லை. நானும் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். இதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு வெளிநடப்புச் செய்கிறார்கள். அவர்கள் ஜனநாயகத்தை மதிக்க மறுக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

*முற்பகல் 11-30*

**திரு. ந. இராமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தட்டு மக்களுக்கு அதிகாரம், கடைசி மனிதனுக்கு ஜனநாயகம் என்று சொல்லி, எத்தனையோ நபர்கள் வாய் கிழியப் பேசினாலும், புரட்சித் தலைவர் பாடியதுபோல,

'மண் குடிசை வாசலென்றால்
தென்றல் வர வெறுத்திடுமா?
மாலை நிலா ஏழை என்றால்
வெளிச்சம் தர மறுத்திடுமா?'

சேரியிலே பிறந்த எனக்கும் இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த, என்னை வாழ வைத்த தெய்வமே! அம்மா, மீண்டும் தங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளும் மன்னனுக்கு மூன்று உயரிய குணங்கள் இருக்க வேண்டும் என்று திசை எட்டும் இசை கொட்டும் வள்ளுவன் சொல்லியிருக்கின்றான்:

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'.

அதுமட்டுமல்ல, மதுரை மருத இளநாகன் என்கின்ற புறநானூற்றுப் புலவன், ஒரு நாட்டை ஆள்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறியிருக்கின்றான்:—

'ஞாயிற் றன்ன வெண்திறலாண்மையும்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வன்மையு, மூன்றும்
உடையை யாகி....
நீடு வாழிய நெடுந்தகை'

என்று வாழ்த்தியுள்ளான். மேற்கூறிய இரண்டு பாடல்களுக்கும் இலக்கணமாக விளங்கக்கூடியவர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கடந்த தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட மோசமான நிர்வாகச் சீர்கேட்டினால் ஏற்பட்ட நிதி நெருக்கடியிலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது உடல்நலத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், மக்கள் சேவையையே தனது தலையாய கடமையாக எண்ணி, தொலைநோக்குப் பார்வையோடு தமிழ்நாட்டை எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் செயல்பட்டு வருகின்றார்.

'ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் போன திசை.....'

என்ற பாடலுக்கேற்றவாறு, முந்தைய தி.மு.க. அரசு தேவையற்ற செலவினங்களைச் செய்து தமிழ்நாட்டை மீளமுடியாத நிதிச் சுமைக்குக் கொண்டு போய் விட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய கூர்மையான மதிநுட்பத்தால் தமிழ்நாட்டை நிதிச் சிரமிவில் இருந்து காப்பாற்றி உள்ளார். தி.மு.க. அரசின் செயல்பாடற்ற தன்மையால் நாடே இருளடைந்த நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, தம்முடைய உறுதியான நடவடிக்கையாலும், தம்முடைய தெளிவான தொலைநோக்குப் பார்வையாலும் தமிழ்நாட்டை மீண்டும் வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். இதனைக் கண்ணுற்ற



அரசியல் நோக்கர்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களை உளமாரப் பாராட்டுகின்றார்கள்.

மறைந்த இதய தெய்வம், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம், ஆல்போல் தழைத்து அருகம்புல்போல் வேரூன்றி நிற்கின்றது. ஆயிரமாயிரம் சோதனைகளை அடுக்கடுக்காக மாண்புமிகு அம்மாவாகிய புரட்சித் தாய் அவர்களுக்கு சில கயவர்கள் அளித்து வந்தார்கள். இந்த இயக்கத்தை அழித்துவிட வேண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை அரசியலில் இருந்து ஒழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிச் செயல்பட்டவர்கள் எல்லாம் இன்று மண்ணோடு மண்ணாகி, உருவிழந்து போய்விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த தொண்டர்களை.....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஜெயக்குமார், தாட்கோவைப் பற்றி எழுப்பிய ஒரு சந்தேகத்திற்கு நான் இப்போது இந்த அவைக்கு விளக்கம் தர விரும்புகிறேன். மத்திய அரசின் Special Central Assistance Scheme என்னும் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கென்று மத்திய அரசு நிதியை வழங்குகிறது. இந்த நிதி மாநில அரசின் கணக்கில் பெறப்படுகிறது. அதன் பிறகு மாநில அரசு இந்த நிதியை தாட்கோவுக்கு வழங்குகிறது. முந்தைய ஆண்டுகளில் இப்படி மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற நிதியை மாநில அரசு முழுவதுமாக தாட்கோவுக்கு வழங்காமல் மாநில அரசே பெரும் பகுதியை வைத்துக் கொண்டது. இப்போதுதான், இந்த முறைதான், முதல் முறையாக, தாட்கோவுக்கு வழங்க வேண்டிய நிதி முழுவதையும் மாநில அரசு தாட்கோவுக்கு வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியை தாட்கோ, வங்கிகளில் போட்டு வைத்திருக்கிறது. வங்கிகளில் இந்தப் பணத்தை தாட்கோ போட்டு வைத்திருப்பது ஒரு தற்காலிகமான செயல்தான். தாட்கோ இந்த நிதியை முழுவதுமாகப் பயன்படுத்தும். ஆதிதிராவிடர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வருவாயைப் பெருக்குகின்ற திட்டங்களுக்காக விரைவிலேயே தாட்கோ இந்த நிதியை முழுவதுமாகப் பயன்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ந. இராமு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைத் சார்ந்த தொண்டர்களை எல்லாம் பெருமைப்படுத்துகின்ற ஒரே இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்

சார்ந்த தொண்டர்களை எல்லாம் பெருமைப்படுத்துகின்ற ஒரே தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் புனிதப் பொற்பாதங்களில் என்னுடைய கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆதிதிராவிட தலித் மக்களைச் சம்பந்தி என்று சொல்லித் திரியும் முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி, ஓட்டுக்காக மட்டும் உறவு கொண்டாடுகிறாரே தவிர, அவர்கள் உயர்வடைய எதையும் செய்ததில்லை. அவர்களுக்கு இவர் நாமம் போட்டதுதான் மிச்சம். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள், கல்வி வளர்ச்சி ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி என்று சொன்ன அண்ணல் அம்பேத்கர் அவர்களை நினைவிற்கொண்டு தலித் சமுதாயம் உயர்வடைய வேண்டும் என்ற எண்ணத்தில், ஆதிதிராவிடர் பிள்ளைகளும் உரிய நேரத்தில் பள்ளிக்குச் செல்வதற்குத் தொலைநோக்குப் பார்வையோடும், உயர்ந்த சிந்தனையோடும் உலகில் யாருமே கொண்டுவர முடியாத ஒரு மாபெரும் திட்டமாக, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

நடப்பாண்டில் 47,980 மிதிவண்டிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். மேலும் ப்ளஸ் 1 வகுப்பில் புதியதாகச் சேரும் மாணவியர்க்குப் பயனளிக்கும் வகையில் ரூபாய் 7.49 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளதை நினைக்கின்றபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை முன்னேற்றக்கூடிய ஒரே ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பது புலனாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

ஆதிதிராவிட, பழங்குடியின, மாணவர்களிடையே எழுத்தறிவை மேம்படுத்துவதற்கான சிறப்பு ஊக்கத் திட்டங்களுக்காக ரூபாய் 6 கோடி நிதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். ஆதிதிராவிடர் சமுதாயம் உண்மையிலேயே உயர்வடைய வேண்டும் என்று சொன்னால், அவர்கள் கைகளிலே ஏட்டையும், எழுதுகோலையும் அளிக்க வேண்டும். ஆனால், தலித் இயக்கங்களின் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் சிலர், அத்து மீறுவோம், அடங்க மறுப்போம், திரும்பி எழுவோம், திருப்பி அடிப்போம் என்ற வசைப் பாடல்களோடு தலித்துகளின் கைகளில் கொடுவாளையும், அரிவாளையும் தந்து, அவர்களை வன்முறையாளர்களாக்கி அவர்களின் வாழ்க்கையைச் சீரழித்து வருகின்றார்கள். இவர்களின் மத்தியிலே தலித் சமுதாய



மாணவர்களுக்குச் சிறப்புப் படிப்புதவி மானியத் திட்டத்தைக் கொண்டு வந்து, கல்வி வளர்ச்சி ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி என்று, உலகிலேயே யாரும் செய்ய முடியாத அளவிற்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்து வரும் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களைப் பெருமையுடன் நினைத்து ஒட்டுமொத்த தலித் சமுதாயமே மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாணவர்களின் நலன் கருதி ரூபாய் 47.25 கோடி செலவில் 150 புதிய மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து, மாணவர்கள் ஊக்கமுடன் கல்வி பயில ஆவன செய்திருப்பது மாண்புமிகு அம்மாவின் தாயுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பாரதி பாடியது போல,

'எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்'

என்ற சமத்துவ நோக்கு வரவேண்டும் என்று சொன்னால், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழையெளிய ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின அடித்தட்டு மக்கள் பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று எண்ணிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாட்கோ மூலம் வறுமை ஒழிப்புச் செயல் திட்டத்தின்கீழ் 15.9 இலட்சம் பயனாளிகள் பயன்பெறுகின்ற திட்டத்தைத் தீட்டி தலித் மற்றும் பழங்குடியினர் முன்னேற வழிவகை செய்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிட சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கும் எண்ணற்ற நன்மைகளைச் செய்து வருகின்றார்கள். அந்த வகையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கென ரூபாய் 31.50 கோடி செலவில் 100 மாணவர் இல்லக் கட்டடங்கள் புதிதாகக் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 9 ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர்களுக்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 6 ஆம்

வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபின மாணவ, மாணவிகளுக்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த ஐந்தாயிரம் மகளிருக்கு, ஒருவருக்கு ரூபாய் 10 ஆயிரம் வீதம் குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூபாய் 5 கோடி கடன் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளதை அனைவரும் வரவேற்கின்றனர். மேலும், இவ்வகுப்பினைச் சேர்ந்த ஒரு இலட்சம் மகளிருக்கு, குறைந்த வட்டியில் ரூபாய் இரண்டாயிரம் வீதம் சிறு தொழில்கள் தொடங்க, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூபாய் 20 கோடியை சிறு வணிகக் கடனாக வழங்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள்.

மதமாற்றத் தடைச் சட்டத்தால் சிலர் பொய்யான மாயையை உருவாக்கி, சிறுபான்மையினரை மாண்புமிகு அம்மா அவர்களிடமிருந்து பிரித்துவிடலாம் என்று பொய்யான வேடங்களைப் போட்டுப் பிரச்சாரம் செய்து பார்த்தார்கள். பலனேதும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மாறாக, மாண்புமிகு அம்மா அவர்கள்மீது மிகுந்த அன்பு காட்டுகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள் அதிக அளவில் வாழும் மாவட்டங்களில் உள்ள ஆயிரம் இஸ்லாமிய இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து, அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திலிருந்து ரூபாய் 2.50 கோடி கடனாகப் பெற்று, ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபாய் கடன் உதவியாக வழங்க ஆணையிட்டு, சிறுபான்மையினரின் நலன் காக்கும் சிறந்த தலைவியாகத் திகழ்கின்றார்கள்.

முற்பகல் 11-40

மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தமிழக மக்கள் தங்கள் பேராதரவை அமோகமான முறையில் அளித்து வருகின்றார்கள். எள்ளி நகையாடிய எதிர்க்கட்சிகள் எல்லாம் இடைத் தேர்தலில் ஆண்டிப்பட்டியிலே, அம்மா முதல்வராக ஆகக்கூடாது என்று மக்களிடம் மண்டியிட்டுப் பிச்சை கேட்டார்கள். அச்சிறுப்பாக்கத்திலே சாதியைச் சொல்லி, நாங்களும் உங்கள் சாதிதான் என்று சாதிக்கப் பார்த்தார்கள். சென்னையிலுள்ள சைதாப்பேட்டையைத் தங்களது



இரும்புக் கோட்டை என்றார்கள். வாணியம்பாடியிலும், சாத்தான்குளத்திலும் மதப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்திச் சாதிப்போம் என்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், சாதியின் பெயரைச் சொல்லியோ, மதத்தின் பெயரைச் சொல்லியோ, மொழியின் பெயரைச் சொல்லியோ வாக்குகள் கேட்காமல், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உன்னத இலட்சியத்தோடு வாக்குகள் கேட்டு, தன்னந்தனியாக நின்று எதிர்க்கட்சிகளின் திட்டம் அனைத்தையும் தூள், தூளாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ஜால வார்த்தைகளால் தமிழக மக்களை வளைத்துவிடுவோம் என்று பேசியவர்களையெல்லாம், காற்றிலே பறக்கும் காகிதமாக, புறமுதுகு காட்டி ஓடச் செய்த வரலாற்றைத் தமிழக மக்கள் மறந்து விடவில்லை. தற்போது போராட்டம் என்ற பெயரில் சிலர் தேவையற்ற வகையில் சட்டத்தை மீறி நடந்து வருகிறார்கள். அரசின் நடவடிக்கைகளில் தேவையில்லாமல் குறுக்கீடு செய்கிறார்கள்.

'வழியை மறைத்த மாசி வாயு விரட்ட விலகும்
நீரை மறைத்த பாசி கை அறைக்குக் கலையும்'

என்பதைப்போல, மாண்புமிகு அம்மா அவர்கள் இவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சமூகத் துரோகிகளின்மீது நடவடிக்கை எடுத்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்மீது 356-ஐப் பயன்படுத்த வேண்டுமாம். மக்கள் மாமன்றத்திலே அம்மா அவர்களைச் சந்திக்கத் திராணியற்ற நீங்கள், குறுக்கு வழியிலே கோட்டையைப் பிடிக்கக் கனவு காணாதீர்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சோதிமிக்க நவகவிதை என்னாளும்
அழியாத மகா கவிதையாக
தமிழகத்தின் நிரந்தர முதல்வராக
எதிரிகளால் வெல்ல முடியாத
இமயமாக வீற்றிருக்கும்
எங்களின் அன்புத் தாயே!
தங்களால் தமிழகம் தழைத்தோங்கட்டும்!
தரணி உள்ள வரை தங்கள்புகழ் சிறக்கட்டும்!!

என்று சொல்லி, 'அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு; இங்கே நீ சிரிக்கும் புன் சிரிப்போ ஆனந்தச் சிரிப்பு; நல்ல

தீர்ப்பை உலகம் சொல்லும் நாள் வரும்போது, அன்று சிரிப்பது யார், அழுவது யார், தெரியும் அப்போது' என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, எனது தொகுதியிலே, நல்லூர் ஒன்றியத்தில் சேப்பாக்கத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைப் புதியதாகத் துவங்கிய அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதி உளுந்தூர்பேட்டையில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன. எனது உளுந்தூர்பேட்டையில் உள்ள அரசு பொது மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய பொது மருத்துவமனையாக ஆக்கவேண்டுமென்று அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, எனது தொகுதி தியாகதுருகம் ஒன்றியம், அசக்குளத்தூர் பாலத்தையும், நல்லூர் ஒன்றியத்தில் நல்லூர் பாலத்தையும் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இடம் இல்லாமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, அருகில் வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம் அதிகமாக உள்ளது. எனவே, பெண்கள் நலத்திலே பெருமை சேர்க்கின்ற அம்மா அவர்கள் அதுவும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமாய்க் கேட்டு, இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

•**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின நலத் துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது, உழைக்கும் மக்களின் பேரியக்கமான பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்பளித்த உங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களது இனமானக் காவலர், எங்களது இதய தெய்வம் டாக்டர் ஐயா அவர்களுக்கும், பசுமை நாயகர் டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய தலைவர் தியாகச் செம்மல் ஜி.கே. மணி அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஆதிதிராவிடர் நலத் துறை மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளை ஒன்றாக வைத்து, அதன்மீது இங்கே விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நான் சொல்வதெல்லாம், பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டைப் பொறுத்தவரை ஆதிதிராவிடர் நலத் துறை, பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை தனியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதேபோன்றே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுடைய மானியக் கோரிக்கை தனியாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தப் பிரிவுகளுடைய மொத்த மக்கள் தொகை அதாவது தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களைச் சேர்த்தால் கிட்டத்தட்ட 75-லிருந்து 80 சதவிகிதம் உள்ளனர். இந்த அடித்தட்டு மக்களுடைய பிரச்சினையை, ஏதோ குண்டான் சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுவதுபோல, ஒரு மூன்று மணி நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும் என்பதைப்போன்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதன் மூலம், இந்த அரசு, இந்த மக்கள்மீது எத்தகையதோர் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அதிலும் குறிப்பாக....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் எல்லாம் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு அரசைக் குறை கூறுவது அறியாமை என்றே கருதுகிறேன். எந்த மானியக் கோரிக்கை, என்றைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்வது அரசு அல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் பங்குகொண்டு, அவர்கள்தான் எந்தெந்தத் தேதியில், எந்தெந்த மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்கிறார்கள். அதில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும் உங்கள் தலைவர் கலந்துகொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தக் கேள்வியைக் கேட்பதானால், உங்கள் கட்சித் தலைவரைத்தான் கேட்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையின மக்களுக்கான இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.152.4 கோடி ஆகும். ஆனால், இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ.131.72 கோடியாக இருக்கிறது. அதுவும் குறைவாக இருக்கிறது. அதுவும் அந்த மக்கள்மீது இந்த அரசு எத்தகையதோர் அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துகிற வகையிலே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டிலே ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு, மாணவர்களுக்கு Loan Scholarship என்று சொல்லக்கூடிய கல்விக் கடன் உதவித் தொகை முழுக் கல்வி மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்து, அதற்கு ஆணை வெளியிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டு மக்கள் முழுவதுமாக, சமூக நீதியில் அக்கறை கொண்டிருக்கிற எல்லோருமே, இதை மனதார வரவேற்கிறார்கள்; நாங்களும் வரவேற்கிறோம்; பாட்டாளி மக்கள் கட்சியும் வரவேற்கிறது. ஆனால், முழுவதும் மானியமாக அந்தக் கடன் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு, இன்றைக்கு ஏழாயிரம் மாணவர்களுக்கு மேலான தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்கள், இன்றைக்கு வரைக்கும் அந்தத் தொகையைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பரிட்சை எழுத முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புப் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கெனக் கொடுக்கப்பட்டு வந்த கல்விக் கடன் முழு மானியமாக 5 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது முழுவதுமாக மாணவர்கள் மத்தியிலே சென்றடைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது



கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இருக்கிறது. நானும் படித்தேன். ஆனால், யதார்த்த சூழ்நிலை அப்படியில்லை. 7,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்றைக்குக் கல்வி மானியத்தைப் பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். போராட்டச் சூழ்நிலையிலே இருக்கிறார்கள். 'கொடுத்தவனே பறித்துக் கொண்டாண்டி' என்பது ஒரு சினிமாப் பாடல். அதை நினைவுபடுத்துகிற வகையிலே, கொடுப்பதாக அறிவித்துவிட்டு, அதை இன்று வரை கொடுக்காமல் மாணவர்களைத் தவிக்க விட்டிருப்பது எந்த வகையிலே நியாயம் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 கோடி ரூபாயைக் கொடுத்த மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள்--மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டம்--இந்தியாவிலே எந்த மாநிலத்திலுமே இல்லாத திட்டத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். நிதி நெருக்கடி இருந்தபோதிலும், குறிப்பாக, நம்முடைய ஆதிதிராவிட, பழங்குடியின மாணவர்கள்மீது அக்கறை கொண்டுள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள், 7,000 மாணவர்கள் கிடைக்காமல் தவிப்பதாகச் சொல்கிறார். குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** 2,000 ரூபாய் என்றிருந்த இந்தக் கல்விக் கடன் உதவித் தொகையை கடந்த முறை ஆட்சியிலிருக்கும்போது நம்முடைய முதல்வர் அவர்கள் 6,500 ரூபாயாகவும், 7,000 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுத்தார்கள். அதையும் நாங்கள் பாராட்டுகிறோம். அதைப்போலவே, இது கிடைக்கவில்லை என்று போராடி, தடியடிபட்டு இரத்தம் சிந்தி, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பட்ட சித்திரவதைகளுக்கு அளவேயில்லை. நான் சொல்வது உங்களைப் பாராட்டித்தான்...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் மாணவர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் படித்து வருகிறார்கள். ஏதோ தடியடிகள் நடந்ததாகத் தவறான கருத்தைச் சொல்கிறார் உறுப்பினர். புள்ளிவிவரமாகச் சொன்னால் அதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முருகவேல் ராஜன்...

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் போராடிய மாணவர்களுக்கு இனி அந்தத் தொந்தரவு இருக்கக் கூடாது, முழுவதுமாக மானியமாகக் கொடுக்கிறேன் என்று முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை உலகமே பாராட்டுகிறது; நானும் பாராட்டுகிறேன். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் கொடுத்தீர்களே, அது கிடைக்க வேண்டாமா? மாணவர்களுக்குக் கிடைத்ததா என்று நாம் பார்க்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முருகவேல் ராஜன், அமைச்சர் அவர்களும் அதைத்தான் கேட்கிறார்கள். எங்கே கிடைக்கவில்லை, யாருக்குக் கிடைக்கவில்லை என்ற அந்த விவரங்களைச் சொன்னீர்கள் என்றால், அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன் என்றுதான் சொல்கிறார்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அதைப்போலவே, தலித் கிறிஸ்தவ மாணவர்களுக்கு scholarship என்பதுடன் சேர்ந்த இந்த மானியத் தொகையும் கிடைக்காது போகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பட்ட மேற்படிப்புப் படிக்கிற தலித் கிறிஸ்தவ மாணவர்களுக்கு மட்டும்தான் இந்த உதவித் தொகை கிடைக்கும் என்பதோடு மட்டுமல்ல; இதற்கு முன் உள்ள நிலை என்னவென்றால், முதலாண்டுக்கு இருக்கிற கல்விக் கடன் உதவித் தொகையைப் பெற முடியாவிட்டால், அடுத்த ஆண்டு அதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்கிற நிலைமை இருந்தது. ஆனால், இன்றைக்குப் போட்டிருக்கிற ஜி.ஓ.-விலே, ஒரு ஆண்டு பெறவில்லை என்றால், அடுத்த ஆண்டு பெற முடியாது என்று தெளிவாகத் தடுத்திருக்கிறார்கள். அப்படி என்றால், இந்த ஆண்டு பெற முடியாமல் இருக்கிற மாணவர்கள் அடுத்த ஆண்டும் பெற முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். எனவே அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அடுத்தபடியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கூறுத் திட்டம் என்பது--ஒரு அணுகுமுறையே அல்லாமல், அதுவே--ஒரு திட்டமல்ல என்று மத்திய அரசு சொல்கிறது. It is an approach. It is not a plan என்று தெளிவாகக்



குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இதை நம்முடைய மாநில அரசு விளங்கிக் கொண்டிருக்கிறதா என்பது இன்னும் மிகப் பெரிய சந்தேகமாக இருக்கிறது. காரணம், 2002-2003 ஆம் ஆண்டு S.C.P., T.S.P.-படி கிடைத்திருக்க வேண்டிய தொகை 1100 கோடியாகும். ஆனால், மாநில அரசு கொடுத்தது 110 கோடி, மத்திய அரசு கொடுத்தது 66 கோடி. ஆக, 176 கோடிதான் கிடைத்து இருக்கிறது. இந்த ஆண்டு 7000 கோடி ரூபாய் திட்டச் செலவிலிருந்து S.C.P., T.S.P.-க்குக் கிடைக்க வேண்டிய தொகை என்பது, கிட்டத்தட்ட 1400 கோடியாக இருக்கும். ஆனால், இங்கே ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், அப்படியில்லை. நம்முடைய அரசு 2001 பட்ஜெட்டில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், 'சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி, பட்டியலின மக்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை என்று இவ்வரசு உணருகிறது' என்று. இதை 2001-ல் சொல்லியிருக்கிறார்கள். 2002-ல் என்ன சொல்கிறார்கள் என்றால், சிறப்புக் கூறுத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்தபோது, இச்சமுதாய மக்களின் நலனுக்காக நிதி ஆதாரங்களை உரிய அளவில் ஒதுக்கீடு செய்வதில் குறைபாடு இருக்கிறது என்று தெரிய வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கூடுதலாக, இதைக் கண்காணிக்க ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது என்றும் சொல்லி இருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டதா? உயர்நிலைக் குழு இப்போது செயல்பாட்டில் இருக்கிறதா? அப்படியென்றால், மத்திய அரசு காட்டுகிற அந்த வழிமுறைகளின்படிதான் அந்த உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன். ஏனென்றால், இந்த பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு செய்தி; S.C.P. and T.S.P.-யின்படி, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ. 18.5 கோடியும் அடங்கும். இந்த ஒதுக்கீட்டில். S.C.P. and T.S.P-யில் அடங்கும் என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையாக ஒதுக்கப்பட்டிருந்தால் 28 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக பகிரங்கமாக பட்ஜெட்டிலே அறிவித்துவிட்டு, நீங்களே சொல்கிறீர்கள் ஒதுக்கீடு inadequate-ஆக இருக்கிறது என்று. Proportionate to population; அதற்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டும்; அது இல்லை என்று 2 பட்ஜெட்டுகளிலேயும் சொல்லிவிட்டு, மூன்றாவது பட்ஜெட்டிலே 28 கோடி ஒதுக்கியிருக்க வேண்டிய இடத்திலே 18 கோடி ஒதுக்கியிருக்கிறோம் என்று பகிரங்கமாகச் சொல்வது, இந்த

அரசுக்கு ஒரு அணுகுமுறையே இல்லை என்பதுடன் இது ஒரு திட்டமல்ல என்பதையும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களுக்குச் சொல்கிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக ஒரு ரோடு போட முடியுமா என்று கேட்டார்கள். மத்திய அரசு தெளிவாகச் சொல்லியிருக்கிறது; 'S.C.P. & T.S.P.லே The allocation should not be a notional allocation' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், இது notional allocation என்பதைப்போலப் பேசுகிறார்கள். எனவே, நாங்கள் சொல்கிறோம்...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது முற்றிலும் தவறான ஒன்று. நான் கூறுவது; பொதுவாக எல்லோரும் பயன்படுத்துவதற்காகச் சாலை போடப்படுகிறது. அதிலே ஒதுக்கப்படுகின்ற பணத்தினுடைய ஒரு பகுதி, தாழ்த்தப்பட்ட மக்களின் பங்காகவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பள்ளிக்கூடம் கட்டப்படுகிறது. மற்றும் பொதுப் பணிகள் எல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன; குடிநீர் வசதிகள் செய்து தரப்படுகின்றன. பல்வேறு திட்டங்களைப் பொது மக்களுக்கு எனக் கொண்டு வருகின்றபோது, there should be a share therefor earmarked for Scheduled Castes and Scheduled Tribes also. அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், இந்தக் கணக்கைக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் மைய அரசினுடைய கணிப்பும்கூட. அந்த முறையில் நாம் செய்கிறோம். அப்படிப் பார்க்கின்றபோது, எந்தவிதத்திலும் குறைந்த நிதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ, பழங்குடி மக்களுக்கோ ஒதுக்கப்படவில்லை என்றுதான் நான் தெரிவித்தேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் இனிமேலும் இருக்கக் கூடாது, ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட வேண்டும் என்றுதான் பாட்டாளி மக்கள் கட்சியும் கருதுகிறது. எனவேதான் நாங்கள் சொல்கிறோம். ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய எல்லாச் செயல்பாடுகளையும் கண்காணிப்பதற்கு என்று, ஒரு சட்டமன்ற உயர்நிலைக் குழுவை உருவாக்க இந்த அரசு முன்வர வேண்டும். அது ஒன்றுதான் இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வாக இருக்க முடியும் என்று பாட்டாளி மக்கள்



கட்சி கருதுகிறது. அதேபோல, தியாகி சுந்தரலிங்கனார் அவர்களுடைய பிறந்த நாள் விழாவை இவ்வரசு--கடந்த கால அரசு செய்த குறைகளை நாம் சுட்டிக்காட்டுகிறோம். ஆனால், கடந்த அரசு, இதற்கு முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, தான் ஆட்சியில் இருந்தபோது கடைசி இரண்டு ஆண்டுகள் தியாகி சுந்தரலிங்க குரும்பனார் அவர்களுடைய பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக ஏற்று, அவர் பிறந்த ஊரான கவர்னகிரியிலே நடத்தி வந்திருக்கிறது. ஆனால், இப்போது இருக்கக்கூடிய அரசு-- கடந்த 2 ஆண்டு காலமாக அந்தப் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடவில்லை. நாங்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம், மனுக்கள் எல்லாம் கொடுத்தோம்...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்போது சுந்தாலிங்கம் பிறந்த நாள் விழாவை வருகிற 26 ஆம் தேதி அவர் பிறந்த ஊரான ஒட்டப்பிடாரம் தொகுதியில் சிறப்பான முறையில் அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விழா கொண்டாடுவதாக இருந்தால்; ஆனால் ஏப்ரல் 16, சித்திரா பௌர்ணமி அன்றுதான் அவர் பிறந்த நாள்; 26 ஆம் தேதி கொண்டாடுகிறீர்கள். கண்டதேவியிலே ஓடாத தேரை ஓட்டினோம் நாம்; பெருமைப்படுகிறோம் என்று இவ்வரசு கூறுகிறது. ஆனால், நடந்து வந்த விழாவை ஏன் நாம் நிறுத்திவிட்டோம் என்று கேட்டால் தெரியவில்லை.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரன் சுந்தாலிங்கனார் பிறந்த நாள் விழா 16 ஆம் தேதி கொண்டாடுவதாக இருந்தது. அந்தப் பகுதியிலே கிருஷ்ணசாமி அவர்கள் விழா எடுத்த காரணத்தினால், 26 ஆம் தேதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு சிறப்பாக நடைபெறவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அடுத்த ஆண்டிலாவது 16 ஆம் தேதி இருக்கும்படியாக அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை கிருஷ்ணசாமியிடமும் சொல்லுங்கள், 'நீங்கள் கொண்டாடாதீர்கள்; நாங்கள் கொண்டாடுகிறோம்' என்று.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை, இல்லை, அதைச் சொல்லக் கூடியவர்களிடம் சொல்லலாம்.

அடுத்தபடியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழுமம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பட்டியலினப் பழங்குடி மக்களுடைய லிஸ்டை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே 'குடும்பன்' என்று குறிக்க வேண்டிய சொல், 'குடம்பன்' என்றும், 'காலாடி' என்று குறிக்க வேண்டிய சமூகத்தின் பெயரை 'கல்லாடி' என்றும், 'பண்ணாடி' என்று குறிக்க வேண்டிய சமூகத்தின் சொல்லை இரண்டு சுழியாகப் போட்டு, 'பன்னாடி' என்றும், 'பாண்டி' என்று குறிக்க வேண்டிய சொல்லை 'பண்டி' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நான்கு சொற்களுமே, ஒரேயொரு சமூகம், தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்தைக் குறிக்கக்கூடிய சொல். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பெயர் மட்டும் பிழையாகக் குறிக்கப்பட்டிருக்கிறதே, எங்கே தவறு நடக்கிறது, அதில் ஏதாவது உள் நோக்கம் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, எந்தெந்த நிலைகளில் இந்தத் தவறு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து இவ்வரசு திருத்த வேண்டும்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். இன்னும் 7, 8 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, இந்தப் பெயர்களை எல்லாம் உள்ளடக்கி, தேவேந்திர குல வேளாளர் என்ற ஒரு பொதுப் பெயர் வைக்க வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. அதை நம்முடைய முதல்வர்



அவர்களால்தான் செய்ய முடியும் என்று அந்த மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து நீங்கள் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அந்தப் பெயர் மாற்றத்தைச் செய்தால், இருக்கிற வரைக்கும், அந்தச் சமூகம் நம்முடைய முதல்வரைப் பாராட்டிக் கொண்டிருக்கும், அதைச் செய்ய முன்வர வேண்டும். இந்தச் சமூகத்தினுடைய வரலாற்று உண்மைகளை வெளியிட்டிருக்கக்கூடிய, தஞ்சையைச் சேர்ந்த தேவ ஆசீர்வாதம் அவர்களுடைய அனைத்து நூல்களையும் இவ்வரசு அரசுடைமையாக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, compartmental system of reservation—தொகுப்பு முறை இட ஒதுக்கீடு—வேண்டும். இங்கே அருந்ததியினர் மக்கள் ரொம்பவும் பின்தங்கி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களிலேயே மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் அருந்ததியின மக்கள். எப்படி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே நாம் Most Backward Community—ஐக் கொண்டு வந்தோமோ, அதே மாதிரி among the Scheduled Caste we should say, 'there is a Most Scheduled Caste.' அருந்ததியின மக்கள், மிகவும் பின்தங்கிய நிலைமையிலே, அவர்கள்தான் மனித மலத்தினை அள்ளக்கூடிய இழிநிலையிலே, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தனி இட ஒதுக்கீடு வர வேண்டும்.

அதைப்போல, நேற்று எங்களுடைய டாக்டர் ஐயா நடத்திய மாநாட்டில்கூட, வன்னியர் இன மக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். எனவே, இதற்கெல்லாம் ஒரு தீர்வாக, ஆந்திராவைப் போலத் தொகுப்பு முறை இட ஒதுக்கீட்டை இவ்வரசு கொண்டு வரவேண்டும்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் கழக அரசு பாடுபட்டு வருகிறது. பாட்டாளி மக்கள் கட்சியைப் போல், மேலும், மேலும் பிரிவினைகளை அதிகப்படுத்திக் கொண்டே போக வேண்டும் என்பது எங்கள் கொள்கை அல்ல.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாட்டாளி மக்கள் கட்சி, சாதிப் பிரிவினை பேசுவதாக நினைத்துக்கொள்ளக் கூடாது. ஒரு சமுதாயம், அடித்தட்டிலே உழைக்கக்கூடிய சமுதாயமாக, முன்னேறாத சமுதாயமாக இருக்கிறது. நடைமுறையிலே அதற்காக சாதிவாரியான இட ஒதுக்கீடு இருக்கிறது. இப்படி சாதிவாரியான இட ஒதுக்கீடு இல்லை என்று சொன்னால், அடித்தட்டிலே இருக்கக்கூடிய சமுதாயம் எப்படி மேலே வரும்? அப்படி மேலே வருவதற்காக இட ஒதுக்கீடு கேட்பதிலே என்ன தவறு இருக்கிறது, எல்லா சமுதாய மக்களுக்கும்? தந்தை பெரியார் அவர்கள்கூட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு வருவதை வலியுறுத்தினார்கள். தமிழ் மண்ணிலே, தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. மணி, அந்தப் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடி, சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டம் வாங்கியவர்கள் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அதைப் பெருமையாகச் சொல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அந்தக் கருத்திலே சொல்லவில்லை; மேலும், மேலும் பிரிவினைகளை அதிகப்படுத்திக்கொண்டு போகக் கூடாது என்பதுதான்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, பிரிவினைகளை அதிகப்படுத்துவது நோக்கமல்ல, அடித்தட்டிலே இருக்கக்கூடியவர்களுக்கு முறையான பங்கு போய்ச் சேர வேண்டும். அதுதான் நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு, மூன்று நிமிடங்கள் சேர்த்துக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முடியாது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை, இல்லை, ஒன்றுமே நான் பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போலவே, நம்முடைய முதல்வர் அவர்களிடம் நான் கேட்க விரும்புவது,



பட்டியலின மக்களை நீங்கள் பாதுகாக்க, 'போபால் பிரகடனம்' போல, போபால் முதல்வர் திக்விஜய் சிங் வெளியிட்டதுபோல ஒரு துணிந்த பிரகடனத்தை வெளியிட நீங்கள் முன்வர வேண்டும். காரணம், அருப்புக்கோட்டையிலே தென்பாலை என்கிற கிராமத்திலே இரவு வேலை முடித்துவிட்டு வந்த பட்டியலின சமுதாயத்தைச் சேர்ந்த மாரியம்மாள் என்கிற பெண் 4 பேரால் கற்பழிக்கப்பட்டாள். ஆனால், உண்மையான 2 குற்றவாளிகள் வெளியே இருக்கிறார்கள். 2 பேர் கைது செய்யப்படவில்லை என்று அந்த மக்கள் கருதுகிறார்கள். அதேபோல, முதல்வர் அவர்களுடைய, அம்மா அவர்களுடைய தொகுதியிலே, ஆண்டிப்பட்டியிலே இரவு 6-00 மணிக்கு கல்யாணி இராமமூர்த்தி என்று சொல்லக்கூடிய ஒரு பட்டியலின சமுதாயத்திற்காகப் பாடுபடக் கூடிய ஒரு இளைஞர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், விபத்து என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காரணம், அந்த இளைஞர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதையெல்லாம் ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது. திரு. முருகவேல் ராஜன், பொதுவாக, ஆதாரம் இல்லாமல் இதையெல்லாம் சொல்லக் கூடாது.

**திரு. க. முருகவேல் ராஜன்:** முழுமையான ஆதாரங்கள் இருக்கின்றன. நான் அதை முதல்வரிடம் கொடுக்க இருக்கிறேன். அதன்மீது ஒரு C.B.,C.I.D., enquiry...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை முதல்வரிடத்தில் கொடுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அதைப்போல.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கோதண்டராமன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். தயவுசெய்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். பல

இடங்களில் இன்றைக்கு இரட்டைக் குவளை முறை நடைமுறையில் இருக்கிறது; திண்ணியம், கவுண்டன்பட்டியில்--இந்த மாதிரிப் பிரச்சினைகள் தமிழகத்தில் இருக்கின்றன. இதற்கு எல்லாம் ஒரு தீர்வு வர வேண்டுமென்றால், முதல்வர் அவர்கள்....

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம் பொதுவாக, ஆதாரம் இல்லாமல் இப்படி அவையில் பேசுவது முறையல்ல. ஏதாவது ஆதாரம் இருந்தால் முறையாகப் பேரவைத் தலைவரிடம் கொடுத்து, அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அவர் எதற்கு ஆதாரம் வேண்டுமென்று கேட்கிறார் என்பதை முதலிலே தெளிவாகச் சொல்ல வேண்டும். நான் பொத்தாம் பொதுவாகப் பேசுகிற ஆள் இல்லை.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரட்டைக் குவளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரட்டைக் குவளை முறை.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** இரட்டைக் குவளை--tumbler--வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார். அதை ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேடிக்கை என்னவென்று சொன்னால், நம்முடைய அமைச்சர் அவர்களை நேரில் பார்த்து, முதல்வருடைய தொகுதியில் இரட்டைக் குவளை முறை உள்ள 50 கிராமங்கள் இருக்கின்றன என்று ஒரு லிஸ்ட் கொடுத்திருக்கிறேன். அதில் இதுவரை என்ன நடவடிக்கை என்று அவர் சொல்வாரா? ஆதாரத்தோடு கொடுத்ததன்மீது என்ன நடவடிக்கை என்று மாண்புமிகு அமைச்சர் சொல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு வெள்ளைக் காகிதத்தில், இத்தனை ஊர்களில் நடக்கிறது என்று சொன்னால், அது முறையாகாது.



அப்படி ஒன்றும் இல்லை. நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டிப்பட்டி தொகுதியில் இப்பொழுது சாதி சமயமற்ற முறையில் எல்லா மக்களும் சிறப்போடு வாழ்கிறார்கள். குறிப்பாக, நம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கொடுக்கப்படுகிற திட்டங்களை எல்லாம், அமோகமாக ஆதரவு கொடுத்து வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்வதை நான் வரவேற்கிறேன். இன்னும் கீரிப்பட்டி, நாட்டார்மங்கலத்தில் தேர்தல் நடத்த முடியாமலேயே இருக்கிறது. ரொம்பக் கொடுமை அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது குறித்து இன்றைக்கு மசோதா வருகிறது. திரு. முருகவேல் ராஜன், சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** முடித்துவிடுகிறேன், பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நிமிடத்திலே, கடைசியாக, நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணன் பழனிசாமி அவர்கள் சொன்ன விஷயத்தைத்தான் சொல்ல வருகிறேன். நம்முடைய முதல்வர் அம்மாவிடம் ஒரு சிறப்புக் குணம் இருக்கிறது. என்னவென்றால், தான் சில விஷயங்களை நிறைவேற்ற வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால், அதில் உறுதியாகவும், இறுதியாகவும் நின்று நிறைவேற்றக்கூடியவர் என்று நாட்டு மக்கள் உணர்ந்துகொள்ளக்கூடிய வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; பாராட்டுகிறோம். ஒரே ஒரு வார்த்தை, கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார்மங்கலத்திலே நான் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்தியே தீருவேன், அதை யார் தடுத்தாலும் நடத்தியே தீருவேன், அதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்று முதல்வர் ஓர் உறுதியைக் கொடுத்தால், அது நிச்சயமாக நடந்துவிடும். 3 ஆண்டு காலமாக 9 முறை தேர்தலைத் தள்ளி வைத்து விட்டு, ஒவ்வொரு கூட்டத்திலேயும் நாங்களும் கீரிப்பட்டி, பாப்பாபட்டி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு அந்தச் சட்டமுன்வடிவு வருகிறது. அதனாலேதான் உங்களைச் சீக்கிரம் முடிக்கச் சொல்கிறேன். திரு. ஜி. கோதண்டராமன்.

•**திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குன்றாத நெஞ்சுறுதி, குறையாத கொள்கை உள்ளம் கொண்ட மாதர் குல மாணிக்கமே! அன்னதானம வழங்கிய எங்கள் அன்னையே! நாட்டிற்கு உணவு வழங்கிய விவசாயிகளின் வீட்டிற்கு உணவு வழங்கிய தாயே! கல்வி ஞானம் வளர்க்கும் நவீன சரஸ்வதியே! தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தாங்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். சில கட்சித் தலைவர்கள், ஜாதிப் பெயரைச் சொல்லி தங்களின் குடும்ப ஆதாயத்திற்காகவும், கட்சியின் ஆதாயத்திற்காகவும் செயல்பட்டுக்கொண்டு வருகின்றார்கள். ஆனால், எங்கள் அம்மா அவர்களோ, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் ஆதாயத்திற்காகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆதிதிராவிட மக்களைப் பார்த்து, நான் உங்கள் வீட்டு சம்பந்தி என்பார் ஒருவர். ஆனால், அந்த மக்களின் நலனுக்காக ஒதுக்கிய நிதியை, சமத்துவபுரத்திற்குச் செலவு செய்து, அந்த மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் இருந்தவர் அவர். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களோ, அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்கும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் நிதியினை ஒதுக்கி திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, அம்மா அவர்களை ஆன்றோர்களும், சான்றோர்களும் பாராட்டுகின்றார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக ரூ. 439.05 கோடி ஒதுக்கீடு செய்து திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். இதில் சுமார் 70 சதவிகித நிதியைக் கல்வித் திட்டத்திற்குச் செலவிட வழிவகை செய்துள்ளார்கள். ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரும் வகையில், கடன் படிப்பு உதவித் தொகைக்கு (loan scholarship) பதிலாக படிப்புதவித் தொகை மானியத் திட்டம் கொண்டு வந்து, அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றி வைத்துள்ளார் மாண்புமிகு அம்மா அவர்கள். சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் பள்ளிக் கல்விக்காக ரூ. 18.28 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள். 150 புதிய மாணவர் இல்லங்கள் கட்டித் தருவதற்காக இந்த ஆண்டு ரூ. 47.25 கோடி ஒதுக்கி சாதனை படைத்துள்ளார்கள். கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிடர், பழங்குடி இனத்தைச்



சேர்ந்த ஏழை மாணவியரின் கல்வி முன்னேற்றத்தின்பால் அக்கறை கொண்டுள்ள எங்கள் அம்மா அவர்கள், 11 ஆம் வகுப்பில் சேரும் மாணவிகளுக்கு மிதிவண்டி வாங்கிக் கொடுக்க இந்த ஆண்டும் ரூ. 7.49 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அந்த மாணவர்களின் எழுத்தறிவை மேம்படுத்த சிறப்பு ஊக்கத் திட்டத்தின்கீழ் ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை பல தரப்பு மக்களும் வரவேற்கிறார்கள். ஆதிதிராவிடர் மாணவியர்களின் கல்வியில் அக்கறை கொண்டுள்ள அம்மா அவர்கள் முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசமாக்கி இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

ஆதிதிராவிட மக்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்க உதவும் வகையில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தில் (தாட்கோ) வறுமை ஒழிப்பு செயல் திட்டத்தின்கீழ் 1.59 இலட்சம் பயனாளிகள் பயன்பெறத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

தமிழகத்தில் தீண்டாமைப் பழக்கத்தை ஒழிக்கவும், மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுக்கவும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 1989 ஆகியவை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மிகச் சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன. இதற்கென, கூடுதல் காவல் துறை இயக்குனர் அவர்கள் தலைமையின்கீழ் காவல் துறைத் துணைத் தலைவர் மேற்பார்வையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இதன்மூலம், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குப் பல சிறப்புத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். புதியதாக 100 மாணவர் இல்லங்களைக் கட்ட ரூ. 31.50 கோடி நிதி ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அதுமட்டுமல்லாது, 48 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வசதி செய்து தரப்படும் என்ற அறிவிப்பும் சாலச் சிறந்ததாகும்.

9, 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகளுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்குப் பாடப் புத்தகங்கள்

இலவசமாக வழங்கப்படுகின்றன. மாணவர்கள் பள்ளிக்குச் செலுத்தவேண்டிய தனிக் கட்டணத்தை—Special fees—கல்வி நிலையங்களுக்கு அரசு நேரடியாக அளிக்கிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்விற்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும், மாணவர்கள் சார்பில் தேர்வுகள் துறை இயக்குனர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதுபோன்று பல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்துகிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் பெரும்பாலானோருக்குச் சொந்தமாகக் குடியிருக்க வீடுகள் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் வீட்டுமனைகளுக்கு ரூ. 75.51 இலட்சமும், அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ. 100.01 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், அனைத்துப் பிரிவு மக்களின் வாழ்க்கை, கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து செயல்படும் உன்னதமான தலைவியாக விளங்குகிறார்கள். ஆகவே, அம்மா அவர்களை அனைத்துத் தாப்பு மக்களும் பாராட்டுகிறார்கள்.

சட்டப் பேரவையில் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தினந்தோறும் மாண்புமிகு அம்மா அரசுமீது தவறான குற்றச்சாட்டினைக் கூறி வந்தார்கள். அவற்றிற்கு எல்லாம் எங்கள் அம்மா அவர்கள் சரியான பதிலை உரிய முறையில் அளித்திருக்கிறார்கள். அதனை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புரிந்தும், புரியாததுபோல் நடித்து, தாங்கிக்கொள்ள முடியாமல் சட்டமன்றத்தை விட்டு வெளியேறி, ஓட்டுப் போட்ட மக்களுக்குத் துரோகம் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா! எனது தொகுதியின் சார்பாகச் சில கோரிக்கைகளை இங்கே வைக்கின்றேன். மாவட்டத் தலைநகரான விழுப்புரம் செல்லும், விழுப்புரம்-திருக்கோவிலூர் சாலையில், சென்னகுணம் கிராமத்திலிருந்து விழுப்புரம் வரையில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. ஆகவே, கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்கள் சாலையைச் சீரமைத்துக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மக்களின் நெடுநாளைய கோரிக்கையான கொடுக்கப்பட்டு—வசந்த கிருஷ்ணாபுரம் செல்லும் சாலைக்கிடையில் உள்ள துறிஞ்சல் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.



தமிழக விவசாயிகள்மீது அக்கறை கொண்டுள்ள அம்மா அவர்கள் நந்தன் கால்வாயைச் சீரமைத்து விவசாயிகள் பயனடையச் செய்ய வேண்டுகிறேன். நந்தன் கால்வாய் என்பது திருவண்ணாமலை மாவட்டம், துறிஞ்சல் ஆற்றில், கீரனூர் அணைக்கட்டில் இருந்து பிரிந்து, விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, பனமலை ஏரி வரையில் 37 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த நந்தன் கால்வாயினால் திருவண்ணாமலை மாவட்டத்தில் 14 ஏரிகள், செஞ்சி வட்டத்தில் 10 ஏரிகள், விழுப்புரம் வட்டத்தில் 12 ஏரிகள், ஆக 36 ஏரிகள், மூலம் மொத்தம் 6,240.70 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில் பனமலை உரிசா ஏரி மட்டும் 1,079.24 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. ரூ. 128.35 இலட்சம் மதிப்பீட்டில் 1978 ஆம் ஆண்டு 30 கிலோ மீட்டர் வாய்க்கால் வெட்டி முடிக்கப்பட்டது. 1978-ல் முடிவடைந்த வாய்க்கால்; 1985 வரை துறிஞ்சல் ஆற்றில் தண்ணீர் வந்தபோதெல்லாம், சில நாட்கள் நந்தன் கால்வாயில் தண்ணீர் வந்தது. பின், வறட்சி ஆண்டாகப் போனதால், தண்ணீர் வரவில்லை. மேலும், மழை பெய்து துறிஞ்சல் ஆற்றில் தண்ணீர் வந்தாலும், பனமலை ஏரி வரை வாய்க்கால் இல்லை. வாய்க்கால் தூர்ந்தும், செடிகள், முட்புதர்கள் வளர்ந்தும் உள்ளன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் நந்தன் கால்வாயைத் தூர் வாரிக் கொடுத்தால் திருவண்ணாமலை, செஞ்சி வட்ட விவசாயிகளும், முகையூர் தொகுதி பனமலை விவசாயிகளும் பயனடைவார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள்—கிராமப்புற மக்களின் சுகாதாரத்தில் அக்கறை கொண்டுள்ள அம்மா அவர்கள்—மணலூர்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் R.C.H. மற்றும் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் பிரசவ வார்டு, ஆய்வுக்கூடம், சுற்றுப்புறச் சுவர் ஆகியவை அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மணலூர்பேட்டையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 24 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் சிறிய இடத்தில் இயங்கி வருகிறது. மழைக் காலங்களில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்வதற்குக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் விற்பனைக் கூடம் ஒன்று அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

மணலூர்பேட்டையில் அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்றும், அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளன. கிராமங்களில் இருந்து வந்து படித்துவிட்டுப் போகும் ஏழை மாணவிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பெண்கள் கல்வியில் கவனம் செலுத்தும் அம்மா அவர்கள், மணலூர்பேட்டையில் மாணவிகள் இல்லம் ஒன்று அமைத்துத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூரில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் இலவச சட்ட ஆலோசனைக் குழு அலுவலகம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

திருக்கோவிலூரில் இருக்கும் அருள்மிகு உலகளந்த பெருமாள் கோயில், வாலாற்றுப் பிரசித்தி பெற்ற கோயிலாகும். ஏற்கெனவே இந்த ஆலயத்தில் யானையும், யானைப் பாகனும் இருந்தார்கள். இப்போது இல்லை. ஆகவே, கொடை உள்ளம் கொண்ட அம்மா அவர்கள், பெண் யானைக் குட்டி ஒன்றினை இந்து சமய அறநிலையத் துறை மூலம் மேற்படி கோயிலுக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டுமாய்த் தங்களின் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்காரணை கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை அரசினர் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரக் கோரி கிராமத்துப் பொது மக்கள், அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 1,00,000/- மட்டும் கட்டியுள்ளார்கள். உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு வேண்டிய அனைத்துத் தகுதிகளும் உள்ளன. கிராமக் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமாய்த் தங்களின் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

முகையூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. மக்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், மணம்பூண்டியில் அரசு மகளிர் கல்லூரி ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்த் தங்களின் பாதம் தொட்டுக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை வாவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.



**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மலைப் பகுதிகளில் குடிப்பதற்குத் தண்ணீர்
கிடைக்காதபோது யானைகள் கூட்டமாகப் பழங்குடி மக்கள்
பகுதிக்கு வந்து துவம்சம் செய்கின்றன. பழங்குடி மக்களை வன
விலங்குகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். ஈரோடு, குத்தியாலந்தூர்
மலை, தருமபுரி அஞ்செட்டி மலைப் பகுதிகளில் இவ்வாறு
நடந்திருக்கின்றன.

பழங்குடி மக்கள் உற்பத்தி செய்யக்கூடிய தேன், புளி, கடுக்காய்
பொருள்களைக் கொள்முதல் செய்ய L.A.M.P. Society-க்கு அதிக
நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். ரேஷன் கடைகளிலும், அரசினர்
மாணவர் விடுதிகளிலும் கட்டாயக் கொள்முதல் செய்து, பழங்குடி
மக்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நியாய விலை
கிடைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். மத்திய அரசு 2001-
ல் கொண்டு வந்த, வன நிலங்களிலிருந்து மக்களை வெளியேற்றும்
நடவடிக்கைக்கு மாநில அரசு இணங்க வேண்டாம்.

திண்டுக்கல், சிறுமலை, கொடைக்கானல், வால்பாறை போன்ற
மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய பழங்குடி மக்களுக்கு,
நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுத்துப் பாதுகாக்க, கொள்கை ரீதியான
நடவடிக்கையை எடுக்க வேண்டுகிறேன். பழங்குடியின மக்கள்
சான்றிதழ் 15 தினங்களுக்குள் வழங்க, உச்ச நீதிமன்றத்தினுடைய
விதியைப் பின்பற்றி வழங்க வேண்டும். பழங்குடி ஆராய்ச்சி மைய
இயக்குநர் ஜக்கா பார்த்தசாரதி கமிஷன் ஆய்வறிக்கை இன்னும்
வெளியிடப்படவில்லை. வெளியிடப்பட வேண்டும்.

அதேபோன்று முகவரி இல்லா மொட்டை
பெட்டிஷன்களையொட்டி பாரதப் பிரதமர் அலுவலகத்திலிருந்து
வரக்கூடிய புகார் மனுக்கள் புறக்கணிக்கப்பட வேண்டும். 'அதே
சமயத்தில், தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர்களுடைய சான்றிதழ்கள்
பெற்று, பொய்யாக வேலை வாங்கக்கூடியவர்களையும் கண்காணிக்க
வேண்டும். வாச்சாத்தி வழக்கில் இருக்கக்கூடிய சாட்சியினருக்கு,
நீதிமன்றத்திற்கு வருகிறபோது பயணப்படி வழங்க வேண்டும்.

ஆதியன் என்று சொல்லக்கூடிய பூம்பூம் மாட்டு இனத்தைச்
சேர்ந்தவர்கள் தஞ்சையில், திருவாரூரில் இருக்கிறார்கள். அவர்களுக்கு
S.T. சான்றிதழ் வழங்க வேண்டும். பின்னடைவுப் பணியிடங்கள்
நிரப்பப்படவில்லை. அது குறித்த வெள்ளை அறிக்கை வைக்கப்பட
வேண்டும். அதேபோன்று தீண்டாமை என்பது, வர்ணாஸ்ரம
சித்தாந்தத்தின் காரணமாக இந்திய நாடு முழுவதும் இருக்கக்கூடிய
ஒரு படிமானம். அது 5,000 ஆண்டு காலமாக இருந்து கொண்டிருக்கிறது.
புதை உடனடியாக ஒழிக்க முடியாது என்பது எல்லோரும் அறிந்தது.

சில மாநிலங்களில் கூடுதலாக இருக்கிறது. தமிழ் மாநிலத்தில் குறைவாக இருந்தாலும், இங்கிருந்து பார்க்கிறபோது அது சற்றுக் கூடுதலாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதுபோன்ற பிரச்சினையில் உறுதியான நடவடிக்கைக்குத் தமிழக அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இரட்டைக் குவளை முறை என்பது இருக்கிறது. காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்து இருக்கிறோம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் புகார் கொடுத்திருக்கிறோம். ஆனால் டீக்கடையின்மீது விசாரணை நடத்திவிட்டு, இல்லை என்றே சொல்கிறார்கள். கோயில்களில் இன்றைக்கும் கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே செல்ல முடியவில்லை.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரட்டைக் குவளை முறை பற்றிச் சொல்கிறார்கள் எந்த டீக்கடையில் உள்ளதென்றும், எப்போது நீங்கள் புகார் கொடுத்தீர்கள் என்பதையும் ஆதாரத்தோடு சொன்னால, தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, இதுவரையில் எந்த இடத்திலும் இரட்டைக் குவளை முறை என்ற பிரச்சினைக்கு இடமில்லை என்ற அளவுக்குத்தான் இப்போது தமிழ்நாட்டில் நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எந்த ஆலயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே செல்வதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்பதைச் சொன்னால், அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, அங்கே தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டிற்காக நான் சொல்லவில்லை. இதுபோன்ற விஷயங்களில் எங்களைப் போன்ற அமைப்புகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும், தீர விசாரித்து, தீர்க்கப்படவேண்டிய நடவடிக்கையை இங்கு கொண்டு வந்து பேச வைக்கக்கூடிய அளவிற்குத்தான் அந்தத் துறை இருக்கிறது. ஆகவே, இந்த ஆதாரங்களை நீங்கள் அந்தத்



துறையினுடைய அதிகாரிகளைக் கேட்க வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மாணவிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சைக்கிள் கொடுத்தார்கள். ஆனால், செல்ல முடியவில்லை. R.D.O. அவர்கள் தலைமையில் ஓர் ஊர்வலமே நடத்தி, முன்மாதிரிக்குத் திட்டமிட்டார்கள். அது ஒரு நடவடிக்கை. அதைத் தவிர, திடீரென்று எல்லோரும் போய்விடவெல்லாம் முடியாது. அது சாத்தியமும் கிடையாது. அந்தப் பேரளி கிராமம், பேரறிஞர் அண்ணா அவர்களே சென்று வந்த ஒரு கிராமம். மேல் சாதியினர் 3,000 பேர் கூடி நின்று எங்களை உள்ளே விட மறுத்தார்கள். எங்கள் சாதிப் பழக்கம்; நாங்கள் விடமாட்டோம் என்றே சொன்னார்கள். திரும்பி வந்தோம். ஆகவே, அங்கு இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மக்கள், மேல் சாதியினரை கருத்து ரீதியாக மாற்றுவதற்கு அந்தத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் நான் சொல்கின்றேன். ஆகவே, என்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**•மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவது, வரகூர் தொகுதி, பேரளி என்கிற கிராமம். அந்தக் கிராமத்திலே மகளிர் சுய உதவிக் குழு இருக்கிறது. ஆனால், வேறு ஒரு ஊரிலிருந்து அங்கு விருந்தாளியாக வந்த ஒரு பெண், அந்த ஊரிலேயிருக்கிற ஒரு பெண்ணோடு போய் ஒரு கடையிலே, ஏதோ ஒரு பிரச்சினையை இவர்களாக உருவாக்கிவிட்டு, அங்கே சாதிப் பிரச்சினை இருப்பதாக அங்கிருக்கிற ஒரு அமைப்பை உருவாக்கி, அந்த சுய உதவிக் குழுவிலே இருக்கிற மக்கள் வரமாட்டேன் என்கிறார்கள். அரசுத் துறையைச் சேர்ந்தவர்களும் நடவடிக்கை எடுத்து, Peace Committee போட்டு எல்லாம், எங்களிடம் எந்தவிதமான சாதி வித்தியாசமும் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இவர்கள் வந்து போலீஸ் துறையிடம், நாங்கள் வந்ததே வந்துவிட்டோம், எங்களை ஊருக்குள்ளே விடுங்கள் என்று கேட்கிறபொழுதுதான், அப்படி நீங்கள் ஊருக்குள்ளே போவதற்கு நாங்கள் அனுமதி கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த ஊரிலே இருப்பவர்கள், சாதிப் பிரச்சினை இல்லையே, நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம்; நீங்கள் ஏன் வந்து பிரச்சினை செய்கிறீர்கள் என்று சொன்னதுதான் உண்மையே தவிர, வேறு அங்கே எந்தவிதமான சாதி வித்தியாசமும் இல்லை என்பதை இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மக்கள் ஒற்றுமைதான் முக்கியம் என்று வலியுறுத்துகின்றேன். அதை ஒரு கலவரத்தின் மூலமாகவோ, பிரச்சினைகளின் மூலமாகவோ தீர்க்க முடியாது. அந்த மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தத் தீண்டாமையும் அகற்றப்பட வேண்டும். அதைத்தான் தந்தை பெரியார் சொல்லியிருக்கிறார். ஆகவே, ஒரு கருத்துப் பிரச்சாரம் வேண்டும். நோயாளி வருகிறபோது, நோயாளி அனுமதித்தால்தான், நோய் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க முடியும். ஆகவே, பிரச்சினை இருக்கிறது. சென்ற தி.மு.க. ஆட்சியிலேகூட, திருக்குவளையில்கூட இரு குவளை இருக்கிறது என்று ஒரு விவாதம் வந்து, ஓராண்டை தீண்டாமை ஒழிப்பு ஆண்டாகக்கூட அறிவித்தார்கள். அப்படி அறிவிக்க வேண்டிய நிலைமை உருவானது; தென் மாவட்டங்களில் சாதிக் கலவரம். ஆகவே, இது இருக்கிறது. இருப்பதை எப்படித் தவிர்ப்பது என்பதிலே இந்தத் துறை இன்னமும் கவனம் செலுத்த வேண்டும் என்ற முறையிலே நான் சொல்கிறேன். மக்கள் ஒற்றுமையைத்தான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. அதன் அடிப்படையில் தீண்டாமையும் அகற்றப்பட வேண்டும். அதில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறேன். இதற்கு உதாரணங்களை நான் வைத்திருக்கிறேன். இப்போது சொல்லி, உடனடித் தீர்வுக்கு வர வேண்டியதில்லை. நான் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சமர்ப்பிக்கிறேன். அந்தக் கிராமங்களில் நீங்களே ஆய்வு மேற்கொள்ளுங்கள். அதைத் தீர்ப்பதற்கு நாங்களும் உங்களுக்கு உறுதுணையாக நிச்சயமாக இருப்போம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு கூத்திரம்பாக்கம்; மாவட்ட கலெக்டரிடம் அனுமதி பெற்று மீன் பிடித்தார்கள். ஆனால், எவ்வளவு பெரிய தாக்குதல்? தாக்குதல் நிகழ்த்தப்பட்ட அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்கியது. அது வரவேற்பிற்குரியது, நன்றி. ஆனால், தாக்குதல் நிகழ்த்திய குற்றவாளிகள்மீது ஒரு நடவடிக்கையும் இல்லை. அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை செய்யப்படவில்லை. அப்பொழுது, தாழ்த்தப்பட்ட மக்கள்மீது யார் வேண்டுமானாலும் வன்முறை நிகழ்த்தலாம் என்ற ஒரு கருத்திற்குப் போய்விடும். ஆகவே, அந்தக் கூத்திரம்பாக்கம் கிராமமே, தீண்டாமை எந்த வடிவத்தில் இருக்கிறது, தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு



முன்னுதாரணமாக இருந்தது. இதற்கும் நான் அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால், அந்தத் தாக்குதல் நிகழ்த்தியவர்கள்மீது உறுதியான நடவடிக்கை தேவை என்பதுதான்.

பிற்பகல் 12-20

இராமநாதபுரம் மாவட்டத்தில், பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் கருப்பி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை ஆறு நாட்களாக மாலை 5 மணிக்கு மேல் காவல் நிலையத்திலேயே வைத்து, அவர் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. போலீஸ் நிலையத்திற்குப் பின்புறம், wireless உச்சியிலேயே ஏறி, ஒரு தாழ்த்தப்பட்ட பெண், அதுவும் புதிய நைலான் கயிறை வாங்கித் தற்கொலை செய்து கொள்ள முடியுமா? ஆகவே, ஆறு நாட்கள் அடைத்து வைக்கப்பட்டதே சட்டவிரோதமானது. ஒரு தாழ்த்தப்பட்ட பெண் இறந்திருக்கிறாள். சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். நல்ல நடவடிக்கை. ஆனால் அவர்கள் கைது செய்யப்படவில்லை. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை இதன்மீதும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** உறுதியான நடவடிக்கை எடுத்தால்தான், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசின்மீது ஒரு நம்பிக்கை வரும். இதுபோன்ற பிரச்சினைகள் வந்தால், அரசு விடாது, நிர்வாகம் விடாது என்ற ஒரு பய உணர்வு ஏற்படும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு என்பது கிடைக்கும்.

இதுதவிர, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வரலாம். ஆனால், மற்ற மாநில மக்கள் நம்முடைய மாநிலத்தை எப்படிப் பார்ப்பார்கள்? ஜம்மு-காஷ்மீரில் தேர்தல் நடந்துவிட்டது. சட்டம்-ஒழுங்கு கெட்டிருந்த, தேர்தல் ஆணையமே நடத்த முடியாது என்று புறக்கணித்த குஜராத் மாநிலத்திலே தேர்தல் நடந்துவிட்டது. நம்முடைய மாநிலத்தில் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் தேர்தல் நடத்தாமல் இப்படியே போனால், அதிகாரிகளுக்கு அதற்கான உரிமையைக் கொடுத்துக் கொண்டிருந்தால், அந்த மாநில மக்களோ, ஏன், மத்திய பி.ஜே.பி. அரசோ, தமிழகத்தில் ஏதோ சட்டம்—ஒழுங்கு கெட்டு விட்டது என்ற ஒரு சிந்தனைக்குப் போக மாட்டார்களா அல்லது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். பாலபாரதி, இன்றைக்கு அந்தச் சட்டமுன்வடிவு வருகிறது.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய 4 சிற்றூராட்சித் தலைவர்கள் பதவிகளுக்கும், உறுப்பினர்கள் பதவிகளுக்கும் தேர்தலுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அங்கு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட நிருவாகத்தைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் கோட்டாட்சியர், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர், வட்டாட்சியர் ஆகியவர்களுடைய கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த யாரும் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு முன்வரவில்லையென்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பாலபாரதி அவர்கள், இரண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு, இரண்டு ஊர்களில் தேர்தல் நடத்த முடியவில்லை என்பதைப் பெரிதுபடுத்தி இங்கே பேசுகின்றார்கள். இந்த இரண்டு ஊர்களில் தேர்தல் நடத்துவதற்கு இந்த அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை அளிக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கும் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காளத்தில் என்ன நிலைமை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவாரா என்பது எனக்குத் தெரியவில்லை. அங்கே மே மாதம் 11 ஆம் தேதி உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள், பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அங்கே 58,357 தொகுதிகளில்—அதாவது உள்ளாட்சி அமைப்புகள் நடைபெற வேண்டிய தொகுதிகளில்—11 ஆயிரம் தொகுதிகளில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேட்புமனுவைக்கூடத் தாக்கல் செய்ய முடியவில்லை. அதற்குக் காரணம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அவிழ்த்துவிட்டிருக்கிற, கட்டவிழ்த்துவிட்டிருக்கிற அடக்குமுறை, அராஜகம் என்பதைப் பல பத்திரிகைகள் கூறுகின்றன. தேசிய பத்திரிகைகள் கூறுகின்றன. இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அறிவாரா என்பது எனக்குத் தெரியவில்லை.



**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே...

**திரு. எச். ராஜா:** தலைவர் அவர்களே...

**திரு. என். நன்மாறன்:** தலைவர் அவர்களே...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, ஹேமச்சந்திரன்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இப்படிப் பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளை வைத்துக் கொண்டு, ஒரு அரசின் மேலே அவமானம் ஏற்படுத்துகின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளிலே வந்திருக்கின்ற தகவலைத்தான் சொல்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மம்தா பானர்ஜி என்ற ஒரு அரசியல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பெயர் எல்லாம் குறிப்பிட வேண்டாம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** It is a serious allegation made out by...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னது, 'Statesman' பத்திரிகையில் வந்தது ஆகும். இப்போது 'The Telegraph' என்னும் பத்திரிகையில் வந்த செய்தியை வாசிக்கின்றேன். மேற்கு வங்காள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் முதலமைச்சரே தனது தொண்டர்களுக்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பயமின்றி, அச்சுறுத்தலின்றி வேட்புமனுத் தாக்கல் செய்ய நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவாரா என்று தெரியவில்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** அது அங்கேயிருக்கின்ற ஜனநாயகம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள்.... (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், 'The Telegraph' பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய அந்தத் தகவலை ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) பாலபாரதி, பேசி முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைகளைச் சொல்கிறார். ஆனால், எதிர்க்கட்சிகள் பல நோக்கங்களில் சொல்கிறபோது, பத்திரிகைகளில் வருவது எல்லாம் பொய்ச் செய்திகள் என்று சொல்கிறார்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது தெரிவித்த கருத்தை, எந்தப் பத்திரிகை வெளியிட்டு இருக்கிறதோ, அந்தப் பத்திரிகைச் செய்தியின் நகலை ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஆதாரமாகக் கொடுத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**THIRU J. HEMACHANDRAN:** My submission is, it is a report published by a newspaper on the basis of the allegation made by Tmt. Mamata Banerjee against the Government.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ஹேமச்சந்திரன், மேற்கு வங்காளத்தினுடைய முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் என்பதை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேற்கு வங்காளத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கட்சித் தொண்டர்களுக்கு.....(குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் தெரிவித்த தகவலில் திருமதி மம்தா பேனர்ஜி சம்பந்தப்படவே இல்லை. இந்தச் செய்தியில், மேற்கு வங்காள முதலமைச்சரின் பெயர்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவரே தனது கட்சித் தொண்டர்களுக்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்களை வேட்புமனுத்



தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும்; அவர்களை அச்சுறுத்தக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**THIRU J. HEMACHANDRAN:** It is an allegation... (Interruption).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, பேசுங்கள்... (குறுக்கீடு)

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, Since an allegation has been made out against the Communist Marxist Party, and its followers, the Hon. Chief Minister of West Bengal has given an open appeal.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஹேமச்சந்திரன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.... (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், ஹேமச்சந்திரன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு பொறுப்புள்ள பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய ஒரு தகவலை, அதிலும், மேற்கு வங்காளத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய கட்சித் தொண்டர்களுக்கு விடுத்திருக்கிற வேண்டுகோளை அடிப்படையாக வைத்து இந்தக் கருத்தைச் சொல்கிறார்கள். பாலபாரதி, பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாநில முதலமைச்சர் எவ்வளவு பெருந்தன்மையாகச் சொல்லியிருக்கிறார்! தன்னுடைய கட்சியினுடைய தலைவர்களே தவறு செய்தாலும், உறுப்பினர்கள் தவறு செய்தாலும், தட்டிக் கேட்கக்கூடிய ஒரு கட்சி என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகியிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. ஜனநாயகத்தில் இருக்கின்ற சுதந்திரத்தைப் பற்றி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் பேசுவதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. மேற்கு வங்காளத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்தல் நடைபெற வேண்டிய 10 ஆயிரம் தொகுதிகளில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்யவே அனுமதிக்கப்படாததால், ஆளுங்கட்சியினர் uncontested-ஆக அங்கே வெற்றி பெற்றிருக்கிறார்கள். இப்படி ஒரு முன்மாதிரி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை நடைபெற்றதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

[2003 ஏப்ரல் 22

**திரு. ஜி. பழனிசாமி:** Point of order மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அந்த மாநிலத்திலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவார்கள். இந்த மாநிலத்தில் நடக்கின்ற சம்பவத்திற்கு நாங்கள் கேள்வி கேட்கிறோம். இங்கேதான் பதில் சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, உலகம் பூராவும், அங்கே தேர்தல் நடத்தாமல் இருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை, திரு. பழனிசாமி. உட்காருங்கள், சொல்கிறேன். திரு பழனிசாமி, பாலபாரதி பேசுகிறபோது, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு பிரச்சினை இல்லை என்று பேசினார்கள். பாலபாரதி அவர்கள் பேசுகிறபோது, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு பிரச்சினை இல்லை; பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி மாதிரி பிரச்சினை இல்லை என்று சொன்னார்கள், அதற்குத்தான் முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். நீங்கள் பேசி முடியுங்கள், பாலபாரதி...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி பேசத் துவங்கும்போதே, குஜராத்தில் தேர்தல்கள் நடைபெற்றன; ஜம்மு-காஷ்மீரில் தேர்தல்கள் நடைபெற்றன; அப்படி இருக்கும்போது, இங்கே இரண்டு உள்ளாட்சிகளுக்கு நடத்த முடியவில்லையா என்று கேட்டாரே, அதற்குத்தான் நான் பதில் அளித்தேன். *(குறுக்கீடுகள்)*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அரசின்மீது உள்ள அக்கறையின் காரணமாகத்தான் சொல்கிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, பேசி முடியுங்கள். உங்களுடைய அக்கறைக்கு நன்றி. திரு. ஏ.எஸ். கண்ணன். *(குறுக்கீடு)*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு , பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று 356-ஐப் பயன்படுத்தமாட்டார்களா? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாப்பாப்பட்டி, கீரிப்பட்டிக்காகவெல்லாம் வராதும்மா!

**செல்வி க. பாலபாரதி:** இல்லை, அமெரிக்கன்...



2003 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஏ.எஸ். கண்ணன், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* கண்ணன் *(குறுக்கீடுகள்)* திரு. ஏ.எஸ். கண்ணன். *(குறுக்கீடுகள்)* பாலபாரதி, பேச்சை நிறைவு செய்யுங்கள்; சரி, ஒரு நிமிடத்தில் நிறைவு செய்யுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ராஜா, உட்காருங்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். பாலபாரதி பேசி முடித்துவிடட்டும்.

*பிற்பகல் 12-30*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, அங்கு தேர்தல் நடத்துவதற்கு சர்வ கட்சிக் குழுக்களையும் இணைத்து அந்த மக்கள் மத்தியில் ஒரு கருத்துப் பிரச்சாரத்தையும் நடத்தி, ஒற்றுமைப்படுத்தி, தேர்தலை நடத்துவதற்கு நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சமி நிலங்களை மீட்டுக் கொடுக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான குடியிருப்புகளில் குடிநீர் வசதி, சாலை வசதி, கடன் வசதி வேண்டும். வேலைவாய்ப்புக்கான நியமனத் தடை ஆணையை நீக்க வேண்டும். அதுபோன்று, தாழ்த்தப்பட்ட பெண்களுக்கான வன்முறைகளின்மீது உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; ***(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)* திரு. ஏ.எஸ். கண்ணன். *(குறுக்கீடுகள்)* திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்திலே சட்டம்-ஒழுங்கு பாதிப்பு, அதாவது constitutional break-down இருக்குமானால், 356 பயன்படுத்தப்பட வேண்டும்; ஆனால் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையைப் பலரும் வைத்து இருக்கிறார்கள். அதாவது, தமிழகத்தில் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியிலே தேர்தல்கள் நடத்துவதற்கான சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதிலே பாரதிய ஜனதா கட்சிக்கு இரு வேறு கருத்துகள் கிடையாது. இங்கு 356 பயன்படுத்தப்பட வேண்டுமென்று சில கட்சிகள் வைத்த கோரிக்கைக்கு எங்களுடைய அகில இந்தியத் தலைவர் திரு. எம். வெங்கையா நாயுடு அவர்கள் மூலம், அதைப்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பயன்படுத்துகின்ற அளவிற்குத் தமிழகத்தில் அரசமைப்புச் சட்டமானது செயல்படுத்த முடியாத சூழ்நிலையில் இல்லை என்பதை ஏற்கெனவே பாரதிய ஜனதா கட்சி தெளிவுபடுத்தி இருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) பாப்பாப்பட்டி, கீரிப்பட்டிக்காக நிச்சயமாக பாரதிய ஜனதா கட்சி அது பயன்படுத்தப்பட வேண்டுமென்று கேட்காது என்பதையும் நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** Speaker Sir, *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*..

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன், உங்களைத்தான் பேச அழைக்கிறேன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பொருளாதாரத்தில் முன்னுக்கு வரவேண்டும் என்றால், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது கல்வி. அந்தக் கல்வி பற்றி இங்கு அறிவிப்புகளில் கடந்த ஆண்டு சுட்டிக்காட்டியதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சோதனைக் கூடங்கள் இல்லை, Computer இல்லை, வகுப்பறைகள் இல்லை, சுற்றுச்சுவர் இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லாத வகையில் சர்வ சிக்ஷா அபியான் நிதி மூலம், திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கடந்த ஆண்டு சொல்லப்பட்டது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர் அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



ஆதிதிராவிட மாணவர்கள் தங்கும் விடுதிகள் 1012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் வாடகைக்கு இருப்பது 574. அவற்றில் புதிதாக 150 கட்டடங்களைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது; வரவேற்கிறோம். அதே நேரத்தில், அந்த விடுதிகளில் தங்குகின்ற மாணவர்களின் அளவு ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயித்தது; அந்த மாணவர்கள் தங்குகின்ற அந்த அளவு நிர்ணயித்ததை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு,...

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உணவுக் கட்டணத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்புதான், விடுதிகளிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்கள் தரமான உணவு சாப்பிட வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அமமா அவர்கள், ஒரு மாணவருககு உணவுக் கட்டணமாகக் கொடுக்கபபட்டு வந்த 225 ரூபாயை 300 ரூபாயாக உயர்த்தி கொடுத்தார்கள். அவ்வாறு கொடுத்த ஒரே முதல்வர் நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி கூறுகிறேன். நான் கூறுவது, மாணவர்கள் சேர்க்கின்ற எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறேன். அநத எண்ணிக்கை அதிகமாக்கப்படாததால், உதாரணத்திற்கு, திருவாரூர் பகுதியிலே இருக்கின்ற திரு.வி.க. கல்லூரியில் அதிகபட்ச தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேருவதற்கு இடம் இல்லாமல், தங்களுடைய படிப்பையே விடுகின்ற நிலைமை இருக்கின்றது. அதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். அதை உயர்த்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அடுத்து, ஆதிதிராவிட மாணவிகளுக்கு வழங்கப்படுகின்ற சைக்கிள் இன்றைக்குப் பயனுள்ளதாக, படிப்பதற்கு ஏதுவாக, அவர்கள் கல்வித் தரம் உயர்வதற்காகச் சிறப்பாக அமைந்து இருக்கிறது என்று கூறுகின்ற அதே நோத்தில், என்னுடைய அனுபவத்தைக்கூட நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் என்னுடைய தொகுதியில் ஒரு திருமணத்திற்குச் சென்று இருந்தேன். அப்போது அந்த ஏழை தாழ்த்தப்பட்ட மணமகளுக்குத் தந்த அந்த சீர்வரிசையையெல்லாம் ஒருபுறத்திலே வைத்திருந்தார்கள். அதை என்னிடம் அந்தப் பெற்றோர்கள் காட்டுகிறபோது நான் அதைச் சென்று கவனித்தேன். அங்கே சீர்வரிசையில் இருந்த ஒரு பொருளை நான் கண்டேன். அதைக் கண்டு, இந்தப் பொருளையுமா தருகிறீர்கள் என்று கேட்டபோது, அந்தத் தாய், தந்தையர் சொன்னார்கள், இந்தப் பொருளையும் என்னுடைய மகள் கேட்கிறாள்; தற்போது தந்திருக்கிற சீர்வரிசை தாய், தந்தையர் தந்தது; ஆனால், ஏற்கெனவே எனக்கு அம்மா தந்த சீதனம் இந்த சைக்கிள், அதையும் நான் நிச்சயமாக எடுத்துச் செல்வேன் என்ற கருத்தை அங்கே கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரையிலும் சரியான கருத்துகளை, நியாயமான சட்ட திட்டங்களை என்றென்றைக்கும் ஆதரிக்கிறோம் என்பதை உதாரணத்திற்காக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும், கடனாக வழங்கப்பட்ட அந்தத் தொகை மானியமாக வழங்கப்படுவதையும் வரவேற்கிறோம். ஆனால் அதே நோத்தில், பட்டதாரி மாணவர்களுக்குக் கிடைக்கின்ற அந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசுத் துறையில் காலியாக உள்ள பதவிகளைப் பூர்த்தி செய்வதற்குத் தடையாக உள்ள அந்தத் தடையாணைகள் நீக்கப்பட்டு, அந்தப் பதவி உயர்வுகளைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பட்டா வழங்குவதில் மிகுந்த சிரமம் இருக்கிறது. அடுத்து, பட்டா வழங்கவில்லை அதிகபட்சமான தாழ்த்தப்பட்ட மக்கள், பட்டா வழங்கவில்லை என்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் இறந்தால் அவர்களுடைய பிணங்களைப் புதைப்பதற்கு சுடுகாட்டுப் பாதை இல்லை என்ற நிலைமையும் இருக்கிறது, பல இடங்களில் அவர்கள் வரப்புகளின்மீதும், பயிர்களின்மீதும் பிணத்தை எடுத்துச் சென்று கொளுத்துவதற்கோ, புதைப்பதற்கோ சிரமப்படுகிற ஒரு மோசமான நிலை இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய அருமைத் தோழி பாலபாரதி அவர்கள் குறிப்பிடுகிறபோது, தீண்டாமை இருக்கிறது என்று நாங்கள் சுட்டிக்காட்டுகிறபோது, அதிகபட்சமான பேர்களுக்கு வருத்தம் ஏற்படுகிறது, சட்டம் என்ற ஒன்று இருக்கிறது, சம்பிரதாயம் என்பது இந்த நாட்டில் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது பல இடங்களில் ஆயிரக்கணக்கான இடங்களில் ஜாதியக் கொடுமை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இரட்டை டம்ளர் முறை—கடந்த ஆட்சியின்போதும்கூட விவாதங்கள் வந்தபோது அன்றைய முதலமைச்சர் ஒப்புக்கொண்டார். இன்றைக்கும் அது தொடருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கும் விருத்தாசலம் போன்ற இடத்தில், குளத்தில் தண்ணீர் எடுக்க முடியாத நிலை இருக்கிறது.

அடுத்து, கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி வட்டம், சிறுதொண்டமாதேவி என்ற இடத்தில்—அம்பேத்கர் பிறந்த தின விழாவை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். எல்லாத் தலைவர்களும் போற்றுகிறார்கள். ஆனால், அந்த--அம்பேத்கர் பிறந்த தின விழாவை அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் கொண்டாட முடியவில்லை. கொண்டாடுவதற்காக அமைக்கப்பட்ட அந்த மேடை அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. அந்த விழாவைக் கொண்டாட முடியாத ஒரு அராஜகம் அங்கே நடந்திருக்கிறது. அங்கே மாவட்ட ஆட்சியருக்கும், S.R.-க்கும், மற்ற அதிகாரிகளுக்கும் புகார் கொடுத்தும், இன்று வரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

துப்புரவுப் பணியாளர்களுக்கு, 10,000 உறுப்பினர்களைக் கொண்ட ஆயிரம் சுய நிதிக் குழுக்களுக்குப் பொருளாதார ரீதியில் புதுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன; வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில், அந்தத் துப்புரவுத் தொழிலாளிகள் செய்கின்ற அந்தத் துப்புரவுப் பணியைத் தனியாருக்கு Contract விடுகிற நிலை நம்முடைய ஆட்சியில் இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாட்கோ, தாட்கோ நிறுவனத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். தயவுசெய்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிதி அமைச்சர்கூடச் சொன்னார். இன்றைக்கு அங்கே இருக்கிற தரகர்கள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்று. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். இன்றைக்கு தாட்கோ நிறுவனத்திலிருந்து, கடந்த ஆட்சியின்போது திருவள்ளூர் மாவட்டத்தில் ஆட்டோ சங்கம் ஒன்றை ஏற்படுத்தி, அதற்கு நான் தலைவராக இருந்து 50 ஆட்டோக்களை ஒரு வருடத்திற்குள் வாங்க முடிந்தது. ஆனால் நான் இன்றைக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். 65 ஆட்டோக்களுக்கு மனுச் செய்து ஏறக்குறைய இரண்டு வருட காலம் ஆகின்றது. ஒரு வருடத்திற்கு மேலாக--12,500 ரூபாய், அவர்கள் கட்ட வேண்டிய அந்த Margin money-ஐக் கட்டிய பிறகும்கூட அந்த தாட்கோ நிறுவனமும், உடன் இணைந்த தாய்கோ வங்கியும் இதுவரையிலும் அதைக் கொடுப்பதற்கான நடவடிக்கையை ஏதோ காரணம் சொல்லி, தள்ளிக் கொண்டு வருகிறார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது குறிப்பிட்ட அந்த நிகழ்ச்சியைப பற்றி இந்த அரசு விசாரிக்கும், தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், தாட்கோவின் செயல்பாடுகளைப் பற்றி ஒரு முக்கியமான விளக்கத்தை நான் அளிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றது. இந்தத் தொகை மாநில அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டு, தேவைக்கேற்ப தாட்கோ நிறுவனத்திற்கு விடுவிக்கப்படுகிறது. ஒவ்வொரு நிதி ஆண்டு இறுதியிலும், மாநில அரசின் கணக்கில் ஒரு தொகை நிலுவையில்



இருக்கும். குறிப்பாக, 31-03-2000 அன்று முந்தைய அரசின் கணக்கில் தாட்கோ நிறுவனத்திற்கு விடுவிக்காமல் 24.33 கோடி ரூபாய் நிலுவையில் இருந்தது. அதேபோல், 31-3-2001-ல் 17.91 கோடி ரூபாய் நிலுவையில் இருந்தது. 2002-2003ஆம் ஆண்டு இறுதியில், இவ்வாறு மாநில அரசின் கணக்கில் நிலுவை வைக்காமல் இந்தத் தொகையை முழுமையாக தாட்கோ நிறுவனத்திற்கு விடுவிப்பது என்று முடிவெடுத்துச் செயல்படுத்தப்பட்டது. இதனால், முதல் முறையாக மாநில அரசின் கணக்கில் நிலுவை அறவே நீக்கப்பட்டு, தாட்கோ நிறுவனத்திற்கு முழுமையாகத் தொகை விடுவிக்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வோர் ஆண்டும், ஆண்டு இறுதியில், தாட்கோ நிறுவனம் தன்னுடைய இருப்பில் உள்ள தொகையை வெவ்வேறு வங்கிகளில் குறுகிய கால வைப்பு நிதியாக வைப்பது இயல்பு. அதேபோல், 2002-2003-ல் விடுவிக்கப்பட்ட தொகை, குறுகிய கால வைப்பு நிதியாக வைக்கப்பட்டு உள்ளது. இது தற்காலிக ஏற்பாடுதான். தற்போது இந்தத் தொகையை மாவட்டங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 2003-2004 ஆம் ஆண்டுக்கு ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் வகையில் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. தற்போது கையிருப்பு வெறும் 50 கோடி ரூபாய்தான். ஆகையால் இதற்குக் கூடுதலாக நிதி தேவைப்படும். மத்திய அரசு இந்தக் கூடுதல் நிதி உதவியை அளிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் ஒரு விவரத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். தாட்கோ வாயிலாகச் செயல்படுத்தக்கூடிய சிறப்புத் திட்டங்களுக்குச் சில நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும் என்று ரிசர்வ் வங்கியை அணுகி உள்ளோம். ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களுக்கு சில நிபந்தனைகளைத் தளர்வு செய்ததுபோல, ஆதிதிராவிடர்கள் பயன்பெறும் திட்டங்களுக்கும் அளிக்கவேண்டும் என்று இந்த அரசு கோரிக்கை எழுப்பி உள்ளது. தற்போது இது ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆதிதிராவிடர்களுக்கும் இதேபோல் வழங்கலாம் என்று விளக்கம் அளிக்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், மத்திய அரசின் சிறப்பு நிதி உதவியைப் பயன்படுத்தும் வேகம் இனி அதிகரிக்கப்படும். இது இந்த அரசின் பெரும் முயற்சியின் சாதனையும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்ணன், இரண்டு மணித்துளியில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய நடவடிக்கைகளுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அளவிலான உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. அதில் உறுப்பினர்கள் உள்ளார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த உறுப்பினர்கள் யார், யார்? அந்த உயர்மட்டக் குழு கூடி நடவடிக்கைகளை எடுக்கிறதா? இதில் அனைத்துக் கட்சியினரையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் முதலிப்பாளையம், ஈங்கூரில் தொழிற்பேட்டைகள் அமைத்து, முதலிப்பாளையத்தில் 46 தாழ்த்தப்பட்ட தொழில் முனைவோர்களையும், ஈங்கூரில் 200 தொழில் முனைவோர்களையும் தேர்வு செய்யும் 'டிக்' என்று கொள்கை அறிவிப்பிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. நான் அன்போடு கேட்டுக்கொள்வேன்; 'டிக்' நிறுவனத்தில் கடன் வழங்குகிறபோது, கடந்த கால அனுபவம்; 'டிக்' நிறுவனம் என்பது நம்முடைய அரசு நிறுவனம் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அவர்கள் NABARD போன்ற வங்கிகளில் பணத்தை வாங்கி நமக்குத் தருவதால் அவர்கள் வட்டி விகிதத்தை அதிகமாகப் போடுகிறார்கள். ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்கள் வங்கியிலே கடன் பெற்றால், கடனைத் திருப்பிக் கட்டுவதேயில்லை என்ற தவறான கருத்தை மக்கள் மத்தியிலே வங்கி அதிகாரிகள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அதேபோல், இன்றைக்கு 'டிக்' நிறுவனத்திலும், நீங்கள் கடன் உதவி செய்து, அவர்கள் போடுகின்ற 15 சதவிகிதம் ப்ளஸ் 4 சதவிகிதம், ஆக மொத்தம் 19 சதவிகிதம் வட்டியை அவர்கள்மீது நீங்கள் போடுகின்றபோது, அவர்கள் நிலைமை என்ன என்று நீங்களே தயவு செய்து உணர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் இங்கே ரிசர்வ் வங்கியை அழைத்துப் பேசி இருக்கிறார் என்று குறிப்பிடுகிறார்கள். அதேபோல், வங்கிகளை அழைத்து, இந்தத் தொழில் முனைவோர்களுக்குக் கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் தயவுசெய்து மேற்கொள்ள வேண்டுமென இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன்.



பிற்பகல் 12-45

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** நான் சீக்கிரம் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதார ரீதியில் முன்னுக்கு வர வேண்டுமென்று இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைக்கு நாங்கள் நன்றி சொல்கின்ற அதே நேரத்திலே, கடன் என்று பார்க்கிறபோது, இன்றைக்கு தாட்கோ நிறுவனம் மூலம் sanction செய்து அனுப்பப்படுகின்ற அந்தக் கடன்களையெல்லாம் வங்கிகள் ஏறத்தாழ 75 சதவிகிதம் கொடுக்க மறுக்கின்றன. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணம், தாழ்த்தப்பட்டோருக்குக் கடன் கொடுத்தவை திரும்பி வரவில்லை என்பது. ஒரு இலட்சம் கோடி ரூபாய் வாராக் கடனாக இருக்கின்றபோது, இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொச்சைப்படுத்த வேண்டுமென்று அந்தப் பொதுத் துறை வங்கி அதிகாரிகள் இப்படிப்பட்ட பதிலைச் சொல்கிறார்கள் என்பதை மீண்டும் நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலத் திட்டங்களுக்காக இங்கே எடுக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு என்றென்றும் கம்யூனிஸ்ட் கட்சி உற்ற துணையாக இருக்கும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சட்டப் பேரவையில் இந்த மானியக் கோரிக்கையின்மீது 12-வது முறையாகப் பேசுகிற ஒரு பெரிய வாய்ப்பை, பேரவைத் தலைவர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வரலாற்றை உருவாக்கியதற்காக, தனிப்பட்ட வகையிலே உங்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசன், 12-வது முறையாகப் பேசுவதால், 12 மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

**திரு. செ.கு. தமிழரசன்:** தமிழகத்திலே சாதியக் கொடுமைகள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான தாக்குதல்கள், சாதியத் தாக்குதல்கள் பல்வேறு வகைகளிலே இருக்கின்றன என்பதை மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தியாவிலே சாதியக் கொடுமைகளும், சாதிய உணர்வும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த மக்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதுதான் வரலாற்று உண்மை. இந்தக் கொடுமைகளுக்கு அரசு எந்த வகையிலே தீர்வு காண்கிறது, இந்தக் கொடுமைகளுக்கு அரசு எத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தி கட்டுப்படுத்துகிறது, இந்த அரசுக்கு இந்தக் கொடுமைகளின் பேரிலே எத்தகைய அணுகுமுறை இருக்கிறது என்பதுதான் எழக்கூடிய கேள்வியே தவிர, சாதியம், அந்தத் தாக்குதல், அந்த உணர்வு, அதற்கான படிமானங்கள் இருந்துகொண்டு இருக்கின்றன என்பது இன்றைக்கல்ல, நேற்றைக்கல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த மண்ணிலே தோய்ந்து போயிருக்கிற ஒரு கொடுமை. ஆக, அந்த வகையிலே இந்த அரசின் அணுகுமுறை எவ்வாறு இருக்கிறது, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதைத்தான் நாம் ஒரு கேள்வியாக இன்றைக்கு எடுத்துப் பார்த்து, இந்த விவாதத்திலே பங்கேற்க வேண்டும்.

சாதிய மோதல்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பெருமளவிற்கு இல்லை. தூண்டி விடப்பட இல்லை. நடந்து முடிந்த சாத்தான்குளம் சட்டமன்றத் தேர்தலிலே, சொல்லி வைத்தாற்போல ஒரு கருத்தைப் பரப்பினார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தப் பகுதியிலே தேர்தல் பிரச்சாரத்திற்குப் போனபோது, 'சாத்தான்குளத்தை தேவன்குளமாக ஆக்குவேன்' என்று சொன்னார்கள். (குறுக்கீடு) தேவன்குளமாக ஆக்குவேன் என்று சொன்னார்கள். நான் தமிழ் இலக்கியம் படித்தவன். சாத்தானுக்கு எதிர்ப்பதம் நிச்சயமாக தேவனாகத்தான் இருக்க முடியும். ஆகவே, தேவன்குளமாக ஆக்குவேன் என்று சொன்ன அந்த வார்த்தையை எப்படியெல்லாம் பேசி, ஒரு சாதிய உணர்வை ஏற்படுத்தி, ஒரு சாதிய மோதலை உருவாக்கி, அதில் குளிர் காயவேண்டுமென்று எதிர்க்கட்சிகள் அங்கே முனைந்தன என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். ஆனால், அந்த மோதல்களையெல்லாம் இன்றைய முதல்வர் அவர்கள்



மிகச் சாதாரணமாக மோதி வெற்றி கண்டார்கள் என்பதை நடைமுறையில் நான் பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏன் இந்தக் கேள்வியை எழுப்புகிறேன் என்றால, ஓர் எதிர்ப்பதத்தை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாத்தான் என்பதற்கு எதிர்ப்பதம் தேவன் என்று சொன்னார்கள். தேவன், தேவர் எல்லாம் ஒன்றுதான். 'ன்' விகுதியென்றாலும், 'ர்' விகுதியென்றாலும் ஒன்றுதான். பேரவைத் தலைவர் அவர்களைப் போல நானும் தமிழ் இலக்கியம் படித்திருக்கிறேன். அதிலே தவறு ஒன்றும் இல்லை. தேவன்குளம்--'ன்' னோ, 'ர்' விகுதியோ, சேர்த்துச் சொல்லாம்; தேவன்குளம் என்று சொல்லப்பட்டது அந்த ஒரு வார்த்தை.

பிற்பகல் 12-50

நான் இங்கே கேட்க விரும்புவது, கடந்த ஆட்சியிலே திட்டமிட்டே ஒன்றைச் செய்தார்கள். வள்ளுவர் பெருந்தகை ஒடுக்கப்பட்ட குலத்தின் ஒரு மிகப் பெரிய பிரதிநிதி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அரசியல் சட்டத்திற்கு முன்பாகவே ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்கிய பெருமகனார். அந்தப் பெருமகனாரை 'அய்யன் வள்ளுவன்' என்று சொல்ல வேண்டும் என்று சட்டமாக்கினார்களே! இதிலே என்ன இருக்கிறது? இதிலே சாதியம் இல்லையா? இது சாதியம் என்றால், அதற்கு என்ன பொருள்? சட்டம் ஆக்கினார்கள் இந்தச் சட்டப் பேரவையிலே. வள்ளுவனை, 'அய்யன் வள்ளுவன்' என்று அழைக்க வேண்டும் என்று அன்றைக்கு இருந்த ஆட்சி, அதைச் சட்டமாக்கினார்கள். அவர்கள் சாத்தான்குளத்திலே வந்து சொன்னார்கள் என்று சொன்னால், இந்த உணர்வுகளை எல்லாம் முறியடித்து இன்றைக்கு சாதிய மோதல்கள் இல்லாமல், ஒடுக்கப்பட்ட சமூகம், ஒரு பரந்த அரவணைப்பான பாதுகாப்போடு இருக்கிறது என்று சொன்னால், அந்த அணுகுமுறையை நாம் பாராட்டியாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒடுக்கப்பட்டவர்களுடைய மக்கள் தொகை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஐந்தில் ஒரு பங்காக இருக்கிறது. இந்தியாவிலே ஐந்தில் ஒரு பங்காக இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே ஆறாவது மாநிலமாக தமிழ்நாடு ஒடுக்கப்பட்ட மக்கள் தொகையைப் பொறுத்தவரை இருக்கிறது. 1991 மக்கள் தொகைக் கணக்குப்படி இது. 2001 மக்கள் தொகைக் கணக்குப்படி அநேகமாக அதைவிட இது உயர்ந்திருக்கலாம். இந்தியாவிலே ஆறாவது மாநிலமாக இருக்கிற

நம்முடைய மாநிலம் ஐந்தாவது இடத்திற்கே வந்திருக்கலாம். அவ்வளவு மக்கள் தொகை பத்து ஆண்டு காலத்திலே உயர்ந்திருக்கலாம். ஆகவே, இந்த மன்றத்திலே நான் ஒன்றைத் தொடக்க நிலையிலேயே நம்முடைய அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது; பழைய அந்தக் கணக்குத் தொகைப்படி, தலித்துகளுக்கு, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடும், மலைவாழ் மக்களுக்கு ஒரு விழுக்காடும், ஆக 19 விழுக்காடு தரப்பட்டு வருகிறது. இப்போதைய புள்ளிவிவரப்படி, அரசாங்கப் புள்ளிவிவரப்படியே 19 விழுக்காடு. நடைமுறையிலே அது இன்னும் அதிகரித்து இருக்கலாம். ஆகவே, ஆதிதிராவிடர்களுக்கு 20 விழுக்காடும், மலைவாழ் மக்களுக்கு ஒரு விழுக்காடும் என்று அந்த விகிதாச்சாரத்தை நீங்கள் உயர்த்தவேண்டும் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சாதிய மோதல்கள் இல்லை என்பதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்றால், சாதியத்தை மிக அதிகமாக இந்தியாவிலே ஆராய்ந்த எங்கள் வணக்கத்திற்குரிய தலைவர் பாபா சாகிப் அம்பேத்கர் ஒரு முறை பேசுகிறபோது மிக ஆழமாக ஒரு கருத்தை வலியுறுத்தினார். 'இந்தியாவிலே பெண்களுக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். மிகக் கடன்பட்டிருக்கிறேன். இந்தியாவிலே அந்த சாதிய முறையை நீண்ட காலமாகவே எதிர்த்தவர்கள், மறுத்தவர்கள், பின்பற்றாதவர்கள் பெண்கள். அவர்கள் எப்போதுமே தங்களோடு சாதியத்தை இணைத்துக்கொள்வது இல்லை. அவர்களுக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்' என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னார். இன்றைக்குப் பெண்களின் திருவிளக்காக இருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் திரும்பத் திரும்பச் சொன்னார். பல முறை சொன்னார். 'சாதிகளுக்கு நான் எதிர்ப்பானவள்: சாதிகளுக்கு அப்பாற்பட்டவள், எந்த சாதியும் எனக்கு சொந்த சாதி கிடையாது' என்று பல கூட்டங்களிலே அவர்கள் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய இந்த ஆட்சியிலே அவர்களைப் பாராட்டுவதற்குப் பல செய்திகள் இருக்கின்றன.

தமிழக ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றிலே, அது அம்பேத்கர் மணி மண்டபம் ஆனாலும், அண்ணல் அம்பேத்கருக்கு அரசு சார்பிலே திருவுருவச் சிலை என்றாலும் அண்ணல் அம்பேத்கர் பெயரிலே போக்குவரத்துக் கழகம் என்றாலும், தந்தை சிவராஜ் அவர்களுக்குச் சிலை என்று சொன்னாலும், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் குடும்பத்திற்கு நிதியுதவி என்று சொன்னாலும்,



பண்டிதமணி ஆரோக்கியதாஸினுடைய கருத்துகளைப் பொதுவுடைமை ஆக்கியது என்று சொன்னாலும், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் வாழ்க்கையை வள்ளுவர் பல்கலைக்கழத்திலே வைத்தது என்று சொன்னாலும், வள்ளுவர் பல்கலைக்கழகத்தை உருவாக்கியது என்று சொன்னாலும், இது நீண்ட வரலாறு. இவற்றைப் பாராட்டிக் கொண்டே இருக்கலாம். ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றிலே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு ஒரு தனி அத்தியாயம் உண்டு. ஆனால், பாராட்டுவதை நாங்கள் வெளி அரங்குகளிலே வைத்துக்கொண்டு, பல கருத்துகளை அவரிடம் சொல்ல வேண்டும், தீர்வு காண வேண்டும், நடைமுறைப் படுத்துவதற்கு இந்த மாமன்றத்திலே அவரிடம் சொல்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சில கருத்துகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்; ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான்; *2-8-2002*-லே நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது; கடந்த ஆண்டு, *2-8-2002*-லே தமிழக ஆதிதிராவிடர் நலத் துறை ஒரு சட்டம் போட்டிருக்கிறது. என்ன சட்டம் என்று சொன்னால், கடந்த ஆட்சியிலே ஏற்பட்ட பல குளறுபடிகளை, பல தவறுகளை, பல குழப்பங்களை நிவர்த்தி செய்து, புதிய அணுகுமுறையோடு, நலிந்த மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தலித் மக்களுக்கு இந்த அரசாங்கம் புதிய திட்டங்களை மனம் திறந்து உருவாக்கும் என்கிற ஓர் அரசாணையை *2-8-2002*-லே இதே வார்த்தைகளோடு நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை வெளியிட்டிருக்கிறது. ஆக, அப்படி ஆணையிட்டிருக்கிற நம்முடைய முதல்வர் அம்மா அவர்களுடைய முன்னிலையிலே சில கருத்துகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக நான் ஒரு சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

தமிழ்நாட்டிலே, இந்தியாவிலே--அரசியல் ஆனாலும்--அரசியல் கட்சிகளிலே மிக அதிகமான தொண்டர்கள் இருப்பது தலித் மக்கள். தொழில் என்று சொன்னாலும், தொழிலிலே, தொழில் துறையிலே, கூலிகளாய், அதன் அச்சாணிகளாய், அதன் அடித்தளங்களாய் இருப்பது ஒடுக்கப்பட்ட மக்கள். விவசாயம் என்று சொன்னாலும், விவசாய நிலக் கூலிகளாய், அங்கே இருக்கிற

அடித்தளத்து உற்பத்தியாளர்களாய் இருந்து கொண்டிருப்பது. ஒடுக்கப்பட்ட தலித் மக்கள். ஆக, தலித் மக்கள் இல்லாத, பெரும்பான்மையாக இல்லாத அரங்கமே சமூகத்திலே கிடையாது. இந்த மாமன்றம் என்று சொன்னாலும், இந்த மாமன்றத்திலே 15 சட்டமன்ற உறுப்பினர்கள் மிகப் பெருமளவிலே இருக்கிறார்கள் தலித் சமூகப் பிரதிநிதிகள்.--ஆக, இவ்வளவு பெரிய இந்தச் சமூகத்திற்கு, இந்தியாவிலே ஐந்திலே ஒரு பங்கு இருக்கிற இந்தச் சமூகத்திற்கு இன்னமும் அடிப்படைத் தேவைகள், பல தேவைகள் நிறைவேற்றப்பட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அம்மா அவர்கள் இந்தியாவிற்கே முன்னுதாரணமாக ஆதிதிராவிட மக்களுக்காக ஒரு சிறப்பு 5 ஆண்டுத் திட்டத்தையோ, ஒரு தனி பட்ஜெட்டையோ நீங்கள் கொண்டு வருவீர்களேயானால், அடித்தளத்து மக்களுக்கும் போய்ச் சேருகிற ஒரு மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

நீங்கள் பல விஷயங்களைச் செய்தீர்கள். இந்தியாவிலே முன்னுதாரணமாக உங்களுடைய காலத்திலேதான் ஈரோட்டிலும், திருப்பூரிலும் தலித் மக்களுக்காக தனித் தொழிற்பேட்டைகள் உருவாயின. 'Separate Industrial estates for Dalits' என்கிற அந்தத் தனித் தொழிற்பேட்டைகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தலித் மக்களை கோடீஸ்வரர்களாக ஆக்குகிற அந்த முயற்சி உங்களுடைய ஆட்சியிலேதான் ஈரோட்டிலும், திருப்பூரிலும் கொண்டு வரப்பட்டது. ஆனால், அதிலே என்ன நடந்தது என்று சொன்னால், அதிலே பாதிக்கப்பட்டவர்களிலே நானே ஒருவன். கடந்த 5 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதிலே விண்ணப்பம் போட்டு ஒரு 19 பேர், margin money-யும் கட்டி, அதற்குப் பிறகு இவர்கள் எல்லாம் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள், கடந்த ஆட்சிக்குச் சாதகமாக இருந்தவர்கள் என்பதனாலே, அந்த 19 பேர் margin money கட்டியும்-- நாங்கள்--7 ஆண்டு காலமாக, 10 ஆண்டு காலமாக, படித்த பட்டதாரிகள், இளைஞர்கள் அதிலே கடனுதவி பெற முடியாமல் தவித்தோம். பல பிரச்சினைகளிலே சிக்குண்டோம். இன்றைக்கும் அந்த 19 பேருக்குத் திருப்பிக் கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிந்த பார்வைக்கு நான் கொண்டு செல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. செ.கு. தமிழரசன்:** தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்கிற பெயரிலே, இன்றைக்கு எல்லாம் தனியார் துறையாகத் தாரைவார்க்கப்பட்டுக் கொண்டு, மெல்ல, மெல்ல அது போய்க் கொண்டே இருக்கிறது. இந்த நிலையிலே ஒடுக்கப்பட்ட மக்கள் படித்தாலும், அவர்கள் பட்டம் பெற்றாலும்கூட, நாளைக்கு வேலை கிடைக்குமா, நாளைக்கு அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்குமா என்கிற அச்சமும், அபாயமும் தலித் மக்களிடையே பெருமளவிலே ஏற்பட்டிருக்கிறது. எனவே, தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்கிற அப்படிப்பட்ட இயல்பை, அப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்த வேண்டும். இந்த மாநிலத்தில்--அதற்காக ஒரு தீர்மானத்தை நம்முடைய சட்டப் பேரவை போட வேண்டும் என்பதை அம்மா அவர்களுடைய கனிந்த பார்வைக்கு நான் கொண்டு செல்ல விரும்புகின்றேன். ஏனென்றால், இனிப் படித்தவர்களுக்கு வேலையில்லாமல் போனால், 'சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் நெஞ்சிலே விபரீத எண்ணங்கள்' என்று அண்ணா சொன்னாரே, அதைப்போல, வேறு சமூகப் பின்னணி இல்லாமல், குடும்பப் பின்னணி இல்லாமல், படித்துப் பட்டம் பெற்று வேலையும் இல்லாமல் போனால், வேலையற்ற இளைஞர்களுடைய நெஞ்சங்களிலே விபரீத எண்ணங்கள் வந்துவிடுகின்றன; திசை திருப்பப்படுகிறார்கள். ஆகவே, தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு என்கிற அந்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்று மாநில அரசு அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான சட்டத் திருத்தத்தை வலியுறுத்தி அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

போலிச் சான்றிதழ்கள்; மிக ஏராளமான போலி சாதிச் சான்றிதழ்கள் பெறுகிறார்கள். அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தரே, ஒரு பத்திரிகைக் குறிப்பிலே சொல்கிறார், 400-க்கும் மேற்பட்ட போலி சாதிச் சான்றிதழ்கள் இன்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அவர்கள் ஆய்விலே சொல்கிறார்கள். S.T. என்ற பெயரிலே, மலைச் சாதியினர் என்ற பெயரிலே மிக ஏராளமாக போலிச் சான்றிதழ்கள் இன்றைக்குப் பெறப்படுகின்றன. ஏனென்றால், மாணவர்கள் இன்றைக்கு வெளிநாடுகளிலே போய் வேலை பெறுகிறார்கள். வெளிநாடுகள் போகிறபோது அங்கே ஆய்வு கிடையாது. அங்கே எந்தவிதமான ஆய்வும் அந்த சாதிச் சான்றிதழ்களுக்குக் கிடையாது. எனவே, போலி சாதிச் சான்றிதழ்களைக் கட்டுப்படுத்துகிற வகையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஓர் ஆணையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உருவாக்க வேண்டும். அதேபோல, கல்வித் துறையிலே சைக்கிள் தந்து மறுமலர்ச்சியைச் செய்து, ஆதிதிராவிட மக்களுடைய சமூகத்திலே ஒரு மிகப் பெரிய விடிவெள்ளியாகச் செய்தவர்கள் புரட்சித் தலைவி அவர்கள்.--இன்றைக்கு அமெரிக்காவிலே, படிப்பதோ, வெளிநாடுகளிலே படிப்பதோ சர்வசாதாரணமாகி விட்டது. எனவே இங்கிருந்து ஓராண்டிற்கு ஒரு 50 பேரோ, ஒரு 20 பேரோ நன்றாகப் படித்த ஆதிதிராவிட ஆடவர்களை, பெண்களை, மாணவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கலாம். புரட்சித் தலைவி ஆதிதிராவிடர் கல்வி மேம்பாட்டுத் திட்டம் என்றே அதற்குப் பெயர் வைத்து, அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி, கல்வி பெறுகிற அளவிற்கு, நீங்கள் வெளிநாட்டுக் கல்வி என்ற அந்தக் கண்ணையும் திறந்து வைக்க வேண்டும் என்கிற அந்த, என்னுடைய உணர்வினை இங்கே நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் துறையிலே...

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடித்துவிடுங்கள். இன்னும் உறுப்பினர்கள் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. செ.கு. தமிழரசன்:** ஆதிதிராவிட நலத்துறை நடத்துகிற கல்வி இருக்கிறதே; கல்விப் பள்ளிகள்; தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, தொழிற்பள்ளிகள்; இந்தப் பள்ளிகளுக்கு 70 சதவீத நிதி நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறையிலிருந்து ஒதுக்கப்பட்டு விடுகிறது. ஆகவே, மீதியிருக்கின்ற 30 சதவீதத்திலே நிர்வாகச் செலவு, அதற்குப் பிறகு, நலத் திட்டங்கள் என்று வருகிறபோது, அதிலே நலத் திட்டங்கள் பெருமளவிற்குக் கொண்டு வர முடியவில்லை. ஆகவே, இந்த ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளினுடைய இந்த நிர்வாகத்தை நேரடியாக நீங்கள் கல்வித் துறையிலேயே கொண்டு வந்து, ஒரு தனி Directorate போட்டு Director for Adi-Dravidar Welfare Education என்று கொண்டு வரலாம். Secondary Education-க்கு ஒரு Director இருக்கிறார். தொடக்கக் கல்விக்கு ஒரு Director இருக்கிறார். முறைசாராக் கல்விக்கு ஒரு Director



இருக்கிறார். அதைப் போல, ஆதிதிராவிடர் நலத் துறைக்கும் ஒரு Director-ஐ நீங்கள் நேரடியாகக் கல்வித் துறையிலேயே போட்டுக்கொண்டு அதிலிருந்தே அந்தப் பணத்தைத் தந்தால்--Planning Commission-ம் சொல்கிறார்கள், அதைத் தந்தால்--உங்களுக்கு, ஆதிதிராவிடர் நலத் துறையில் ஏகப்பட்ட பணம் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்குக் கிடைக்கும். ஆகவே, அதை நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறப்புக் கூறுத் திட்டங்கள். பல உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தச் சிறப்புக் கூறுத் திட்டத்திலே முறையாக ஆதிதிராவிட மக்களுக்குப் பணம் செலவழிக்கப்படவில்லை என்ற ஆதங்கத்தை, உணர்வை வெளிப்படுத்தினார்கள். 1999-2000; அந்த ஓராண்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 300 கோடி ரூபாய் இந்தப் பணம்--இதற்குரிய இந்தப் பணத்திலேயிருந்து—வேறு விஷயத்திற்குத் திருப்பப்பட்டிருக்கிறது. இதற்கு Auditor General Report இருக்கிறது. அந்த Report-ஐ எடுத்துப் பார்க்க வேண்டும். 300 கோடி ரூபாய் அதிலிருந்து அப்படியே திருப்பி வேறு துறைக்கு அனுப்பப்பட்டிருப்பதை நம்முடைய மத்திய அரசின் கணக்காய்வுத் துறை சொல்லியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இது நடந்திருக்கிறது. இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை இந்த ஆட்சியிலே நிச்சயம் இருக்காது; கிடையாது.

தமிழக முதல்வர் அவர்கள் நம்முடைய கல்வித் துறையிலே ஆதிதிராவிட மக்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த அந்தக் கடன் தொகை இருக்கிறதே; இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்களே; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் அங்கே தடியடி நடந்தது. அதற்கான போராட்டம் நடந்தது. அந்தப் போராட்டத்திற்குத் தலைமை வகித்தவனே நான்தான்; சட்டக் கல்லூரி முன்னாலே. ஆக, அப்படிப் போராடிப் பெற்ற அந்தக் கல்விக் கடனைப் பெறுவதற்கே அந்த ஆட்சியிலே போராட வேண்டியிருந்தது. இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் வந்த பின்னாலே அதை மானியமாகவே தந்திருக்கிறார் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) மனப்பூர்வமாக--அதனைக் கடனாக இல்லாமல் மானியமாகவே தந்திருக்கிறார் என்று சொன்னால்--அதை நாம் பாராட்ட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு புரட்சியை இந்தத் துறையிலே செய்து கொண்டிருக்கின்ற அம்மா அவர்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். அந்த ஒரு வேண்டுகோள் நிறைவேறினாலே இந்தத் துறையின் நிர்வாகம் முழுக்க, முழுக்கக் கட்டுக்குள் வரும்.

பல சாதனைகள் நடக்கும். இந்தியாவிலே ஒடுக்கப்பட்ட மக்களின், நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்ற உங்களிடம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 1½ கோடி மக்கள் எப்போதும் நன்றியோடு இருப்பார்கள். சட்டமன்றத்திலோ அல்லது வெளியிலோ ஓர் உயர்மட்டக் குழுவை உங்கள் தலைமையிலே நீங்கள் ஏற்படுத்துங்கள். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நீங்கள் ஓர் ஆய்வு செய்யுங்கள். என்ன நடந்திருக்கிறது, என்ன நடக்க வேண்டும் என்று நீங்கள் ஆய்வு செய்யுங்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற 1½ கோடி ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் என்றென்றைக்கும் உங்கள் பக்கம் இருப்பார்கள். அதை உங்கள் ஒருவரால்தான் செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்த மக்களின் நட்சத்திரமாக இருக்கின்ற நீங்கள் அதைச் செய்ய் வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை வைத்து நன்றியோடு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். இரண்டு அமைச்சர்கள் பேச வேண்டும். சட்டமுன்வடிவு வேறு இருக்கிறது.

*பிற்பகல் 1-05*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை ஆகியவற்றிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஜாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'

என்ற நிலையை பாரதி எடுத்திருந்தாலும்கூட, இன்றைக்குச் சமுதாயத்திலே நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்கள் முன்னுக்கு வர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த ஒதுக்கீடு முறைகள் பின்பற்றப்படுகின்றன. நமது முதல்வர்கூட இந்த ஒதுக்கீடு முறையை மத்திய அரசின் செயல் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று போராடியவர்கள் என்கிற நிலையில் அவர்களுக்கு 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்கிற பட்டத்தைக் கூடக் கொடுத்திருக்கிறார்கள் என்பதனைத் தாங்களேகூடக் குறிப்பிட்டீர்கள். மிகவும் பின்தங்கியவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் என்கிற நிலையில், நமது கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடும்போதுகூட இந்த அரசு, தமிழகத்தில் இருக்கின்ற மொத்த மக்கள் தொகையில் மூன்றில்



இரண்டு பங்கிற்கு மேலாக இருப்பவர்கள் பின்தங்கியவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள் என்கின்ற நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறது. ஆனால், மிகவும் பின்தங்கியவர்கள், பின்தங்கியவர்கள் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கின்ற இடம் 50 என்பது குறைவாக உள்ளது. மிகவும் பின்தங்கியவர்களுக்கு வேலைவாய்ப்பிலே 20 சதவிகிதம் ஒதுக்கப்பட்டு இருந்தாலும், கடந்த காலங்களில் எல்லாம் அரசுத் துறையிலே வேலைவாய்ப்பினைப் பெற்றதற்கு என்று ஒரு வெள்ளை அறிக்கை இந்தச் சட்டமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் மூலமாக எங்களுக்கு எல்லாம் தெரிவிக்கப்பட்ட செய்தி என்னவென்றால், தாழ்த்தப்பட்ட மக்களைக் காட்டிலும், மிகவும் பின்தங்கிய மக்களுக்குத்தான் வேலைவாய்ப்பிலே அதிகப்படியான இடங்கள் நிரபபப்படாமல் இருக்கின்றன என்கின்ற செய்திதான் எங்களுக்குக் கிடைத்தது. 20 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட 10-க்குக் கீழாக உள்ள வேலைவாய்ப்பிலே அந்த 20 என்று வருகின்றபோது, 2 மிகவும் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லாது, 10 வேலைவாய்ப்புகள் உள்ள இடங்களிலே ஒரு மிகவும் பின்தங்கியவருக்குத்தான் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற நிலையின் காரணமாக, அதையெல்லாம் நீக்கி, ஒரு வேலைவாய்ப்புக்கு மேலாக உள்ள அத்தனையிலும் இந்த ஒதுக்கீடு முறை மிக உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்கின்ற ஓர் ஆணைகூட சென்ற முறை பிறப்பிக்கப்பட்டது. அதோடுகூட இல்லாது, வருகின்ற காலங்களில் ஏற்படுகின்ற அந்த வேலைகளிலே, நிரப்பப்படாமல் இருக்கின்ற ஆதிதிராவிடர் மக்களுக்கு உரிய வேலைகளையும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிய வேலைகளையும், பின்னடைவு வேலைகளாக ஏற்றுக்கொண்டு அதற்கு முன்னுரிமை கொடுத்து அவர்களைக் கொண்டுதான் நிரப்ப வேண்டும் என்கின்ற நிலையும் இருந்தது. ஆனால், இன்றைக்கு இந்த அரசு அந்த நிலையை ஏற்றுக்கொண்டு, வருகின்ற காலத்தில் ஏற்படுகின்ற, அந்த இடங்களிலே நிரப்பப்படாமல் இருக்கின்ற ஆதிதிராவிடர் பணி இடங்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதேபோல், மிகவும் பின்தங்கியவர்கள் என்று சொல்லக்கூடியவர்களுடைய இடங்கள்--ஏறக்குறைய இன்னும் 5000-க்கும் மேலாக, அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடங்கள் இருக்கின்றன என்கின்ற செய்தி அந்த வெள்ளை அறிக்கையின்

மூலம் தெரிந்து இருக்கின்ற காரணத்தினால், வருகின்ற வேலைவாய்ப்புகளிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்பட வேண்டுமென்று அன்போடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, கள்ளர் சீரமைப்புத் துறை என்கின்ற ஒரு துறை, மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் மிகவும் பின்தங்கியவர்களான சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த பிரமலைக் கள்ளர்களுக்கு என்று சொல்லி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே ஏற்படுத்தப்பட்டது. அந்த மக்கள் அந்தக் காலத்திலேயேகூட போராட்ட குணம் மிகுந்தவர்களாக, போராடுகின்ற தன்மை படைத்தவர்களாக இருந்த காரணத்தால், அவர்களை எப்படிச் சீர்திருத்துவது? இன்றைக்குக்கூட இங்கு அந்தப் பிரச்சினை வந்தது. கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம்; அவை என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவைதான். அந்த மக்கள் எல்லாம் இப்படிப்பட்ட எண்ணங்களை உடையவர்களாக இருக்கிறார்கள், இவர்களை ஒழுங்குபடுத்த வேண்டும், முறைப்படுத்த வேண்டும் என்று சொன்னால், கல்வியிலே அவர்கள் முன்னுக்கு வர வேண்டும். சமூகப் பொருளாதார நிலையிலே அவர்கள் முன்னுக்கு வர வேண்டும் என்கின்ற நோக்கத்தோடுதான் அன்றைக்கே ஆங்கிலேயர்கள் அந்தக் கள்ளர் சீரமைப்புத் துறையை ஏற்படுத்தினார்கள். அந்த மக்களை நல்லவர்களாக, சமுதாயத்திலே மற்றவர்களுக்கு நிகராகக் கொண்டு வரவேண்டும் என்கின்ற நோக்கத்திற்காக அந்தச் சீரமைப்புத் துறையின் மூலமாகப் பல பள்ளிகளை நிறுவினார்கள். அந்தப் பள்ளிகளின் மூலமாகத்தான் இன்றைக்கும் அவர்கள் கல்வியைப் பெற்று வருகிறார்கள். அந்தப் பள்ளிகள் மிக அதிகமாக உள்ள இடம்; எனது உசிலம்பட்டி தொகுதியிலும், அடுத்ததாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற ஆண்டிப்பட்டி தொகுதியிலும்தான் அந்தச் சீர்மரபினர் இனத்தைத் சேர்ந்தவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அங்குதான் அந்தப் பள்ளிகள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே ஏறக்குறைய 118 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்று சொல்லி, அதற்குரிய இடைநிலை ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினால், அந்த இனத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களை வைத்து நிரப்பிக்கொள்ளலாம் என்று சொல்லி ஓர்



அரசாணை--நான் இங்கு 2001-லே பேசுகின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, அப்படி ஒரு நிலைமை இருக்குமேயானால், அதை உடனடியாக நான் நிறைவு செய்து தருகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொன்னதற்கு இணங்க, அந்த ஆணையும்--பிறப்பிக்கப்பட்டது. ஆனால்....

பிற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில், 40 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் எடுத்துப் பார்க்கும்போது, சில பள்ளிகளில் அதிக ஆசிரியர்கள் இருக்கிற காரணத்தினால், அதை நிரவ வேண்டும் என்ற அடிப்படையில், இதுவரையில் தேவையில்லை என்ற அடிப்படையில்தான் அந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. மேலும், மற்ற ஆசிரியர்கள் retire ஆவார்கள் என்று சொல்வதால், அந்த நேரத்திலே ஆசிரியர்கள் பணியிடங்களில் காலியிடங்கள் வரும்போது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதுபற்றிச் சிந்திக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிகளின் பிரகாரம், 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று இருந்தாலும்கூட, கல்வித் துறையின் கொள்கைக் குறிப்பிலேகூட நான் பார்க்கும்போது, அதிலே இருக்கின்ற மாணவர்கள் விகிதத்திற்கும், இருக்கின்ற ஆசிரியர்கள் விகிதத்திற்கும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, ஏறக்குறைய 30 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்கிறார் என்கின்ற நிலைதான் இருக்கின்றது என்பதை நான் பேசுகின்றபோதுகூடச் சுட்டிக்காட்டினேன்.

எனவே, இதுபோன்ற ஆதிதிராவிடர் பள்ளிகளிலும், இதுபோன்ற மிகவும் பின்தங்கிய கள்ளர் சீரமைப்புத் துறையைச் சேர்ந்த பள்ளிகளிலும் இருக்கின்ற மாணவர்களுக்கு அந்த விதிகளைக்கூடத் தளர்த்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஏனென்றால், அவர்கள் எல்லாம் கிராமப்புறங்களிலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் படிப்பதற்கு அதிகப்படியான வாய்ப்பு வசதிகள் இல்லை. அவர்களுடைய பெற்றோர்கள் எல்லாம் ஓரளவிற்குக் கல்வி கற்றவர்களாகக்கூட இருந்திருக்க முடியாது. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில், அவர்களுக்கு 40 என்பதை...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கண்ணைத் திறந்து, அறிவைப் புகட்டினாலே ஜாதி உணர்வு மறைந்துவிடும் என்பது ஏற்க முடியாத வாதம். இன்றைக்குத் தமிழ்நாட்டில் அதிகப்படியாக ஜாதி வெறியைத் தூண்டுபவர் டாக்டர் கிருஷ்ணசாமி போன்றவர்கள்; ஜாதி உணர்வைப் பரப்புபவர் டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள். இவர்கள் எல்லாம் படித்து, டாக்டர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே, படிப்புக்கும், ஜாதி உணர்வுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நிறுவனர் டாக்டர் ஐயா அவர்களுக்கு ஜாதி உணர்வு இருக்கிறது; ஜாதி வெறி இல்லை. ஜாதி வெறி என்பது வேறு; ஜாதி உணர்வு என்பது வேறு.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலர் ஜாதி வெறி என்கிறார்கள்; சிலர் ஜாதி உணர்வு என்கிறார்கள். எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இரண்டும் ஒன்றுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜாதி உணர்வுக்கு என்ன காரணம் என்று சொன்னால், அடித்தட்டிலே இருக்கக்கூடிய நலிவடைந்த மக்கள் முன்னேற வேண்டும். தமிழ்நாட்டினுடைய மொத்த மக்கள் தொகையிலே மூன்றில் ஒரு பங்காக இருக்கக்கூடியவர்கள், கல்வியிலே, வேலைவாய்ப்பிலே, பொருளாதாரத்திலே பின்தங்கி இருக்கிறார்கள். அவர்கள் மேலே வரவேண்டும் என்ற காரணத்தினாலே, அந்த மக்களுக்கு உணர்வோடு பாடுபட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதே நோத்திலே, வேறு எந்த ஜாதிக்கும் எதிரிகள் அல்ல. மற்ற ஜாதிகளை எல்லாம் அரவணைத்துச் செல்ல வேண்டும். உணர்வு இருக்கிறது, அந்த உணர்வு மற்றவர்களுக்கு எதிராக இருக்கக்கூடாது. எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். ஆகவே, எல்லா ஜாதி மக்களுக்கும் சம நீதி வேண்டும்; சமூக நீதி வேண்டும்; இட ஒதுக்கீடு வேண்டும் என்பதைத்தான் எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், பேச்சை முடித்துவிடுங்கள்.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே. இன்னும் சில கோரிக்கைகளையும், உங்களுக்கும் சேர்த்துத்தான் வைக்கவிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைக் கொடுங்கள், நானும் சேர்ந்து கொடுத்துவிடுகிறேன்; அம்மா அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன்.

*பிற்பகல் 1-15*

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு டாக்டர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னொரு டாக்டரைக் குறிப்பிடவில்லை என்பதை (சிரிப்பு) எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், கல்வி என்பதன் மூலமாக இந்த சாதிய உணர்வுகள் வருவது என்பது இல்லை. என்னைப் பொறுத்த அளவிலேகூட, ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கென்று இருக்கின்ற இட ஒதுக்கீட்டை ஒரு சிலர் மட்டும்தான் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்கிற ஆதங்கம்கூட இருக்கிறது. ஓரளவுக்குக் கல்வியிலே முன்னுக்கு வந்தவர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள் மட்டும்தான் இந்த இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் எல்லாம் உண்மையிலேயே முன்னுக்கு வரவில்லை என்கின்ற நிலைதான் இருக்கிறது.

சாதாரணமாக ஒரு சத்துணவு அமைப்பாளர் பதவிக்குக்கூட, அந்தக் குடும்பத்திலே ஒருவரும் வேலை பார்க்கவில்லை என்கின்ற ஒரு Certificate-ஐக் கொடுத்துச் சேருகின்ற நிலை இருக்கிறது. ஆனால், பெரும், பெரும் உத்தியோகங்களில் எல்லாம், I.A.S., I.P.S. போன்றவர்கள் எல்லாம்கூட ஒரு குடும்பத்திலே உத்தியோகத்தைப் பெற்றவர்கள், அதோடு நிறுத்திக்கொண்டு மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்கின்ற நிலைகூட ஏற்படுமேயானால் நிச்சயமாக அது இந்தச் சமுதாயத்திற்கு ஒரு பயனுள்ள நிலையாக இருக்கும் என்று சொல்லி, மிகவும் பின்தங்கியவர் என்று குறிப்பிடுகின்றபோது, அதிலே பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள், மறவர் இனத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்தால் மட்டும்தான் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்கள் என்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கிறார்கள் என்கின்ற காரணத்தினால்,

மதுரை, திண்டுக்கல் தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் இருக்கின்றவர்கள்தான் பிரமலைக் கள்ளர் என்று சொல்கிறார்கள். ஆனால், இன்றைக்கு சென்னையிலேகூட இந்தச் சமுதாயத்திலே எத்தனையோ பேர் அரசு உத்தியோகத்தின் காரணமாகப் பல இடங்களிலே வந்து குடியேறி விடுகிறார்கள். தொழில் செய்வதற்காக வந்தவர்கள் இங்கே தங்கி விடுகிறார்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலே இருக்கின்ற மறவர்கள் மட்டும்தான் பின்தங்கியவர்கள், மிகவும் பின்தங்கியவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். எங்கள் பேரவைத் தலைவர்கூட மதுரையிலேதான் குடியிருக்கிறார். மதுரையிலே இருந்தால் அவருக்குப் பின்தங்கியவர் நிலை இல்லை. இராமநாதபுரத்திலேயோ, திருநெல்வேலியிலேயோதான் இருக்க வேண்டும். இன்றைக்கு இராமநாதபுரம், திருநெல்வேலியைச் சார்ந்த மக்கள் மதுரையிலே பாதிப்பேர் இருக்கிறார்கள். அவர்கள் பின்தங்கியவர், மிகவும் பின்தங்கியவர் பட்டியலிலே சேர்க்கப்படவில்லை. அதுபோல, பிரமலைக் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் இன்றைக்கு கோவையிலே இருக்கிறார்கள், தஞ்சையிலே இருக்கிறார்கள், சென்னையிலே இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அந்த Certificate வாங்குகின்ற நிலை இல்லை. மிகவும் பின்தங்கியவர்களாகக் கருதப்படுகின்ற நிலை இல்லை என்கின்ற ஆதங்கத்தை நாங்கள் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல, புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கின்ற கந்தர்வக்கோட்டை கள்ளர்கள், அவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் இருந்தால்தான் அவர்கள் மிகவும் பின்தங்கியவர்கள், மற்ற இடங்களில் இருக்கின்றவர்கள் எல்லாம் அப்படி இல்லை என்கின்ற ஒரு நிலை...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதன்படி ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை மிகவும் பின்தங்கியவர்களாக ஆக்குவது, பின்தங்கியவர்களாக இருப்பதற்குச் சான்றிதழ் கொடுப்பது, ஒரு மாவட்டத்திலே இருப்பவர்கள் இன்னொரு மாவட்டத்தில் வரும்பொழுது அந்தச் சான்றிதழ் பெறுவதிலே இருக்கின்ற சிக்கல்களை எல்லாம் தீர்ப்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே அப்பொழுது முதலமைச்சராக இருந்த நிலையில், அன்றைக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக, இப்படிப்பட்ட அந்தத் தன்மைகள் எல்லாம் மாற வேண்டும் என்பதற்காகப் பிற்படுத்தப்பட்டோர்



நல ஆணையத்தை அமைத்து இருக்கின்றார்கள். எனவே, அதற்கு அவர்கள் மனுக் கொடுப்பதன் மூலம், நிச்சயமாக அவர்கள் அதை ஆராய்ந்து அரசிற்குப் பரிந்துரை அளிப்பார்கள். அதன் பிறகு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இறுதியாக, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலே சீருடைகள் வழங்கப்படுகின்றன. அந்தச் சீருடைகளைத் தைத்து வழங்குகிறார்கள். அதிலே சில மாணவர்களுக்குப் போதிய அளவு இல்லை. அதேபோலப் பெண்களுக்கும் போதிய அளவு இல்லை. ஆகவே, அவர்கள் சிரமப்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். சீருடையாகத் தைத்துக் கொடுக்காமல், ஓரளவிற்குத் துணியாகவே கொடுத்துவிட்டால் அவர்கள் அந்தத் துணியை வைத்து--நீங்கள் சொல்லுகின்ற அந்த சில மகளிர் குழு சொசைட்டிகளை அமைத்து, அவற்றின் மூலமாகத்தான் இதைத் தைத்துக் கொடுக்கிறார்கள்--அந்த சொசைட்டியிலே கொடுத்து அவரவர்கள் அளவுக்குக்கூடத் தைத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்கின்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். முடிந்தால், அதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன்.

ஆசிரியர்கள் நியமனம் என்பது—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவார்கள் என்று நினைத்தேன், அவருடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள்தான் பல பேர் அதிலே பயன்படப் போகிறார்கள். நீங்களே அரசாணை பிறப்பித்து இருக்கிறீர்கள். நீங்களே அதைச் செய்வதாக 2001-லே இதே சட்டமன்றத்திலே நீங்கள் சொல்லி, அது பதிவாகி இருக்கிறது. எனவே, அருள்கூர்ந்து 40 பிள்ளைகள் என்ற வரம்பை சற்றுத் தளர்த்திக்கூட 30-க்கு அதிகமாக இருந்தால்கூட, அந்த அளவிற்கு அந்தப் பின்தங்கிய பகுதியிலே இருக்கின்ற பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமிக்கலாம் என்கின்ற ஒரு நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்மேகம் மனது வைத்தால் காலமெல்லாம்

மழை பொழியும்; பெருமைமிகு உழவர் மனது வைத்தால், காலமெல்லாம் பெரு நெல் விளையும்; குளம் பார்த்து வலை விரித்தால் மீன் கிடைக்கும்; குணம் பார்த்துப் பழகினால் குடும்பப் பாசம் பெருகும்; நல்ல மனம் படைத்தோர் சேர்ந்து முயன்றால் நாடெல்லாம் நலம் பெருகும்; நல்லெண்ணத்தைத் தன்னகத்தே கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள், ஏழையெளியோரை எண்ணத்தால், இதயத்தால் நேசிப்பவர். இது மாமன்னர்கள் ஆளும் காலமும் அல்ல, தனது குடும்பத்தாருக்காக ஆண்ட ஆட்சியுமல்ல. இது மக்களுக்காக, மக்களே வழங்கியுள்ள மகா சக்தியின் ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி) எந்த மக்களால் மாட்சிமைமிக்க அரியாசனம் பெற்றோமோ, அந்த மக்களுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவருபவர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள். புறம் பேசி வசை பாடினோர் புறங்கண்டு ஓட, புரட்சி மலர்த் தோட்டத்தில் பூத்த தனிப் பூவாக, வறுமை இனி இங்கு இல்லை என வரலாறு உருவாக்க, இருண்ட நிலை மாறி, ஒளி நிறைந்த முன்னேற்றம் வரவாக, தமிழ் மாநிலம் முதன்மை மாநிலமாக ஆக, முழு நேரமும் உழைக்கின்ற இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கும் திசை நோக்கிப் பணிந்து வணங்கி, எனது பதிலுரையை அவைக்கு அளிக்கின்றேன்.

தாழ்த்தப்பட்டோர் என்று இருந்தோர், தரம் உயர்ந்த கல்வி பெற்று, உலகத்தாரால் போற்றப்பட்டோர் என உயர, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, முதன்மைத் துறையாக முன்னேற்றம் காண, நல்ல சிறப்பான, பாரே போற்றும் பல திட்டங்களை அன்றும் செயல்படுத்தினார்கள், இன்றும் செயல்படுத்தி வருகின்றார்கள்.

கடந்த ஆண்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 365.64 கோடி. நடப்பு ஆண்டிற்கு ரூபாய் 439.05 கோடி. அதாவது, நடப்பு ஆண்டிற்கு சென்ற ஆண்டைவிடக் கூடுதலாக ரூபாய் 73.41 கோடி நிதியை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.



இந்தியாவிலேயே முதன்முதலாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த, ப்ளஸ்-1, ப்ளஸ்-2 படிக்கும் ஆதிதிராவிட, பழங்குடியின மாணவியருக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 47,980 சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இதற்காக ரூபாய் 6.91 கோடி செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக ரூபாய் 7.49 கோடியை ஒதுக்கியுள்ளார்கள்.

கடந்த ஆண்டில் பல்வேறு கல்வி உதவித் தொகைகள் பெற்ற மாணவ மாணவியர் எண்ணிக்கை 11.90 இலட்சம். இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 4,906 இலட்சம். நடப்பு ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூபாய் 4,103 இலட்சம்.

3 ஆம் வகுப்பு முதல், 5 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியினப் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத் தொகை வழங்க ஒதுக்கீடு ரூபாய் 300 இலட்சம். பயன் அடைவோர் எண்ணிக்கை; 60,000 பெண் குழந்தைகள்.

6 ஆம் வகுப்பில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு ஊக்கத் தொகை வழங்க ஒதுக்கீடு ரூபாய் 300 இலட்சம். பயன் அடைவோர் எண்ணிக்கை; 30,000 பெண் குழந்தைகள்.

இலவசப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் சிலேட்டுகள் வழங்க ஒதுக்கீடு ரூபாய் 1,443.17 இலட்சம். இதனால் பயன் அடைவோர் எண்ணிக்கை 12,57,000.

விடுதி மாணவ, மாணவியருக்கு உணவுக் கட்டண ஒதுக்கீடு ரூபாய் 2807.88 இலட்சம். இதனால் பயன் அடைவோர் எண்ணிக்கை; 1.25 இலட்சம் மாணவ, மாணவியர்கள்.

இலவசச் சீருடைகள் வழங்க ஒதுக்கீடு ரூபாய் 725.27 இலட்சம். இதனால் பயன் அடைவோர் எண்ணிக்கை 3,33,400.

முதுகலைப் பட்டப் படிப்புப் பயிலும் மாணவியரின் இலவசக் கல்விக்கு ஒதுக்கீடு ரூபாய் 68.56 இலட்சம். இதனால் பயன் அடைவோர் எண்ணிக்கை; 4,367 மாணவியர்கள்.

பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்திற்கு ஒதுக்கீடு ரூபாய் 83.48 இலட்சம். இதனால் பயன் அடைவோர் எண்ணிக்கை 10,800.

பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவ மாணவியர் விடுதிக் கட்டணத்தை ஈடு செய்ய, கடந்த ஆண்டு செலவிடப்பட்ட மானியம் ரூபாய் 500 இலட்சம். நடப்பாண்டிற்கு ஒதுக்கீடு ரூபாய் 475 இலட்சம். இதனால் பயன் அடைவோர் எண்ணிக்கை: சுமார் 7,000 மாணவர்கள்.

பிற்பகல் 1-25

புத்தக வங்கித் திட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ.34.56 இலட்சம். பயன் அடைவோர் எண்ணிக்கை 1,500.

அதிக மதிப்பெண் பெறுகின்ற மாணவ, மாணவியருக்குப் பல்வேறு பரிசுகள் வழங்க ஒதுக்கீடு ரூ.85.98 இலட்சம். பயன் அடைவோர் எண்ணிக்கை 1,500.

பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கட்டடங்கள் கட்ட ஒதுக்கீடு ரூ.72.61 இலட்சம்.

பள்ளிகள் பராமரிப்பு மற்றும் சிறு பணிகளுக்கு ஒதுக்கீடு ரூ.70 இலட்சம்.

விடுதிகள் பராமரிப்புக்கு ஒதுக்கீடு ரூ.35 இலட்சம்.

நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டபடி, நடப்பு ஆண்டில் 150 விடுதிகளுக்கு ரூ.47.25 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும்.

பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் பராமரிப்பு மற்றும் கட்டட வசதிக்கு ஒதுக்கீடு ரூ.180.64 இலட்சம்.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க கடந்த ஆண்டு ஒதுக்கீடு ரூ.300 இலட்சம். வழங்கப்பட்ட பட்டாக்கள் எண்ணிக்கை 8,600. நடப்பு ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.300 இலட்சம்.

இடுகாடு மற்றும் இடுகாட்டுப் பாதை வசதிக்கு ஒதுக்கீடு ரூ.103.50 இலட்சம்.

கொத்தடிமைப் பணியாளர் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டத்திற்கு ஒதுக்கீடு ரூ.400 இலட்சம். இதுவரை 11,916 கொத்தடிமைப் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.



மாண்புமிகு உறுப்பினர்கள் ஏ.எஸ். கண்ணன் அவர்கள் மற்றும் செகு. தமிழரசன் அவர்கள், முருகவேல் ராஜன் அவர்கள் எல்லாம்- - அந்த மிருகவேல் ராஜன்—உறுப்பினர்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியாக உச்சரியுங்கள்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** முருகவேல் ராஜன்— உறுப்பினர், மாணவர்களுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது கோபமா அவர் மேலே? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்கள் 7,000 மாணவர்களுக்கு வழங்கியதை, வழங்கவில்லை என்று யாருடைய திருப்திக்காகச் சொன்னார் என்பது அவருக்குத்தான் தெரியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, நடப்பு ஆண்டில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## புதிய திட்டங்கள் பற்றிய அறிவிப்புகள்

(1) ரூ. 56 இலட்சம் செலவில், நான்கு அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு அரசு ஆதிதிராவிடர் நல மேனிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடங்கள் கட்டப்படும்.

(2) ரூ.27.94 இலட்சம் செலவில், ஒரு அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்படும்.

(3) ரூ.7.55 இலட்சம் செலவில், 4 அரசு ஆதிதிராவிடர் நல மேனிலைப் பள்ளிகளுக்கு, இருக்கையுடன்கூடிய சாய்வு மேசைகள் வழங்கப்படும்.

(4) ரூ.19.71 இலட்சம் செலவில், 10 ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

(5) ரூ.10 இலட்சம் செலவில், ஆதிதிராவிட நல இயக்ககம் கணினிமயமாக்கப்பட்டு, பணியாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

(6) ரூ.3.40 இலட்சம் செலவில், 503 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், மற்றும் 125 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும்.

(7) ரூ.7.50 இலட்சம் செலவில், 25 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு, சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும்.

(8) ரூ.17.50 செலவில் கல்லூரி விடுதி மாணவ, மாணவியர் 500 பேர்களுக்கு, மேசை, நாற்காலி, கட்டில் போன்ற அறைகலன்கள் வழங்கப்படும்.

(9) ரூ.14.72 இலட்சம் செலவில், 5 மாணவியர் விடுதிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

(10) ரூ.10 இலட்சம் செலவில், விடுதிகளுக்கு மேம்படுத்தப்பட்ட துப்புரவு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

(11) ரூ.71.53 இலட்சம் செலவில், 5 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடத் துவக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும்.

(12) ரூ.6.19 இலட்சம் செலவில், 5 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடத் துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்.

(13) புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பழங்குடியினர் இயக்ககத்திற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் 2 கணினிகள் வழங்கப்படும்.

(14) அனைத்து 1,076 ஆதிதிராவிடர் நலத் துறை விடுதிகளுக்கு, தற்போது ஒரு ஆங்கிலம், மற்றும் ஒரு தமிழ் நாளேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இனி, கூடுதலாக இவ்விடுதிகளுக்கு ஒரு தமிழ் நாளேடு வழங்கப்படும்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** (15) விவசாய நிலம் வாங்கி வழங்கும் திட்டத்தின்கீழ் நலிவுற்ற 3,000 விவசாய ஆதிதிராவிடப் பெண்கள் மற்றும் 500 பழங்குடியினப் பெண்கள் பயனடையும் விதத்தில் விவசாய நிலம் வாங்க தாட்கோ மூலம் திட்டம் செயல்படுத்தப்படும். அதற்குண்டான செலவில் 50 விழுக்காடு கடனாகவும், 50 விழுக்காடு மானியமாகவும், சிறப்பு மைய நிதி உதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும். அதேபோல், சிறு மற்றும் குறு விவசாய, 3,000 ஆதிதிராவிடர் மற்றும் 500 பழங்குடியினப் பயனாளிகளுக்கு தாட்கோ மூலம் சிறப்பு மைய நிதி உதவித் திட்டத்தின்கீழ் நீர்ப்பாசன வசதிகளுக்கான உதவிகள் 50 விழுக்காடு கடனாகவும், 50 விழுக்காடு மானியமாகவும் தொகைகள் வழங்கப்படும்.



(16) ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் மாவட்டத் தலைமையிடங்களில் செயல்படும் விடுதிகளில் தங்கிப் பயில விண்ணப்பம் செய்யும் கிராமப்புற மாணவ/மாணவியர் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள், வரும் கல்வியாண்டு முதல் இவ்விடுதிகளில் கூடுதலாக 1,000 மாணவ/மாணவியர்களைச் சேர்த்துக்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(17) திருவள்ளூர் மாவட்டத்தில் கடன்பட்டுக் கொத்தடிமைகளாக உள்ளவர்களை விடுவிக்கவும், மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் ஒரு முன்னோடித் திட்டம் ரூ.25.85 கோடி செலவில் உலகத் தொழிலாளர் நல நிறுவனத்துடன் சேர்ந்து செயல்படுத்தப்படும். இந்தச் செலவினை உலகத் தொழிலாளர் நல நிறுவனமும், மாநில அரசும் 80:20 என்ற விழுக்காட்டில் பகிர்ந்து கொள்ளும்.

(18) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் உள்கட்டமைப்பு குறித்த ஒரு விரிவான விளக்க ஆய்வு மைய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்பதை மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் முதலிப்பாளையம் மற்றும் ஈங்கூர் தொழிற்பேட்டைகளைப் பற்றிச் சொன்னார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தாழ்த்தப்பட்டவரை ஒரு கோடீசுவரராக உருவாக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கினார்கள். அந்தத் தொழிற் பேட்டையை 100 உருவாக்கி, 76 பயனாளிகளைத் தேர்வு செய்து,

அதில் 54 பயனாளிகள் முறையாகக் கடன் பெற்று தொழிலைச் செய்த நேரத்தில், ஆட்சி மாறியதன் காரணமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதால் கடந்த திமுக. ஆட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக கருணாநிதி, அந்தத் திட்டத்தின்மீது அக்கறை இல்லாமல், தாழ்த்தப்பட்டவர்களிடம் ஓட்டுக் கேட்கும்போது, சம்பந்தி என்று சொல்லிக்கொண்டு, அந்தத் திட்டத்தில் முழுமையாகப் பயன் பெறாத அளவுக்கு, வாங்கிய அந்தத் தொழிலைச் செய்தவர்களுக்கு முறையாக வழிகாட்டுதல் இல்லாமல், வாங்கிய கடனில் தொழில் செய்வதிலும் குளறுபடி, தொழில் செய்கின்றவர்களுக்கு மீதி திரும்பச் செலுத்தவேண்டிய அந்தப் பணத்தையும் திரும்பச் செலுத்தாமல் மிகவும் அவதிக்குள்ளான நேரத்தில் ஆட்சி மாறியது. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கையில் தமிழ்நாடு ஒப்படைக்கப்பட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்தவுடன் அதை எல்லாம் ஆய்வு செய்து, அப்படிப்பட்டவர்கள் மீண்டும் தொழிலைத் தொடங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'டிக்'—வங்கியைச் சேர்ந்த அலுவலர்களை அழைத்துப் பேசி--இப்போது மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் 19 பேர் காத்திருக்கிறோம், 7, 8 வருடங்களாக நாங்கள் வங்கியிலே எங்களுடைய வைப்புத் தொகையை வைத்திருக்கின்றோம்; பங்குத் தொகையை வைத்திருக்கின்றோம் என்று சொன்னார்கள். ஒரு பங்குத் தொகை 10 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டிய சூழ்நிலை. ஒரு தாழ்த்தப்பட்டவர் 10 இலட்சம் ரூபாய்க்கு எங்கே போக முடியும்? 10 இலட்சம் ரூபாய் இருந்தால் அவர்களாகவே எத்தனையோ தொழில்களைச் செய்துவிடுவார்களே என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான், மாண்புமிகு அம்மா அவர்கள்--அதையெல்லாம் இலகுவாகக் குறைத்தார்கள். எப்படியாவது அனைவரும் அந்தத் தொழிலில் பயன்பெற வேண்டும், அதிலும் குறிப்பாக, மகளிர் சுய உதவிக் குழுக்களும் சேர்ந்து அதிலே பயன்பெற வேண்டுமென்ற அடிப்படையில்தான், இலக்கைக் குறைத்துத்தான் இப்போது அதற்கு மீண்டும் தேர்வுக் குழு நடைபெற்று வருகிறது. கண்டிப்பாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைவரும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்கள் அனைவரும் அதில் பங்கு கொண்டு அந்தத் தொழிற்பேட்டையில் தொழில் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில்தான் இப்போது ஆய்வு செய்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களின் வெட்டுத் தீர்மானங்களின் மூலமாகவும், மற்றும் இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கு கொண்டும் நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்களது கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தாயுள்ளத்தோடு, தக்கவாறு கவனத்தில் கொள்ளும் என உறுதியளிக்கின்றேன். எனது இந்தப் பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கும் என்று நம்புகிறேன். எனவே, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டி, அமர்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் உரையை முடித்துவிட்டடும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** தலைவர் அவர்களே, ஒரு Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, முருகவேல் ராஜன்?

பிற்பகல் 1-35

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் என்பதை ரூவாய் என்றே பேசினார். அதைப்போலவே முருகவேல் ராஜன் என்கிற பெயரையும் மாற்றிச் சொல்லிக் குழப்பம் விளைவித்திருக்கிறார். அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் சரியாகச் சொல்லிவிட்டார்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை, இல்லை. It will affect my reputation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதைச் சரியாகச் சொல்லிவிட்டார். சரியாகி விட்டது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தமும், பாசமும் தமிழகம்தான் என்று சமூக நீதியை மதித்து, வலியோர், எளியோர் என்று பாராமல், எளியோனாகிய என்னைப் போன்ற விவசாயக் குடும்பத்தில்

பிறந்த சாதாரணத் தொண்டர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களாக்கி, தனது பெருமைக்குரிய அமைச்சரவையிலே அமைச்சராக அமர வைத்து அழகு பார்க்கும் அம்மா அவர்களின் பொற்பாதங்களில், என் தொகுதி சார்பாகவும், என் சார்பாகவும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மக்களுக்கு அற்புதத் திட்டங்களைத் தந்த பொற்கால முதல்வர் நம் அம்மா அவர்கள், சமூக நீதியைக் காத்து, நிலைநாட்டிய வீராங்கனை, பசித்த பக்தர்களின் வயிறுகளுக்குக் கோயில்களின் மூலம் அன்னதானம் அளித்தார்கள். ஓலைக் குடிசைகளில் காலிக் கலயங்களை நிரப்ப, விவசாயிகளுக்கு மாதம் 30 கிலோ அரிசி வழங்கிய அன்னமிட்ட கை எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மற்றும் ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாப்புக் கவசமாக, அரணாக, ஆறரைக் கோடி ஏழைகளின் தாயாக வாழ்ந்து வரும் அம்மா, எதிரிகளின் சூழ்ச்சிகளையும், அவர்கள் ஏற்படுத்திய சோதனைகளையும் வென்று, சாதனைகள் பல படைத்தவர்கள். அழுத்தமான வாதம், ஆணித்தரமான உறுதி, அடக்குமுறைக் கூட்டத்தை ஒடுக்குகின்ற பேச்சு, மாநில உரிமையைக் காக்க மதிநுட்பச் செயல்பாடுகள், இவற்றின் மூலம் தமிழ் மண்ணின் உரிமை காத்திடும் தமிழ்த் தாய் நம் அம்மா அவர்கள், தீவிரவாதத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழிக்க, துணிந்து நடவடிக்கை எடுத்து, மத நல்லிணக்கத்திற்காகத் துணை புரிய சட்டம் வகுத்து, தமிழகத்தை அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்தார்கள். அம்மா அவர்களிடம் ஆன்மீகம் உண்டு, அறிவியலும் உண்டு. பழமையும், புதுமையும் பின்னிப் பிணைந்து, புரட்சிப் பாதையில், தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு, நெறி காட்டும் வழியில், தமிழகத்தை வழி நடத்தும் நமது அம்மா அவர்களை ஒரு மாபெரும் தலைவராக மக்கள் உருவாக்கி, மக்கள் தங்கள் இதயங்களிலே அவரை ஏந்திக் கொண்டிருக்கின்றனர். தனக்கு வாக்களித்த மக்களுடைய வாழ்வு வளம் பெறப் பாடுபடும், இந்த மாநிலத்தை இந்தியாவில் முதன்மை மாநிலமாக்கிட உழைத்திடும் பெருமைக்கும், சிறப்புக்கும் என்றும் உரிய எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.



பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனைக் காப்பதில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பது நாடறிந்த உண்மை. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதால், அரசுக்கு மிகுந்த நிதி நெருக்கடி உள்ள நிலையிலும், 2002-2003-ல் ரூ.124.69 கோடியாக இருந்த நிதியொதுக்கீட்டினை, 2003-2004-ல் ரூ.136.98 கோடியாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கெனச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் விரிவாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, அவற்றை மீண்டும் விவரிக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன். எனினும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் இவ்வரசு செய்துள்ள சாதனைகளைச் சுட்டிக்காட்டுவது எனது கடமையாகும்.

கல்வி நிலையங்களில் சேர்க்கை மற்றும் அரசுப் பணிகளில் நியமனம் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதில், தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1921 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை அவ்வப்போது மேல் நோக்கி வளர்ந்து, இன்று 69 விழுக்காடு அளவினை எட்டியுள்ளது. மொத்த இட ஒதுக்கீட்டின் அளவு 50 விழுக்காட்டிற்கு மேல் மிஞ்சக்கூடாது என்று மண்டல் குழு வழக்குகளில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததால், 69 விழுக்காட்டிற்கு ஏற்பட்ட பேராபத்தினைத் தடுக்கும்பொருட்டு, நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ்நாடு சட்டம் 15/1994-ஐ இம்மாமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதையும், இதனால் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்குப் பாதுகாப்பு அரணாகத் துணை நின்றார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நன்றியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்

தலைவி அம்மா அவர்களின் தளராத முயற்சியின் விளைவாக மேற்குறிப்பிட்ட சட்டம், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டு, சட்ட ரீதியான பாதுகாப்பினைப் பெற்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்ஙனம், சமூக நீதி காப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசு முனைப்போடு தொடர்ந்து செயலாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமையடைகிறேன்.

*பிற்பகல் 1-10*

தமிழகத்தைப் பொறுத்த வரை, தமிழ் மொழிவழிக் கல்வி பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மேனிலைப் பள்ளி வரையிலும் எவ்விதக் கட்டணமுமின்றி இவ்வரசால் இலவசக் கல்வி வழங்கப் படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் கல்வித் தரம் உயர வேண்டுமெனில், அவர்களுக்கு நல்லதொரு தரம் மிக்க கல்வியினை வழங்குவது அவசியம் என்ற நோக்கோடு, மேற்படி வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்குப் பல்வேறு வகையான கல்வி உதவித் தொகைகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. மானியக் கோரிக்கை எண் 9-ல் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பெரும் பங்கு, கல்வி மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களின்கீழ் பத்தரை இலட்சம் மாணவ, மாணவியருக்கு ரூ.43.00 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. இதில் சுமார் ஒரு இலட்சம் பேர் பட்டப் படிப்பு, பாலிடெக்னிக் படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயின்றோர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செய்துள்ளது. முதன்முறையாக, இவ்வரசின் தீவிர முயற்சியால் 2002-2003 ஆம் நிதியாண்டில் பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்களைச் செயல்படுத்த, மைய அரசின் நிதியுதவியாக ரூ.11 கோடி பெறப்பட்டு செலவு செய்யப்பட்டது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு படிப்புதவித் தொகைகளை விரைவாக வழங்க அதனைக் கணினிமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கென 972 மாணவர் இல்லங்கள் செயல்படுகின்றன. மாணவர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பள்ளி மாணவர்



இல்ல மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணத்தை 1-10-2001 முதல் ரூ.225-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். தற்போது ரூ.31.50 இலட்சத்தில் 465.39 சதுர மீட்டர் பரப்பளவில் மாணவர் இல்லம் கட்டப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் மாணவர் இல்லங்களைப் பார்வையிடும்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மாணவர் இல்லங்களில் தங்கியுள்ள மாணவர்கள் அடிப்படை வசதி இல்லாமல் படும் இன்னல்களைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. மாணவ, மாணவியரின் இன்னல் போக்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பதவி ஏற்றவுடன் மாணவர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் மிகப் பெரும் திட்டத்தை அறிவித்தது. 2001-2002-ல் மட்டும், ரூ.37.00 கோடி செலவில் 114 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. பிற்படுத்தப் பட்டோருக்கெனச் செயல்படுத்தப்படும் திட்டங்களில் இது ஒரு மைல் கல் என்றே குறிப்பிடலாம். இத்திட்டம் தொடரப்பட்டு, 2003-2004-ல் மேலும் 100 விடுதிகளுக்கு ரூ.31.50 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படும். 2001-2002 ஆம் ஆண்டு முதல் கட்டப்படும் மாணவர் இல்லங்களில் எல்லா அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடங்களில் இவ்வசதிகள் இல்லை. வசதிகள் செய்யப்பட்டிருந்த கட்டடங்கள் பழமையானதன் காரணமாக, பழுதுபார்ப்புப் பணிகள் தேவைப்பட்டன. கடந்த இரண்டு நிதியாண்டுகளில், ரூ.150 இலட்சம் செலவில் மாணவர் இல்லங்களுக்குப் பழுதுபார்ப்பு மற்றும் அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2003-2004-லும் தொடரப்படும்.

மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு சீருடை வழங்குதல், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குதல், கிராமப்புற மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியருக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல், இலவசக் கல்வித் திட்டம் முதலிய பல திட்டங்களைச் செயல்படுத்துகிறது. மாணவர்களிடையே படிப்பில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்த, மாவட்ட அளவிலான பரிசுகள், மாநில அளவிலான பரிசுகள், அறிஞர் அண்ணா மற்றும் தந்தை பெரியார் நினைவுப் பரிசுகள் முதலிய பரிசுகளையும் வழங்கி வருகிறது. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் வெகுகாலத்திற்கு முன் கட்டப்பட்டவை. இப்பள்ளிகளில் மாணவியருக்குக்கூட கழிவறை வசதி இல்லாத அவல நிலை இருந்தது. இதையறிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ரூ. 125 இலட்சம் செலவில் 193

பள்ளிகளுக்குக் கழிவறை கட்டும் ஒரு மிகப் பெரும் திட்டத்திற்கு 2001-2002-ல் ஒப்புதல் அளித்தார்கள். இதைத் தவிர, ரூ.150 இலட்சம் செலவில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் வழங்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004-ல் ரூ.23.20 இலட்சம் செலவில் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

2003-2004-ல் பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களையும் சேர்த்து, அனைத்து கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் கழிவறை அமைத்தல் மற்றும் குடிநீர் வழங்கும் பணி முழுமையாக முடிவடையும் எனப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர் இல்லங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணியும் முழுமையாக முடிவடைந்து விட்டது. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மற்றும் மாணவர் இல்லங்களில் எஞ்சியுள்ள அடிப்படை வசதிகள் அளிக்கும் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இந்தப் பெருமைகள் அனைத்தும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மற்றும் அரசுக் கட்டடங்களில் இயங்கும் மாணவர் இல்லங்கள் சரியாகப் பராமரிக்கப்படாமல் உள்ளன. பல ஆண்டுகளாக வெள்ளைகூட அடிக்கப்படாத கட்டடங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, இக்கட்டடங்களைப் பொதுப் பணித் துறை மூலம் முறையாக, காலமுறைப்படி பராமரிக்கும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் 2003-2004 ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார மேம்பாட்டிற்கெனப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சுய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வேலைவாய்ப்புப் பயிற்சிகள் இதில் முக்கியமானதாகும். தற்போதைய சூழ்நிலைகளுக்குத் தேவையில்லாத பயிற்சிகளுக்குப் பதிலாக, பல புதிய பயிற்சிகளை அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. பிளம்பிங், தையல், மருத்துவ ஆய்வுக்கூடப் பயிற்சி, ஆட்டோமொபைல் மெக்கானிக்



முதலிய பயிற்சிகளைக் குறிப்பிடும்படியாகச் சொல்லலாம். பயிற்சிக் கட்டணத்தில் 90 விழுக்காடு அரசால் ஏற்கப்படுகிறது. பயனாளிகள் முழு மனதுடன் பயிற்சியில் ஈடுபட, அவர்கள் பங்கும் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் 10 விழுக்காடுக் கட்டணம் மட்டும் பயிற்சியாளர்களால் செலுத்தப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

1000 இஸ்லாமிய இளைஞர்களுக்கு சுய தொழில் தொடங்குவதற்கு, தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திலிருந்து ரூ.2.50 கோடி கடனாகப் பெற்று, ஒவ்வொருவருக்கும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்கும், ரூ.25,000 கடனுதவி வழங்குவதற்கும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நலிவடைந்த, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்கள் சுய தொழில் செய்து வாழ்வதற்காக, இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். 2002-2003-ல் 1500 தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2002-2003-ல் ரூ.33.90 இலட்சம் செலவில் 3000 பித்தளை துணி தேய்ப்புப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்குப் பல்வேறு வகையான தொழில்களுக்கு எளிய வட்டி மற்றும் தவணை விகிதங்களில் கடன் வழங்கப்படுகிறது. இக்கழகத்திற்கென மாவட்டங்களில் கிளை அலுவலகம் எதுவும் இல்லை. எனவே, கடன் விண்ணப்பங்களைப் பெற்று ஆய்வு செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக வட்டார மேலாளர்களாக நியமித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இக்கழகத்தின் செயல்பாட்டினைச் சீரமைக்க, கணினிமயமாக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையில், 40,250 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் பயனாளிகளுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நிதியுதவியாக 38 கோடியே 67 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு மகளிர் நலனுக்கென சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஒரு இலட்சம் மகளிருக்கு, ஒருவருக்கு ரூ.2000 வீதம், ரூ.20 கோடி சிறு வணிகக் கடன் என்னும் Micro credit திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் இட்லிக் கடை, பூக்கடை, பழக் கடை, காய்கறிக் கடை முதலிய சிறு தொழில்கள் தொடங்குவதற்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிருக்கான இன்னுமொரு மிக முக்கியமான திட்டம், 'மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்'. இத்திட்டத்தின்கீழ் 5000 மகளிருக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி 7 நாட்களுக்கு அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 வீதம் ரூ.5 கோடி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், சுமார் ஒன்றரை இலட்சம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கு இத்துறையால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டும், போதிய அடிபபடை வசதிகள் மற்றும் நிதி வசதி இல்லாத காரணத்தால் பெரும்பாலானோர் வீடுகள் கட்டவில்லை. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்ற பின்பு, இந்நிலையை அறிந்து இவர்களுக்கென ஒரு புதிய திட்டத்தை அறிவித்தார்கள். அத்திட்டத்தின்கீழ், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய குடியிருப்புகளில் சாலை, தெரு விளக்கு, குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகள் செய்துதா, அடிப்படை வசதிகள் ஏற்படுத்த, 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் ஏழு கோடியே இருபத்து ஐந்து இலட்சம் செலவு செய்யப்பட்டது. இப்பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டும் இத்திட்டம் தொடரப்படும்.



மாண்புமிகு உறுப்பினர்கள் இத்துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்துத் தங்களது மேலான கருத்துகளைத் தெரிவித்தார்கள். அவற்றின்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

முடிவாக, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென 2003-2004 ஆம் நிதியாண்டில் கீழ்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்பு 1--** பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககம் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் நிர்வாகப் பணிகளைக் கணினிமயமாக்க ரூ.2.40 இலட்சம் செலவில் 1 கணினிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்பு 2--** 50 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 50 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்லங்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்பு 3--** 3 பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் இல்லங்கள், 3 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் இல்லங்கள் மற்றும் தாரமங்கலம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம் ஆகியவற்றிற்கு மாணவர் இல்லம் ஒன்றிற்கு ரூ.2.75 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.19.25 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**அறிவிப்பு 4--** பிரமலைக் கள்ளரின் கல்வி மேம்பாட்டிற்கென மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இப்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிவறை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 18 பள்ளிகளில் குடிநீர் வசதியும், 73 பள்ளிகளில் மின் இணைப்பு வசதியும் செய்யப்பட வேண்டியுள்ளது. நடப்பாண்டில் ரூ.13.20 இலட்சம் செலவில் பள்ளி ஒன்றிற்கு ரூ.90,000 வீதம் 18 பள்ளிகளுக்குக் குடிநீர் வசதியும்,

ரூ.21.90 இலட்சம் செலவில் பள்ளி ஒன்றிற்கு ரூ.30,000 வீதம் 73 பள்ளிகளுக்கு மின் இணைப்புகளும், மொத்தம் ரூ.65.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 5—2001-2002 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்டு வரும் மாணவர் இல்லங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அதற்கு முன்னர் கட்டப்பட்ட மாணவர் இல்லங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் இன்னும் 6 மாணவர் இல்லங்களில் குடிநீர் வசதியும், 7 மாணவர் இல்லங்களில் கழிவறை வசதியும் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது. நடப்பாண்டில் மாணவர் இல்லம் ஒன்றிற்கு ரூ.90,000 வீதம் 6 மாணவர் இல்லங்களுக்கு ரூ.5.40 இலட்சம் செலவில் குடிநீர் வசதியும், மாணவர் இல்லம் ஒன்றிற்கு ரூ.65,000 வீதம் 7 மாணவர் இல்லங்களுக்கு ரூ.4.55 இலட்சம் செலவில் கழிவறை வசதியும், மொத்தம் ரூ.9.95 இலட்சம் செலவில் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 6—மசூதிகள் மற்றும் தர்காக்கள் புதுப்பித்தல், இஸ்லாமியர் இடுகாட்டிற்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு வக்ஃபு வாரியத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியத்துடன் நடப்பாண்டில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிக்கென ரூ.10.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 7—தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அஞ்சல் முத்திரைப் பொறி மற்றும் நிகரி ரூ.1.00 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 8—தமிழ்நாடு ஹஜ் குழுவிற்குக் கணினி மற்றும் குளிர்சாதன இயந்திரம் ரூ.1.00 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 9—தர்காக்களில் வாரம் ஒரு முறை அன்னதானம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் சென்னை நகரில், அண்ணா சாலையில் உள்ள ஹசரத் சையத் மூஸா ஷா காதிரி தர்காவில் 3-3-2003 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, இத்திட்டத்தைப் பல தர்காக்களில் செயல்படுத்த கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. எனவே, இத்திட்டத்தை முதற்கட்டமாக மேலும் 12 தர்காக்களுக்கு



விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இறையன்பர்கள், செல்வந்தர்கள் மற்றும் தன்னார்வமுள்ள தொண்டர்கள் அளிக்கும் நன்கொடை நிதி ஆதாரம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கண்காணிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

இந்த மானியக் கோரிக்கை தொடர்பாகப் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடும், வழிகாட்டுதலோடும், ஏற்புடைய வகையில் விளக்கங்கள் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். பேரவை உறுப்பினர் மாண்புமிகு சந்தானம் அவர்கள் சொல்லும்பொழுது, சீர்மரபினர் மாணவிகளுக்கு, ஆடைகளுக்குப் பதிலாக, துணியாகத் தர வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களிடத்தில் வைத்தார்கள். சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு தைத்த uniform ஆடைகளுக்குப் பதிலாகத் துணியாகத் தர வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களின் ஆலோசனையை ஏற்று, பரிசீலித்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இசைவு அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் மூலம் சுட்டிக்காட்டியவற்றை நன்கு பரிசீலித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உரிய வகையில் நிதிநிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்கள் அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று, இம்மானியக் கோரிக்கையை ஏற்று, முழு மனதுடன், முழுமையாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

[2003 ஏப்ரல் 22

**(ஆ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.



2003 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.



திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை.

திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 9-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.131,72,75,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,26,08,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (இ) கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 4—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி. கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை.

திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே. ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.



**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 4-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.383,50,33,000/-, மூலதனக் கணக்கில் ரூ.51,29,16,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2003), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2003) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், சுருக்கமாகப் பேசுங்கள்.

பிற்பகல் 2-00

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளிலே தனி அதிகாரியை நியமனம் செய்வது என்ற முறையிலே கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தை நான் ஆட்சேபிக்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதுசம்பந்தமாக சில கருத்துகளைச் சொல்வதற்கு விரும்புகிறது. 2000ஆவது வருடத்திலே இதே பேரவையிலே, அன்று ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இதேபோன்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்தில் அதை ஆட்சேபித்து நான் சில கருத்துகளைச் சொன்னேன். அன்று முதலமைச்சராக இருந்தவர் ஒரு சில கருத்துகளை, அன்று இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது அவைக் குறிப்பிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. அதாவது, தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தளவிலே, ஆதிக்கம் செலுத்தக்கூடியவர்களுடைய இடையூறுகள் காரணமாக ஜனநாயக உரிமைகளை அவர்கள் பெற முடியாது என்ற ஒரு நிலை வருவது என்பது சரியல்ல. தற்போது வேறு வழியில்லாமல் நாங்கள் இதுமாதிரி ஒரு சட்ட மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இந்த அரசினுடைய, இந்தத் துறையினுடைய அமைச்சர், அந்த மாவட்டத்திலேயிருந்து இங்கே அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர் அங்கே சென்று அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களை அணுகி அங்கே ஜனநாயக ரீதியாகத் தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு ஊராட்சி அமைப்பினை அங்கே கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்து வைத்தார். துரதிருஷ்டவசமாக அவர்கள் அதைச் செய்யவில்லை.

நான் இந்த நேரத்திலே என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், காலையிலே எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர், இதுசம்பந்தமாகச் சில கருத்துகளைச் சொல்லக்கூடிய நேரத்திலே, அதன் மேலே ஒரு விவாதம் வந்தது. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இன்று

@ 21—1—2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



தமிழகத்தைப் பொறுத்தளவிலே பல பஞ்சாயத்துகளிலே இந்த அரசு தேர்தலை நடத்தியிருக்கிறது, நாங்கள் இல்லையென்று சொல்லவில்லை. தேர்தலே நடத்தவில்லை; அது நடத்தப்படவில்லையென்பது அல்ல வாதம். மேற்கு வங்காளத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே தேர்தல் நடத்தாமல் இல்லை......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், சட்டமுன்வடிவிலே உங்களுடைய கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் அந்த விவாதத்திற்குள்ளே போகவில்லை. என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தேர்தலிலே சில கட்சிகளுடன் சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அந்தக் கருத்துகளைச் சொல்வதாலே, ஏதோ சில முறைகேடுகள் அந்த மாநிலத்தில் நடக்கின்றன, ஆகவே, 356ஆவது ஷரத்தைப் பயன்படுத்தி அந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள் உண்டு. நாங்கள் அதை—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின் மேலே உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஒரு விஷயத்தைத் தெரிவித்து முடித்து விடுகிறேன். ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால், சர்வ கட்சிக் கூட்டம் அந்தப் பகுதியிலே நடத்தி சர்வ கட்சிகளினுடைய உதவியோடு, பங்காற்றுதலோடு, அந்தப் பகுதியிலே தேர்தல் நடத்தப்பட்டு, அங்கே ஜனநாயகபூர்வமான ஊராட்சி அமைப்பினை அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். அல்லாமல், இந்தத் தனி அதிகாரியினுடைய ஆட்சி--எல்லாக் காலத்திலேயும், 2000-க்கு மேலே, அதாவது நான்கு, ஐந்து ஆண்டுகளாகத் தனி அதிகாரிகளினுடைய ஆட்சி அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, தனி அதிகாரிகளினுடைய ஆட்சிதான் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு என்றைக்கும் தலையெழுத்து என்ற ஒரு நிலை வரக்கூடாது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்து, அந்தப் பகுதியிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எல்லாக் கட்சிகளையும் இணைத்து ஜனநாயகபூர்வமாக ஒரு தேர்தலை நடத்தி, அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லி, தனி அதிகாரியினுடைய கால அவகாசத்தை எந்த அளவிற்குக் குறைத்துத் தேர்தலை நடத்துவதற்கு முடியுமோ, அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலம், கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி ஆகிய இந்த நான்கு சிற்றூராட்சிகளுக்கான தேர்தல் கால அவகாசத்தை நீட்டிப்பதற்கான சட்டமுன்வடிவுகள் தொடர்ந்து இந்த அவையிலே வைக்கப்படுகின்றன. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், ஒரு வரியிலே ஒரு செய்தியைச் சொன்னார்கள். அது மன நிறைவு அளிப்பதாக நான் கருதுகிறேன். இந்த ஆட்சி அந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சியை எடுக்கும் என்று சொன்னார்கள். குறிப்பாக, இதை ஆட்சியின் மீதுள்ள குறையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சென்ற ஆட்சியிலேயும் இப்படிக் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டது. அதிலே என்னுடைய கருத்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் திரும்ப, தேவையான அளவிற்கு அதைப் படிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

நமது தமிழகத்திலே, குறிப்பாக, தந்தை பெரியார் பிறந்த மண்ணில், பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கையை ஏற்று, வழிமுறையையொட்டி நடத்திக் கொண்டிருக்கிற ஆட்சி நடைபெறுகிற காலகட்டத்தில், இது ஒரு கரும்புள்ளியாக இருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். ஆகவே இதைப் பற்றிய பரிசீலனை என்று சென்ற ஆண்டு வருகிறபோது, ஒரு கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மூத்த உறுப்பினர், மரியாதைக்குரிய திரு. சந்தானம் அவர்களும்கூட, அந்தக் கருத்தைப் பரிசீலிப்பதாகவும், நேரடியாக அந்தக் கிராமங்களுக்குச் சென்று, அந்த மக்களைச் சந்தித்துப்





பேசி, ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தி, மீண்டும் தேர்தலை நடத்துவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா, என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால், தொடர்ந்து இந்த நிலை நீடிக்கப்படுமானால், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற அரசமைப்புச் சட்டம், தேர்தல் நடத்தை விதிமுறைகள், இவற்றையெல்லாம் மறுப்பது என்பது, எந்த வகையிலே பொருத்தமானதாக இருக்கும் என்பதுதான் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற கேள்விக்குறி. ஆயிரக்கணக்கான உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறுகிறபோது, 4 ஊராட்சிகளுக்கு மட்டும் இப்படி நடைபெறாமல் இருப்பது சரிதானா என்ற கேள்வி எழுகிறது. அது நியாயமான கேள்வியாக இருக்கிறது. ஆகவே, அந்த 4 ஊராட்சிப் பகுதி மக்கள், அதிலும் மறுப்புத் தெரிவிக்கிறவர்கள் சிந்திக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் பணிவான வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே, மற்றவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, சர்வ கட்சிகளைக் கொண்ட கூட்டம் நடத்தப்பட வேண்டும்; தேவையான முயற்சிகளை எடுக்க வேண்டும்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதிலே நேரடியாகத் தலையிட்டு, அந்தத் தேர்தலை நடத்தி, ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமேயல்லாமல், இந்தச் சட்டத்தைத் திரும்பத் திரும்ப நீட்டிப்பது என்பது, பொருத்தமானதாக இல்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எனது கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய 4 ஊராட்சிகளுக்கான தனி அலுவலர்களினுடைய நியமன காலத்தை இன்னும் சில காலத்திற்கு நீட்டிப்பதற்காக, இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் வலியுறுத்துவது என்னவென்று சொன்னால், தொடர்ந்து இந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போவதும், ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் அதை மீண்டும் சில காலத்திற்குத் தள்ளி வைப்பதும், தனி அதிகாரிகளை நியமிப்பது என்பதும், ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை கொண்டிருக்கிற மக்களுக்கு மிகப்

[திரு. க. முருகவேல் ராஜன்] [2003 ஏப்ரல் 22

பெரும் மன உளைச்சலையும், மன அச்சுறுத்தலையும் உருவாக்கியிருக்கிறது. நாங்கள் கருதுவது என்னவென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இன்றைக்குப் பேசுகிறபோது, இந்த அரசு இந்தத் தேர்தலை நடத்தும் என்று சொன்னது, மனதிற்கு சிறிதளவு நம்பிக்கை ஊட்டுகிற ஒரு வார்த்தையாக இருக்கிறது. நாங்கள் நினைப்பது என்னவென்றால், முதலமைச்சா அவர்கள், உறுதியாக, உளப்பூர்வமாக, அதை நடத்தித் தீருவது என்று முடிவெடுத்துவிட்டால், அதற்கு நீண்ட காலம் பிடிக்காது; ஒரு மாத காலத்தில் நடத்த முடியும். ஆனால், நான் கேட்பது; அங்கே தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அண்ணா தி.மு.க.-வில் உறுப்பினர்களாக இருக்கக்கூடும். அவர்களை நிறுத்தியாவது நீங்கள் அந்தப் பதவிக்குக் கொண்டு வரலாம். அதற்குக்கூட முயற்சி செய்யாமல், தள்ளிப் போடுவது என்பது சரியாக இருக்காது. எனவே, இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே... (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்கு அண்ணா தி.மு.க. தான் காரணம் என்று தவறான கருத்தைக் கூறுகிறார். அது மிக, மிகத் தவறான ஒன்று. அங்கு ஒரு பொதுச் சூழலை உருவாக்கியாக வேண்டும். பொதுச் சூழலை உருவாக்கி, அங்கே தேர்தல் ஜனநாயக ரீதியாக நடக்கவேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம். அதற்கான ஆணையை இட்டிருக்கிறார்; நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்; அதை மாண்புமிகு முதல்வர் அவர்களே பல முறை தெளிவுபடுத்தியும் இருக்கிறார்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிற கருத்து அதுவல்ல. அங்கே தேர்தலிலே போட்டியிடுவதற்கு யாரும் முன்வர மறுக்கிறார்கள் என்று காரணம் சொல்லப்படுகிறது. அது உண்மையான நிலைமை அல்ல. தேர்தலிலே போட்டியிடுவதால், அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து ஏற்படும் என்கிற ஓர் அச்சுறுத்தலே காரணமாக இருப்பதால், ஆளுங்கட்சியின் சார்பான தலித் மக்களை... (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. எம்.சி சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சுறுத்தல் எல்லாம் காரணம் இல்லை. பாப்பாப்பட்டி,



2003 ஏப்ரல் 22] [திரு. எம்.சி. சம்பத்]

கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் கொட்டக்காச்சியேந்தல் ஆகிய பகுதிகளிலே, பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, அது இடைத் தேர்தலாக இருந்தாலும் சரி, யாரும் முன்வரவில்லை. முன்வந்தாலும், மனுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளதாகத்தான் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், தற்சமயம் தனி அலுவலர்களினுடைய பதவிக் காலங்கள், 24-4-2003 அன்று முடிவடைகின்ற காரணத்தினால், மேலும் 6 மாத காலத்திற்கு, அதனுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டும்; மேலும் ஊராட்சி சம்பந்தப்பட்ட அத்தனை நிர்வாகப் பணிகளும், அந்த மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்கின்ற உயரிய எண்ணத்தில்தான் இந்தச் சட்டமுன்வடிவு; மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை நான் வைத்து, அமர்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு மேலவளவு போன்ற முன்னுதாரணங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், உரையை முடியுங்கள். நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்.

பிற்பகல் 2-10

**திரு. க. முருகவேல் ராஜன்:** இந்தத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமே தவிர, தனி அலுவலர் நியமனத்தை நீட்டிக் கொண்டே போவது சரியல்ல என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 22

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2003) நிறைவேற்றப்பெறவேண்டும்".
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2003 ஏப்ரல் 22]

## (ஆ) தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2003), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2003).@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அக்டோபரிலும் 6 மாதம் நீட்டித்து இப்படி ஒரு சட்டமுன்வடிவை நிறைவேற்றினோம். அப்போதும் எங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தோம். இப்போது மீண்டும் அதை நீட்டித்து ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது. 283 (ஏ) என்னும் பிரிவில் சில தவறுகளும், குறைகளும் இருக்கின்றன. மக்கள் வரி கட்ட மறுக்கிறார்கள். போராட்டம் நடக்கிறது. ஆகவே மனுக்கள் வரவில்லை. இப்போது கொண்டுவருகிற இந்தச் சட்டமுன்வடிவு 2002ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் நாள்; 8 நாட்களுக்கு ஒரு சட்டமுன்வடிவு; இப்போது ஏப்ரல் 22; என்ன விளைவை உருவாக்கும் என்பதைத் தயவுசெய்து இந்த அரசு ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஏற்கெனவே மாநகராட்சிகளில் கட்டடங்களை வரன்முறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட நியதிகள் தவறானவை. 50 சதவீதத்திற்கும் அதிகமாகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதையும், ரிசர்வ்டு சைட்டுக்கு 10 சதவீதம் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் மாநகராட்சிகளில் இருக்கிற

@ 21-1-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் இலட்சக்கணக்கில் நிராகரித்து இருக்கிறார்கள். அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்களால் கட்ட முடியாது. 5 சென்ட் இடத்தில் வீடு கட்டி இருக்கிறவர்கள், 80 ஆயிரத்திலிருந்து ஒன்றே கால் இலட்சம் ரூபாய் வரை கட்டணத்தைக் கட்டி முறைப்படுத்திக்கொள்வது என்பது நீங்கள் எத்தனை முறை திருத்தம் கொண்டுவந்தாலும் சாத்தியமல்ல. ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் ஆட்சேபித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடித்துவிடுகிறேன். மனைப் பிரிவு, கட்டடங்கள் வரன்முறைப்படுத்துவதற்கான இந்தச் சட்டத் திருத்தம் என்பது, வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தப் பகுதி மக்களாலே ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குச் சுமையாக இருக்கிற காரணத்தாலேதான், மனுக்களினுடைய எண்ணிக்கை வரவில்லை; ஆகவே, மனுக்களினுடைய எண்ணிக்கை வராத காரணத்தால், சட்டம் நீட்டிக்கப்படுகிறது என்பது பொருத்தமற்றதாக இருக்கிறது. ஆகவே, சட்டமுன்வடிவைத் திருத்தி மக்களைப் பாதிக்காத வகையில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுத்தாலொழிய, மனுக்கள் வராது. ஆகவே, இந்தச் சட்டத் திருத்தம் இப்போது தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் ஒப்புதல் பெறாமலும், விதிகளுக்குப் புறம்பாகவும் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும், மனைப் பிரிவுகளையும் ஒரு வரன்முறைப்படுத்த வேண்டுமென்பதுதான் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை. எதிர்காலம், இன்னும் 20 ஆண்டு காலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், கோயம்புத்தூர் மாநகரம் மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட மாநகரமாக மாறும்; சுற்றுச்சூழல், சுகாதாரக் காற்றுடன் இருக்க



வேண்டும்; அதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருணாகரன் அவர்களுடைய சந்ததியினர் இட நெருக்கடி இல்லாமல் செல்ல வேண்டும் என்பதுதான் தமிழக அரசின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலையாய கொள்கை. அந்த அடிப்படையிலே, அத்தனை கட்டடங்களையும், மேம்படுத்தப்பட்ட மனைகளையும் வரன்முறைப்படுத்த வேண்டும்; சுற்றுச்சூழல் சுகாதாரக் காற்றுடன் இருக்க வேண்டும். இட நெருக்கடிகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, 30-4-2003 வரை விண்ணப்பங்கள் பெற்றுப் பரிசீலிக்கலாம் என்றும், இறுதி ஆணைக்குப்பின் அரசு முடிவு எடுக்கலாம் என்றும், உயர் நீதிமன்றம் கூறியுள்ளதால், உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின், இது குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற மாநகராட்சி மக்களுக்கு, தொலைநோக்குப் பார்வையில், அவர்கள் சுற்றுச்சூழலுடன் இருக்க வேண்டும், இட நெருக்கடி தவிர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அவையில் வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 2-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 22

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2003) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.[15]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-4-2003) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

81. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

162. மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

163. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் செயல்முறைத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

164. மானியக் கோரிக்கை எண் 1—ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

165. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

166. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் "மக்கள் சாசனம்", 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

167. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

168. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

# இணைப்பு I

(252ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 45

## தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை

## இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

## அறிவிப்புகள்

தமிழகத்தில் உள்ள அறநிலையங்கள், திருக்கோயில்கள், மக்களின் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமின்றி, அன்றைய தமிழர்கள் பண்பாட்டினை விளக்கும் கருத்துக் கருவூலங்களாகவும், தமிழர்களின் நாகரிகத்தின் உயரிய சின்னங்களாகவும், வெளிநாட்டினரையும் கவரும் வகையில் விளங்கி வருவது கண்கூடாகும். இத்தகைய வரலாற்றுக் கருவூலங்களானதும், அருளாளர்களால் பாடல் பெற்றதுமான திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அரசின் தலையாய கடமை ஆகும். திருக்கோயில்களில் ஆகம விதிகளுக்கிணங்க பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பணிகள் முறையாகச் செய்து குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும் என்பது ஆகம விதி முறை. இத்தகைய உயரிய நோக்கத்தினைத் தமது தலையாய கடமையாக ஏற்று இவ்வரசு திருப்பணிகள் செய்வதற்கென ஒரு செயல் திட்டத்தினை உருவாக்கி, அதன் வழி செயல்படுத்தி வருகிறது.

2002-2003ஆம் நிதியாண்டில், 967 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் முடித்து கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது. 2003-2004--நடப்பாண்டில் திருக்கோயில்களைத் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்திடவும், திருத்தேர்களைத் திருப்பணி செய்துத் தேர்த் திருவிழாவினை நடத்திடவும், மற்றும் திருக்கோயில்களுக்கு வருகை தரும் வழிபடுவோருக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், திருக்கோயில் வருமானத்தைப் பெருக்க கட்டடங்கள் கட்டவும் மற்றும் இதர முன்னேற்றப் பணிகளைச் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவை பின்வருமாறு:

(1) 2003-2004--நடப்பாண்டில் 1,008 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்கு செய்யப்படும்;

[2003 ஏப்ரல் 22

(2) சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்த 1,008 இணைகளுக்கு நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் செலவில் திருமணம் நடத்தி வைக்கப்படும். இத்திருமணங்களில் ஒரு இணைக்கு 4 கிராம் தங்கத் திருமாங்கல்யம் வழங்கப்படும்;

(3) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களால் நடத்தப்பெறும் கல்விக் கூடங்களில் அடிப்படை வசதிகள் செய்யப்படும்; இவ்வசதிகளுக்கு உத்தேசமாக மதிப்பீட்டுச் செலவு ரூ. 61 இலட்சம் ஆகும்.

அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும் சில கல்விக்கூடங்களின் பட்டியல் பின்வருமாறு:—

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி:**

(1) பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம் மாவட்டம்.

(2) மருதமலை தேவஸ்தானம் மேல்நிலைப் பள்ளி, வடவள்ளி, கோவை.

(3) அருள்மிகு வாழைத்தோட்டத்தய்யன் திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, அய்யம்பாளையம்.

(4) அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம்.

(5) தேவஸ்வம் மேல்நிலைப் பள்ளி, மண்டைக்காடு, கன்னியாகுமரி.

(6) தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, குழித்துறை, கன்னியாகுமரி.

(7) அருள்மிகு கலியுகவரதராஜப்பெருமாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லங்குறிச்சி, அரியலூர்.

**கழிப்பிட வசதி:**

(1) அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநி.

(2) அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கல்லூரி, பழநி.

(3) அருள்மிகு பழனியாண்டவர் ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரி.



2003 ஏப்ரல் 22]

(4) அருள்மிகு பழனியாண்டவர் பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி.

(5) அருள்மிகு பழனியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி.

(6) அருள்மிகு தேவி குமரி பெண்கள் கல்லூரி, குழித்துறை.

(7) அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவெண்காடு.

(8) அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவெண்காடு.

(9) மருதமலை தேவஸ்தானம் மேல்நிலைப் பள்ளி, வடவள்ளி, கோவை.

(10) அருள்மிகு வாழைத்தோட்டத்தய்யன் திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, அய்யம்பாளையம்.

(11) அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

(12) அருள்மிகு ஆண்டவர் சுப்ரமணியசுவாமி மேல்நிலைப் பள்ளி, திருப்பரங்குன்றம்.

(13) அருள்மிகு சுந்தரராஜா நடுநிலைப் பள்ளி, அழகர்கோயில்.

(14) அருள்மிகு குற்றாலநாதசுவாமி திருக்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குற்றாலம்.

(4) நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதி வசதியற்றதும், பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்றதுமான திருக்கோயில்களின் அனைத்து கால பூஜைகளைச் சீரமைக்கவும் மற்றும் திருப்பணிகள் நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்;

இத்திட்டத்தில் நிதி வசதி மிகுந்த 37 திருக்கோயில்களின் நிதியைக் கொண்டு 94 திருக்கோயில்களின் கால பூஜையைச் சீரமைக்கவும், மற்றும் நிதி வசதி மிகுந்த 50 திருக்கோயில்களின் நிதியைக் கொண்டு 147 திருக்கோயில்களின் திருப்பணியைச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(அ) இத்திட்டத்தின்கீழ், கால பூஜை சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள மற்றும் அச்செலவினை ஏற்கவுள்ள சில முக்கியத் திருக்கோயில்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நன்கொடை வழங்கும் திருக்கோயில் | கால பூஜைத் திட்டத்தில் பயனடையும் திருக்கோயில்கள் |
|---|---|---|
| 1. | அருள்மிகு தேவி<br>கருமாரியம்மன்<br>திருக்கோயில்,<br>திருவேற்காடு. | (1) அருள்மிகு பாலபதங்கீஸ்வரர்<br>திருக்கோயில், பாலூர்,<br>செங்கற்பட்டு.<br><br>(2) அருள்மிகு கைலாசநாதர்<br>திருக்கோயில், கோவளம்.<br><br>(3) அருள்மிகு நல்லிணகீஸ்வரர்<br>திருக்கோயில், எச்சூர்,<br>திருப்பெரும்புதூர்.<br><br>(4) அருள்மிகு கைலாசநாதர்<br>திருக்கோயில், சாலபோகம். |
| 2. | அருள்மிகு<br>கந்தசுவாமி<br>திருக்கோயில்,<br>திருப்போரூர். | மருந்தீஸ்வரர் மற்றும்<br>தியாகராஜசுவாமி திருக்கோயில்.<br>திருக்கச்சூர். |
| 3. | அருள்மிகு<br>அருணாசலேஸ்வரர்<br>திருக்கோயில்,<br>திருவண்ணாமலை. | அருள்மிகு வல்லபுரீஸ்வரர்<br>திருக்கோயில், வல்லம், வந்தவாசி<br>வட்டம். |
| 4. | அருள்மிகு<br>ரேணுகாம்பாள்<br>திருக்கோயில்,<br>அ.கோ. படவேடு. | (1) அருள்மிகு தாளபுரீஸ்வர்<br>திருக்கோயில்,<br>திருப்பன்னங்காடு.<br><br>(2) அருள்மிகு வாலீஸ்வரர்<br>திருக்கோயில்,<br>குரங்கனில்முட்டம், செய்யாறு.<br><br>(3) அருள்மிகு திருக்குறயீஸ்வரர்<br>திருக்கோயில்,<br>பெரியகொழப்பலூர், வந்தவாசி. |



| வ. எண் | நன்கொடை வழங்கும் திருக்கோயில் | கால பூஜைத் திட்டத்தில் பயனடையும் திருக்கோயில்கள் |
|---|---|---|
| 5. | அருள்மிகு<br>ஆபத்சகாயேஸ்வரர்<br>திருக்கோயில்,<br>வலங்கைமான். | (1) அருள்மிகு சௌந்தரேஸ்வரர்<br>திருக்கோயில், திருப்பனையூர்,<br>நாகப்பட்டினம் வட்டம்.<br><br>(2) அருள்மிகு சற்குனேஸ்வரர்<br>திருக்கோயில்,<br>சற்குனேஸ்வரம், குடவாசல்.<br><br>(3) அருள்மிகு மேகநாதசுவாமி<br>திருக்கோயில், திருமெய்ச்சூர்.<br><br>(4) அருள்மிகு ஐராவதீஸ்வரர்<br>திருக்கோயில், திருக்கொட்டாரம். |
| 6. | அருள்மிகு<br>மகாமாரியம்மன்<br>திருக்கோயில்,<br>வலங்கைமான்,<br>திருவாரூர்<br>மாவட்டம். | (1) அருள்மிகு பாதலேஸ்வரர்<br>திருக்கோயில்,<br>ஹரித்துவாரமங்கலம்.<br><br>(2) அருள்மிகு அபிமுக்தீஸ்வரர்<br>திருக்கோயில், திருப்பெருவேலூர்,<br>குடவாசல் வட்டம். |
| 7. | அருள்மிகு<br>முல்லைவனநாத<br>சுவாமி<br>திருக்கோயில், திருக்கருகாவூர். | (1) அருள்மிகு வேதபுரீஸ்வரர்<br>திருக்கோயில், நேமம்,<br>திருத்துறைப்பூண்டி வட்டம்.<br><br>(2) அருள்மிகு அக்னிபுரீஸ்வர்<br>திருக்கோயில், அன்னியூர், நன்னிலம். |

(ஆ) இத்திட்டத்தின்கீழ், திருப்பணித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள மற்றும் அச்செலவினை ஏற்கவுள்ள சில முக்கியத் திருக்கோயில்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நன்கொடை வழங்கும் திருக்கோயில் | திருப்பணித் திட்டத்தில் பயனடையும் திருக்கோயில்கள் |
|---|---|---|
| 1. | அருள்மிகு தேவி<br>கருமாரியம்மன்<br>திருக்கோயில்,<br>திருவேற்காடு. | அருள்மிகு ஆதிபீடபரமேஸ்வரர்<br>திருக்கோயில், காஞ்சிபுரம். |
| 2. | அருள்மிகு<br>சுப்பிரமணியசுவாமி<br>திருக்கோயில், திருத்தணி. | அருள்மிகு பணமுடீஸ்வரர்<br>திருக்கோயில், காஞ்சிபுரம். |

[2003 ஏப்ரல் 22

| | |
|---|---|
| 3. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில். மாங்காடு. | அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயில். சிறுவள்ளூர். காஞ்சிபுரம் வட்டம். |
| 4. அருள்மிகு இலக்ஷ்மிநரசிம்ம சுவாமி திருக்கோயில். சோளிங்கா. | (1) அருள்மிகு மன்னீஸ்வரர் திருக்கோயில். மனனிவாக்கம். |
| | (2) அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில். உத்திரமேரூர். |
| | (3) அருள்மிகு திருவாலீஸ்வரர் திருக்கோயில். நெரும்பூர். திருக்கழுக்குன்றம் வட்டம். |
| | (4) அருள்மிகு பாலீஸ்வரர் திருக்கோயில். பாலிவாக்கம். கும்மிடிப்பூண்டி. |
| 5. அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில். ஆலங்குடி. | (1) அருள்மிகு திருபயத்தநாதசுவாமி திருக்கோயில். திருபயத்தன்குடி. நாகப்பட்டினம். |
| | (2) அருள்மிகு நர்த்தனபுரீஸ்வரர் திருக்கோயில். தலாயலங்காடு. |
| | (3) அருள்மிகு சௌந்தரேஸ்வரர் திருக்கோயில். திருப்பனையூர். |
| | (4) அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில். திருக்கொட்டாரம். |
| 6. அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில். வலங்கைமான். | (1) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில். வீரசிங்கம்பட்டி. |
| | (2) அருள்மிகு கரும்பேஸ்வரர் திருக்கோயில். திருக்கனூர். |
| | (3) அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில். ஆண்டான்கோயில். |
| | (4) அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயில். ஆவூர். |
| 7. அருள்மிகு முல்லைவனநாத சுவாமி திருக்கோயில். திருக்கருகாவூர். | (1) அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில். நேமம். |
| | (2) அருள்மிகு அட்சயபுரீஸ்வரர் திருக்கோயில். கோயில்வெண்ணி. |
| | (3) அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில். முல்லைவாசல். |
| | (4) அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில். கிழக்கு அமராவதி. |



2003 ஏப்ரல் 22]

(5) வழிபடுவோரின் வசதியினை முன்னிட்டு நிதி வசதி உள்ள திருக்கோயில்களில் வலைதளம் வழியாகப் பணம் செலுத்தி வேண்டுதலை நிறைவேற்றிடும் வகையில் வசதிகள் செய்யப்படும்;

(6) திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் பலன் தரும் மற்றும் பலன் தரா மரங்கள் நடப்படும்;

(7) திருக்கோயில்களில் தேவையான இடங்களில் நந்தவனம் ஏற்படுத்தப்படும் மற்றும் ஏற்கெனவே உள்ள நந்தவனங்கள் சீரமைக்கப்படும்;

(8) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைப் பராமரிக்க, தூர் வாருதல், படிக்கட்டுகள் அமைத்தல், சுற்றுச்சுவர் அல்லது வேலியிட்டுப் பாதுகாத்தல் ஆகிய திருப்பணிகள் செய்யப்படும்;

(9) திருக்கோயில் மற்றும் திருக்குளங்களில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் நிறைவேற்றப்படும்;

(10) திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்;

(11) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வராத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் 250 திருக்கோயில்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும். (125 திருக்கோயில்கள் அரசு நிதி; 125 திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி)

(12) கிராமப்புறத்தில் உள்ள திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் 100 திருக்கோயில்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்;

(13) நடப்பு நிதி ஆண்டில் திருக்கோயில்களின் மரத்தேர்களைச் சீரமைத்து தேர்த் திருவிழா நடத்தப்படும்;

(14) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருமண மண்டபங்களில் திருக்கோயில் பணியாளர்களின் இல்ல நிகழ்ச்சிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகையில் 50 சதவிகிதம் வாடகைச் சலுகை அளிக்கப்படும்;

[2003 ஏப்ரல் 22

*(15)* நடப்பு நிதியாண்டில் *71* குறிப்பிட்ட திருக்கோயில்களில் *(அ)* திருப்பணி *(48* திருக்கோயில்கள்*)*, *(ஆ)* கட்டுமானப் பணி *(15* திருக்கோயில்கள்*)* மற்றும் *(இ)* தேர்த் திருப்பணிகள் *(8* திருக்கோயில்கள்*)* செய்யப்படும். அதன் உத்தேச செலவுத் தொகை ரூ.1940.54 இலட்சம் ஆகும். அவை பின்வருமாறு:

*(அ)* திருப்பணி வேலைகள்:

| வ. எண் | திருக்கோயில் | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அருள்மிகு சௌமியதாமோதரப் பெருமாள் திருக்கோயில், வில்லிவாக்கம், சென்னை-49. | 3-நிலை இராஜகோபுரம் பழுதுபார்த்து, புதுப்பித்தல் | 10.50 |
| 2 | அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில், பெரியபாளையம். | வெளிப் பிரகாரம் திருப்பணி | 75.00 |
| 3 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. | முன்மண்டபம் கட்டுமானப் பணி | 12.00 |
| 4 | அருள்மிகு புஷ்பரதீஸ்வரர் திருக்கோயில், ஞாயிறு கிராமம், பொன்னேரி வட்டம். | திருப்பணி வேலைகள் | 18.40 |
| 5 | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம். | திருப்பணி வேலைகள் | 42.80 |
| 6 | அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில், திருவத்திபுரம், செய்யாறு வட்டம். | திருப்பணி வேலைகள் | 6.00 |
| 7 | அருள்மிகு பெரியநாயகியம்மன் சமேத கனககிரீஸ்வரர் திருக்கோயில், தேவிகாபுரம், திருவண்ணாமலை. | திருப்பணி வேலைகள் | 10.40 |
| 8 | அருள்மிகு கச்சபேஸ்வரர் திருக்கோயில், காஞ்சிபுரம். | திருப்பணி வேலைகள் | 20.00 |
| 9 | அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், திருப்பழனம், திருவையாறு வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | திருப்பணி வேலைகள் | 15.00 |
| 10 | அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில், மன்னார்குடி வட்டம். | திருப்பணி வேலைகள் | 20.00 |
| 11 | அருள்மிகு அரசாபவிமோசன பெருமாள் திருக்கோயில், கண்டியூர். | திருப்பணி வேலைகள் | 10.00 |
| 12 | அருள்மிகு நவநீதேஸ்வரர்சுவாமி திருக்கோயில், சிக்கல், நாகப்பட்டினம் வட்டம். | திருப்பணி வேலைகள் | 10.00 |
| 13 | அருள்மிகு ஜெகத்ரெட்சகப் பெருமாள் திருக்கோயில், ஆடுதுறை பெருமாள் கோயில், பாபநாசம் வட்டம். | திருப்பணி வேலைகள் | 10.00 |
| 14 | அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், கரம்பியம், பட்டுக்கோட்டை வட்டம். | இராஜகோபுரத் திருப்பணி | 35.00 |
| 15 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவிடைக்கழி, தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம். | திருக்கோயிலைப் பழுதுபார்த்து, புதுப்பித்தல் | 10.00 |



2003 ஏப்ரல் 22]

[2003 ஏப்ரல் 22

| | | | |
|---|---|---|---|
| 16 | அருள்மிகு<br>ஐராவதீஸ்வரர்<br>திருக்கோயில், மருத்துவக்குடி<br>திருவிடைமருதூர்<br>வட்டம், தஞ்சாவூர்<br>மாவட்டம். | திருப்பணி<br>வேலைகள் | 17.15 |
| 17 | அருள்மிகு<br>ரத்தினபுரீஸ்வரர்<br>திருக்கோயில், திருவாளபுத்தூர்.<br>மயிலாடுதுறை வட்டம்.<br>நாகப்பட்டினம மாவட்டம். | திருப்பணி<br>வேலைகள் | 11.79 |
| 18 | அருள்மிகு<br>வாதாரண்யேஸ்வரர்<br>திருக்கோயில்.<br>வள்ளலார் கோயில்,<br>மயிலாடுதுறை நகர்<br>மற்றும் வட்டம். நாகப்பட்டினம்<br>மாவட்டம (தருமபுர ஆதீன<br>கோயில்) | இராஜகோபுரம்<br>உள்ளிட்ட<br>திருப்பணி<br>வேலைகள் | 30.00 |
| 19 | அருள்மிகு<br>கற்கடேஸ்வரா<br>திருக்கோயில். திருந்தேவன்குடி. | திருப்பணி<br>வேலைகள் | 12.71 |
| 20 | அருள்மிகு<br>கம்பகரேஸ்வரா<br>திருக்கோயில்,<br>திருப்புவனம்.<br>திருவிடைமருதூர்<br>வட்டம். தஞ்சாவூர்<br>மாவட்டம் (தருமபுர<br>ஆதீன கோயில்) | இராஜகோபுரம்<br>பழுதுபார்த்து.<br>புதுப்பித்தல் | 49.00 |
| 21 | அருள்மிகு<br>நாராயணப்பெருமாள்<br>திருக்கோயில். திருநாங்கூர்,<br>சீர்காழி வட்டம். | திருப்பணி<br>வேலைகள் | 7.52 |
| 22 | அருளமிகு<br>பாலசுப்பிரமணியசுவாமி<br>திருக்கோயில்.<br>வடசென்னிமலை.<br>ஆத்தூர். சேலம் வட்டம் | 5-நிலை<br>இராஜகோபுரம்<br>கட்டுதல் | 17.00 |



2003 ஏப்ரல் 22]

| | | | |
|---|---|---|---|
| 23 | அருள்மிகு காளியம்மன்<br>திருக்கோயில்,<br>அம்மாபேட்டை, சேலம்<br>மாவட்டம் | 5-நிலை<br>இராஜகோபுரம்<br>கட்டுதல் | 14.00 |
| 24 | அருள்மிகு<br>நாவலடியான்<br>கருப்பண்ணசுவாமி<br>திருக்கோயில்,<br>மோகனூர். நாமக்கல் வட்டம். | திருப்பணி<br>பொங்கு<br>மண்டபம்<br>கட்டுதல் | 11.40 |
| 25 | அருள்மிகு<br>மாசாணியம்மன்<br>திருக்கோயில்,<br>ஆனைமலை,<br>பொள்ளாச்சி வட்டம். | 5-நிலை<br>இராஜகோபுரம்<br>கட்டுதல் | 45.00 |
| 26 | அருளமிகு<br>மெய்பொருள்நாத-<br>சுவாமி திருக்கோயில்.<br>முதலிபாளையம்.<br>திருப்பூர் வட்டம்.<br>கட்டுதல் | சுவாமி<br>சன்னதி.<br>அம்மன்<br>சன்னதி.<br>சுப்பிரமணியர் சன்னதி | 15.00 |
| 27 | அருள்மிகு<br>சுப்பிரமணியசுவாமி<br>திருக்கோயில்.<br>சிவன்மலை, காங்கேயம் வட்டம். | 5-நிலை<br>இராஜகோபுரம்<br>கட்டுதல் | 45.00 |
| 28 | அருள்மிகு<br>அகத்தீஸ்வரர்<br>திருக்கோயில்.<br>அகிலாண்டபுரம்.<br>காங்கேயம் வட்டம். | 5-நிலை<br>இராஜகோபுரம்<br>கட்டுதல் | 40.00 |
| 29 | அருள்மிகு<br>சுப்பிரமணியசுவாமி<br>திருக்கோயில்.<br>புளியம்பட்டி. சத்தி வட்டம். | 3-நிலை<br>இராஜகோபுரம்<br>கட்டுதல் | 15.00 |
| 30 | அருள்மிகு<br>சங்கமேஸ்வரர்<br>திருக்கோயில்,<br>கோட்டை, கோவை<br>நகர் மற்றும் வட்டம். | 1. சுவாமி<br>சன்னதி<br>கர்ப்பகிரகம்,<br>அர்த்த<br>மண்டபம் மற்றும் 3-நிலை<br>விமானம் கட்டும் பணி | 22.75 |

[2003 ஏப்ரல் 22

| | | | |
|---|---|---|---|
| | | 2. அம்மன் சன்னதி கர்ப்பகிரகம், அர்த்த மண்டபம் 2-நிலை விமானம் கட்டுதல் | 15.00 |
| 31 | அருள்மிகு செலவீஸ்வர் பத்ரகாளியம்மன் திருக்கோயில், அந்தியூர், பவானி வட்டம், ஈரோடு மாவட்டம். | 5 நிலை இராஜ-கோபுரம் கட்டுதல் | 25.00 |
| 32 | அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயில், வெள்ளகோயில் மற்றும் திருப்பணி வேலைகள் | சுவாமி மற்றும் அம்பாள் சன்னதிகள் புதுப்பித்தல் | 25.00 |
| 33 | அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயில், பெரியூர், சத்தியமங்கலம் வட்டம். | திருக்கோயில் திருப்பணி | 15.00 |
| 34 | அருள்மிகு புண்டரீகாட்சபெருமாள் திருக்கோயில், திருவெள்ளறை, மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | திருப்பணி வேலைகள் | 15.00 |
| 35 | அருள்மிகு நாச்சியார் திருக்கோயில், உறையூர், திருச்சிராப்பள்ளி வட்டம் மற்றும் மாவட்டம். | திருப்பணி வேலைகள் | 11.29 |
| 36 | அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில், அன்பில், லால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். | திருப்பணி வேலைகள் | 10.65 |
| 37 | அருள்மிகு பாபநாதசுவாமி திருக்கோயில், பாபநாசம், அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம். | திருப்பணி வேலைகள் | 13.51 |



2003 ஏப்ரல் 22]

| | | | |
|---|---|---|---|
| 38 | அருள்மிகு காசிவிஸ்வநாதர்சுவாமி திருக்கோயில், தென்காசி நகர் மற்றும் வட்டம், திருநெல்வேலி மாவட்டம். | திருப்பணி வேலைகள் | 47.00 |
| 39 | அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில், சுசீந்தரம். | 49 திருப்பணி வேலைகள் | 136.40 |
| 40 | அருள்மிகு யோகநரசிங்கபெருமாள் திருக்கோயில், மதுரை வடக்கு வட்டம், மதுரை. | 3-நிலை இராஜகோபுரம் திருப்பணி | 9.00 |
| 41 | அருள்மிகு ஜெனகைமாரியம்மன் திருக்கோயில், சோழவந்தான் வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம் | 1. கருவறை அர்த்தமண்டபம் விமானம் திரும்பக் கட்டுதல் | 4.15 |
| | | 2. 5-நிலை இராஜகோபுரம் திரும்பக் கட்டுதல் | 18.00 |
| 42 | அருள்மிகு திருவட்டீஸ்வரர் திருக்கோயில், செட்டிக்குறிச்சி, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம் (உப கோயில்) | திருப்பணி வேலைகள் | 17.00 |
| 43 | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். | வடக்கு மற்றும் தெற்கு இராஜகோபுரம் கட்டுதல் | 270.00 |
| 44 | நெடும்பரம் அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில். | திருப்பணிகள் | 3.75 |
| 45 | அருள்மிகு வாசீஸ்வரசுவாமி திருக்கோயில், திருப்பாச்சூர், திருவள்ளூர் மாவட்டம். | திருப்பணிகள | 8.30 |

| | | | |
|---|---|---|---|
| 16 | அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயில், திருவாலங்காடு. | திருப்பணிகள் | 10.00 |
| 17 | அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில் | (1) தியான மண்டபம் கட்டுதல் | 2.20 |
| | | (2) 2-ம் பிரகாரத் தரையைப் புதுப்பித்தல் | 8.50 |
| | | (3) 3-ம் பிரகார வடபுறம் பிரசாத சமையல் அறை முதல மின்னாக்கி அறை வரை மேல்தளம பழுது நீக்குதல் | 6.00 |
| 18 | அருள்மிகு பாலாம்பிகை உடனுறை வேதபுரீசுவரர் திருக்கோயில், திருவேற்காடு. | ஆலய பிரகார மண்டபம் மேற்குப் புறம் விரிசல் ஏற்பட்டுள்ள பகுதியைப் பிரித்து, திரும்பக் கட்டுதல். | 20.00 |

## (ஆ) கட்டுமானப் பணிகள்:

| வ. எண் | திருக்கோயில் | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அருள்மிகு மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைச் சேர்ந்த அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை. | 1. சுற்று மண்டபம் கட்டுமானப் பணி | 24.00 |
| | | 2. வெள்ளி அம்பலம் | 66.00 |



| | | | |
|---|---|---|---|
| 2 | அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் | சேது இல்லம் பழைய கட்டடம் தங்கும் விடுதியை அப்புறப்படுத்தி வணிக வளாகம் மற்றும் தங்கும் விடுதி கட்டுதல். | 75.00 |
| 3. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் | பாளையங்-கோட்டை குல வணிகர்புரத்தில் உள்ள காலியிடத்தில் திருமண மண்டபம கட்டுதல். | 30.00 |
| 4. | அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில், அ.கோ. படவேடு. | சேவார்த்திகள் தங்கும் மண்டபம கட்டுதல். | 16.00 |
| 5 | அருள்மிகு அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். | 1. அன்னதான கூடம் கட்டுதல். | 16.50 |
| | | 2. ஆண்கள், பெண்கள் தங்கும் விடுதி கட்டுதல். | 12.00 |
| 6 | அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில், திருவக்கரை, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | சேவார்த்திகள் தங்கும் விடுதி கட்டுதல். | 10.00 |
| 7 | அருள்மிகு சிவசுப்பிரமணிய-சுவாமி திருக்கோயில், வேலுடையான்பட்டு, நெய்வேலி, பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். | திருமண மண்டபம் கட்டுதல். | 30.00 |

[2003 ஏப்ரல் 22

| | | | |
|---|---|---|---|
| 8 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புன்னைநல்லூர், தஞ்சாவூர் மாவட்டம். | நிழல் மண்டபம் கட்டுதல் | 35.00 |
| 9. | அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், பாண்டமங்கலம், உறையூர், திருச்சி வட்டம். | திருமண மண்டபம் கட்டுதல் | 35.00 |
| 10 | அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில், நாமக்கல். | அன்னதான மண்டபம் கட்டுதல் | 10.00 |
| 11 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி, சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம். | 4 மாரி மண்டபம் கட்டுதல் | 34.50 |
| 12 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. | அருள்மிகு மாரியம்மன் கோயில் அருகில் தடுப்புச் சுவர் கட்டி மேம்பாட்டுப் பணி செய்தல் | 10.00 |
| 13 | அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில் | 1. கருணை இல்ல கட்டடம் கட்டுதல் | 15.00 |
| | | 2. சிறிய மண்டபம் கட்டுமானப் பணி | 9.50 |
| 14 | அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில், தேக்கம்பட்டி, மேட்டுப்பாளையம் வட்டம், கோவை. | 1. சேவார்த்திகள் உணவருந்தும் மண்டபம் கட்டுதல் | 4.90 |
| | | 2. திருமதில் கட்டுதல் | 4.75 |
| | | 3. பவானி ஆற்றங்கரையின் ஓரம் தடுப்புச் சுவர் கட்டுதல் | 4.60 |



2003 ஏப்ரல் 22]

| | | | |
|---|---|---|---|
| 15 | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மேட்டுப்பாளையம் நகர் மற்றும் வட்டம் (உப கோயில்) | வசந்த மண்டபம் கட்டுதல் | 6.50 |

## (இ) திருத்தேர் திருப்பணி:

| வ. எண் | திருக்கோயில் | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், வள்ளிமலை, காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம். | திருத்தேர் திருப்பணி | 28.05 |
| 2 | அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், காஞ்சிபுரம் நகர் மற்றும் வட்டம். | திருத்தேர் திருப்பணி | 30.00 |
| 3 | அருள்மிகு பாஷ்யகாரசுவாமி திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். | திருத்தேர் திருப்பணி | 30.00 |
| 4 | அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயில், பண்ருட்டி நகர் மற்றும் வட்டம். | தேர்த் திருப்பணி | 10.00 |
| 5 | அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக்கோயில், திருமோகூர். | தேர்த் திருப்பணி | 3.17 |
| 6 | அருள்மிகு பால்வண்ணநாதசுவாமி திருக்கோயில், கரிவலம்வந்தநல்லூர், சங்கரன்கோயில். | தேர் மராமத்து | 4.90 |

| | | | |
|---|---|---|---|
| 7 | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், செவ்வாய்பேட்டை. | புதிய தேர் செய்தல் | 30.00 |
| 8 | அருள்மிகு துலுக்க சூடாமணியன் திருக்கோயில், புதுப்பட்டி, ராசிபுரம் வட்டம். | தேர் மராமத்து | 6.00 |

**16) பகுதி-II திட்டங்கள்.**

சென்னை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகக் கட்டடத்தை ரூபாய் 39.71 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்க்கவும், திருநெல்வேலியில் சிலைகள் பாதுகாப்பு மையத்தை ரூ. 23.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டவும் மற்றும் திருநெல்வேலி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தை ரூ.8.79 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்ப்பதற்குமான மூன்று புதிய திட்டங்களுக்கு நடப்பு நிதியாண்டு 2003-2004-ல் பகுதி-II திட்டங்கள் அடிப்படையில், முறையே ரூ.15.88 இலட்சம், ரூ.9.20 இலட்சம் மற்றும் ரூ.3.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



# இணைப்பு II

*(285ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 9**

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மை வகுப்பினரை சமூகப் பின்னடைவிலிருந்து விடுவிக்கவும், அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கும், பல்வேறு நலத் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் தமிழக அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது. வக்ஃபு வாரியம் மற்றும் மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புகளுக்கு இப்பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் நியமிக்கப்பட்டிருப்பது, உண்மையான, இரு பாலினர் நேர்மை நெறியை நிலை நிறுத்துவதிலும், மகளிருக்கு அதிகாரம் வழங்குவதிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அரசு கொண்டுள்ள உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தும் சான்றாகும். நமது மாண்புமிகு முதலமைச்சரின் விருப்பப்படி, இந்திய நாட்டின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாட்டினைக் கொணர இவ்வரசு அயராது செயல்படும்.

**இட ஒதுக்கீடு**

2) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டுக் கொள்கை தமிழ்நாட்டில் பல்லாண்டு காலமாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் சேர்க்கை ஆகியவற்றிற்கான இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதில் முன்னோடியாக விளங்கி, 1921ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீட்டுக் கொள்கை தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக, இப்பிரிவினர் பெரும் பயனடைந்து கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலாக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் உள்ளனர் என

மதிப்பிடப்பட்டுள்ளது. இட ஒதுக்கீட்டு அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கேற்ப, படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது 69 விழுக்காடு என்ற நிலையை அடைந்துள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு, பழங்குடியினருக்கு 1 விழுக்காடு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 30 விழுக்காடு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்குத் தற்போதைய கொள்கை வழிவகுக்கிறது. "மண்டல் குழு வழக்கு" என்று அழைக்கப்படும் "இந்திரா சஹானி (எ) மத்திய அரசு" வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் ஒட்டுமொத்த இட ஒதுக்கீடு 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தது. இதன் காரணமாக, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான அரசுதான், சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவீத இட ஒதுக்கீடு தொடர்ந்திட வகை செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1994) ஒன்றை இயற்றி, அரசியலமைப்புச் சட்டத்தின் 9ஆம் அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்தது. இச்சட்டத்தினை எதிர்த்து மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்பு நீதியர் ஆயத்திற்கு அனுப்பப்பட்டு, அவை நிலுவையில் இருந்து வருகின்றன.

மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில், நலிவுற்ற இப்பிரிவினரின் தொகை எத்தனை விழுக்காடாக இருக்கின்றதோ அதற்கு ஏற்றபடி இட ஒதுக்கீட்டின் அளவும் அமைய வேண்டும் என்பதே இவ்வரசின் உறுதியான முடிவாகும். நலிவுற்ற மக்களின் பல்வேறு பிரிவிற்கான இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயம் செய்வதில் பல்வேறு மாறுபட்ட சமூக அளவுகோல்கள் மற்றும் வரலாற்று உண்மைகளும் அடிப்படையாக அமைகின்றன என்பதாலும், இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும் என்பதாலும், இட ஒதுக்கீட்டின் அளவினை நிர்ணயிக்கும் பொறுப்பு அந்தந்த மாநில அரசின் அறிவார்ந்த முடிவிற்கு விடப்பட வேண்டும். இதற்கு வழிவகை செய்திட அரசியலமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டுவர மைய அரசு கோரப்பட்டுள்ளது. மேலும் மைய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துமாறும், அனைத்திந்தியப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துமாறும் அரசு மைய அரசைக் கோரியுள்ளது.





**கல்வி**

3) சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட இப்பிரிவினரின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்குக் கல்வி வளர்ச்சி ஒரு சிறந்த கருவியாகும் என்பதால், இவர்களின் கல்வி அறிவினை வளர்ப்பதிலும், அவர்களது கல்வித் தரத்தினை உயர்த்துவதிலும், இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும் நோக்குடன் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளையும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களையும் நடத்தி, இப்பிரிவினருக்குப் பல்வேறு கல்வி உதவித் தொகைகள், சீருடைகள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களையும் செயல்படுத்துகிறது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்குத் தரமான கல்வி பெறுவதற்கு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வின மாணவரில்லங்களுக்குக் கட்டடம் கட்டும் மாபெரும் திட்டத்தை இவ்வரசு மேற்கொண்டுள்ளது.

**(i) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

4) கல்வி நிலையிலும், எழுத்தறிவிலும் சீர்மரபின சமுதாயத்தினர், குறிப்பாக பிரமலைக் கள்ளர் இனத்தவர் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்துவதுடன், அவர்களது கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, பிரமலைக் கள்ளர் அதிகமாக வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில், இத்துறையின் மூலம் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மொத்த எண்ணிக்கை 49,918 ஆகும். இப்பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. பள்ளிகளின் நிலை உயர்த்துதல், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கட்டித் தருதல், ஆய்வுக்கூட உபகரணங்களை வழங்குதல், கழிப்பறைகள் கட்டுதல், மின் இணைப்புகள் அளித்தல் மற்றும் குடிநீர் வசதிகள் செய்தல் ஆகியவை இவ்வரசின் பல்வேறு முயற்சிகளாகும். 31-3-2001 அன்றைய நிலவரப்படி, 62 பள்ளிகளில் குடிநீர் வசதிகளும், 72 பள்ளிகளில் மின் இணைப்புகளும் மற்றும் 72 பள்ளிகளில் கழிவறை வசதிகளும் மட்டுமே இருந்தன. எனவே, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் குடிநீர் வசதி, மின் இணைப்பு மற்றும் கழிவறை வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் மிகு விரைவுத் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் ரூ. 274.50 இலட்சம் செலவில்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2003-2004-ல் மீதமுள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ. 43.20 இலட்சம் செலவில் குடிநீர் வசதி ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் கழிவறை மற்றும் குடிநீர் வழங்கும் பணிகள் முடிவடையும்.

பிரமலைக் கள்ளர் இனத்தவருக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளிக்க, ரூ. 85.00 இலட்சம் செலவில், தேனி மாவட்டம் உத்தமபாளையத்திலும், திருச்சி மாவட்டம், குமுளூரிலும் உள்ள மாவட்ட ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் தலா 50 இருக்கைகள் கொண்ட இரு பிரிவுகள் நிறுவ அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தேசிய கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவிடம் வகுப்புகள் தொடங்க அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டதும் பயிற்சி தொடங்கப்படும்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பாட்டிற்கென நடப்பு ஆண்டில் ரூ. 2195.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) மாணவர் இல்லங்கள்**

*(5)* பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கென இயக்கப்படும் மாணவர் இல்லங்கள் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் 53,851 மாணவர்கள், மாணவர் இல்ல வசதிகளைப் பெற்றுள்ளனர். மாணவர் இல்லங்களில் சேர, விண்ணப்பதாரரின் பெற்றோரின் ஆண்டு வருமானம், ரூ.50,000/-க் குட்பட்டு இருத்தல் வேண்டும். தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மாணவரில்லங்களில் போதிய அடிப்படை வசதிகள் இன்மையால், தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மாணவரில்லங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் மிகப் பெரும் திட்டத்தை இவ்வரசு படிப்படியாக அமல்படுத்தி வருகிறது. இதுவரை 114 மாணவரில்லங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடரப்பட்டு, மேலும் 100 மாணவரில்லங்களுக்குக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

அனைத்து மாணவர் இல்லங்களுக்கும் மாவு அரவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்துக் கல்லூரி மாணவர் இல்லங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர் இல்லங்களில் தங்கிப் படிப்பவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் வகையில், இந்த மாணவர் இல்லங்களுக்கு ஆங்கில



நாளிதழ் ஒன்றும், தமிழ் நாளிதழ்கள் இரண்டும் வழங்கப்படுகின்றன. மாணவர் இல்லங்களில் தங்கியுள்ள மாணவ/மாணவியர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகங்கள் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு மற்றும் +2 அரசு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ/மாணவியர்களின் திறனை உயர்த்த அவர்களுக்கு இலவசமாக எல்லாப் பாடங்களுக்கும் வழிகாட்டி நூல்களும் (கைடுகள்) வழங்கப்படுகின்றன. மாணவர் இல்லங்கள் முறையாகச் செயல்படுவதை உறுதிப்படுத்தவும், மாணவர் சேர்க்கையைக் கண்காணிக்கவும் ஒவ்வொரு மாணவர் இல்லத்திற்கும் மாணவர் இல்லக் கண்காணிப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2001-2002 மற்றும் 2002-2003-ல் ரூ.150.00 இலட்சம் செலவில் மாணவர் இல்லங்களுக்கு அடிப்படை வசதி அளிக்கும் பணியும், பழுதுபார்ப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டன. 2002-2003 ஆம் ஆண்டில் அனைத்து மாணவரில்லங்களுக்கும், இல்லம் ஒன்றிற்கு ரூ. 1000/- வீதம் விளையாட்டுச் சாதனங்களும், ரூ. 3000/- வீதம் நூலகங்களுக்குப் புத்தகங்களும், மொத்தம் ரூ. 39.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. மலைப்பிரதேசங்களில் உள்ள 18 மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மரத்தாலான இரண்டு அடுக்குப் படுக்கைகள், மொத்தம் 17.00 இலட்சம் செலவில் வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 2003-2004-ல் 100 மாணவரில்லங்களுக்கு ரூ. 30.00 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டிற்கு மாணவரில்லங்களைப் பராமரிக்க மொத்தம் ரூ. 4527.54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(iii) உணவுக் கட்டணங்கள் மற்றும் உணவு மானியங்கள்**

*(i)* கல்லூரி மற்றும் பள்ளி இல்ல மாணவ மற்றும் மாணவியர்களுக்கு முறையே ரூ. 400/- மற்றும் ரூ. 300/- மாதாந்திர உணவுக் கட்டணத் தொகையாக வழங்கப்படுகிறது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காகப் பராமரிக்கப்பட்டு வரும், அரசு அங்கீகாரம் பெற்ற 39 தனியார் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் உறையுள் கட்டணம் தொடர்பான செலவுகளை ஏற்பதற்கு உணவு மானியம் என்ற வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு, உணவு, உறையுள்

கட்டணமாக மாதம் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு ரூ. 150/- வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 1768 மாணவ, மாணவியர்கள் பயனடைந்தனர். இந்த மானியத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 25.29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(iv) கள்ளர் சீரமைப்புப் பள்ளி மற்றும் மாணவரில்லக் கட்டடப் பராமரிப்பு**

(7) மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கி வரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மற்றும் அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கான மாணவரில்லக் கட்டடங்கள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. எனவே, அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களின் பராமரிப்புப் பணியை பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**(v) பாடப் புத்தகங்கள் மற்றும் எழுதுபலகைகள் வழங்குதல்**

8) இத்திட்டத்தின்கீழ் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 3-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு எழுதுபலகைகளும், 10 வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் குறிப்பேடுகளும், பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 40.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(vi) சீருடை வழங்கல்**

9) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இல்லங்களில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் ஒவ்வோராண்டும் இரண்டு தொகுதி சீருடைகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 19,175 மாணவ/மாணவியரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவர் இல்லங்களைச் சேர்ந்த 20,000 மாணவ/மாணவியரும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைச் சேர்ந்த 45,000 மாணவ/மாணவியரும், இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 136.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





**(vii) படிப்பு உதவித் தொகை**

(10) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் நலனுக்கென பல்வேறு படிப்புதவித் தொகைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இவ்வரசின் சீரிய முயற்சியால் இப்படிப்புதவித் திட்டங்களைச் செயல்படுத்த, முதன்முறையாக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 16.00 கோடி மைய அரசின் நிதியுதவியாகப் பெறப்பட்டது. இத்திட்டத்திற்கு 2002-2003-ல் மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 26.30 கோடி செலவு செய்யப்பட்டது. பல்வேறு படிப்புதவித் தொகைத் திட்டங்களால் 10 இலட்சம் மாணவர்களுக்குமேல் பயன்பெறுகின்றனர். பல்வேறு படிப்புதவித் தொகைகளை விரைவாக வழங்க கணினிமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(அ) பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

(11) 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர்களுக்கு, அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு அனைத்துப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், மாணவர்கள் பள்ளிகளுக்குச் செலுத்த வேண்டிய தனிக் கட்டணமும் கல்வி நிலையங்களுக்கு நேரடியாக அளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் மாணவர்கள் சார்பில் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கப்படுகின்றது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படாத பட்டதாரி அல்லாத குடும்பங்களைச் சார்ந்த, ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியருக்குக் கல்விக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியர்கள் இச்சலுகைகயைப் பெற எந்த நிபந்தனையும் இல்லை. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் இச்சலுகைகளுக்குத் தகுதியுடையவராவர். இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.796.30 'இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 22

**(ஆ) மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை**

(12) கிராமங்களில் நிலவும் வறுமையின் காரணமாக, குறிப்பாக மிகவும்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவர்களிடையே ஆரம்பப் பள்ளி அளவிலேயே படிப்பை நிறுத்தி விடும் சூழ்நிலை நிலவுகின்றது. வறுமையின் காரணமாக, தொடர்ந்து கல்வி பயிலாமல் இடையில் நிறுத்திவிடும் இவ்வகுப்பைச் சார்ந்த மாணவியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அவர்கள் நடுநிலைப் பள்ளி வரை தொடர்ந்து பயின்றிடுவதை ஊக்குவிப்பதற்கென 2003-2004 ஆம் ஆண்டிற்கு ஊக்கத் தொகை வழங்க ரூ.300.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(இ) பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

(13) பள்ளிகளில் +2 வகுப்பு முதல், கல்லூரிகள்/பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சியாளர் நிலை வரையில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்காக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படாத மாணவ/மாணவியர்களுக்குப் படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தக விலை ஆகியவைகளில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையுமாகவும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேனிலைப் பள்ளியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், அவர்களது கல்விக் கட்டணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு உட்பட்டிருக்க வேண்டும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தில் வேறு பட்டதாரிகள் இருக்கக் கூடாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஆனால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்கு இவ்வாறான நிபந்தனைகள் ஏதுமில்லை. +2 பொதுத் தேர்வுக்குச் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணமும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் சார்பில் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கப்படுகிறது.

**(ஈ) உண்டி-உறையுள் கட்டணங்கள்**

(14) அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும்



2003 ஏப்ரல் 22]

மாணவ/மாணவியர்களுக்கு உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி உணவு மற்றும் உறையுள் கட்டணம், படிப்புதவித் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

பள்ளி மேற்படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்காக, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.1,327.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(உ) இலவசக் கல்வி**

(15) பத்தாம் வகுப்பு முதல் பி.ஏ., பி.எஸ்.சி., மற்றும் பி.காம்., போன்ற பட்டப் படிப்பு வரை பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியரைப் பொறுத்தமட்டில், (அ) அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மேல் இருக்கக்கூடாது மற்றும் (ஆ) அவருடைய குடும்பத்தில் பட்டதாரிகள் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பத்தாம் வகுப்பிலிருந்து பட்டப் படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தவர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளோடு, அக்குடும்பத்தில் அம்மாணவர் தொழிற்கல்வி பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பட்டயப் படிப்பு மற்றும் பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை வைத்தியம் மற்றும் சட்டம் முதலிய தொழில் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

இலவசக் கல்வித் திட்டங்களின்கீழ் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கு கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத பல்வகை கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக கட்டாயக் கட்டணங்கள் விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு நடப்பு ஆண்டிற்கு ரூ.2,159.06 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஊ) பரிசுகள் வழங்குதல்**

**(1) மாநில அளவிலான பரிசுகள்**

(16) இத்திட்டத்தின்கீழ் மாநில அளவில், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான அரசுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியாராக இருந்தால் ரூ.3,000-ம் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியாராக இருந்தால் ரூ.5,000-ம் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில் முதல் பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியாராக இருந்தால் ரூ.1,500-ம், மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியாராக இருந்தால் ரூ.3,000-ம் வழங்கப்படுகிறது.

**(2) மாவட்ட அளவிலான பரிசுகள்**

(17) இதுபோன்றே, மாவட்ட அளவில் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள் (மாணவருக்கு ஒன்று, மாணவியருக்கு ஒன்று) வழங்கப்படுகின்றன. பரிசு பெறுபவர் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியாராக இருப்பின், ரூ.1,500-ம் மிகவும் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியாராக இருப்பின், ரூ.3,000-ம் வழங்கப்படுகின்றன. இதே போன்று பத்தாம் வகுப்பு மாணவ/மாணவியருக்கு இரண்டு முதல் பரிசுகள், இரண்டு இரண்டாம் பரிசுகள் மற்றும் இரண்டு மூன்றாம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத் தொகை முறையே ரூ.500/- ரூ.250/- மற்றும் ரூ.150/- ஆகும். மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.1000/- ரூ.500/- மற்றும் ரூ.300/- ஆகும். 2003-2004 ஆம் ஆண்டிற்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத் திட்டத்திற்காக ரூ.2.22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



**(3) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு**

(18) பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசு என்பது பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம், இரண்டாம் இடம் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற மாணவர் இருவர், மாணவியர் இருவருக்கு, ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3,000 வீதம் நான்கு/ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுவதாகும்.

**(4) தந்தை பெரியார் நினைவுப் பரிசு**

(19) இதே போன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியரில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் உயரிய மதிப்பெண்கள் பெற்று பல்தொழில் பயிற்சி நிலையத்தில் பட்டயப் படிப்பில் சேரும் மாணவர் இருவருக்கும், மாணவியர் இருவருக்கும், ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் மூன்றாண்டுகளுக்குத் தந்தை பெரியார் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் நினைவுப் பரிசுகளுக்காக நடப்பு ஆண்டிற்கென ரூ.22.90 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(5) உயரிய மதிப்பெண்கள் பெற்ற மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகைகள் வழங்குதல்.**

(20) இத்திட்டத்தின்கீழ் +2 பொதுத் தேர்வில் மாநில அளவில் உயர்ந்த மதிப்பெண்கள் பெறும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனங்களைச் சார்ந்த மாணவ/மாணவியர் தொடர்ந்து உயர் கல்வி பயில ஆண்டுதோறும் தலா ரூ.1,500 வீதம் ஊக்கப் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த ஊக்கப் பரிசுத் தொகைகள் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ/மாணவியர் பட்டப் படிப்பு முடிக்கும் வரையிலோ அல்லது அதிகபட்சம் ஐந்து ஆண்டு காலத்திற்கோ, இதில் எது குறைவோ அந்தக் காலம் வரையில் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்குப் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு இல்லை. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டிற்கு ரூ.15.00 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 22

**பொருளாதார நிலை உயர்த்துதலும், பயிற்சியும்**

*(21)* கல்வி மற்றும் சமூக நிலையில் இப்பிரிவினரின் பின்தங்கிய நிலைக்கு வறுமையே அடிப்படைக் காரணமாகும் என்பதால், இப்பிரிவினர் சுயதொழிலில் ஈடுபட்டு பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்க பல திட்டங்களை அரசு சிறப்புக் கவனத்துடன் செயல்படுத்தி வருகிறது. மேலும் இவ்வகுப்பினைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்களுக்குப் பல்வேறு வேலைவாய்ப்புப் பயிற்சிகளை அரசு அளிக்கிறது.

**(1) இலவசக் கருவிகள் வழங்குதல்**

*(22)* சலவைத் தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு, ஆண்டு வருமானம் ஊரகப் பகுதிகளில் ரூ.16,000/-க்குட்பட்ட மற்றும் நகர்ப்புறங்களில் ரூ.24,000/-க்குட்பட்ட சலவைத் தொழிலாளர்களுக்கு பித்தளை தேய்ப்புப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.33.90 இலட்சம் செலவில் 3,000 பித்தளை தேய்ப்புப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

**(2) தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

*(23)* ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த, இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(3) பயிற்சியும், வேலைவாய்ப்பும்**

**(அ) அனைத்திந்தியப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்**

*(24)* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த திறமையான மாணவர்களும், மாணவியர்களும் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுகளில் வெற்றி பெற இயலும் வகையில் 100 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்க சென்னையில் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சி நிலையம் ஆதிதிராவிடருக்கான பயிற்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தின்



2003 ஏப்ரல் 22]

கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. மேலும், வட்டாரப் பயிற்சி மையம் ஒன்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில், 75 மாணவ, மாணவியருக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இயங்கி வருகிறது. வருமான வரம்பு நிபந்தனை இன்றி பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ/மாணவியர் இப்பயிற்சி நிலையத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள். எனினும், பயிற்சி நிலையத்துடன் இணைந்த மாணவர் இல்லத்தில் அனுமதி பெற பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகைப்படக்கூடாது. மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ.500/- வீதம் உணவுக் கட்டணம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.42.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சித் திட்டம்**

*(25)* பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு, அவர்களின் திறமையை மேம்படுத்த, தானியங்கி வாகன மெக்கானிக் பயிற்சி, பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்குபவர் பயிற்சி, தோல் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சி முதலிய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் பெரும்பாலும் அரசு நிறுவனங்களாலும், அத்தகைய வசதி இல்லாத இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களாலும் அளிக்கப்படுகிறது. பயிற்சிக் கட்டணம் அரசால் ஏற்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.90.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் சிறு வணிகக் கடன் வசதி**

*(26)* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 15 அம்சத் திட்டத்தின் அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார மேம்பாட்டிற்கென, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த 5000 மகளிருக்கு, ஒருவருக்கு ரூ.10,000/-வீதம் குறைந்த வட்டியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.5.00 கோடி கடன் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வகுப்பினைச் சேர்ந்த ஒரு இலட்சம் மகளிருக்கு குறைந்த வட்டியில் ஒருவருக்கு ரூ.2000/-வீதம் காய்கறிக் கடை, தையல் கடை, இட்லிக் கடை, பூக்கடை, பழக் கடை முதலிய தொழில்கள் தொடங்க, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.20.00 கோடி சிறு வணிகக் கடன் வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**விட்டுவசதி**

(27) பெரும்பாலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் பெரும்பாலானோருக்குச் சொந்தமாகக் குடியிருப்புகள் இல்லை. எனவே, தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி இவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி சுமார் 1.5 இலட்சத்திற்கு மேலாக வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ளது. இத்திட்டம் ஆரம்ப காலத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோரில், குறிப்பாக பூர்வீகத் தொழில் மேற்கொண்டுள்ள (1) புடிதிருத்துவோர் (2) சலவைத் தொழிலாளர் (3) போயர் (4) நரிக்குறவர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த ஏழை நிலமற்றவர்களுக்காகச் செயல்படுத்தப்பட்டது. பின்னர், இத்திட்டம் ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் அனைத்து பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் முற்பட்ட வகுப்பினருக்கும் கூட விரிவுபடுத்தப்பட்டது. ஆனால், ஒரு பக்கம் போதிய நிதி மற்றும் மறு பக்கம் அடிப்படை வசதி முதலியன இல்லாத நிலை போன்ற காரணங்களினால் ஒரு சிறிய பகுதி பயனாளிகள் மட்டுமே இவற்றில் வீடுகள் கட்டியுள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே, இவ்விடங்களில் சாலை வசதி, தெரு விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் சாக்கடை வசதி ஆகிய அடிப்படை வசதிகளை அமைக்க அரசு கருதியுள்ளது. இதற்கென 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.7.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்த ரூ.100.01 இலட்சமும், வீட்டுமனைகளுக்கு ரூ.75.51 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.





**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

(28) மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையொட்டி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மற்றும் பட்டியலில் இருந்து நீக்குவதற்காகப் பெறப்படும் கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கு "தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்" என்னும் நிரந்தர ஆணையத்தை அரசு ஏற்படுத்தியது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை திருத்தி அமைக்கும் பணியும் இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்கள் வகுப்புகளைச் சேர்க்குமாறு பல்வேறு வகுப்பினரிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் குறித்து ஆணையம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

(29) தமிழக அரசின் நிறுவனமான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 22-5-82-லிருந்து செயல்படத் தொடங்கியது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கென, இப்பிரிவைச் சார்ந்த தனி நபர், குழுக்கள் மற்றும் சங்கங்களிலிருந்து பெறப்படும் பொருளாதார மற்றும நிதிநிலை அடிப்படையில் சாத்தியக்கூறு உள்ள திட்டம், வியாபாரம் அல்லது செயல் திட்டங்களுக்குக் கடனுதவி அளிப்பதே இக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் புது தில்லியில் அமைந்துள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில வழி முகமையாகச் செயல்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட நிறுவனங்கள் கடன்கள் வழங்கவும், கடன்களை வசூலிக்கவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முகவர்களாகச் செயல்படுகின்றன:

1) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி
2) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்
3) கூட்டுறவு வங்கிகள்
4) தனியார் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள்
5) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் (ஆவின்)

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் இதுவரையில், புது தில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.3565.55 இலட்சமும், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ.464.00 இலட்சமும் நிதியுதவி பெற்றுள்ளது. இதுவரையில், 40,250 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயனாளிகளுக்கு நிதியுதவியாக ரூ. 3867.26 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களுக்குக் கட்டடம் கட்ட ஹட்கோவிடமிருந்து கடனுதவி பெற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஒருங்கிணைப்பு முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.

இச்சமுதாய மக்களுக்குச் சுயவேலைவாய்ப்பு வழிவகைகளை அதிகரிப்பதற்காக அவர்களுக்கு எளிய கடன் வசதிகள் விரைவில் கிடைக்கும் வகையில் ஆண்டுதோறும் மாவட்டவாரியான நிதி மற்றும் பயனாளிகள் இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

**சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது**

(30) சமூக நீதிக்காகப் போராடியவர்களைக் கௌரவிக்கும்பொருட்டு, சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகின்றது: ஒரு சவரன் எடையுள்ள தங்கப் பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கமும் விருதாக வழங்கப்படுகிறது.

**சிறுபான்மையினர் நலன்**

(31) சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, சிறுபான்மையினர் இம்மாநிலத்தின் ஓர் அங்கமாக விளங்குவதை உணரும் வகையில் அவர்களின் நலனுக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினரின் பொருளாதார, சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்கு மாண்புமிகு பிரதமரின் 15 அம்சத் திட்டம் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படுகிறது.



சிறுபான்மையினரின் நலனுக்காகக் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

(அ) காவல் துறைப் பணியாளர்கள் நியமனத்தில் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளித்தல்:

(ஆ) வளர்ச்சித் திட்டங்களில் சிறுபான்மையினருக்கு நியாயமான வாய்ப்புகள் அளித்தல்.

(இ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் அவர்களுடைய தாய் மொழியில் கல்வி பயில வசதிகள் செய்து கொடுத்தல்.

(ஈ) மொழிவழிச் சிறுபான்மையினருக்குத் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் பாடநூல்கள் வழங்குதல்.

(உ) சென்னை, கிருஷ்ணகிரி மற்றும் தேரூர் ஆகிய இடங்களில் முறையே உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நடத்துதல்.

**1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்:**

(32) இஸ்லாமியர் அதிக அளவில் வாழும் மாவட்டங்களிலுள்ள 1,000 இஸ்லாமிய இளைஞர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு, தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 2.50 கோடி கடனாகப் பெற்று, ஒவ்வொருவருக்கும் ரூ. 25,000/- கடனுதவியாக வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினருக்குக் கடன் வழங்கும் திட்டம்—மாவட்ட அளவில் நுண்ணிய முறையில் திட்டமிடுதல்:**

(33) சிறுபான்மையினருக்குக் கடன் வழங்க தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடம் உள்ள நிதியை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக மாவட்ட அளவில் நுண்ணிய முறையில் திட்டமிடும் வகையில் மாவட்ட ஆட்சியர்களுக்குப் பகிர்ந்தளிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாநில சிறுபான்மையினர் ஆணையம்**

(34) இம்மாநிலத்தின் மத வழி மற்றும் மொழி வழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு, மாநிலத்தில் சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் சிறுபான்மை

[2003 ஏப்ரல் 22

மக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக மனுதாரர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து, அம்மனுக்களில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள்மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளைப் பெறுகிறது. சிறுபான்மையினரின் பிரச்சினைகளைக் கண்டறியும்பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளைப் பார்வையிட்டு இவர்களுக்கான நலத் திட்டங்களைத் திறம்பட செயலாக்கிட அரசுக்குத் தக்க பரிந்துரைகளைச் செய்கின்றது.

**வக்ஃபு வாரியம்**

(35) 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 43/1995)கீழ் வக்ஃபு வாரியம் அமைக்கப்படுகிறது. வக்ஃபு அல்லது வக்ஃபு சொத்து தொடர்பான தகராறுகளை முடிவு செய்வதற்கு, 29 மாவட்டங்களில் அதிகார வரம்பைப் பெற்றுள்ள 23 வக்ஃபு நடுவர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அரசு நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. வக்ஃபு வாரியம் மற்றும் அதன்கீழ் இயங்கும் 10 வட்டார அலுவலகங்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்திற்கு 2003-2004-ல் ரூ.46.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பழுதுபார்ப்பு/சீரமைப்பு மானியம்**

(36) மசூதிகள் மற்றும் தர்காக்கள் புதுப்பித்தல், இஸ்லாமியர் இடுகாட்டிற்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்கு ஒவ்வோராண்டும், அரசு மானியம் வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மசூதிகள் மற்றும் தர்காக்களின் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.40.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**உலமா ஓய்வூதியத் திட்டம்**

(37) முவாஜின் (மோதினார்), பேஷ் இமாம் முஜாவர் முஸ்லிம் அரபு மொழி ஆசிரியர்கள் 20 ஆண்டுகள் பணியாற்றி, 60 வயதை அடைந்துள்ள வறிய நிலையில் உள்ள உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500/- வீதம் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. இதற்கு நடப்பு ஆண்டில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 22]

**தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழு**

(38) தமிழக ஹஜ் புனித யாத்திரைக் குழு. வக்ஃபு சம்பந்தப்பட்ட பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சரைத் தலைவராகவும், 15 பேரை உறுப்பினர்களாகவும் கொண்டது. மேலும் 10 பேரை மற்ற அங்கத்தினர்களின் சம்மதத்தின்பேரில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. ஹஜ் குழுச் சட்டம் 2002-ன்படி (மத்தியச் சட்டம் 35/2002) புதிய குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிர்வாகச் செலவுகளுக்காக தமிழ்நாடு மாநில ஹஜ் புனித யாத்திரைக் குழுவிற்கு, ஆண்டுதோறும் ரூ.10.00 இலட்சம் வழங்கப்படுகிறது. ஹஜ் புனிதப் பயணத்தின்போது, வெளியூர்களிலிருந்து வரும் ஹஜ் பயணிகளுக்குச் சென்னையில் தங்குவதற்கான இட வசதிகள் செய்து கொடுத்தல், தங்கியிருக்கும் இடத்திலிருந்து சென்னை விமான நிலையத்திற்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்தல், சென்னையிலிருந்து ஜெட்டாவிற்கு விமானத்தில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் போன்ற வசதிகளை பயணிகளுக்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செய்து கொடுக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும், நிர்வாகச் செலவிற்கான மானியம் நீங்கலாக அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகள் தங்குவதற்கான கட்டடங்களைத் தேர்வு செய்யும் குழுவின் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு ஆகும் செலவினத்திற்காகவும், மானியம் அளித்து வருகிறது. இதற்கு 2003-2004-ல் ரூ.7.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம்**

(39) முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம், சங்கங்கள் பதிவிற்கான சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சென்னையில் 1-10-1892 அன்று தொடங்கப்பட்டது. ஆதரவற்ற முஸ்லீம் விதவைகளுக்கு மாதாந்திரப் படி வழங்குதல், தகுதியுடைய முஸ்லீம் மகளிர் மற்றும் பெண்களுக்கு உதவிகள் செய்தல், ஆதரவற்ற முஸ்லீம் மகளிருக்கு, கதர், கைவினைப் பொருட்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்கான நிலையம் அமைத்தல் போன்றவை இச்சங்கத்தின் முக்கிய

[2003 ஏப்ரல் 22

நோக்கங்கள் ஆகும். இச்சங்கம் தொண்டர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெறுவதன் மூலம் தேவையான நிதியைத் திரட்டுகிறது. இச்சங்கம் திரட்டும் நிதிக்கு இணையானத் தொகையை அரசு மானியமாக வழங்குகிறது.

**புதிய திட்டங்கள்**

(40) பின்வரும் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் பகுதி-II திட்டங்களாகச் செயல்படுத்தப்படும்—

| | திட்டத்தின் பெயர் | மொத்தச் செலவு | 2003-2004-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | |
| | **பிற்படுத்தப்பட்டோர்** | | |
| 1. | இயக்குநரகத்திற்குக் கணினி வாங்குதல் | 1.20 | 1.20 |
| 2. | 50 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் இல்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்குதல். | 15.00 | 15.00 |
| 3. | 3 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் இல்லங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் | 8.25 | 8.25 |
| | **மிகவும் பிற்படுத்தப்பட்டோர்** | | |
| 4. | இயக்குநரகத்திற்குக் கணினி வாங்குதல் | 1.20 | 1.20 |
| 5. | 50 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவரில்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்குதல். | 15.00 | 15.00 |
| 6. | 3 மிகவும் பிறபடுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர் இல்லங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் | 8.25 | 8.25 |
| 7. | தாரமங்கலம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் இல்லத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டுதல். | 2.75 | 2.75 |
| 8. | 48 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி அளித்தல். | 43.20 | 43.20 |



2003 ஏப்ரல் 22]

| | | | |
|---|---|---|---|
| | **வக்ஃபு வாரியம்** | | |
| 9. | மசூதிகள்/தர்காக்களுக்குப் பழுது பார்ப்பு மானியம் | 40.00 | 40.00 |
| 10. | வக்ஃபு வாரியத்திற்கு நிகரி மற்றும் அஞ்சல் முத்திரைப் பொறி வழங்குதல். | 1.00 | 1.00 |
| | **ஹஜ் குழு** | | |
| 11. | ஹஜ் குழுவிற்குக் கணினி வாங்குதல் | 0.60 | 0.60 |
| 12. | ஹஜ் குழுவிற்குக் குளிர்சாதன இயந்திரம் வாங்குதல் | 0.40 | 0.40 |
| | மொத்தம் | 136.85 | 136.85 |

**முடிவுரை**

41) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னோடியாகத் திகழ வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சரின் விருப்பத்திற்கேற்ப, மேலே எடுத்துரைக்கப்பட்டவாறு இவ்வரசு அவர்களுக்கான நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி வருகிறது.

[2003 ஏப்ரல் 22

## இணைப்பு

### 2003-2004 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

| துறைத் தலைவர் | திட்டம் சாராதது | திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் | இலட்சத்தில்) | |
| தலைமைச் செயலகம் | - | 127.38 | 127.38 |
| வக்ஃபு வாரியம், ஹஜ் குழு மற்றும் முஸ்லீம் மகளிருக்கு உதவும் சங்கம் | 42.00 | 193.00 | 235.00 |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் | 3995.93 | 1783.99 | 5779.92 |
| பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | - | 27.74 | 27.74 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 3420.97 | 3564.51 | 6985.48 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | - | 17.23 | 17.23 |
| மூலதனச் செலவு | 526.08 | - | 526.08 |
| மொத்தம் | 7984.98 | 5713.85 | 13698.83 |



2003 ஏப்ரல் 22]

## இணைப்பு III

(286ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 4

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

### 2003-2004 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

1991ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 558.59 இலட்சத்தில் ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 107.12 இலட்சமும், பழங்குடியினரின் எண்ணிக்கை 5.74 இலட்சமும் ஆகும். இதில் 79 விழுக்காடு ஆதிதிராவிடர்களும், 88 விழுக்காடு பழங்குடியினரும் ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர். நாட்டிலேயே அதிக ஆதிதிராவிடர் மக்கள் தொகை கொண்ட ஆறாவது மாநிலமாகத் தமிழகம் உள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் நலிவடைந்து, நிலையான நிதி ஆதாரம் இன்றி, சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளனர். எனவே, இம்மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய வருவாய் ஈட்டும் வழிமுறைகளில் அவர்தம் பங்கு ஒரு குறுகிய வரம்பிற்குள்ளேயே உள்ளது. இந்நிலையை மாற்றிட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையானது சிறப்பான வகையில் அனைத்து நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகின்றது.

**கல்வி முன்னேற்றத்திற்கான முனைப்பு நடவடிக்கைகள்**

கல்வி அறிவைப் பொறுத்தவரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கும், இதர மக்களுக்கும் இடையேயான இடைவெளி தொடர்ந்து நீடித்து வருகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொதுக் கல்வியறிவு விழுக்காடு

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் | 46.74% |
| பழங்குடியினர் | 27.89% |
| பொது | 63.72% |

[2003 ஏப்ரல் 22

கல்வியறிவைப் பெருமளவில் அளிப்பதன்மூலம் நலிவடைந்துள்ள இம்மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையில் நிரந்தரமான மாறுதலை ஏற்படுத்த இயலும் என்பதை உணர்ந்துள்ள இவ்வரசு, கல்விக்கும், அதனைச் சார்ந்த பணிகளுக்கும் முன்னுரிமை அளித்து, பல திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. எனவே, 2003-2004ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.439.05 கோடியில் சுமார் 70 சதவீத நிதி கல்வித் திட்டங்களுக்காகவே செலவிடப்படுகிறது.

**நடப்புத் திட்டங்கள்**

இத்துறையின்கீழ் 1018 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும், 253 பழங்குடியினர் உண்டி—உறைவிடப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விபரம் பின்வருமாறு:—

| பள்ளியின் வகை | ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் | பழங்குடியினர் உண்டி-உறைவிடப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பப் பள்ளிகள் | 771 | 193 | 964 |
| நடுநிலைப் பள்ளிகள் | 139 | 42 | 181 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 49 | 8 | 57 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 59 | 10 | 69 |
| மொத்தம் | 1018 | 253 | 1271 |

கடந்த ஆண்டில் தருமபுரி மாவட்டம், அத்திப்பள்ளம் ஆதிதிராவிடர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், காஞ்சிபுரம் மாவட்டம் மணமை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், இந்த அரசு நிலை உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் கடலூர் மாவட்டம், சேப்பாக்கம், டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் ஆதிதிராவிட மாணவியர் நலனைக் கருத்தில் கொண்டு, டாக்டர் அம்பேத்கர் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி என மாணவியருக்காக ஒரு உயர்நிலைப் பள்ளியைத் தனியாக உருவாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



2003 ஏப்ரல் 22]

ஆதிதிராவிட நலப் பள்ளிகளில் சுமார் 2,12,000 மாணாக்கர்களும், பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் சுமார் 45,600 மாணாக்கர்களும் கல்வி பயிலுகின்றனர்.

கணினி அறிவியலில் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் 30 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 62 மேல்நிலைப் பள்ளிகளில் கணிப்பொறி அறிவியல் பாடப் பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் கணிப்பொறி அறிவியலில் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் ஆதிதிராவிடர் இன மாணவ, மாணவியரின் தேர்ச்சி 97 விழுக்காடாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

57 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இதுவரையில் 58 பள்ளிகளுக்குத் தனியாக அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் கடந்த ஆண்டில் மட்டும் மைய சிறப்பு நிதி உதவியைக் கொண்டு ஒரு பள்ளிக்கு ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் 12 மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிதாக அறிவியல் ஆய்வுக்கூடங்கள் ரூ.192.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தித் தரப்பட்டன.

**1. கல்விக் கட்டணச் சலுகை**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ மாணவ, மாணவியர்கள் வருமான வரம்பின்றி கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

**2. இலவசக் கல்வி**

இளங்கலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரின் கல்வி மேம்பாட்டில் அதிக அக்கறை கொண்டுள்ள இந்த அரசு 2001-2002ஆம் கல்வி ஆண்டு முதல் இம்மாணவியருக்கு இச்சலுகையை இவ்வரசு முதுகலைப் பட்டப்படிப்பு வரை நீட்டித்து ஆணை வழங்கியுள்ளது.

[2003 ஏப்ரல் 22

சுய்நிதிக் கல்லூரிகளில் இலவச இட ஒதுக்கீட்டின்கீழ் இடம் பெற்று கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கும், அவர்களது பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 50,920/-க்கு மிகாமல் இருப்பின், அந்தந்தப் படிப்பிற்கு அரசு கல்வி நிறுவனங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவில் இச்சலுகை வழங்கப்படுகிறது.

### 3. கல்வி உதவித் தொகை

6 முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்கள் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர். இதன்பொருட்டு ஏற்படும் இழப்புத் தொகை அந்தந்தக் கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

அதேபோல் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இத்தொகை முழுதும் இத்துறையால் அரசுத் தேர்வுத் துறைக்கு வழங்கப்படுகிறது.

சுகாதாரக் குறைவான தொழில் புரிவோரின் குழந்தைகளுக்கு சாதி, மதம் மற்றும் வருமான வரம்பின்றி 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியருக்கு மாதம் ரூ.25/- முதல் மாதம் ரூ.50/- வரை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கி, கல்வி பயில்வோருக்கு 3 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் மாதம் ரூ.200-ம், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயில்வோருக்கு மாதம் ரூ.250-ம் வழங்கப்படுகின்றது. இதுவன்றி ஒட்டுமொத்த மானியமாக மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.500-ம் வழங்கப்படுகிறது.

மைய அரசுத் திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மாணவ, மாணவியர்க்குப் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.65,290/-க்கு மிகாமல் இருப்பின், கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் செலுத்தவேண்டிய கட்டாயக் கட்டணங்கள் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றை ஈடு செய்து பாரமரிப்புப் படியாக மாதம் ரூ.90 முதல் ரூ.190 வரை படிப்புக்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இவர்கள் விடுதியில் தங்கி, கல்வி பயில்பவராக இருப்பின் இத்தொகை மாதம் ரூ.150 முதல் ரூ.425 வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது.



2003 ஏப்ரல் 22]

அதேபோன்று, மாநில அரசுத் திட்டத்தின்கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ மாணவ, மாணவியருக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருப்பின், மாதம் ரூ.65 முதல் மாதம் ரூ.125 வரையிலும் கல்வி உதவித் தொகையாக படிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்படுகிறது. இதுவே விடுதியில் தங்கி, கல்வி பயில்பவராக இருப்பின், இத்தொகை மாதம் ரூ.115 முதல் மாதம் ரூ.280 வரையில் படிப்பிற்கு ஏற்றவாறு பராமரிப்புச் செலவிற்காக கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

### 4. உயர் கல்வி மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கி, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி உதவித் தொகையானது, விடுதிக்கு ஆகும் செலவினை ஈடுகட்ட முடியாமல் கூடுதலாக ஆகின்ற விடுதிக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு உதவியாக, இதுவரையில் ரூ 6,500/- மற்றும் ரூ. 7,000/- என்ற அளவில் கல்விக் கடனாக வழங்கப்பட்டு வந்த கல்விக் கடன் உதவித் தொகை, இனி மானியமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, இந்த அரசு 2002-2003ஆம் கல்வி ஆண்டு முதல் உயர் கல்வி மானியமாக மாற்றி வழங்கிட உத்தரவிட்டுள்ளது. இதற்காக, கடந்த நிதி ஆண்டில் இந்த அரசு ரூ.5.00 கோடியை ஒதுக்கி, அத்தொகை மானியமாக வழங்கப்பட்டது. மேற்படி மானியம் மருத்துவப் படிப்பு பயிலும் மாணவர்களைப் பொறுத்தவரை 75% தொகை மானியமாகவும், 25% தொகை கடனாகவும் அனுமதிக்கப்படுகிறது. இம்மானியத்திற்குத் தகுதி பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.4.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5. புத்தக வங்கித் திட்டம்

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக், சட்டம், மேலாண்மை முதுகலைப் பட்டம், பட்டயக் கணக்கர் படிப்பு, உயிர் அறிவியல் மற்றும் இதர தொழில்நுட்பம் சார்ந்த படிப்புகளை மேற்கொள்ளும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக புத்தக வங்கித் திட்டம் செயல்படுத்தப்பட்டு

[2003 ஏப்ரல் 22

வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2,400/- முதல் ரூ.7,500/- வரை மதிப்பிலான புத்தகங்கள் இரண்டு பேருக்கு 1 செட் வீதம் வாங்கி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.34.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**6. இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்**

ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பேடுகள் 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இலவசமாக வழங்கப்படுகின்றன. கல்வித் துறைப் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களைப் பொறுத்தமட்டில் 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இத்துறை மூலம் இலவசப் பாடப்புத்தகங்களும், குறிப்பேடுகளும் வழங்கப்படுகின்றன. 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கல்வித் துறை மூலம் இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

**7. சிலேட்டுகள்**

இத்துறையில் பயிலும் முதல் வகுப்பு மாணவ, மாணவியர்க்கு சிலேட்டுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**8. சீருடைகள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும். ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**9. பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனப் பெண் குழந்தைகளின் 100 சதவீதம் பள்ளிச் சேர்க்கையை உறுதிப்படுத்திடும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது முந்தைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்த திட்டமான பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ், கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், விருதுநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், சேலம், நாமக்கல்,



2003 ஏப்ரல் 22]

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500-ம், அதேபோன்று 6 ஆம் வகுப்பில் சேர்ந்து உயர்நிலைப் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்திடுவதை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு 6 ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் 30,000 ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவியருக்கு மாதம் ரூ.100 வீதம் 10 மாதத்திற்கு ரூ.1000-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென ஆண்டிற்கு ரூ. 6.00 கோடி செலவிடப்படுகிறது. இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 6.00 கோடி ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

**10. இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் உன்னதமான திட்டத்தை அறிவித்தார்கள். அதன்படி, கடந்த 2001-2002ஆம் கல்வி ஆண்டில் 56,525 மிதிவண்டிகள் ரூ. 7.69 கோடி செலவில் இலவசமாக மாணவியருக்கு வழங்கப்பட்டன.

அதேபோல 2002-2003ஆம் கல்வி ஆண்டில் 47,980 மாணவியருக்கு ரூ. 6.91 கோடி செலவில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

நடப்பு நிதி ஆண்டில் இத்திட்டத்தை நடைமுறைபடுத்த ரூ. 7.49 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. முதுகலைப் பட்டம் பயிலும் மாணவியருக்கு சலுகையும், விடுதியும்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி 2001-2002ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கு முதுகலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டம் நீட்டித்து ஆணையிடப்பட்டுள்ளது.

அதேபோல், முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியர்களுக்கென தனியாக ஒரு விடுதி சென்னையில் கடந்த 2001-2002 முதல் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

**12. பரிசுத் தொகைகள் (மாநில அளவில்)**

பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு மாநில அளவில் பொதுப் பரிசுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1. | பன்னிரெண்டாம் வகுப்பு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி) | பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.25,000/- வீதம். |
| 2. | பத்தாம வகுப்பு | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவதாக வரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.10,000/- வீதம். |
| 3. | ப்ளஸ் 2 வகுப்புத் தேர்வு மாநில அளவில் தேர்ச்சி (22 பாடங்கள்) | பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடங்களிலும் (22 பாடங்கள்) முதல் மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.2000/- வீதம். |
| 4. | பத்தாம வகுப்புத் தேர்வில் மாநில அளவில் (முதல் ஐந்து பாடங்கள்) | பத்தாம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் (5 பாடங்கள்) முதல் மதிப்பெண்கள் பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசு ரூ.1000 வீதம் |

**13. பரிசுத் தொகைகள் (மாவட்ட அளவில்)**

அனைத்துப் பள்ளிகள் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு மாவட்டத்தில் பொதுப் பள்ளிகள் உட்பட ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளிலும் பொதுப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.





| | | |
|---|---|---|
| 1. | பன்னிரெண்டாம் வகுப்பு (மேல்நிலைப் பள்ளிக் கல்வி) | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசுகள் ரூ.3000/- வீதம் |
| 2. | பத்தாம் வகுப்பு (3 பரிசுகள்) | |
| | முதல் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசுகள் ரூ.1000/- வீதம் |
| | இரண்டாம் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் ரூ.500/- வீதம் |
| | மூன்றாம் பரிசு | ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ ஆதிதிராவிடர் கிறித்துவர் இனம் ஒருங்கிணைந்து ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப பரிசுகள் ரூ.200/- வீதம் |

**14. முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்**

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களை ஊக்குவிக்க ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவர்களில் முதல் ஆயிரம் பேருக்கும், மாணவிகளில் முதல் ஆயிரம் பேருக்கும், அவர்கள் மேற்படிப்பினைத் தொடர, ஆண்டுக்கு ரூ.1500/- வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது. 2002-2003ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.12.79 இலட்சமாகும்.

**15. விடுதிகள்**

இத்துறையின்கீழ், ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்காக 1,076 விடுதிகளும், பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்காக 26 விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 502 விடுதிகள் அரசின் சொந்தக் கட்டடங்களிலும், 574 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் சுமார் 76,000 மாணவ, மாணவியர்கள் தங்கி, கல்வி பயிலுகின்றனர்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 574 விடுதிகளுக்கும் அடிப்படை வசதிகளுடன்கூடிய அரசு சொந்தக் கட்டடங்கள் இரண்டு ஆண்டு காலத்திற்குள் கட்டப்படவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன்பேரில் சிறப்பு நடவடிக்கையாக முதல் கட்டமாக 143 விடுதிகளுக்கு ஹட்கோ கடனுதவி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியுடன் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அவை தற்போது முடிவுறும் தறுவாயில் உள்ளன. நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு 150 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்ட இடத் தேர்வுப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இடத் தேர்வுப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு கட்டடப் பணிகள் துவக்கப்படும். இவையன்றி வரவு-செலவுத் திட்டத்தில் வழக்கமாக மைய அரசின் 50% மானிய உதவியுடன் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 23 விடுதிகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டும் பணியும் தனியாக நடைபெற்று வருகிறது. மேலும் கணக்கெடுப்பின்போது 51 விடுதிகளுக்கு ஏற்கெனவே கட்டடப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தற்போது முடியும் தறுவாயில் உள்ளன. இந்த நடவடிக்கைகளின் பயனாக நடப்பு ஆண்டிற்குள் மொத்தம் 367 விடுதிகள் வாடகைக் கட்டடங்களிலிருந்து அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கத் தொடங்கும்.

### 16. பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

"சர்வ சிக்ஷா அபியான்"—அனைவருக்கும் கல்வி எனும் திட்டத்தின் கீழ், பள்ளிக் கல்வித் துறையுடன் சேர்ந்து செயலாற்ற இத்துறை ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் தொடக்க மற்றும் நடுநிலை நலப் பள்ளிகளின் தரமும், வசதிகளும் உயர்வடையும், சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் ஆசிரியர் புத்தொளிப் பயிற்சி முதன்முறையாக மேற்கொள்ளப்படும்.

### 17. குடியுரிமைப் பாதுகாப்பு

இம்மாநிலத்தில் தீண்டாமைப் பழக்கத்தை ஒழிக்கவும் மற்றும் ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுக்கவும், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம், 1989 ஆகியவை மிகச் சிறப்பாகவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கென கூடுதல் காவல் துறை இயக்குநர் (சமூக நீதி-குற்றப் புலனாய்வுத் துறை) அவர்கள்





தலைமையின்கீழ் காவல் துறை துணைத் தலைவர் மேற்பார்வையில் மனித உரிமைகள்/சமூக நீதி குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது மாவட்டங்களில் 7 காவல் சரகங்களில் 7 துணை காவல் கண்காணிப்பாளர்களும் மற்றும் 31 காவல் ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர். மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு, இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நடப்பிலுள்ள பணிகள், பாதிக்கப்பட்டோர் மற்றும் அவரைச் சார்ந்திருப்பவர்களுக்குத் தீருதவி வழங்கல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகிய பணிகள் இக்குழுவின் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன.

#### விழிப்புணர்வு முகாம்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் அரசு அதிகாரிகள் அதிக அக்கறை கொண்டு மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுவதன் அவசியம் குறித்து அரசு அதிகாரிகளிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு இணங்க, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் இதுவரை 24 விழிப்புணர்வுக் கூட்டங்களும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு இந்த உணர்வு தூண்டப்பட்டு வருகிறது.

### 18. இட ஒதுக்கீடு

அரசுப் பணியாளர் தேர்வு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நேரடி நியமனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சட்டப்படியான 18% மற்றும 1% இட ஒதுக்கீட்டின்படியே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். இந்த இட ஒதுக்கீட்டின்படி தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பணி நாடுநர்கள் போதிய அளவில் கிடைக்கப்பெறாத பட்சத்தில், அவர்களுக்கான அந்தப் பணியிடங்கள் பின்னடைவு காலிப் பணியிடங்களாக அறிவிக்கப்பட்டு, அடுத்து வருகின்ற தேர்வுகள் அல்லது சிறப்புத் தேர்வுகள் மூலம் நிரப்பப்படுகின்றன. இப்படிப்பட்ட பின்னடைவு காலிப் பணியிடங்கள்

[2003 ஏப்ரல் 22

எந்தச் சூழ்நிலையிலும் காலாவதியாக சட்டப்படி அனுமதிக்கப்படுவதில்லை.

அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள்/வாரியங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏ, பி, சி, டி ஆகிய ஒவ்வொரு பிரிவு பணியிடங்களிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்கேற்பு முறையே 18% மற்றும் 1% ஆக இருப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடும் மற்றும் இந்தப் பங்கேற்பு குறைவுபடுகின்ற இனங்களில் அந்தந்தப் பிரிவில் நுழைவு நிலையில் நேரடி நியமனம் மூலமாகவோ அல்லது பணி மாறுதல் மூலமாகவோ அப்பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு நிரப்புவதற்கும், தேவைப்படின், அந்தந்தப் பணியிடங்களுக்கான பணி விதிகளுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டபடி விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனை ஆய்வு செய்ய ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு ஆணை (நிலை) எண் 11, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை 25-03-1998-ஐ மீண்டும் செயல்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**19. கொத்தடிமை ஒழிப்பு**

தேசிய அளவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்காக கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் 1976-ல் இயற்றப்பட்டது. இச்சட்டம் அதே ஆண்டு முதல் தமிழகத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் கொத்தடிமைத்தனத்தில் சிக்கியுள்ளவர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை மாநிலத்தில் திறம்பட நிறைவேற்றிடவும் அதன்மூலம் நிவாரணப் பணியைக் கண்காணிக்கவும், பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் மூலம் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்தல், குறிப்பாக வீட்டுவசதி வழங்குதல் போன்றவை குறித்து முடிவு எடுப்பதற்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. கடன் வழங்குவோர்



2003 ஏப்ரல் 22]

மற்றும் முதலாளிகளிடம் கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணத் தொகை ரூ.1000/-ம் பின்னர் வருவாய் ஈட்டும் தொழில் மேற்கொள்ள மறுவாழ்வு நிதியாக ரூ.19,000/-ம் வழங்கப்படுகிறது. இதுவரையில் 11,916 நபர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

**20. திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமைத் தடுப்பு மற்றும் மறுவாழ்வு மாதிரித் திட்டம்**

இந்த அரசு, கொத்தடிமைகள் விடுவிப்பு மற்றும் அவர்தம் மறுவாழ்வுமீது அக்கறை செலுத்துவதோடு மட்டுமல்லாமல், புதியவர்கள் கொத்தடிமைகளாக உருவாகாமல் இருப்பதிலும் கவனம் செலுத்துகிறது. அகில உலகத் தொழிலாளரமைப்பின் மூலம் நிதியுதவி பெற்று திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தடிமைகளாப் பணிபுரியும் தொழிலாளர்களை விடுவித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அண்மையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் தலைமையின்கீழ் திட்ட அறிவுரைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஆகும் செலவினமான ரூ.25.85 கோடியை உலகத் தொழிலாளர் நல நிறுவனமும், மாநில அரசும் 80 மற்றும் 20 என்ற விழுக்காட்டில் பகிர்ந்துகொள்ளும்.

**21. சாதிச் சான்றுகள்**

கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுப் பணிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர்களுக்கு அரசியல் அமைப்பின்கீழ் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டை போலியான சாதிச் சான்றுகள் அளித்து இதர இனத்தவர் பெறுவதன் மூலம் உண்மையான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் பாதிக்கபடுகின்றனர். எனவே, அவ்வாறு அளிக்கப்பட்ட சான்றுகளின் மெய்த்தன்மையினை ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். இதற்கென உச்ச நீதிமன்றம் ஏ.ஐ.ஆர்.1995 எஸ்.சி.94-ல் சமூக நிலைச் சான்று வழங்குதல், அதன் மெய்த்தன்மையினை ஆய்வு செய்தல் மற்றும் ஒப்பளித்தல் குறித்து வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தளித்துள்ளது. அதனடிப்படையில், இவ்வரசு மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாநில அளவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர் தலைமையிலும் இரு குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்கள் இத்தகு

[2003 ஏப்ரல் 22

நிகழ்வுகளை, உரிய ஆவணங்களைப் பரிசீலித்து ஆய்வு செய்தபின், சாதிச் சான்றிதழ்கள் பொய்த்தன்மை வாய்ந்ததாய் இருப்பின் அவற்றை ரத்துச் செய்து விரிவான ஆணைகள் வெளியிடுகின்றன. மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களால் வெளியிடப்படும் ஆணைகளை மாநில கூர்நோக்குக் குழு மறு ஆய்வு செய்வதுடன், மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களின் ஆணையினால் பாதிக்கப்பட்டவரால் தொடரப்பட்ட மேல்முறையீடுகளையும் ஆய்வு செய்கிறது.

## 22. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பல ஆண்டுகளாகவே வழங்கப்பட்டு வருகின்றன. மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பல இடங்களில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் பயனாளிகள் அவ்விடங்களில் குடியேறாமல் உள்ளனர். மனைப் பட்டாக்கள் வழங்கி எண்ணிக்கையைப் பெருக்குவதற்குப் பதில் அப்படிப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் பயனாளிகள் தாங்களாகவே முன்வந்து வீடுகள் கட்டிக்கொண்டு குடியேறுவதற்கு உதவியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அடிப்படை வசதிக்காகச் செலவிடப்பட்டது.

நடப்பு ஆண்டில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க ரூ.8.11 கோடியும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நடப்பாண்டிற்கு ரூ.1.03 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் ஈமச்சடங்கு நிதியுதவி ரூ.500/- வழங்க நடப்பு ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பயனாளிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகுப்பு வீடுகள் கான்கிரீட் கூரை வேயப்பட்ட வீடுகளாகக் கட்டிக்கொள்ள உதவும் வகையில் ஊரக வளர்ச்சித் துறை நிதியுடன் ஆதிதிராவிட நலத் துறை மூலமும் ஒவ்வொரு தொகுப்பு வீட்டிற்கும் ரூ.12,000/- மானியமாக வழங்கப்பட்டு, இந்த வீடுகள் கான்கிரீட் கூரை போட்ட இலவசத் தொகுப்பு வீடுகளாகக் கட்டித் தரப்படுகின்றன. நடப்பு ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் 31,453 தொகுப்பு வீடுகள் கட்டப்படும்.



2003 ஏப்ரல் 22]

## 23. தாட்கோவின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் நடப்புத் திட்டங்கள்

### (1) திட்டங்கள் செயல்முறையைப் பன்முகப்படுத்துதல்

தாட்கோவின் திட்டங்கள் தயாரிப்பதில் ஒரு திருப்புமுனையாக 2002-2003 ஆம் ஆண்டில் மாவட்ட செயலாக்கத் திட்டம், முதன்முறையாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் அம்மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட மக்களின் தேவை மற்றும் தொழில் செய்வதற்கு அம்மாவட்டத்திலுள்ள வசதி வாய்ப்புகளின் அடிப்படையில் மாவட்ட அளவில், மாவட்ட அலுவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கல்வியாளர்கள், ஆதிதிராவிடர்களின் சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்காகப் பாடுபடும் வல்லுனர்கள் ஆகியோருடன் மண்டல மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்குகள் நடத்தி, விவாதித்து, அதன் அடிப்படையில் 75,495 பயனாளிகளுக்கு ரூ.46.81 கோடி மானியத் தொகையும் சேர்த்து ரூ.126.62 கோடி பொருளாதார உதவி அளிக்கும் விதத்தில் மாவட்ட அளவிலான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. பயனாளிகளின் தேர்வு பன்முகப்படுத்தப்பட்டு, வட்டார அளவில் தெரிவு செய்யப்பட்டனர்.

### (2) தனித்திறன் மேம்பாட்டு செயல்முறைத் திட்டம்

#### 2.1. தொழிற் பயிற்சி

2002-2003 ஆம் நிதியாண்டு முதல் மத்திய சிறப்பு நிதியிலிருந்து மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 30 விழுக்காடு அதாவது ரூ.1304.05 இலட்சம் படித்த வேலைவாய்ப்பு அற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்க செலவிடப்பட்டது.

#### 2.2. தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்

2002-2003 ஆம் நிதியாண்டில், 30,000 ஆதிதிராவிடப் பெண்கள் மற்றும் 10,000 பழங்குடியினப் பெண்களுக்கு ரூ.152.00 இலட்சம் செலவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் அளிக்கப்பட்டது.

**(3) மகளிர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்**

34,134 பயனாளிகளுக்கு வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ரூ.113.59 கோடியில் 75 விழுக்காடு உதவித் தொகையான ரூ85.00 கோடி பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது.

**(4) நிலம் வாங்கும் திட்டம்**

நிலமற்ற மற்றும் சிறு விவசாயிகளுக்கு விவசாய நிலங்கள் வழங்கவும், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் நிலத்தினை மேம்பாடு செய்து, பாசன வசதிகள் செய்யவும், நிலம் வாங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் நிதியாண்டில் 840 ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு ரூ.650.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(5) சுய நிதிக் குழுக்களுக்கான சுழல் நிதி**

சுய நிதிக் குழுக்களை உருவாக்கி, மேம்படுத்தி அவற்றை நிலைநிறுத்த "தாட்கோ" மத்திய சிறப்பு உதவியிலிருந்து தகுதியுடைய சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குகிறது.

**(6) மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதி**

2002-2003 ஆம் நிதியாண்டில் மொத்த மானியத் தொகையில் 3 விழுக்காடு தொகையான ரூ.119 இலட்சத்தில், ஒரு மாவட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வழங்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து சாதிச் சண்டை, வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அரசு நலத் திட்டங்கள் சென்றடையாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய தொழில் தொடங்க அதிகபட்சமாக ரூ.10,000/- வரை மானியம் மட்டுமே கொண்ட நிதி உதவி வழங்கப்படும்.

**(7) உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்**

மத்திய சிறப்பு நிதி உதவி வழிகாட்டுதலின்படி, மத்திய சிறப்பு நிதியில் 10 விழுக்காடு நிதி 50 விழுக்காட்டுக்கு மேல் ஆதிதிராவிடர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய குடியிருப்பிடங்களில் குடிநீர் வசதி, சுகாதார வசதி, இணைப்புச் சாலைகள் மற்றும் சமுதாய உள் கட்டமைப்புகளை



உருவாக்குதல், ஆகியவற்றிற்குச் செலவிடப்படுகிறது. 2002-2003-ம் நிதியாண்டில் விடுதிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் போன்ற முக்கியப் பணிக்காக ரூ.449.20 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(8) விளம்பரம்**

மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மானியத்தில் 3 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம், விளம்பரம், கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(9) கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு**

மாவட்ட அளவில் உருவாக்கப்பட்டுள்ள, மாவட்டக் கண்காணிப்புக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், தாட்கோ மாவட்ட மேலாளர், மாவட்ட முதன்மை மேலாளர், வங்கிகளின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர், மகளிர் மேம்பாட்டுக் கழகத் திட்ட அலுவலர், பெரும்பாலான மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அறிமுகப்படுத்தப்படும் இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் செயல்படுவர். இக்குழு தாட்கோ நிதி உதவியின்கீழ் உருவாக்கப்படுகின்ற சொத்துக்களை 100 விழுக்காடு ஒப்பாய்வு செய்யும்.

**(10) துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்குப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்**

1991-92ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகளுக்குள் காலம் காலமாய் இரவு நேர மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போரை இப்பணியிலிருந்து விடுவித்துக் கண்ணியமான மாற்றுப் பணி அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மைய அரசு, துப்புரவுப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தோரை விடுவித்தல் மற்றும் மறுவாழ்வளித்தல் குறித்த புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. மைய அரசின் இத்திட்டமானது "தாட்கோவினால்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி மற்றும் பேரூராட்சிகளைச் சார்ந்த இடங்களில் உள்ள உலர் கழிவறைகள், பாய்நீர்க்

[2003 ஏப்ரல் 22

கழிப்பிடங்களாய் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களாலேயே மாற்றப்பட்டுள்ளன.

துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநிலம் முழுவதும் 10,000 பயனாளிகளைக் கொண்ட 1,000 சுய உதவிக் குழுக்கள், 2002-2003-ல் திருத்தியமைக்கப்பட்ட "புதிய திட்டங்களாக" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுவின் உறுப்பினர்கள் தம் திறனைக் கண்டறிய உரிமையளித்து அதன் மூலம் ஆதாயமுள்ள மாற்று வேலைவாய்ப்புகள் அளிப்பது இக்குழுவின் நோக்கமாகும்.

**(11) நிர்வாகத்தினை நவீனமயமாக்குதல்**

விரிவான கணினி தகவல் தொடர்பு மூலம், தாட்கோவின் கணக்குகளைக் கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தாட்கோவில், தலைமை அலுவலகம், மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் கோட்ட அலுவலகம் ஆகியவற்றின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட உள்ளன.

**(12) முதலிப்பாளையம் மற்றும் ஈங்கூர் தொழிற்பேட்டைத் திட்டங்கள்**

முதலிப்பாளையம் மற்றும் ஈங்கூர் தொழிற்பேட்டைகளின் செயல்பாடுகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மறு ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் இத்திட்டத்தினை பயனுள்ள வகையில் செம்மையாக நடத்தும்பொருட்டு, அரசு முன்னர் இருந்த திட்டத்தினை மாற்றி ஒழுங்குபடுத்தியுள்ளது. புதியதாக சீரமைக்கப்பட்ட திட்டத்தின்படி எந்தவொரு நிதிநிலையிலும் நிலைத்திருக்கக்கூடிய திட்டங்களைக் கொண்டவாறு அமைய நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டுள்ளன. மேலும், முதலிப்பாளையம் தொழிற்பேட்டைக்கு 46 பயனாளிகளையும், ஈங்கூர் தொழிற்பேட்டைக்கு 200 பயனாளிகளையும், தமிழ்நாடு தொழில் மற்றும் முதலீட்டுக் கழகம் (டிக்) அந்நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு உட்பட்டுத் தேர்வு செய்யும். தொழில் முனைவோர் புதிய முயற்சிகளை மேற்கொள்ள ஏதுவாக "காப்பு சேவை" வசதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 22]

**புதிய திட்டங்கள்**

1. முந்தைய ஆண்டுகளைப் போன்றில்லாமல், இந்த நிதி ஆண்டில் நிலம் வாங்குவதற்கும், பயிரிடுவதற்கும் அதிக முன்னுரிமை அளிக்கப்படும். இதன்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்கள் சொந்தமாக நிலம் வாங்குவதற்கும், பயிரிடுவதற்கும் நிதி உதவிகள் வழங்கப்படும்.

2. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்கள் புதிதாக நிலையான வருவாய் ஈட்டக்கூடிய தொழில் தொடங்குவது ஊக்குவிக்கப்படும்.

3. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சிறு மற்றும் குறு நில விவசாயிகள், தரிசு நிலத்தை மேம்படுத்தி, நீர்ப்பாசன வசதி செய்து பயிரிடுவதற்கு நீண்ட காலக் கடன் உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**24. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம்**

சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும்பொருட்டு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஒருங்கிணைப்புத் துறையாகச் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகள் வாயிலாக அரசின் நிதியுதவி ஆதிதிராவிட பழங்குடியின அனைத்துப் பிரிவு மக்களையும் சென்றடைவதை உறுதி செய்வதற்காக (மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்—செயலரைத் தலைமையாகக் கொண்ட உயர்மட்டக் குழு) சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவை செயல்படும் விதத்தைக் கண்காணித்து வருகிறது. குறிப்பாக, இது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் தேவைகளின் அடிப்படையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் விதத்திற்கு அறிவுரை மற்றும் நெறிமுறைகளை அளிக்கின்றது.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் ஏற்படும் விதம் குறித்த விவரம் பின்வருமாறு:

[2003 ஏப்ரல் 22

சிறப்பு உள்ளடக்கத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரங்கள்- - (ரூபாய் இலட்சத்தில்).

| வருடம் | மாநில திட்ட முதலீடு | மாநில திட்டத் தேவை நிதி விழுக்காடு | திட்டமிடப் பட்ட சிறப்பு உள்ளடக்கத் திட்ட ஒதுக்கீடு | திட்டமிடப் பட்ட ஒதுக்கீட்டு விழுக்காடு | செலவினம் | செலவின விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 2000-01 | 570026.24 | 19% | 101337.10 | 17.8% | 76453.07 | 13.06% |
| 2001-02 | 520000.00 | 19% | 98778.27 | 19% | 74331.68 | 14.30% |
| 2002-03 (31-01-03 வரை | 575152.96 | 19% | 110373.55 | 19.18% | 24831.90 | 4.30% (31-01-03 வரை |

2003-04 ஆம் ஆண்டின்போது சிறப்பு உள்ளடக்கத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் இத்திட்டங்களைச் செயல்படுத்தும் துறைகள் மேற்கொள்ளும் செலவினத்தில் குறைவு ஏற்படாவண்ணம் உறுதி செய்திட தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

**25. பழங்குடியினர் நலன்**

1991 ஆம் வருட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 5.74 இலட்சம் பழங்குடியினர் உள்ளனர். இது மொத்த மக்கட்தொகையில் 1.03 விழுக்காடு ஆகும். பழங்குடியினர் நலனுக்காகத் தனியே ஒரு இயக்ககம் 1-4-2000 முதல் செயல்பட்டு வருகிறது. பழங்குடியினர் நல இயக்ககம் பழங்குடியினர்கள் அதிகம் வாழும் 13 மாவட்டங்களில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் 36 வகைப் பழங்குடியினர்களில் 6 வகைப் பழங்குடியினர், அதாவது தோடர், கோட்டா, குரும்பா, இருளர், பனியா மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் பண்டைய பழங்குடியினர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர். பழங்குடியினர் பகுதியில் உள்ள மொத்த மக்கட்தொகையில் 50 விழுக்காட்டிற்கு மேல் பழங்குடியினர்கள் வாழும் பகுதி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. 6 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதி உள்ளது. பரவலாக வாழும் மற்ற பழங்குடியினர்கள், பரவி வாழும் பழங்குடியினர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.



2003 ஏப்ரல் 22]

**26. அடிப்படைக் கட்டுமான அமைப்பு**

**பொருளாதார முன்னேற்றம்**

பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாட்டில் 19 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் (L.A.M.P.S.) சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மூலம் பழங்குடியினருக்கு சிறு, சிறு கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. மேலும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்கப் பெறுவதற்கும் இச்சங்கங்கள் உதவி புரிகின்றன.

வேலைவாய்ப்பில் வழிகாட்டும் வகையில் 4 தொழில் நெறி வழிகாட்டு மையங்கள், உதகமண்டலம், சங்காரபுரம், கொல்லிமலை மற்றும் ஜவ்வாது மலைப் பகுதிகளிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு 14 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 76 ஆரம்ப துணை சுகாதார நிலையங்களும், 7 சித்த மருத்துவமனைகளும், 5 அரசு மருந்தகங்களும் மற்றும் ஒரு நடமாடும் சித்த மருத்துவ நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

**27. பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பழங்குடியினர் துணைத் திட்டம் பல்வேறு துறைகளின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் பழங்குடியினர் அதிகம் வாழும் பின்வரும் இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது:

| வரிசை எண் | மாவட்டம் | பழங்குடியினர் வாழும் பகுதி |
|---|---|---|
| 1. | தருமபுரி | சித்தேரி மலை |
| 2. | நாமக்கல் | கொல்லி மலை |
| 3. | சேலம் | ஏற்காடு மலை |
| 4. | சேலம் | கல்ராயன் மலை |
| 5. | சேலம் | அறுநூத்து மலை |
| 6. | சேலம் | பச்சை மலை |
| 7. | திருச்சி | பச்சை மலை |
| 8. | திருவண்ணாமலை | ஜவ்வாது மலை |
| 9. | விழுப்புரம் | கல்ராயன் மலை |

[2003 ஏப்ரல் 22

## 28. வீட்டுவசதிகள் திட்டம்

மலைப் பகுதி மற்றும் சமவெளிப் பகுதியில் வாழும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசு ஆண்டுதோறும் சமவெளிப் பகுதிகளில் ஒரு வீட்டிற்கு ரூ.32,000/- வீதமும், மலைப்பகுதியில் ஒரு வீட்டிற்கு ரூ. 34,000/- வீதமும் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்றன. இத்திட்டத்தின் முழுச் செலவினமும் அரசால் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1384 வீடுகள் பழங்குடியினருக்காகக் கட்டப்பட்டது. 2003-2004-ல் இத்திட்டத்திற்காக ரூ.16.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 29. குடும்பங்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் திட்டங்கள்

பண்டைய பழங்குடியினர் மற்றும் பரவி வாழும் பழங்குடியினர் ஆகியோர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தில் ஆடு அலகுகள் பழங்குடியினர்களுக்கு வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 78 ஆடு அலகுகள் ரூ.7.02 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

## 30. அடிப்படை வசதிகளுக்கான திட்டங்கள்

ஒவ்வொரு ஆண்டும் பழங்குடியினர்களுக்கு அடிப்படை வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி வழங்குவதற்காக ரூ.32.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின் வசதி மற்றும் சாலை வசதிகள் மத்திய அரசு நிதி ஒதுக்கீட்டில் இருந்து செய்யப்படுகிறது.

## 31. 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட மற்றும் 2003-2004-ல் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

| | | ஆண்டு 2002-2003 உள்ளது. | | 2003-04-ல் எய்தப்பட | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | திட்டத்தின் பெயர் | செயல் இலக்கு | நிதி இலக்கு (ரூ. இலட்சத்தில்) | செயல் இலக்கு | நிதி இலக்கு (ரூ. இலட்சத்தில்) |
| 1. | குடிநீர் வசதி குடியிருப்புகள் | 9 குடியிருப்புகள் | 32.00 | 10 குடியிருப்புகள் | 50.00 |
| 2. | மின் வசதி | 10 குடியிருப்புகள் | 92.74 | 10 குடியிருப்புகள் | 100.00 |



2003 ஏப்ரல் 22]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | பண்டைய பழங்குடியினர் மேம்பாடு | 221 வீடுகள் 310 ஆடு அலகுகள் | 72.12 27.90 | 221 வீடுகள் 310 ஆடு அலகுகள் | 72.12 27.90 |
| 4. | பரவி வாழும் பழங்குடியினர் மேம்பாடுப் | 78 ஆடு அலகுகள் வீடுகள் | 7.02 ---- | 100 வீடுகள் 100 ஆடு அலகுகள் | 9.00 32.00 |
| 5. | ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதியில் வீடுகள் கட்டுதல் | 68 வீடுகள் | 23.12 | 68 வீடுகள் | 23.12 |

## 32. மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

பழங்குடியினர் பகுதியில் மைய அரசு பொறுப்பேற்கும் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

### (1) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய உதவி

இத்திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பழங்குடியினர்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கு முதன்மையாகவும், இதில் ஒரு பகுதி (30%-க்கு மிகாமல்) இந்த வருவாய் ஈட்டித் தரும் திட்டத்திற்கான அடிப்படை வசதிகளுக்காகச் செலவிடப்படுகிறது. 2002-2003-ல் ரூ.323.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### (2) இந்திய அரசியலமைப்புச் சட்ட விதி 275(1)-ன்கீழ் விடுவிக்கப்படும் நிதி

அரசியலமைப்புச் சட்ட விதி 275(1)-ன்கீழ், நடப்பு ஆண்டில் ரூ.250.00 இலட்சம் மதிப்பில் பழங்குடியினர் பகுதியில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி வழங்குதல், தெரு விளக்கு அமைத்தல், வீடுகள் கட்டுதல் போன்ற பல்வேறு வசதிகள் செய்ய மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### (3) பண்டைய பழங்குடியினர்களுக்காக மைய அரசின் நிதி உதவி

பண்டைய பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள பண்டைய பழங்குடியினர்களுக்கு சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட பணிகளை மேற்கொள்ள ரூ.49.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 22

**(4) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் அருங்காட்சியகம்**

பழங்குடியினரின் தொன்மைக் கால வரலாற்றை நினைவுகூரும் வகையில் பழங்குடியினர்களுக்காக அருங்காட்சியகம் ஒன்று உதகை பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 2002-2003-ல் இதற்காக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தில் பழங்குடியினர்கள் தொடர்பான ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பழங்குடியினர் திட்டங்களை ஆய்வு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2003-2004-ல் இந்த மையத்தின் பராமரிப்பிற்காக ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**33. இதர திட்டங்கள்**

2001-2002ஆம் ஆண்டு முதல் இந்திய மருத்துவக் கழக ஆராய்ச்சித் குழுமத் திட்டப் பணிகள் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் வாழும் பண்டைய பழங்குடியினரின் மருத்துவ நலன் கருதி அத்தகு வசதிகள் செய்யும்பொருட்டு பழங்குடியினர் நலப் பணியாளர்கள் மற்றும் தாய்ஸ் ஆகியோரை நியமித்து அவர்களுக்கு இத்திட்டப் பணிகளுக்கான தொடர் பயிற்சி வழங்கப்படுகிறது. உதகையில் வாழும் பழங்குடியினர்களின் நலனுக்காக மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் உதகை மாவட்ட ஆட்சியரால் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**34. செயல் முனைப்புப் பகுதிகள்**

**1. மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்**

ஏற்கெனவே தாட்கோ மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகம் ஒருங்கிணைந்து மகளிர் சுய உதவிக் குழு மூலமாக ஆதிதிராவிடக் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக உதவி செய்து வருகின்றன. பழங்குடியினர் குடும்பங்கள்மீது இன்னும் கவனம் செலுத்தும் வண்ணம், 2003-2004-ல்



2003 ஏப்ரல் 22]

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பயன்பாட்டிலுள்ள நிதியிலிருந்து ஒருங்கிணைந்த பழங்குடியினர் திட்டப் பகுதிகளில் ஆறு மாவட்டங்களை (தருமபுரி, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, திருச்சி மற்றும் விழுப்புரம்) தெரிந்தெடுத்து, அங்குள்ள ஏழை எளிய பழங்குடியினர் குடும்பங்கள் உதவி பெறும் வகையில், களப் பணியின் மூலம், நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ள, பழங்குடியினர் நல இயக்குநரகமும், மகளிர் மேம்பாட்டுக் கழகமும் ஒருங்கிணைந்து செயலாற்ற 2003-2004ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2. நலவாழ்வும், ஊட்டச்சத்தும்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து நிலையினை வளர்ச்சியடையச் செய்யும் வகையில் உலகக் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பள்ளி நலவாழ்வுத் திட்டங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயலாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பரம்பரையாக ஊட்டச்சத்துக் குறைவு ஊடுருவலைத் தடுப்பதற்கு, குறிப்பாக, வயது வந்தோர், அதிலும், குறிப்பாக மகளிர் மகப்பேறு நிலையினை அடையும் முன்பாக அவர்கள் நலவாழ்வின்மீது சிறப்புக் கவனம் அளிக்கப்படும். இதற்காக நல்வாழ்வு மற்றும் சமூக நலத்துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்ட நடவடிக்கைகளை வலுப்படுத்தி செயலாற்றுவதற்கு இத்துறை சீரிய முயற்சிகள் மேற்கொள்ளும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.